பழந்தமிழ் இலக்கியத்தில் பொருளியற் கூறுகள்

நா. பாலுசாமி

பதிப்புத் துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

பழந்தமிழ் இலக்கியத்தில் பொருளியற் கூறுகள்

நா. பாலுசாமி

பதிப்புத் துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

பதிப்புரிமை :
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
மதுரை - 625 021.

© Publications Division,
Madurai Kamaraj University,
Madurai - 625 021.

பதிப்பு எண் : 155

விலை : ரூ. 60/-

பதிப்பு விவரங்கள் :

1. ஆசிரியர்	:	முனைவர் நா. பாலுசாமி முன்னாள் தமிழ் பேராசிரியர் அண்ணாமலை பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர்.
2. தலைப்பு	:	தமிழ் இலக்கியத்தில் பொருளியற் கூறுகள்
3. பதிப்பித்தோர்	:	பதிப்புத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 625 021.
4. ஆண்டு	:	1999
5. பக்கங்கள்	:	296 +8
6 பொருள்	:	இலக்கியத் திறனாய்வு
7 அச்சும் அமைப்பும்	:	லிட்டில் ஸ்டார் மதுரை

அணிந்துரை

பேராசிரியர் மு. சாலிகு,
துணைவேந்தர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழியற் புலத்தின் உயர் ஆய்வுத் திட்டத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றிய பேராசிரியர் நா. பாலுசாமி அவர்களின் "பழந்தமிழ் இலக்கியத்தில் பொருளியற் கூறுகள்" எனும் ஆய்வுரை இப்போது பதிப்புத்துறை வாயிலாக நூலாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்களான தொல்காப்பியம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள். சிலப்பதிகாரம். மணிமேகலை ஆகியவற்றின் மூல, உரை நூல் வழிநின்று பழந்தமிழரின் பொருளியல் சார்ந்த வாழ்வியலை முழுமையாகவும். விரிவாகவும், விளக்கமாகவும் இந்நூல் தொகுத்தளிக்கிறது. அரசியல், சமூகவியல், வரலாற்றியல் அடிப்படையில் இக்கருத்துக்கள் அணுகப்பட்டு விளக்கம் தரப்படுவது பாராட்டிற்குரியது.

பழந்தமிழகத்தின் நில அமைப்பு. மக்கட்பிரிவு மற்றும் சாதி அமைப்பு. அரசு மற்றும் நிர்வாக அமைப்பு, இயற்கைச் செல்வம், தொழில் வளம். போக்குவரத்துச் சாதனங்கள் முதலான அனைத்துச் செய்திகளும் நூலில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. அரசுப் பொருளாதாரம் சார்ந்த வரிவிதிப்பு, திட்டமிடல், செலவினம் மற்றும் கடன் பற்றிய விவரங்களும். அரசு அளிக்கும் கொடை, மானியம் பற்றிய குறிப்புகளும் தொகுக்கப்பட்டுள்ளன. சமூகவியல் சார்ந்த சடங்குகள். பழக்க வழக்கங்கள். உணவு முறைகள், உடை மற்றும் அணிகலன்கள், உறைவிடம், கல்வி, கலை பற்றிய செய்திகள் விரிவாகத் தக்கச் சான்றுகளுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அன்றியும் பழந்தமிழரின் வேளாண்மை சார்ந்த வேளாண்மக்கள். நீர்வளம். மண்வளம், விளைபொருட்கள், விற்பனைமுறை போல்வனவும்: வணிகத் தொடர்பான அளவைமுறைகள். நாணயங்கள் மற்றும் பண்ட மாற்று முறைகளும்: தொழில் தொடர்பான தச்சு, நெசவு, சலவை. மண்பாண்டம் செய்தல், மீன் பிடித்தல் முதலானவும் நூலில் தொகுக்கப்பட்டு அவை இன்றைய பொருளியல் கோட்பாட்டுடன் விளக்கப்படுவது, நூலாசிரியரின் பிறதுறை சார்ந்த புலமையைக் காட்டுகிறது. இவ்வரிய நூலைத் தமிழன்னைக்குச் சூட்டிய பேராசிரியர் முனைவர் நா. பாலுசாமி அவர்களுக்கு என் பாராட்டுக்கள். நூலை உரிய காலத்தில் செம்மையாக வெளியிட்ட மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிப்புத்துறை அலுவலர்தம் பணி போற்றுதற்குரியது.

மு. சாலிகு

முன்னுரை

பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் தமிழ் இலக்கிய அறிவு மிகவும் இன்றியமையாதது. மக்களின் கலை, பண்பாடு மட்டுமின்றிப் பொருளியல், அரசியல், சமுதாயவியல் போன்றவற்றையும் தெரிந்து கொள்ள இலக்கியப் புலமை பெரிதும் வேண்டற்பாலது. அவ்வகையில் **"பழந்தமிழ் இலக்கியத்திற் பொருளியல் கூறுகள்"** என்ற தலைப்பில் இவ்வாராய்ச்சி நிகழ்த்தப் பெற்றுள்ளது. தமிழ்ச் சான்றோர் அக்காலத்தில் பொருநர் வாழ்வு பற்றிச் சிந்தித்தவற்றைத் தொகுத்து வகைப்படுத்திப் பல்வேறு உள்தலைப்புகளில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. இக்காலப் பொருளியற் கோட்பாடுகள், சிந்தனைகள் ஆகியவற்றின் பின்னணியில் ஒப்பிட்டு ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. பல அறிஞர்கள் பல்வேறு கட்டுரைகள் பொருளியல் பற்றி எழுதி வெளியிட்டிருப்பினும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி ஏறத்தாழ கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை பண்டைத் தமிழரின் பல்வேறு பொருளியற் கருத்துக்களை அடைவுசெய்து அறிவியல் அடிப்படையில் பாகுபடுத்திக் கோவையாகத் தனிநூல் இதுகாறும் வெளிவரவில்லை. அக்குறையை இந்நூல் நீக்கும் என்பது நூலாசிரியரின் நம்பிக்கை.

இப்பொருளியல் ஆய்வு சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்துள்ளது. இலக்கியங்களில் கற்பனை கலந்திருக்கும் என்பது வெளிப்படை. உயர்வு நவிற்சியும் உண்டு. இவற்றை மனங்கொண்டு அறிவியல் அடிப்படையில் நிகழும் இவ்வாய்வுக்குப் பொருந்துவற்றை ஏற்றும் புனைவுகளை ஒதுக்கியும் கவனமாகவே இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. இன்று மேனாட்டுப் பொருளியல் மேதைகள் கூறிவரும் பல கருத்துக்கள் சங்க காலப் புலவர்களின் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தமை ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்தாநிற்கும். இவ்வுண்மையை இதனைப் படிப்போர் உணர்வர்.

தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, இரட்டைக் காப்பியங்கள், உரை ஆசிரியர்களின் கருத்துக்கள் முதலியன இவ்வாராய்ச்சிக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன. மேனாட்டுப் பொருளியல் நூல்களும் மனங் கொள்ளப்பட்டுள்ளன. ஆங்காங்கு ஒப்புமைகளும் வேறுபாடுகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

சமுதாய - அரசியல் பின்னணி, பொருளியற் சிந்தனைகள், பொருள் சார்ந்த வாழ்க்கை, அரசுப் பொருளாதாரம், வேளாண்மை, வணிகமும் தொழில்களும், போக்குவரவுச் சாதனங்கள், எண்கள்-எடைகள்-அளவைகள்-நாணயங்கள் ஆகிய எட்டுப் பிரிவுகளில் இந்த ஆய்வு

நிகழ்ந்துள்ளது. வருங்காலத்தில் ஆராய்ச்சியாளர் மேலும் இத்துறையில் சிந்தித்துப் புதிய விளக்கம். கருத்துரைகள் முதலியன வழங்க இது ஒரு தூண்டுகோலாகும். இவ்வாராய்ச்சியில் பின்வரும் கருத்துக்கள் சிறப்பாகச் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளன.

1) இன்றுள்ளது போன்ற குறுகிய - இறுகலான சாதிப் பாகுபாடு அன்று இல்லை. பிறப்பில் வேறுபாடு காண்பது பழந்தமிழ்க் கருத்துக்கு முரணானது.

2) பொருளாதார ஏற்றத்தாழ்வு அன்றைய தமிழ்ச் சமுதாயத்திலும் இருந்தது.

3) குறிஞ்சி முதலிய நிலப் பாகுபாடும் அங்கு வாழ்ந்த மக்களும் பண்டைய குல மரபுக் குழு மனப்பான்மையைக் குறிக்கமாட்டா.

4) பெண் அக்காலத்தில் ஆடவனுக்குத் துணை என்ற நிலையில் பெரும்பாலும் சமமாகவே கருதப்பட்டாள்.

5) மக்கட் பெருக்கம் என்பது இன்றுள்ளது போலப் பெரும் பொருளாதாரச் சிக்கலாக உருவாகவில்லை.

6) பண்டைத் தமிழகத்தில் முன்னைய கிரேக்க நாட்டு அமைப்புப் போன்ற நகர அரசுகள் தோன்றியிருந்தன.

7) கோலன், வேலன், வேந்தன், மன்னன் போன்ற குறியீடுகள் அக்கால அரசர்களின் சமுதாய மதிப்பினை அளவிட உதவுகின்றன.

8) அக்காலப் பேரரசர்கள் பிற நாடுகளைப் படை கொண்டு வென்றார்களாயினும். அங்கெல்லாம் தமது ஆட்சியை அமைத்துப் பிறரை அடிமை கொள்ள விரும்பவில்லை. குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த நினைக்கவில்லை.

9) இன்றைய சமநிலைச் சமுதாய முறை பொதுவுடைமை அமைப்புப் போன்ற புதிய கோட்பாடுகளுக்குரிய சிந்தனைகள் அக்காலத் தமிழகத்தில் கால்கொண்டிருந்தன என்பதை மறுப்பதற்கில்லை

10) தனிமனித உரிமையும், பொருளீட்டும் உரிமையும் பழந்தமிழ்ச் சமுதாயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டவையாம்.

11) பொருளை ஈட்டி அதனை முடக்கி வைப்பது சமுதாயக் கேடு என்பது உணரப்பட்டது; உணர்த்தப்பட்டது.

12) பொருளாதாரத் துறையின் அரசாயினும் தனிமனிதனாயினும் ஒழுக்கமும் அறமும் வற்புறுத்தப்பட்டன.

13) பழங்காலத்தில் தொன்மைச் சமுதாயங்களாகிய கிரேக்கமும் தமிழகமும் பல்வேறு சிந்தனைகளில் ஒற்றுமை காட்டியிருப்பினும் பொருளியலி ல், குறிப்பாக வேளாண்மைத் தொழில் போன்றவற்றில் கருத்துமாறுகள் தோன்றியிருந்தன. பொருளியற் சித்தாந்தங்கள் மாறுபட்டிருந்தமை புலப்படுகிறது.

14) மக்கள் பொருளியல் துறையில் மனநிறைவு பெற்றிருந்தாலும் வறுமைக் கொடுமை அன்றும் இருந்தது; பற்றாக்குறையும் நிலவியது.

15) வணிகத் தொடர்பால் பழந்தமிழகம் உலக நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.

16) வரி விதிப்பு, அரசுப் பொருளாதாரம் போன்றவற்றில் தமிழ்ச் சான்றோர் பெருங்கவனம் செலுத்தினர்.

இதுபோன்ற பல்வேறு கருத்துக்கள் இவ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்டன.

இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு முடிப்பதற்கு மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், ஆட்சிக் குழுவினரும் எனக்கு வாய்ப்பளித்து இந்நூல் உருவாகத் துணைபுரிந்தமைக்கு அப்பெருமக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு எல்லாவகையிலும் உதவியாக இருந்த தமிழ்த்துறைத் தலைவருக்கும் பதிவாளருக்கும் நன்றி.

நா. பாலுசாமி

பொருளடக்கம்

பக்கம்

1.	சமுதாய - அரசியல் பின்னணி	1
2.	பொருளியற் சிந்தனைகள்	39
3.	பொருள் சார்ந்த வாழ்க்கை	75
4.	அரசுப் பொருளாதாரம்	135
5.	வேளாண்மை	171
6.	வணிகமும் தொழில்களும்	203
7.	போக்குவரவுச் சாதனங்கள்	241
8.	எண்கள், எடைகள், அளவைகள், நாணயங்கள்	27[illegible]

சுருக்கச் சொல் விளக்கம்

அகத்.	–	அகத்திணையியல்
அகம்.	–	அகநானூறு
அடை	–	அடைக்கலக் காதை
அதி.	–	அதிகாரம்
அந்திமாலை.	–	அந்தி மாலை சிறப்புச்செய் காதை
அரங்.	–	அரங்கேற்று காதை
அழற்படு.	–	அழற்படு காதை
இந்திர.	–	இந்திர விழவூரெடுத்த காதை
இயற்கை.	–	இயற்கைப் புணர்ச்சி
உரி.	–	உரியியல்
ஊர்காண்.	–	ஊர்காண் காதை
எழுத்து.	–	எழுத்ததிகாரம்
ஐங்.	–	ஐங்குறுநூறு
கடலாடு.	–	கடலாடு காதை
கலி.	–	கலித்தொகை
கற்பு.	–	கற்பியல்
காட்சி.	–	காட்சிக் காதை
கானல்.	–	கானல் வரி
குறள்.	–	திருக்குறள்
குறிஞ்சிப்.	–	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	–	குறுந்தொகை
கொலை.	–	கொலைக்களக் காதை
சிலப்.	–	சிலப்பதிகாரம்
சிறுபாண்.	–	சிறுபாணாற்றுப்படை
திருக்கோவை.	–	திருக்கோவையார்
தொல்.	–	தொல்காப்பியம்
நற்.	–	நற்றிணை
நாடுகாண்.	–	நாடுகாண் காதை
நெடுநல்.	–	நெடுநல்வாடை
ப.	–	பக்கம்
பக்.	–	பக்கங்கள்
பட்டினப்.	–	பட்டினப்பாலை
பதிற்றுப்.	–	பதிற்றுப்பத்து
பரி.	–	பரிபாடல்
புறம்.	–	புறநானூறு
பெரும்பாண்.	–	பெரும்பாணாற்றுப் படை
பொருநர்.	–	பொருநராற்றுப்படை
மங்கல.	–	மங்கல வாழ்த்துப் பாடல்
மணி.	–	மணிமேகலை
மதுரைக்.	–	மதுரைக்காஞ்சி
மரபு.	–	மரபியல்
மலைபடு.	–	மலைபடுகடாம்
மனையறம்.	–	மனையறம் படுத்த காதை
முருகு.	–	திருமுருகாற்றுப்படை
முல்லைப்.	–	முல்லைப் பாட்டு
வேனில்.	–	வேனிற் காதை
Ed.	–	Editor
Ibid.	–	Ibidem (in the same work)
Nos.	–	Numbers
p.	–	page
pp.	–	pages
sec.	–	section
vol.	–	volume

1. சமுதாய - அரசியல் பின்னணி

(அ) சமுதாய அமைப்பு

மக்களின் பொருளாதார நிலையை அறிந்துகொள்ள அம்மக்கள் வாழும் சமுதாயத்தின் அமைப்பினைத் தெரிந்து கொள்வது பெரிதும் உதவியாக இருக்கும். குறிப்பாகத் தமிழ் மக்களின் பண்டைய பொருளாதார நிலையைப் புரிந்து கொள்ளத் தமிழ்ச் சமுதாய அமைப்பினை மனங்கொள்ள வேண்டும். பொருளியல் வாழ்க்கையினைச் சமுதாய அமைப்புப் பெரிதும் பாதிக்கிறது. *திரெவிலியான்* என்னும் அறிஞர், 'சமுதாய வரலாற்றறிவின்றேல், பொருளியல் வரலாறு என்பது பொருளற்றுப் போகும்; பொருளியல் பற்றிய வரலாற்றறிவின்றேல் அரசியல் வரலாறு என்பது பயனற்றதாகும்'[1] என்று கூறியுள்ளார். மக்களின் வாழ்க்கை என்னும் அழகிய கட்டடம் சமுதாய அமைப்பு என்னும் அடிப்படையில் எழுவதாகும். வாழ்க்கையின் பல்வேறு துறைகளுள் பொருளாதாரம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்; இத்தகைய பொருளாதாரத் துறையும் சமுதாயம் என்ற பெரிய தெப்பத்தின் படித்துறைகளுள் ஒன்றேயாம்.

சாதி அமைப்பு

வரலாற்றுக் காலத்திற்கு முன்னும் அதனை அடுத்த சில நூற்றாண்டுகளுக்குப் பின்னும் நிலவிய பழந்தமிழ்ச் சமுதாயத்தில் இன்றுள்ளது போன்ற சாதிமுறை தோன்றவில்லை. அன்றைய தமிழ்ச் சமுதாயம் சாதிக் கொடுமைகளுக்கு இரையாகவில்லை என்றே கூறலாம். பிற்காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தை அலைகழித்துச் சின்னபின்னப்படுத்தி, இன்றும் நிலவி வரும் கொடுமையான சாதிப்பிணக்குகள் அன்று தலைகாட்டவில்லை. சாதியம் பழந்தமிழருக்குத் தெரியாத ஒன்று-

1. G.M. Trevelyan, English Social History, p. vii.

இதுபற்றி அறிஞர் எம். சீனிவாச அய்யங்கார் பின்வருமாறு கூறுகிறார்; "ஆரியர் வருகைக்கு முன்னர்த் தமிழகத்தில் சாதிமுறை நிலவவில்லை. முதன்முதல் வந்து தங்கிய ஆரியர் (பிராமணர்) தமது நால்வருண முறையை இங்குப் புகுத்த முயன்றனர்; ஆனால் அது வெற்றி பெறவில்லை; பெரும் எதிர்ப்பினைச் சந்தித்தது"[2]. அவர்தம் வருகையால் இந்தியாவில் சில இனச் சிக்கல்களும் அரசியற் சிக்கல்களும் தோன்றலாயின; தாம் பிற இனத்தாரினும் உயர்ந்தவர் என்ற மனப்பான்மை அவர்களைப் பிறரிடமிருந்து பிரிந்து வாழச் செய்தது. இத்தகைய மாறுபாடுகளால்தாம் இந்தியாவில் - குறிப்பாகத் தமிழகத்தில் - சாதிமுறை கால்கொண்டது.

தொல்காப்பியத்தில் சாதி என்ற சொல் ஈரிடங்களில் வருகிறது. ஆனால் அங்கெல்லாம் அச்சொல் அஃறிணை உயிரினங்களின் ஒரு பிரிவைச் சுட்டும் வகையிலேயே ஆளப்பட்டுள்ளது; மக்கட் சாதிப் பாகுபாட்டை அது சுட்டவில்லை.[3] திருக்குறள் மக்களுள் பிறப்பு வகையால் சாதிபேதம் இல்லை என்றும், அவரவர் தொழில் செய்யும் முறையினால் சிறப்பு ஒவ்வாது என்றும் சுட்டுகிறது. ஆனால், திருவள்ளுவர் காலத்தில் - ஏறத்தாழ கி.பி.முதல் நூற்றாண்டளவில் - தமிழகத்தில் சாதிபேதங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன என்றே கருதலாம்.[4] பழந்தமிழ் நூல்களாகிய தொல்காப்பியமும் திருக்குறளும் அவை தோன்றிய காலத்தும் சிறிது முன்னரும் ஆரிய நாகரிகமும் பண்பாடும் தமிழகத்தில் நிலவி வந்தன என்பதையே சுட்டுகின்றன. சுருங்கக் கூறின், ஆரியப் பண்பாட்டுக் கலப்பிற்குப் பின்னரே தமிழ்ச் சமுதாயத்தில் சாதிமுறை தோன்றத் தொடங்கியது எனலாம். ஆயின்

---

2. Pandit Jawaharlal Nehru, The Discovery of India, p. 68.
3. தொல். மரபு. 43, 64.
4. குறள், 409, 973.

இன்றுள்ளது போன்ற சாதிக் கொடுமை அக்காலத் தமிழகத்தில் இல்லை என்றே கூறலாம். இச்சாதி முறையும் மக்களின் பொருளாதார வாழ்வைப் பாதிக்கவே செய்தது. மக்களாகப் பிறந்த அனைவரும் சமநிலையினரே என்ற முற்போக்குக் கொள்கைக்கு முரண்பட்டதே சாதிமுறை.[5]

தொழில் அடிப்படையில் மக்கட் பிரிவுகள்

நாகரிகம் வாய்ந்த ஒவ்வொரு சமுதாயத்திலும் மக்களை இருபெரும் பிரிவினுள் அடக்கலாம். ஒன்று ஆளும் இனம்; மற்றொன்று ஆளப்படும் இனம். இது தமிழ்ச் சமுதாயத்திற்கும் பொருந்தும். ஆள்வோர் அரசரென்றும், ஆளப்படுவோர் அந்தணர் (அ) அறிவர், வணிகர், வேளாளரென்றும் குறிக்கப் பெற்றனர். தொல்காப்பியமும் திருக்குறளும் இந்நால்வகை மக்கட் பிரிவினரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. தொல்காப்பியம் இவர்தம் செயல்களையும் கடமைகளையும் தெளிவாகக் குறிப்பிடுகிறது.[6] அரசர் புறப்பகை விலக்கியும் உட்பகையாகிய கொடியோர் உண்டாக்கும் குழப்பம் முதலியவற்றைக் கடிந்தும் மக்களின் நலிவைவும் மெலிவையும் போக்கி நாடு காவல் செய்வாராயினர். அதனால் மக்கள் எவ்வித அச்சமும் இன்றித் தத்தம் கடமைகளையும் தொழில்களையும் செய்ய முடிந்தது. அந்தணர் (அ) அறிவர் என்போர் சமுதாயத்தில் மதிப்பு மிக்க சான்றோராவர். இச்சான்றோர் மக்கட்கு அறிவுரை கூறியும் அரசர்களை இடித்துரைத்து முறைகோடாது ஆட்சி புரியுமாறு அறிவுறுத்தியும் வந்தனர். வணிகர் எனப்படுவோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு வகையான தொழில்களை நடத்தி நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் நற்பணியை மேற்கொண்டனர். வேளாளர் நிலத்தைப் பண்படுத்தியும் விளைவினைப் பெருக்கியும்

---

5. G.B. Jathar & S.G. Beri, Indian Economics, Vol. I, p.89.
6. தொல். மரபு. 71–84.

உணவினை வழங்கும் சீரிய பணியில் ஈடுபட்டனர். இவ்வாறு பழங்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் இந்நால்வகைப் பிரிவினரும் வாழ்ந்து வந்தனர். பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வடவர் போற்றிய வருணாசிரம நிலையினும் இது முற்றிலும் வேறுபட்டது. திருவள்ளுவர் நாட்டின் இலக்கணம் கூறுங்கால் வேளாளர் (உழவர்), சான்றோர் (அறிவர்), வணிகர் ஆகிய முப்பிரிவினரும் சேர்ந்தே நாட்டின் பொதுச் செல்வத்தைப் பெருக்கும் பெருமைக்குரியவர் எனக் கூறிப்போந்தார்.[7]

நிலப் பாகுபாட்டின் அடிப்படையில் மக்கட் பிரிவுகள்

மேலே குறிப்பிட்ட நால்வகை மக்கட்பிரிவு ஒருபுறம் இருக்க, நிலத்தின் அடிப்படையிலும் மக்கள் பிரிந்திருந்தனர். தமிழ் இலக்கியங்களில் ஐவகை நிலப்பாகுபாடு காட்டப் பட்டுள்ளது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாம். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடம்; முல்லை காடும் காடுசார்ந்த பகுதி; மருதம் நீர்வளம் மிக்க வயலும் வயல்சார்ந்த நிலப்பகுதி; நெய்தல் கடலும் கடல்சார்ந்த பகுதி; பாலை என்பது நீர்வளம் சிறிதும் இல்லாத மணலும் மணல்சார்ந்த பாலைவனப் பகுதியாகும். இந்நிலப் பகுதிகளில் குடியமர்ந்து வாழும் பொதுமக்கள் முறையே குறவர், ஆயர், உழவர், பரதவர், மறவர் எனப்படுவர். இம்மக்கட் பிரிவு ஒவ்வொன்றுக்கும் தலைவர் ஒருவர் இருந்தார். குறிஞ்சி நிலக் குறவரும் குறத்தியரும் தம் தலைவரை வெற்பன் (மலையன்), பொருப்பன், சிலம்பன் என்றும், முல்லைநில ஆயரும் ஆய்ச்சியரும் தம் தலைவரைப் பொறையன், நாடன் என்றும், மருதநில மக்கள் ஊரன், மகிழ்நன் என்றும், பாலை நிலத்தினர் தம் தலைவரைக் காளை, மீளி என்றும் அழைத்தனர்.[8] மருத நிலத்துப் பொதுமக்கள் உழவர் (ஆடவர்), உழத்தியர் (பெண்டிர்)

7. குறள் 731.

8. அகம். 4, 18, 30.

என்றும், பாலை நிலப் பொதுமக்கள் எயினர், எயிற்றியர் என்றும் குறிக்கப்பெற்றனர்.

இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழகத்தில் வாழ்ந்த பல்வேறு மக்கட் பிரிவினரைப் பற்றிய தெளிவான விவரங்கள் அறியப்பட்டன. இவ்வாறு நிலத்தின் அடிப்படையில் தோன்றிய மக்கட் பிரிவினரையும் தொழிலின் அடிப்படையில் தோன்றிய மக்கட் பிரிவினரையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. அரசர் (Kings or Rulers)
2. அந்தணர் (அ) அறிவர் (Sages and Seers)
3. வணிகர் (அ) மன்னர் பின்னோர் (TradersorBusinessman)
4. வேளாளர் (அ) காராளர் (Agriculturists or Cultivators)

நாகரிகம் வளர்ச்சி பெற்று நிலையான அரசியலமைப்பு கால்கொண்ட பின்னர் மேற்கூறிய மக்கட் பாகுபாடு தோன்றியது. நிலத்தின் அடிப்படையில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தின் தலைவர்கள் கீழ்வருமாறு அமைக்கப்பட்டனர்:

1. வெற்பன் (அ) பொருப்பன் (Head of the Hilly Region)
2. பொறையன் (அ) நாடன் (Head of the Pastoral Region)
3. காளை (Head of the Sandy Region)
4. துறைவன் (அ) சேர்ப்பன் (Head of the Coastal Region)

பொதுமக்கள்,

1. குறவர் (Hunters)
2. ஆயர் (Cowherds)
3. மறவர் (Spearmen)
4. உழவர் (Farmers)
5. பரதவர் (Fishermen)

என்றும் அழைக்கப்பட்டனர். இங்குக் கூறப்பட்ட பிரிவுகளைத் தவிர, தொல்காப்பியம் பிறிதொரு வகையினரையும் சுட்டுகிறது. அவர்கள்,

1. அடியோர் - (Serfs)[9]
2. வினைவலர் - (Artisans)[10]
3. ஏவல் மரபினர் - (Orderlies)[11]

அடியோர் என்போர் பண்ணையாளர் அல்லது நிலக்கிழார் முதலியோர்பால் ஏவல் செய்வோராவர். அவர்கள் தாங்கள் நினைத்தவாறு செயல்பட முடியாதவர்கள்; பிறர் கட்டளையிட அதனைச் செயல்படுத்துபவர்கள். அடிமைகளைப் போல் நடத்தப்பட்டவர்கள் எனின் அது மிகையாகாது. வினைவலர் என்போர் பலவகைப்பட்ட தொழிலாளிகள்; வழிவழியாகக் குறிப்பிட்ட தொழில்களை மேற்கொண்டு வாழ்பவர்கள். தச்சர், பொற்கொல்லர், கருவிகள் செய்வோர் முதலிய கிராமத் தொழிலாளர்கள் (Village artisans) இவர்கள் செயற்சுதந்திரம் உடையவர்கள்; யாருடைய கட்டளைக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லாதவர்கள். ஏவல் மரபினர் எனப்பட்டோர் அடிமைகள் போன்றவர்கள் அல்லர்; பெருநிலக்கிழார், பெருஞ்செல்வர் மனைகளில் அவர்கள் இடும் அன்றாடப் பணிகளைச் செய்து வாழ்க்கை நடத்துவோர்.[12]

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பல்வேறு கலைவாணர்கள் வாழ்ந்து வந்தனர். ஆடுவோர், பாடுவோர், கூத்தர் முதலிய நுண்கலைவாணர் பலரும் வாழ்ந்தனர். அவர்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

---

9. தொல். அகத். 23.
10. தொல். அகத். 23.
11. தொல். அகத். 24.
12. நா. பாலுசாமி, மணிமேகலை ஆராய்ச்சி (ஆங்கிலம்), ப. 51.

1. கூத்தர் - (Actors)
2. பாணர் - (Minstrels)
3. பொருநர் - (Mimics)
4. விறலியர் - (Dancing Girls)

தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு மற்றுமொரு வகை மக்கள் பிரிவினரைச் சுட்டுகின்றது.[13]

1. துடியன் - (One who beats the drum 'Tudy')
2. பறையன் - (One who beats the drum 'Parai')
3. கடம்பன் - (One who is named after Kadambu Tree)

மேற்காட்டிய பல்வேறு மக்கட் பிரிவினரேயன்றிப் *பார்ப்பனர்* என்ற ஒரு சாராரர் குறிப்பிடப்பட்டுள்ளனர். தொல்காப்பியர் அறுவகைப்பட்ட பார்ப்பனர் பற்றிக் குறிப்பிடுகிறார்.[14] இப்பாகுபாடு அவரவர் செய்யும் தொழில் பற்றி ஏற்பட்டது எனத் தெரிகிறது . ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், இரத்தல் என்பனவே அவ்வறுவகைத் தொழில்கள். அகநானூறு மற்றொருவகைப் பார்ப்பனரைக் குறிக்கிறது.[15] அவர்கள் வேளாப் பார்ப்பார் எனப்படுவார்கள். இவர்கள் வேள்வி செய்யமாட்டார்கள். மாறாக, சங்கு முதலிய கடல்படு பொருநர்களை அறுத்துப் பல்வேறு பயன்பாட்டுப் பொருநர்களைச் செய்வோர் ஆவர். இதுகாறும் கூறியவற்றிலிருந்து எத்தகைய சமுதாயம் பண்டைத் தமிழகத்தில் அமைந்திருந்தது என்பது ஒருவாறு தெளிவுறும்.

தொகுத்துக் கூறுமிடத்து, முற்காலத் தமிழகத்தில் பிறப்பினால் மக்களுக்குள் வேறுபாடு கற்பிக்கப்படவில்லை என்பது தெளிவாகும். உடலுழைப்பு பழந்தமிழர்களால் பெரிதும்

---

13. புறம். 335.
14. தொல். புறத். 16 (இளம்பூரயணர் உரை).
15. அகம். 335.

போற்றப்பட்டது. "உழைப்பே உயர்வு தரும்" என்பது அவர்களின் கொள்கை. மக்கள் குறிப்பிட்ட இடத்தில் தங்கியிராமல், குறிஞ்சி, முல்லை நில எல்லைகளைக் கடந்து பழகலாயினர். இதனால் பொருளாதார வளர்ச்சி உறுதிப்படுத்தப்பட்டது. பண்பாட்டுப் பரவலும் நிகழ்ந்தது. குறிப்பிட்ட ஒரு சாராரிடமே பதவிப் பொறுப்புகள் ஒப்படைக்கப்படின் பொருளாதாரம் சீரான வளர்ச்சியை அடையாது. நல்ல வேளையாகப் பழந்தமிழகத்தில் பொருளாதார நிலை தடையேதுமின்றி நடைபோட்டது.

பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் அவர்கள் இதுபற்றிப் பின்வருமாறு கூறியிருப்பது மனங்கொள்ளத்தகும். "பெரும்பாலும் சமூகங்களுக்கிடையே முரண்பாடுகளும் பூசல்களும் தோன்றின என்பதற்குரிய ஆதாரங்கள் இல்லை என்றே கூறலாம். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற வேறுபாடும் மாறுபாடும் அண்மைக் காலத்தில் தோன்றியதே யாகும். சமுதாய இணக்கம் நிலவியது. வருக்கப் போராட்டங்கள் அக்காலத்தில் எழவில்லை".[16] பழந்தமிழகத்தில் நிலவழிப் பாகுபாடுகளும் ஒவ்வொரு நிலத்திலும் ஒரு வகை மக்கள் கூட்டமும் இருந்தமையை நோக்கும்போது தமிழ் மக்களுக்கு அக்காலத்தில் வட்டார நோக்கும் முற்போக்குக் கருத்தின்மையும் இருந்தன என்று கருதிவிடக் கூடாது.

குறிஞ்சி மக்கள் முல்லையிலும் மருதநில மக்கள் நெய்தலிலுமாக இங்கும் அங்கும் அன்றாட வாழ்க்கையில் சென்று சேர்ந்து வாழ்ந்தனர் என்பது புலப்படும். இன்றைக்கு நிலவும் தீண்டாமை, காணாமை, நெருங்காமை முதலிய தீய சமுதாய இயல்புகள் பண்டைக் காலத் தமிழகத்தில் அரும்பவில்லை.[17] தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முந்திய சில

16. K.A. Nilakanda Sastri, The Cholas, p. 546.
17. M.S. Poornalingam Pillai, Tamil India, p. 63.

நூற்றாண்டுகளிலும் ஆரியப் பண்பாடு தமிழ்ப் பண்பாட்டுடன் கலந்து விட்டது எனினும் பிற்காலத்தில் தோன்றி வளர்ந்த வருணாசிரம தர்மம் என்பது அறவே இல்லை எனலாம். இது பிற்காலத்தின் விளைவு.

சங்க இலக்கியங்களில் வரும் அந்தணர், ஐயர், பார்ப்பனர் அல்லது பார்ப்பார் முதலிய பெயர்க் குறியீடுகள் ஆரிய இனத்தோடு வைத்து எண்ணப்படும் பிராமணர்களைக் குறித்தவை அல்ல. ஏனென்றால் பிராமணர் என்போர் பிறப்பால் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டவர்கள்; ஆனால் தமிழிலக்கியங்கள் கூறும் அந்தணர் ஒழுக்கத்தாலும் உயர்ந்த தொழில் முறைகளாலும் சிறப்புப் பெற்றவர்கள். இவ்வேறுபாடு மனங்கொளத்தகும்.

பெண்டிர் நிலை

அறப்பழங்காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்டிர் பெருமைக்குரியவர்களாக மதிக்கப்பட்டனர். "பெண்ணின் பெருந்தக்க யாவுள" என்ற வள்ளுவர் கருத்தும் இதனை அரண் செய்யும். ஆடவர், பெண்டிர் ஆகிய இரு பாலருக்குமிடையே சமநிலை நிலவியது. இதற்குத் திருக்குறளில் அமைந்துள்ள இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம் ஆகிய இரு அதிகாரங்களும் தக்க சான்றுகளாகும்.

ஆடவர் பெண்டிரை அதிகாரம் செய்து அடக்குவதும், ஆடவரைவிடப் பெண்டிர் தாழ்ந்தவர் என்று கருதுவதும் அக்காலத்தில் இல்லை. பெற்றோர் தம் மக்களை ஆண், பெண் என்ற பால் பாகுபாடு செய்யாமல் எல்லோரையும் ஒருபடித்தாக நடத்தினர். இத்தகைய உறவுநிலை அக்காலப் பொருளாதார நிலையைச் சமப்படுத்துவதற்கு உதவியாக இருந்தது. இந்தியாவில் நிலவிய சமூக அமைப்புகள் பொருளாதார நிலையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தது.[18] குடும்பமே

18. Dr. R. Balakrishnan, A Review of Economic Growth in India, p.2.

சமுதாயத்தின் அடிப்படை அங்கமாக விளங்கியது. ஆணோ பெண்ணோ தனிப்பட்டவர்களாக இருக்கும் வரை சமுதாயத்தில் மதிக்கப்படவில்லை. ஆணும் பெண்ணும் கணவனும் மனைவியுமாக இல்லறம் ஏற்ற பின்னரே சமுதாய மதிப்பைப் பெறுவாராயினர். கணவனும் மனைவியும் வாழ்க்கையில் சம பங்காளிகளாக விளங்கினர். மனைவி இன்பப் பொருளாகக் கருதப்படாமல் ஆடவனுக்குத் துணையாகக் கருதப்பட்டாள். திருவள்ளுவர் மனைவியை வாழ்க்கைத் துணை எனக் குறிப்பிடுவது கவனிக்கத்தகும்.[19] தொல்காப்பியர் திருமணம் முடிக்க விரும்பும் தலைவனும் தலைவியும் பத்துவகையான ஒப்புமைகள் உடையவர்களாக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுவதும் இங்கு மனங்கொள்ளத்தகும்.[20] எனவே, அக்காலத் சமுதாயத்தில் எவ்வகையில் நோக்கினும், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்றத் தாழ்வுகளோ உயர்வு தாழ்வுகளோ நிலவவில்லை என்றே கூறிவிடமுடியும். ஆண் குழந்தையாக இருப்பினும் பெண் குழந்தையாக இருப்பினும் பெற்றோரின் சொத்தில் உரிமை உடையவர்களாகவே கருதப்பட்டனர்.[21]

தமிழ் மொழியில் மனைவி, இல்லாள் என்ற இரு குறியீடுகள் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியன. மனைவியின் (அ) வீட்டின் (அ) குடும்பத்தின் தலைவி மனைவி என்பதும், இல்லிற்கு (அ) குடும்பத்திற்கு உரியவள் மனைவி என்பதும் இவ்விரு சொற்களாலும் தெளியப்படுவனவாகும்.[22] பெண்ணைக் குடும்ப விளக்கு என்று கூறும் மரபும் உன்னதத்தக்கதாகும். மனைவி இல்லாள் என்பவற்றிற்கு ஆண்பாலாக மனைவன், இல்லான் என்று குறிப்பிடும் வழக்காறு இல்லை என்பதும் நோக்கத்தகும். இல்லான் என்பது பொருநர் இல்லாதவன் என்றே பொருநர்படும்.

---

19. குறள். அதி. 6.
20. தொல். பொருள். 273.
21. M S. Poornalingam Pillai, Tamil India, p. 70.
22. புறம். 314.

இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழர் சமுதாய வாழ்வில் பெண்டிர் எத்தகைய மதிப்பையும் உயர்நிலையையும் பெற்றிருந்தனர் என்பது புலனாகும். தன் வாழ்க்கைத் துணைவரைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெண்களுக்கு இருந்ததாகத் தெரிகிறது. மனத்திற்கு ஒவ்வாத காதலனைப் பெற்றோர் வற்புறுத்தினாலும் அல்லது பெரும் செல்வத்தைப் பரிசுப் பொருளாக வழங்கினாலும் ஏற்காமல் புறக்கணித்து விடுகிற துணிவும் அப்பெண்களுக்கு அமைந்திருந்தது.[23]

ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி சமமாக வழங்கப்பட்டது. "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்ற வறட்டு வாதம் பழங்காலத்தில் தலைக் காட்டவில்லை. சமையற்கலை, இசை, நாட்டியம் போன்ற கவின்கலைகள் முதலியவற்றில் பெண்கள் சிறப்புப் பயிற்சி பெறும் வாய்ப்புக்கள் இருந்தன. அடக்கம், மனஅமைதி, நேர்மை, அருமைப்பாடு, தகுவன கூறல், அறிவு முதலிய சீரிய இயல்புகள் பெண்களுக் குரியன என்று தொல்காப்பியர் கூறியுள்ளமையும் இங்குக் கருதத்தகும். இதனை,

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான"

என்ற தொல்காப்பிய நூற்பா வலியுறுத்துவது காண்க.[24]

அக்காலத்தில் பெண்கல்வி சிறந்திருந்தாலன்றி இத்தகைய பண்புகளைப் பெறுவது என்பது இயலாத ஒன்று. பெண்கள் சமுதாயக் கல்வி யறிவும் பெற்றிருந்தனர் எனக் கருத இடமுண்டு. ஒரு நாட்டின் பெருமை அல்லது மதிப்பு அந்நாட்டின் பெண்களின்

---

23. புறம். 343.
24. தொல். பொருளியல் 1.

கல்வியறிவையும் பண்பாட்டையும் பொறுத்தே அமைவதாகும். கல்வி, கலை, ஆட்சிமுறை ஆகியவற்றில் பெண்கள் எவ்வகையிலும் ஆடவரைவிடத் தாழ்ந்திருக்கவில்லை. இராசதந்திரம் அல்லது அரசியல் மதிநுட்பம் முதலிய சூழ்ச்சித் திறன்களும் பெண்கள் பால் அமைந்திருந்தன. அதிகமான் நெடுமான் அஞ்சி என்ற அரசரின் மதிப்புமிக்க - திறமைசான்ற - அரசியல் தூதுவராகத் திகழ்ந்தமை சிந்திக்கத்தகும். உலக வரலாற்றிலேயே முதல் தூதுவராக ஒரு தமிழ் மூதாட்டியே திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தகும். காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பண்டு ஆட்சிபுரிந்த தொண்டைமானுக்கும் வேளிர் மரபினனாகிய அதியமானுக்கும் பகைமை ஏற்பட்டுப் போர் மூளும் சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது ஔவையார் துணிவுடன் பகை அரசனாகிய தொண்டைமானிடம் தூது சென்று அவனது படைக்கலக் கொட்டிலைப் பார்வையிட்டுப் பேசிய உரை அப்பெருமாட்டியின் துணிவையும் மதிநுட்பத்தையும் காட்டுவதாகும். நிகழ்விருந்த போரும் அதனால் தவிர்க்கப்பட்டது.[25]

சங்க காலச் சான்றோருள் ஏறத்தாழ ஐம்பது பெண்பாற் புலவர்கள் பல்வேறு கோணங்களில் பல்வேறு செய்திகளைப் பற்றிப் பாடியுள்ளனர். அக்காலப் பெண்கல்வியின் பரப்பை இது காட்டுவதாகும். அரசர்களும் அப்பெண்பாற் புலவர்தம் அறிவுரைகளைச் செவிமடுத்துத் திருந்தியுள்ளனர். பாட்டிலக்கணம் பற்றி அரிய நூல்களை இயற்றிவர்களும் பெண்பாற் புலவர்களேயாவர். சிறுகாக்கை பாடினியார், பெருங்காக்கை பாடினியார் குறிப்பிடத்தக்க பெண்பால் இலக்கணப் புலவர்களாவர்.[26]

மனத்திட்பத்திலும் வீரத்திலும்கூட அக்காலப் பெண்டிர் ஆடவரைப் போன்றே சிறந்து விளங்கியுள்ளனர். சங்க

---

25. புறம். 95.
26. க. வெள்ளைவாரணன், சங்க காலத் தமிழ் மக்கள்.

இலக்கியங்களில் இதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. ஒரு வீ ரத்தாய் தன் ஒரே மகனை நாடு காக்கும் கடமை மேற்கொண்டு போர்க்களம் போக்க நினைந்து அவனைப் போர் வீ ரனாக அலங்கரித்து மகிழ்ந்தாள் என்ற செய்தி சிந்திக்கத்தக்கது. அக்காளை போர்க்களத்தில் பகைவருடன் மோதி இறந்து விட்டான் என்ற செய்தி கேட்ட அத்தாய் மகனைப் பெற்ற பொழுதினும் பெரிதும் மகிழ்ந்தாள் என்று சங்க இலக்கியம் கூறியுள்ளது.[27]

மாதவி யின் மகளாகிய மணிமேகலை உலகிலேயே முதல் பெண் தொண்டர் ஆவாள். மக்கள் சேவையிலும் தியாகத்திலும் மணிமேகலை மிக்கு வணங்கியமை மணிமேகலைக் காப்பி யத்தால் உணரலாகும். அவள் அக்காலத்தில் உயர்ந்த தத்துவ ஞானமும் பெற்றிருந்தமை பாராட்டுக்குரியது. பிற சமயத்தவருடன் வி வாதம் நடத்தித் தனது மதத்தின் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் அளவுக்குப் பெண்கள் பல்வேறு சமய தத்துவ அறிவு உடையவர்களாக இருந்திருக்க வேண்டும். சோழநாட்டுச் சிறைச் சாலைகளில், அடைக்கப்பட்டிருந்த குற்றவாளிக்குப் பல்வேறு சேவைகள் புரிந்து அவர்களைத் திருத்தும் பணியில் மணிமேகலை ஈடுபட்டிருந்தாள் என்பது நோக்க எத்துணை அளவு சமுதாயச் சீர்திருத்தத்தில் பெண்டிர் தம்மை ஈடுபடுத்தி வந்தனர் என்பதும் தெளிவாகிறது. பெண்டிர் அவர்தம் கற்பறம் காரணமாக மக்களால் தெய்வநிலையில் வைத்துப் போற்றப் பெற்றனர். இது கண்ணகி வரலாற்றிலிருந்து அறிய முடிகிறது.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"

என்று திருவள்ளுவர் கூறுவதும் மனங்கொள்ளத்தகும்.

---

27. புறம். 278, 279.

பழக்க வழக்கங்களும் சடங்குகளும்

பண்டைக் காலத்தில் தமிழர்களிடையே நிலவிய பல்வேறு பழக்கங்கள், வழக்கங்கள், சடங்குகள் முதலியவற்றுள் மிகுந்த சுட்டுக்குரியது திருமண நிகழ்ச்சியே ஆகும். திருமணம் தெய்வத்தன்மை உடையது மட்டுமின்றி, அது ஒரு பொருளாதாரக் கருவியாகவும் கருதப்பட்டது. அது தொடர்பாகச் செலவாகும் பொருநர் எங்ஙனம் பரவலாகப் பயன்பட்டது என்பது ஒரு பொருளியல் நிகழ்ச்சியும் (Economic Function) ஆகும்.[28] திருமணம் என்பது மணமக்களே முடிவு செய்துகொள்ளும் ஒரு ஏற்பாடாகவே பண்டைக் காலத்தில் விளங்கியது. தலைவனும் தலைவியும் முதலில் தனியே சந்திப்பார்கள்; பின்னர் இரவுக் குறி பகற்குறி நேரும்; நாளைடையில் அவர்களிடையே நெருக்கமான உறவு ஏற்பட்டு, "கண்ணொடு கண்ணிணை" நோக்கிக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளும் முறை நிகழும். "அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" என்ற கம்பர் பாவடி மனங்கொள்ளத்தகும். சிறுபான்மையே பெற்றோர் இசைவுடன் மனம் நிச்சயிக்கப்பட்டது. சாதி, சமயக் கட்டுப்பாடுகள் அக்காலக்கட்டத்தில் திருமணத்திற்குத் தடையாக அமையவில்லை. அன்பும் மன ஒப்புதலுமே வேண்டப்பட்டன.[29] பொருளற்ற, பொருத்தமற்ற வீண் சடங்குகள் திருமணத்தின் போது மேற்கொள்ளப்படவில்லை. அவை எல்லாம் பிற்காலத்தில் புகுந்தனவே ஆகும். புரோகிதம் அக்காலத்தில் இடம் பெறவில்லை. பொருட்செலவும் மிகமிகக் குறைவே. ஒருசில செல்வர்களே திருமணத்தை விளம்பரப்படுத்தியும் ஆரவாரப்படுத்தியும் நடத்தி வந்தனர். சிலப்பதிகார கதைத் தலைவர்களாகிய கோவலன் - கண்ணகி திருமணம் செல்வச் செழிப்பின் முத்திரையாகும்.[30] எளிய பொதுமக்கள்

---

28. Harry L. Sapiro'Man, Culture and Society (Ed.), p. 338.
29. குறுந். 40.
30. சிலப். மங்கல. 45–53.

திருமணத்தை ஒரு தவிர்க்க முடியாத - அறவழிப்பட்ட இயல்பான நிகழ்ச்சியாகவே கருதியதால் பொருநர் வீணாக்கப்படவில்லை. பிரிக்கப்படாத - கூட்டுக் குடும்ப முறை (Joint Family System) அக்காலத்தில் பெருவழக்கில் இல்லை என்றே கூறலாம். திருமணம் நடைபெற்றதும் மணமக்கள் தனித்துக் குடும்பம் நடத்தும் பழக்கமே அக்காலத்தில் இருந்துள்ளது. இவ்வுண்மை சிலப்பதிகாரத்தால் புலப்படும்.[31] இம்முறை பொருளாதார அடிப்படையில் நிலவியது. மணமகன் பொறுப்புடன் தானே பொருளீட்டிக் குடும்பம் நடத்தவேண்டும் என்பது அவர்கள் கொள்கையாகும்.

விதவைகள் மறுமணம் அக்காலத்தில் வழக்கில் இருந்ததாகத் தோன்றவில்லை. அது சட்டப்படி விலக்கப்பட்ட தாகவும் புலப்படவில்லை. கணவன் இறந்த பின்னர் மனைவி மங்கலமிழந்த நிலையில் கைம்மை நோன்பு பூண்டு காலங் கழித்தமை புலனாகிறது. இந்தச் சமுதாய வழக்கம் பொருளாதார நிலையையும் பாதிப்பதாயிற்று. கைம்பெண்டிர் வாணாள் முழுவதும் வெளிப்படாமலும் வேலைக்குச் செல்லாமலும் வீட்டில் அடைபட்டுக் கிடப்பது இல்லற வாழ்க்கையில் ஒருவகைப் பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்துவதாயிற்று என்று கருத இடமுண்டு.[32]

இறப்புக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சடங்குகள் மிகவும் எளிமையானவை. இறந்தோர் உடலங்களை மூன்று வகைகளில் புறம் போக்கினர். தாழிகளில் அடைக்கப்பட்டும், மண்ணில் புதைக்கப்பட்டும், எரியூட்டப்பட்டும் உடல்கள் அழிக்கப்பட்டன. இது தொடர்பாகப் பெரும் பொருநர் செலவிட்டனர் என்று கருத இடமில்லை.

---

31. சிலப். மனையறம். 85–88.
32. Dr. R. Balakrishnan, A Review of Economic Growth in India, p.3.

தமிழ் மக்கள் தெய்வ நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். ஆனால் தெய்வங்களின் பொருட்டோ சமய வழிகளின் பொருட்டோ அக்கால மக்கள் பெரும் பொருட் செலவில் ஈடுபட்டனர் என்று கூறவியலாது. அவர்கள் பொதுவாகச் சிக்கனமான வாழ்க்கையே நடத்தியுள்ளனர். அவர்கள் செல்வத்தை வீணாக்கவில்லை; ஆடம்பரக் கேளிக்கைகளில் பொருநர் செலவிடவில்லை. செல்வத்தை உயர்ந்த வழியில், சமுதாயத்தில பயனளிக்கும் வகையில் செலவு செய்தனர். வறியவர்களுக்குக் கொடுப்பதை அறமாகக் கொண்டிருந்தனர். மிகுந்த ஆலோசனைக்கும் நெடிய சிந்தனைக்கும் பின்னரே செல்வத்தைச் செலவிட்டனர். சிக்கனமும் சேமிப்பும் அக்காலத்தில் பரவலான வழக்காறாக இருந்தபோதிலும், ஈகையும் இல்லோர்க்கு வழங்கும் மனப்பண்பும் நிறைந்திருந்து. அறப்பண்பு அவர்களை ஆட்கொண்டது.[33]

மக்கள் தொகை

ஒரு நாட்டு மக்களின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் சக்தி வாய்நத காரணிகளுள் மக்கள் தொகையும் ஒன்றாகும். இது சமுதாயச் சிக்கல் என்பதைவிடப் பொருளாதாரச் சிக்கல் என்றே கூறுதல் வேண்டும். ஆகவே ஒரு நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கமும் நெருக்கமும் பற்றிய ஆய்வு பெரிதும் நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இச்சிக்கல் சமுதாயத்தில் மிகப்பெரும விளைவுகளை உண்டாக்கிவிடும், தன்மை வாய்ந்தது. ஆனால இன்றுள்ள ஆய்வு வசதிகள் அக்காலத்தில் இல்லை. எனவே பண்டைக்காலத் தமிழகததில் வாழந்த மக்களின் தொகை என்ன? மக்கள் பரவலாக இருந்தனரா? இடநெருக்கடியால் துன்புற்றனரா? இத்தகைய கேள்விகளுக்கு விடை காண்பது மிகவும் அரிதாகும். இவற்றைத் துணித்து அறிந்து கொள்வதற்குரிய பதிவுகளோ பிற சான்றுகளோ

33. M.S. Poornalingam Pillai Tamil India, p.70

இலக்கியங்களில் கிடைக்கவில்லை. மக்கள் தொகை கணக்கெடுப்பும் அக்காலக் கட்டத்தில் முறையாக அரசு மேற்பார்வையில் நடைபெற்றதா என்பதும் கேள்விக்குறியே. இதுபற்றிப் பின்வருமாறு வரலாற்றுப் பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் வருந்திக் கூறியுள்ளார்:

"மக்கள் தொகை போன்றதொரு மிகவும் இன்றியமையாத ஓர் அளவீடு அல்லது கணக்கீடு அக்காலத்தில் இல்லை என்பது அறிய வேதனையாக உள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டுக் குறிப்பு யாதொன்றும் இதுபற்றிக் கிடைத்திலது. மக்களின் நிலவுரிமைகளையும் உடைமைகளையும் பற்றிய துல்லியமாக எழுத்துச் சான்றுகள் பல கிடைத்திருப்பினும் மக்கள் தொகை பற்றிய எச்சான்றும் இல்லாதது வியப்பாகவே உள்ளது. அரசர்கள் அக்காலத்தில் பல்வேறு சீரிய ஆட்சியமைப்புகளையும், வரி வாங்கும் முறைகளையும் உணர்ந்திருந்தும் இத்துறையில் அவர்கள் சிறிதளவு கவனமும் செலுத்தவில்லை என்பது சிந்திக்க வேண்டியுள்ளது. மக்கள் கணக்கீடு முறை நிலவியிருக்குமானால் கல்வெட்டு போன்ற சான்றுகள் கிடைக்காமல் போவதற்குக் காரணமே இல்லை".[34]

இத்தகைய சூழ்நிலையில் வரலாற்றுப் பேரறிஞர்கள் ஒருசில இலக்கியக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு பெரும்பாலும் ஊகிக்க வேண்டியவர்களாகவே உள்ளனர். இருளிலும் ஒரு ஒளி பிறக்கும். அது போல நல்ல வேளையாக தமிழகத்தின் பழம்பெரும் ஊர்களும் நகரங்களும் பெரும்பாலும் அப்பெயர்களாலாலேயே இன்றும் விளங்குகின்றன. ஒருசில கடற்கரை நகரங்கள் கடல்கோள்களுக்கு இரையாகின என்பது உண்மையே. இன்னும் சில தலைநகரங்கள் இன்று எளிய சிற்றூர்களாகவோ, நகரங்களின் பகுதிகளாகவோ மாறியுள்ளன. சான்றாகக் காவிரிப்பூம்பட்டினம், உறையூர் முதலியவற்றைக் காணலாம்.

---

34. K.A. Neelakanda Sastry, *The Cholas*, p. 547.

பழங்காலத்தில் சிற்றூர்களைவிட நகரங்களிலேயே மக்கள் பெருக்கம் அதிகம் இருந்திருக்க வேண்டும். நகரங்கள் வாணிபத்தின் மையங்களாக விளங்கியுள்ளமையே இதற்குக் காரணம். கடற்கரைப் பட்டினமாயினும், உள்நாட்டு நகரமாயினும் மக்களின் பொருளாதார முயற்சிகள் அவ்விடங்களில்தான் மிகுதியும் காணப்பட்டன. கப்பல்களில் பொருநர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டன; சில பொருநர்கள் வெளிநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதியாயின.[35] மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலப் பகுதியிலோ, காடும் காடு சார்ந்த முல்லை நிலப் பகுதியிலோ மக்களின் பொருளாதார முயற்சிகள் பெருகுவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், அப்பகுதிகள் இயற்கை வளங்கள் நிறைந்தனவாக இருந்திருந்தல் முடியாது. வயலும் வயல் சார்ந்த மருதநிலம், கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலம் ஆகிய இங்குதான் மக்கள் பல்வேறு பொருநர்களை விளைவித்தும் விற்றும் வாங்கியும் பொருளாதார முயற்சிகள் பலவற்றில் ஈடுபட வாய்ப்பிருந்தது.

பண்டைத் தமிழகத்தில் மக்கள் தொகை பற்றி ஆட்சியாளரோ, மக்களோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பரந்துபட்ட சங்க இலக்கியங்களுள் ஆங்காங்கே இலைமறை காய் போல் மறைந்து மின்னிக் கொண்டிருக்கும் செய்தித் துணுக்குகளை ஆராயும்போது ஐயத்திற்கு இடமின்றி முடிவு செய்ய இயலாது. சுருங்கக் கூறின் மக்கள் தொகை என்பது ஒரு சிக்கலாகவே தோன்றவில்லை. அரசரோ, பெற்றோரோ இதுபற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. மாறாக, மக்கட் செல்வத்தின் சிறப்புப் பற்றியும் அதன் இன்றியமையாமை பற்றியும் தமிழ் இலக்கியங்களும், அற நூல்களும் வற்புறுத்திக் கூறுகின்றன. மக்களைப பெறாதோர் புண்ணியம் செய்யாதோர்

---

35 Dr T.V. Mahalingam, Economic Life in the Vijayanagar Empire, p.5.

என்று கருதவும் செய்தனர். பின்வரும் காரணிகளிலிருந்து அக்காலத் தமிழகத்தில் மக்கள் பெருக்கம் இல்லை என்பதும், ஓரளவு குறைவாக இருந்தது என்பதும் புலனாகும்.

(1) திருமணம் என்பது ஒரு சமுதாயக் கடமை என்பது வற்புறுத்தப்பட்டது. இல்லறமே நல்லறம் என்பதும் வலி யுறுத்தப்பட்டது. வயது வந்த ஆணும் பெண்ணும் உரிய காலத்தில் திருமணம் செய்துகொள்ளத் தவறுவதில்லை. ஆணோ பெண்ணோ திருமணம் இன்றிக் காலம் கழிப்பது பழிக்கப்பட்டது.[36]

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்பது அறநூற் கட்டளை. இளமைத் துறவு விலக்கப்பட்டது. வடவர் துறவு பற்றிக் கொண்டிருந்த கோட்பாட்டிற்கும் தமிழர் கோட்பாட்டிற்கும் பெரும் வேறுபாடு உண்டு. இல்லறம், பிரமசரியம், சந்நியாசம், வானப்பிரத்தம் என்ற நான்கு நிலைகளை வடவர் வற்புறுத்துவர். ஆனால் தமிழர் இல்லறம், துறவறம் என்ற இரண்டினையே கொண்டிருந்தனர். துறவறமும் திருமணம் ஆன கணவனும் மனைவியும் அன்பினால் இல்லறம் நடத்தி, மக்களைப் பெற்றுப் பொருளீட்டித் தானும் நுகர்ந்து வறியவர்க்கும் அளித்துத் தம்மவரைப் போன்றே பிறரையும் நேசித்துக் கடமைகளை ஆற்றிய பின்னர் மனத்துறவு பூண்டு (காட்டிற்குச் செல்லுதன்றி) இல்லறத்தில் இருந்துகொண்டே அருள் உள்ளத்தால் மக்கள் சேவை செய்து வாழ்வதே உண்மையான துறவு என்பது தமிழர் கொள்கையாகும். இதனைத் தொல்காப்பியர்,

---

36. குறள். 1007.
37. தொல். கற்பு. 51.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்று கூறுவதால் உணரலாகும். ஆனால் இக்காலத்தில் திருமணம் செய்து கொள்ளாமல் தனிமனிதனாக வாழவேண்டும் என்ற விருப்பத்தைப் பொருளாதார நிலை உருவாக்குகிறது.

(2) அக்காலத்தில் திருமண வயது வரையறை செய்யப்பட்டது. ஆண்மகன் 16 வயதும் பெண்மகள் 12 வயதும் உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பது இலக்கிய வாயிலாக அறியப்படும் செய்தியாகும்.[38] இவ்வயது வரம்பு பெரும்பாலும் தவறாமல் மேற்கொள்ளப்பட்டது எனலாம். மக்கள் தொகை ஒரு சிக்கலாக அக்காலத்தில் இருந்திருக்குமானால் இத்துணைக் குறைந்த வயதளவில் திருமணம் ஊக்குவிக்கப்பட்டிருக்குமா என்பதும் சிந்திக்கத்தகும். ஆனால் இன்று இவ்வயது வரம்பு நமது நாட்டுத் திருமணச் சட்டத்திற்கு முரணானது என்பது யாவரும் அறிந்த ஒன்று.

(3) திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் முயற்சி அக்காலத் தமிழரிடையே நிலவியது எனினும், ஆடவர் வணிகத்தின் பொருட்டு வெளிநாடுகள் செல்லும்போது மனைவிமார் அவர்களுடன் செல்லுதல் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது. ''முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை'' என்பது தொல்காப்பியம்.[39] இத்தடை பெண்களுக்குரிய உரிமையில் தலையிடுவதாகாது. மாறாக, இது ஒரு பொருளாதார நோக்கத்துடன் விதிக்கப்பட்டதாகும். ஆடவர் பொருளீட்டும் பொருட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும்போது தத்தம்

---

38. சிலப். மங்கல 24–34.
39. தொல். அகத். 34.

பெண்டிரையும் அழைத்துச் சென்றிருப்பரேல் அவர்கள் குடும்பம் குடும்பமாக அங்குத் தங்கிவிடும் நிலை காலப்போக்கில் உருவாகிவிடும். அவ்வாறு நிகழின் உள்நாட்டில் மக்கள் தொகையே அருகிவிடும் நிலை ஏற்படலாம். வெளிநாட்டில் ஈட்டிய பெரும் செல்வங்கள் எல்லாம் பிறந்த நாட்டிற்கு வர இயலாமல் வாழச் சென்ற நாட்டிலேயே முதலீடு செய்யப்பட்டு விடலாம். இப்பொருளாதார அடிப்படையில்தான் இத்தடை பெண்களுக்கு விதிக்கப் பட்டிருக்கலாம் என்று உய்த்துணரலாம்.

(4) போர் தொடங்குமானால் அரசர்கள் ஓர் ஆணை பிறப்பிப்பது மரபு. நோயுற்றவர்களும் பெண்களும் - குறிப்பாகப் புதல்வரைப் பெறாத பெண்களும் பாதுகாப்பான இடங்களைத் தேடிக்கொள்ளுமாறு பணிக்கப்பட்டனர். ஏனெனில் போரினால் பெண்கள் பெருமளவில் பகைவர் தாக்குதலுக்குப் பலியாகி விடுவர் என்று அஞ்சப்பட்டது. இதனால் பண்டைக் காலத்தில் தாய்மார்கள் பெரிதும் பேணப்பட்டனர் என்பதும், மக்கட்பேறு மிகவும் இன்றியமையாதது என்பதும் நன்கு தெளிவாகும். இவ்வுண்மை,

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்"[40]

என்ற புறப்பாடலால் விளங்கும். மற்றொரு புறநானூற்றுப் பாடலில், தேசப்பற்று மிக்க - கடமை உணர்வுள்ள - தாயொருத்தி வலிமை மிக்க ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுப்பதும், அவர்களை நன்கு வளர்த்து வீரர்களாக ஆக்கி நாட்டைக் காக்கும் நற்பணிக்கு விடுப்பதும் தன் தலையாய கடமை என்று கூறும் செய்தி விவரிக்கப்பட்டுள்ளது.[41]

40. புறம். 9.
41. புறம். 312.

(5) பண்டைக் காலத்தில் பெற்றோர் மக்களைப் பெறறு வளர்த்தல் மிகவும் பெருமைக்குரிய ஒன்று என்று கருதினர். திருவள்ளுவரும், மக்கட்பேறு போன்று பாராட்டத்தக்க பேறு பிறிதொன்றும் இல்லை என்று வலியுறுத்துவாராயினார்.[42] வில்லாளியின் கையில் அமைந்த அம்பு போன்று உறுதியாகப் பயன்படக்கூடியவர்கள் மக்கள் என்று கருதப்பட்டது. குறுகுறுவென நடந்து பெற்றோரது உண்கலத்தில் கைகளை இட்டும் தொட்டும் சிதறியும் விளையாட்டயர்ந்து அவர்களை இன்புறுத்தும் பிள்ளைச் செல்வத்தைத் தவிர இவ்வுலகில் வேறு என்ன இன்பம் உள்ளது? என்று மகிழ்ந்து வாழும் பெற்றோர் பலராவர். இதன்ாலும் மக்களை நாட்டின் வளமாகக் (Human Resource) கருதினர் பண்டையோர் என்பது புலப்படும்.[43] ஒரு நாட்டில் வாழும் குடிமக்களின் பல்வேறு தேவைகளையும் குறைவின்றி நிறைவு செய்யும் கடப்பாடுடைய அரசனே இவ்வாறு மக்கட்பேற்றைப் பெரிதும் பாராட்டுவானாயின், அக்காலத்தில் மக்கட்பெருக்கம் என்பது நாட்டின் பொருளாதாரத்தை நலிவடையச் செய்யும் சாதனம் என்று கருதியிருப்பானா? ஆனால் இன்று அரசியலார் மிகவும் உறுதியாக மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் என்று பறைசாற்றி வருவது ஒப்பு நோக்கத்தகும்.

(6) சங்க காலத்திலும் அதற்கு .முன்பும் தமிழகத்தில் மன்னர்களும் குறுநில மன்னர்களும் ஒருவரோடு ஒருவர் பூசலிட்டுப் பகைமை பாராட்டி வந்தனர். சில வேளைகளில் இது போராகவும் வெடிக்கும். புறநானூறு போன்ற தொகை நூல்களை மேற்போக்காக நோக்கினும் சிறுசிறு மாறுபாடு காரணமாக மன்னர்கள் போரிட்டு வந்துள்ளமை புலனாகும்.

---

42. குறள். 61.
43. புறம். 188.

அடிக்கடி போர் நிகழ்ச்சிகள் நடைபெறலாயின. அதன் காரணமாக ஆடவர் தொகை அருகுவதாயிற்று. இந்த நிலையில் மக்கட்பெருக்கம் என்பது பற்றிக் கனவிலும் கருதமுடியாத நிலை அன்று இருந்தது.

(7) இறுதியாக, மற்றொரு செய்தியும் நோக்கத்தகும். பண்டைக்கால அரசர் எத்துணை வலியுடையவர்களாக இருந்திருப்பினும் பிறநாட்டைப் படையெடுத்துத் தம் நாட்டுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற அரசியல் நோக்கம் அற்றவர்களே ஆவர். அயல்நாடுகளின் மீது படையெடுத்தனர் எனினும், அந்நாட்டை அடிமை கொண்டு தம்மினத்தவரைக் குடியேற்றினாரல்லர். உலக வரலாற்றில் போரில் வெற்றி பெற்ற அரசர் வெல்லப்பட்ட நாட்டைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டதற்குச் சான்றுகள் உள்ளன. கிரேக்க நாடும், உரோமானிய நாடும் தக்க சான்றுகளாகும். இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்து பல குடியேற்ற நாடுகளைக் கொண்டு விளங்கியது என்பது உன்னத்தகும். இதனாலும் தமிழகம் அக்காலத்தில் மக்கட் பெருக்கத்தால் துன்புற்றது என்றோ அதன் காரணமாகப் பொருளாதார நலிவு ஏற்பட்டது என்றோ கருதமுடியாது.

மேற்கூறிய காரணங்களால், பண்டைத் தமிழகத்தில் மக்கட்பெருக்கம் சிக்கலாக உருவெடுக்கவில்லை என்பதும், அதுகாரணமாக நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தது என்பதும் சிந்தனைக்கும் எட்டாதவையாகும். அன்றியும் பின்வரும் சில முடிவுகளும் இக்கட்டுரையால் வெளிப்படுவனவாகும்.

இடைக்காலத்தில் நிலவிய சாதிப் பாகுபாடு பண்டைத் தமிழகத்தில் இல்லை. தொழில் பற்றிய பிரிவுகளே அன்று நிலவின. குறிஞ்சி முதலிய நிலவழி மக்கள வாழ்ந்து வந்தனர் என்பதனால் அக்கால மக்கள் பிறநாட்டுத் தொடர்பற்றவர்களாக

இருந்தனர் எனக் கொள்ளவியலாது. மக்கள் நிலங்கடந்து எங்கு வேண்டுமானாலும் செல்ல முடிந்தது. பிறப்பு மட்டும் ஒருவனை உயர்ந்தவனாக ஆக்கிவிடவில்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அக்காலத்தில் நிலவின என்பது உண்மை. ஆனால் அக்குறை களையப்பட வேண்டும் என்று அக்காலச் சான்றோர் முழங்கி வந்தனர் என்பதும் புலனாகும்.

சமுதாய நிலையிலும் தேசிய அளவிலும் அக்காலத்தில் பெண்டிர் பெருமைக்குரியவர்களாகக் கருதப்பட்டனர். வாழ்க்கையில் கணவனும் மனைவியும் சமமான பங்காளிகள். கணவன் உயர்ந்தவன், மனைவி தாழ்ந்தவள் என்ற கருத்து நிலவவில்லை. பொருளாதார வளத்திற்குப் பெண்களும் தம்மாலியன்ற முறையில் உதவினர். சடங்குகள், கேளிக்கைகள், சமய விழாக்கள் முதலியவற்றால் மக்கள் வீண் பொருட் செலவில் ஈடுபடவில்லை. அவை யாவும் எளிமையாகவே அமைந்தன. செல்வர், பெருநிலக்கிழார் போன்றோர் தமது பெருமை பிறங்குமளவில் அளவுக்கு மீறிய செலவினங்களில் ஈடுபட்டனர். மக்கட்தொகை என்பது அக்காலத்தில் பொருளாதாரச் சிக்கலாக அமையவில்லை. மாறாக மக்களைப் பெறல் வேண்டும் என்ற உந்துதல் பேரளவில் நிலவியது. மக்கள் பெருக்கத்தால் உணவுப் பொருநர் தட்டுப்பாடு ஏற்பட்டது என்ற கேள்வியே பிறக்கவில்லை. மாறாக இயற்கைச் சதிகளால் மக்கள் பற்றாக்குறையால் வருந்தினர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. கிராமங்களைவிட நகரங்களும் தலைநகரங்களும் வளமாக இருந்தன. காரணம் வணிகப் பெருக்கமாகும்.

சுருங்கக்கூறின், இலக்கியச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது மக்கள் வாழ்வில் சில குறைகள் நிலவின என்றாலும், அக்காலத்தில், பொதுவாக சமுதாய இணக்கம், ஒற்றுமை, போதுமென்ற மனநிலை முதலிய நல்லியல்புகள் பல தமிழ்ச் சமுதாயத்தின் மதிப்பை உயர்த்தியுள்ளன.[44]

---

44. K.A. Neelakanda Sastry, The Hindu Weekly Magazine, May 23, 1960.

(ஆ) அரசியல் பின்னணி

தமிழ்நாட்டின் எல்லை

பண்டைத் தமிழகம் நாற்புறமும் இயற்கை எல்லைகளைப் பெற்றிருந்தது. வடக்கே திருவேங்கடமலை, தெற்கே குமரியாறு, மேற்கில் அரபிக்கடல், கிழக்கில் வங்கக் கடல் எல்லைகளாக அமைந்து சிறந்த பாதுகாப்பைத் தந்தன. தொல்காப்பியர் காலத்தவராகக் கருதப்படும் பனம்பாரனாரும், இளங்கோவடிகளும் தமிழக எல்லைகளை முறையே,

"வடவேங்கடம் தென் குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"[45]

என்றும்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த தண்புனல் நாடு"[46]

என்றும் பாடியிருப்பது காண்க. மேற்கிலும் கிழக்கிலும் கடல்கள். பாரதியார்,

"நீலத்திரைக் கடல் ஓரத்திலே - நின்று
நித்தம் தவம்செய்யும் குமரிஎல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

என்று அக்காலத் தமிழகத்தின் பரப்பினைத் தெளிவாக வரையறை செய்வது அறியத்தகும். இவ்வாறு நல்ல இயற்கைப் பாதுகாப்புகளுடன் ஒன்றியும் செறிந்தும் திகழ்ந்தது தமிழ்நாடு.

---

45. தொல். பாயிரம்.
46. சிலப். வேனில். 1–2.

அரசியல் அமைப்பு

தமிழகத்தில் சங்க காலத்தும் அதற்கு முன்னரும் நிலவிய அரசியலமைப்பு முடியாட்சி ஆகும். இதுவே உலகில் பல்வேறு நாடுகளில் தோன்றி நிலவிய முதல் ஆட்சி அமைப்பாகும். அக்காலத் தமிழ் மக்கள் எத்தகைய ஆட்சி அமைப்பு இருத்தல் வேண்டும் என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அன்று மக்கள் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த நிலையை நோக்கும்போது அவர்களுக்கு ஒரு நிலையான - வலிமை மிக்க - ஆட்சி அமைப்பு தேவைப்பட்டது. எவரொருவர் உள்நாட்டில் குழப்பத்தை அடக்கியும் உட்பகையைக் களைந்தும் வெளிநாட்டுப் படையெடுப்பை முறியடித்தும் மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் உரிய பாதுகாப்பைக் கொடுக்கமுடியுமோ அவரைத் தம் தலைவராக ஏற்றுக்கொண்டனர். கள்வர், ஆறலைப்போர் முதலிய உட்பகைவரை அடக்கி ஒடுக்க வல்லவரே மக்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இவ்வாறு ஆற்றல்மிக்க தலைமையே காலப்போக்கில் பாரம்பரிய முடியாட்சிக்கு வழிகோலியது. எனவே, முடியாட்சி என்பது அக்காலத் தேவையாகக் கருதப்பட்டது.[47] தமிழகம் முழுவதும் சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று மரபினர்தம் முடியாட்சியில் இருந்தது. ஏறத்தாழ இன்றைய நெல்லை, தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ள பகுதியே அக்காலப் பாண்டி நாடாகும். திருச்சிராப்பள்ளி, தஞ்சை, நாகப்பட்டினம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி சோழநாடு எனப்பட்டது. இன்றைய கேரள மாநிலமும், கருநாடக மாநிலத்தின் ஒரு பகுதியும் அக்காலச் சேர நாடாகும். இடையில் முடியுடைய மூவேந்தரேயன்றி தொண்டை மன்னரும் தமிழகத்தின் வடபால் ஆண்டுவந்தனர். வடஆற்காடு,

47. Dr T.V. Mahalingam, South Indian Polity, p.6

சித்தூர், செங்கல்பட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி தொண்டை நாடு எனப்பட்டது. ஆகவே பண்டைத் தமிழகம் சேர, சோழ, பாண்டியர், தொண்டைமான்கள் ஆகிய நால்வகை மரபினரால் ஆளப்பட்டு வந்தது என்பது இலக்கியங்கள் வாயிலாகப் புலனாகிறது.

தமிழக நகர அரசுகள்

இனி மேலே கூறிய நால்வகை அரச மரபினரே அன்றி குறுநில மன்னர்கள் சிலர் தமிழகத்தில் சிற்சில பகுதிகளைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்து ஆண்டு வந்தனர். இவர்கள் வேளிர் எனப்பட்டனர். இவர்கள் முடியுடை வேந்தரைப் போன்றவர்களே ஆவர். கொடி, முரசு, படை முதலியவற்றைத் தமக்குரிமையாகக் கொண்டிருந்தனர். போர்க் காலங்களில் முடியுடை மூவேந்தரும் இவ்வேளிர்களின் படைத்துணையை நாடுவாராயினர். இவ்வேளிர் பலராவர். இவர்கள் குறுநில மன்னர்களேயாயினும் வேறு எந்த முடிமன்னர்க்கும் அடங்கியவர் அல்லர்.[48] இவ்வேளிர்தம் ஆட்சி அமைப்பையும் தனித்தன்மையையும் இன்ன பிறவற்றையும் ஊன்றி நோக்கின் பண்டைக் காலத்தில் கிரேக்க நாட்டில் நிலவிய புகழ் பெற்ற நகர அரசுகளை ஒத்திருந்தன எனலாம். கிரேக்க நாட்டு நகரக் குடியரசுகள் நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டிருந்தன. ஒன்று, ஒரு நகர அரசுக்குத் தலைநகரம் உண்டு. அந்நகரைச் சுற்றிலும் சிலபல பேரூர்கள் அல்லது சிறிய நகரங்கள் அமைந்திருக்கும். இரண்டு, நகர அரசின் தலைநகரம் பெரும்பாலும் ஒரு மலை அல்லது குன்றின் மீது அமைக்கப்பட்டிருக்கும். மூன்று, ஒரு நகர அரசுக்கும் மற்றொரு நகர அரசுக்கும் பெரும்பாலும் எவ்விதத் தொடர்பும் இராது. நான்கு, ஒவ்வொரு நகர அரசுக்கும் தனிப்படை உண்டு.

---

48. Dr. T.V. Mahalingam, South Indian Polity pp.3–4.

மேற்கூறிய இயல்புகளை மனம் கொண்டு பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை இலக்கிய வாயிலாகக் காண்போமாயின், தமிழகத்திலும் கிரேக்க நாட்டில் இருந்தது போன்ற நகர அரசுகள் ஏறத்தாழ அதே காலக்கட்டத்தில் நிலவின என்ற உண்மை புலனாகும். சான்றாக, பறம்பு நாட்டைக் கூறலாம். பறம்பு நாடு மலைப் பகுதி; தலைநகரம் பறம்பு மலையில் அமைந்திருந்தது. அதனைச் சூழ 300 ஊர்கள் இருந்தன. இதனை ஆண்டவன் பாரி என்ற வேளிர் தலைவன். இவன் தனிப்படை வைத்திருந்தான். இவன் ஒருசமயம் முடியுடை வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களைத் தனியொருவனாக நின்று போர்க்களத்தில் எதிர்த்துள்ளான் என்பது புறநானூறு உணர்த்தும் செய்தியாகும். தனிக்கொடியும் இவனுக்கு உண்டு. நல்ல பயிற்சி பெற்ற - அரசுப் பற்றுமிக்க வலுவான படையும் இருந்தது. இவன் யாருக்கும் அடங்கியவன் அல்லன். தனியுரிமை படைத்தவன்.[49] இவன் நாட்டு மக்களும் உரிமை உணர்வு மிக்கவர்கள். பகைவரிடமிருந்து எதிர்ப்பு வரும்போது தம் உயிரையும் மதியாது நாட்டின் ஒருமைப் பாட்டையும் சுதந்திரத்தையும் காக்கவல்ல கடமை உணர்வு மிக்கவர்களாக விளங்கினர்.

இவ்வாறே, பொதியமலைத் தலைவனாகிய அண்டிரன், வேங்கடமலைத் தலைவன் ஆதனுங்கன், குதிரைமலைத் தலைவன் அதியமான், பழநிமலைத் தலைவன் பேகன் ஆகியோர் தனித்தனி நகர அரசுகளின் தலைவர்களே ஆவர். பாரி மன்னனைப போன்றே இவர்களும் படை, கொடி, முரசு முதலியவற்றைத் தனித்தனியே கொண்டு விளங்கினர். இவர்தம் அரசுகள் பண்டைய கிரேக்க நகர அரசுகள் போன்றவையேயாகும்.

பண்டையத் தமிழகத்தில் முற்கூறிய வேளிர்களேயன்றி சில குறுநில மன்னர்களும் சிற்சில பகுதிகளை ஆண்டனர்.

---

49. புறம். 110.

அவர்கள் தம் ஆணைக்குட்பட்ட சில ஊர்களில் நிலவரி போன்ற சில வரிகளை வசூலித்தனர். ஆனால், இவர்கள் தனியுரிமை உடையவர்களல்லர். இவர்கள் இந்தியாவில் அண்மைக்காலம் வரை விளங்கிய ஜமீன்தார்களைப் போன்றவர்கள். முடிவேந்தர்களுக்கு இவர்கள் அடங்கியவர்கள். போர்க் காலங்களில் தத்தம் மன்னர்கள் வேண்டும்போது படைகள் அனுப்பியும் பொருநர் முதலிய சாதனங்கள் வழங்கியும் உதவி வந்தனர்.[50] அஞ்சூர் கோயமான் (கோவை மாவட்டம்), நாலூர்நாகன் (இராமநாதபுரம் மாவட்டம்), மல்லி காரியாதி (திருவில்லிப்புத்தூர் வட்டம்) போன்ற பெருநிலக் கிழார்கள் அக்காலத்தில் சோழ மன்னர்களுக்கும், பாண்டிய மன்னர்களுக்கும் படை முதலியன உதவி செய்தவர்கள்.

நிருவாக அமைப்புகள்

இதுகாறும் கூறியவற்றால் சங்ககாலத் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர் ஆகிய முடியுடை மூவேந்தர்களும், தொண்டைமான்களும், பாரி போன்ற வேளிர்களும், முடிவேந்தர்களுக்குக் கப்பம் செலுத்திய பெருநிலக் கிழாரும் ஆட்சி புரிந்து வந்தனர் என்பது இலக்கியங்கள் வாயிலாகப் புலனாகிறது. நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்தி அமைதியை ஏற்படுத்தவும், பல்வேறு பகுதி மக்களுக்கும் உரிய நீதி வழங்கவும் ஆட்சியாளர்கள் தத்தம் நாடுகளைச் சிறுசிறு அங்கங்களாகப் பகுத்துக் கொண்டிருந்தனர். சான்றாக, சேர நாடு அக்காலத்தில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. குடநாடு, குட்டநாடு, பொறைநாடு என்பன அம்மூன்று பகுதிகளாகும். அவ்வாறே பாண்டிய நாடு மதுரை, மோகூர், பழையனூர் முதலிய ஐந்து பகுதிகளாக நிருவாக வசதிக்காகப் பிரிக்கப்பட்டிருந்தது. சோழ நாடும் புகார்ப் பகுதி, உறையூர்ப் பகுதி என்ற இரு பெரும் பகுதிகளைப் பெற்றிருந்தது.

---

50. புறம். 179.

சேர நாட்டில் அக்காலத்தில் ஒவ்வொரு மரபினரும் ஒருவர்பின் ஒருவராக ஆட்சியில் அமர்ந்தனர். எடுத்துக்காட்டாக, குடநாட்டுப் பகுதியை சார்ந்த ஒருவன் அரசனாக இருந்தால் அவன் 'குடக்கோ' என்றும், 'குடவர் கோன்' என்றும் அழைக்கப் பெற்றான். குட்ட நாட்டான் அரசு கட்டிலேறினால் அவன் குட்டவன் என்றும், குட்டுவன் கோதை என்றும் அழைக்கப் பெற்றான். பொறை நாட்டான் அரசனானால் அவன் 'பொறையன்' என்றும், 'இரும்பொறை' என்றும் குறிக்கப்பெற்றான். இவ்வுண்மை சேரமான் குடக்கோ, சேரன் செங்குட்டுவன், கணைக்கால் இரும்பொறை என்ற பெயர்களால் விளங்கும். ஒரு பாண்டிய மன்னன் 'பஞ்சவர் ஏறே' என்று குறிக்கப்படுகிறான். இதனால் அக்காலப் பாண்டிய நாடு ஐந்து ஆட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பது புலனாகிறது. சோழ நாடும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது என்று கண்டோம். அவ்வுண்மை நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்ற சோழ மன்னர்கள் ஒரே காலத்தில் ஆண்டமையால் புலனாகும்.[51] நலங்கிள்ளி பூம்புகாரைத் தலைநகராகவும், நெடுங்கிள்ளி உறையூரைத் தலைநகராகவும் கொண்டு ஆட்சி புரிந்தனர். முடியுடை வேந்தர்கள் தத்தம் தலை நகரங்களில் வீற்றிருக்கவும், பிற ஆட்சிப் பகுதிகளில் அவர்தம் சார்பாளர்கள் பொறுப்பேற்கவும் செய்தனர். அச்சார்பாளர்கள் பெரும்பாலும் மன்னர்களின் உறவினர்களாகவே இருந்தனர். இத்தகைய ஆட்சித் தலைவர்களை இக்கால இந்திய அரசியலமைப்பில் விளங்கும் மாநில ஆளுநர்களுக்கு ஒப்பிடலாம். பழந்தமிழகத்தின் இத்தகைய அரசியலமைப்பின் பின்னணியை நோக்குங்கால் சில முடிவுகள் புலப்படும். அவையாவன: (1) அக்காலத்தில் தமிழ் மன்னர்கள் ஒன்றுபட்டு ஒரு வலிமை வாய்ந்த மத்திய ஆட்சியமைப்பை

51. புறம். 45.

ஏற்படுத்தத் தவறிவிட்டார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கிடையே நிலவிய ஒற்றுமையின்மையே ஆகும். இவ்வாறு நாடு பலவாகப் பிரிவுண்டு, பலரால் ஆளப்பட்டமையால் நாடு முழுமைக்கும் பொருத்தமான ஒரு பொருளாதார அமைப்பை அவர்களால் உருவாக்க முடியவில்லை.

மன்னரின் தோற்றம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்கட் சமுதாயம் பல்வேறு குழுக்களாகப் பிரிந்திருந்தது. நிலையாக ஓரிடத்தில் தங்கி யாதானும் ஒரு தொழிலை மேற்கொண்டு வாழ்க்கை நடத்தும் இயல்பு முற்கால மக்கட் சமுதாயத்தில் அரும்பவில்லை. குழு மனப்பான்மையுடன் ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டு பகைமை பாராட்டி பூசலும், போரும் செய்வாராயினர். அதனால் ஒவ்வொரு குழுவும் பாதுகாப்பு வேண்டித் தனக்குள் வலிமை மிக்க ஒருவனைத் தலைவனாக அமைத்துக் கொண்டது. இவ்வாறாக, போரும் பூசலுமே மக்களிடையே தலைமை என்ற அமைப்பை உருவாக்கிற்று. இத்தலைமையே காலப்போக்கில் மன்னன் என்ற நிலையை உருவாக்கிற்று. முல்லை நிலத்திலும், மருத நிலத்திலும் வாழ்ந்த மக்கள் இத்தகைய தலைவர்கள் தேர்ந்துகொள்ள முற்பட்டனர். அவர்களுடைய தலைவன் அல்லது மன்னன் 'கோ' என்றும், 'கோன்' என்றும் அழைக்கப் பெற்றான்.[52] மக்கள் குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்த அக்காலத்தில் தலைவனுக்கும் மக்களுக்கும் நெருங்கிய உறவும், தொடர்பும் இருந்தது. ஆனால் அவனே மன்னனாக மாறியபோது மக்கள் மன்னன் வழிப்பட்டவர்கள் என்ற நிலை ஏற்படடது. அப்போது மன்னனுக்கும், அவன் ஆளும் நாட்டிற்கும் அம்மக்கள் நன்றியும், கடமைப்பாடும் உடையவர்களாக மாறினார்கள்.

---

52. Dr. T.V. Mahalingam, South Indian Polity, p.11

மன்னர் என்ற கருதுகோள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. அதனையடுத்து திருக்குறளிலும் அது பயின்று வருகிறது. தொல்காப்பியத்தில் அரசன், வேந்தன் ஆகிய இருவேறு குறியீடுகள் காணப்படுகின்றன. திருக்குறளில் இவ்விரண்டுமேயன்றி 'நிலன் ஆள்பவன்', 'இறை', 'காவலன்', 'கோலன்', 'வேலன்' முதலிய குறியீடுகள் ஆளப்பட்டுள்ளன. இவையனைத்தும் மன்னனைக் குறிக்கின்ற பெயர்களாகும்.

மேற்கண்ட பல்வேறு குறியீடுகளையும் நோக்கும்போது மன்னனுக்கு உரிய பல்வேறு கடமைகள் புலனாகின்றன. அரசன் என்பது 'குடிமக்கள் தலைவன்' என்ற பொருளில் வருகிறது. வேந்தன் என்பது 'வெம்மை' என்ற சொல்லடியாகப் பிறந்தது. "வெம்மை வேண்டல்" என்பது தொல்காப்பிய நூற்பா.[53] இதற்கு விரும்புதல் என்பது பொருநர். அஃதாவது, வேந்தன் என்பவன் 'மக்களால் விரும்பப்படுகிறவன்' எனப்படுவான். நிலன் ஆள்பவன் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை ஆள்பவன் என்ற பொருளை உடையது. இதனால் மன்னனுக்கு நாடு இன்றியமையாதது என்பது புலனாகிறது. இனி இறை என்பது 'இறு' என்ற அடிச் சொல்லிலிருந்து பிறந்தது. இதற்கு தங்கியிருத்தல் அல்லது நிறைந்திருத்தல் என்பது பொருளாகும். ஆகவே, மன்னன் என்பவன் மக்களுள் ஒருவனாகத் தங்கியிருக்கக் கூடியவன் ஆகிறான். காவலன் என்ற சொல் மக்களையும், அவர்தம் உடைமைகளையும் உட்பகை, புறப்பகைகளிலிருந்து காக்கின்றவன் எனப் பொருநர்படும். கோலன், வேலன் என்ற இரண்டு குறியீடுகளும் முறையே கொல், வெல் என்ற வேர்ச் சொற்களை உடையன. அஃதாவது, பகைவர்களைக் கொல்கின்றவன் என்பதும், வெல்கின்றவன்

53. தொல். உரி. 36.

என்பதும் இச்சொற்களின் பொருநர்களாகும். எனவே மன்னன் போர்க்களத்தில் பகைவர்களை கொன்றும், வென்றும் தன் மக்களைக் காக்கின்றவன் என்ற விரிந்த பொருளைத் தருவனவாகும்.[54]

பொறுப்பும் கடமையும்

ஒரு நாட்டை ஆளும் மன்னனுக்குச் சில கடமைகளும், பொறுப்புக்களும் உண்டு. அவற்றையும் தமிழ் இலக்கியங்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. தொல்காப்பியர் காலத்தில் மன்னனுக்குக் குறிப்பிடப்பட்ட கடமைகளும், பொறுப்புகளும் திருவள்ளுவர் காலத்தில் விரிவடைந்துள்ளன என்பது ஒப்பு நோக்கால் புலனாகும். ஒரு மன்னன் ஆறு அங்கங்களை உடையவன் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். படை, குடி, பொருநர், அமைச்சு, நட்பு, அறன் என்பனவே அவ்வறு அங்கங்களாகும். மன்னன் தெய்வமாக மதிக்கப்பட்டான். தொல்காப்பியத்தில் மன்னனுக்குச் சில கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவை ஓதல், யாகம் செய்தல், புலவர்களையும் அறிஞர்களையும் பேணுதல், மக்களைக் காத்தல், தீயோரைத் தண்டித்தல் முதலியனவாகும். மேலும் படை, குடை, குடி, முரசு, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, காலாட்படை, மாலை (பதவி), முடி, செங்கோல் முதலின அரசருக்குரிய அடையாளங்கள் ஆகும்.[55] மன்னன் மக்களுக்கும், அரசுக்கும் உயிர் போன்றவன். தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு மக்களுக்கு மன்னன் இன்றியமையாதவன் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

"நெல்லும் உயிரன்றே; நீரும்உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;

---

54. குறள். 550.
55. தொல். மரபு. 72.

*அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே".*[56]

உயிர்களைக் காப்பது நெல்லும் நீரும் மட்டுமல்ல. இவ்வுலகம் மன்னனது காவல் சிறப்பினால நிலை பெறுவதனால் அவனே உலகுக்கு உயிராவான். அதனால் வேந்தன் தானே உலக வாழ்வுக்கு உயிராக விளங்குபவன் என்றுணர்ந்து மக்களைப் பாதுகாத்து நடப்பதே அவனது கடமையாகும். இவ்வாறு மோசிக்கிரனார் என்ற சங்கப் புலவர் விரித்துரைப்பது மனங்கொள்ளத் தகும்.

அரசன் பல நல்ல பண்பு நலன்கள் பெற்றிருக்க வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகியன குறைவின்றிப் பொருந்தியிருப்பவனே சிறந்த அரசன் எனப்பட்டான். தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய மூன்று குணங்களும் அவனுக்கு அழகு செய்யும் அணிகலன்களாகும். புதியபுதிய வருவாய்கள் அரசுக்கும் வரும் வழிதுறைகளை ஆராய்ந்து கண்டுபிடித்தல், அவ்வாறு புதிய துறைகளில் வரும் செல்வத்தை ஒழுங்கு சேர்த்தல், அப்பொருநர் வீணாகப் போகாமல் அரசு கருவூலத்தில் பாதுகாத்தல், அவ்வாறு பாதுகாத்து வைக்கப்பட்ட அரசுச் செல்வத்தை மக்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறைப் படுத்துவதற்கு வகுத்துத் தருதல் ஆகிய ஆட்சி திறமைகள் நன்கு அமைந்தவனே வெற்றியுடன் அரசோச்சுபவன் எனப்பட்டான். அன்றியும் அவ்வரசன் மக்கள் குறை இரந்து அவனைக் காண விரும்பின், அவர்கள் பார்வைக்கு எளிமையாக நடந்துகொள்ளுதல், மக்களை வெறுத்துப் பேசாமை முதலிய அரிய பண்புகளும் அரசன்பால் அமைந்திருத்தல் வேண்டும் என்பதும் இலக்கியங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.[57]

56. *புறம். 186.*
57. *குறள். அதி. 39.*

திருக்குறள் பண்டைக்கால மன்னனின் ஆட்சித் தகுதியை விட அவனது ஒழுக்கத்தையே பெரிதும் வற்புறுத்துகிறது. திருவள்ளுவர் மன்னனை மன்னனாகக் காண்பதிலும் அவனை மனிதனாகக் காணவே விரும்புகிறார். சுருங்கக்கூறின் மன்னன் ஒருவன் மன்னனுக்குரிய இயல்புகளுடன் மனித இயல்புகளும் மிக்குடையவனாக இருத்தல் வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்து. அஃதாவது மன்னவன் வல்லவனாக இருத்தலுடன் நல்லவனாகவும் இருத்தல் வேண்டும். சீனப் பேரறிஞர் கன்பூசியசு (Confucious) என்பவர் மன்னன் தகுதிகள் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். "சாமானியர்கள் ஆட்சிபுரிந்தால் ஆட்சி எவ்வகையிலும் சிறப்படையாது; நலிவடையும்; இறுதியில் ஆட்சி கவிழ்ந்துவிடும். ஆனால் நல்ல மனிதர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்தால் அரசாங்கம் சிறப்படையும்; நலம் விளைவிக்கும். வளமான நிலத்தில் பயிர்கள் வளம் பெறுவது போல நல்லவர்கள் ஆட்சியில் நலம் கொழிக்கும். சுருங்கக் கூறின் ஒரு நல்ல அரசு என்பது நன்கு முளைத்து வளரும் பயிர் போன்றது. அதனால் ஆட்சியாளரின் பண்பாட்டைப் பொருத்தே நல்ல அரசு அமையும். ஆட்சி அலுவலர்களும் நல்லவர்களாகவே அமைவார்கள்".[58]

போர்களும் அவற்றின் காரணங்களும்

பண்டைத் தமிழகத்தில் மன்னர்கள் தத்தம் வலிமையையும், உடல் திண்மையும் அவ்வப்போது வெளிப்படுத்தி மகிழ்வதற்குப் போரினை ஒரு வாயிலாகப் பயன்படுத்தியுள்ளனர். வெளிப் பகையை அழிப்பதற்கும் மன்னர்கள் போரிட்டார்கள் என்பதும் உண்மையே. சில வேளைகளில் பிறர்நாடு கவர்வதும் போருக்கு உரிய காரணமாக அமைந்தது.[59] குறுநில மன்னர் அல்லது வேளிர் தம் பேராற்றலை வெளிப்படுத்தும் வகையில்

---

58. Saxe Commins & Robert N. Linscott, The Social Philosophyres (Ed.), p. 332.
59. புறம். 8.

அவ்வப்போது முடியுடை வேந்தரையும் எதிர்த்துப் போரிட்டுள்ளனர். மலையமான் திருமுடிக்காரி, அதியமான் நெடுமான் அஞ்சி, பாரி போன்ற வேளிர் தலைவர்கள் முடிவேந்தர்களை எதிர்த்துப் போரிட்ட நிகழ்ச்சிகள் தொகை நூலில் குறிக்கப்பெற்றுள்ளன.[60] மற்றும் ஒரு காரணம் குறித்தும் போர்கள் நிகழ்ந்துள்ளன. சேர, சோழ, பாண்டியராகிய முடியுடை மூவேந்தரும் ஒவ்வொரு காலகட்டத்திலும் தத்தம் பேராற்றலையும், மேலாண்மைத் திரலையும் வெளிப்படுத்தி மகிழ்வதற்காக ஒருவருடன் ஒருவர் போரிட்டுள்ளனர். இது தத்தம் அரசியல் மேலாண் தன்மையை (Overlordship (or) Supremacy) வெளிப்படுத்தவே இவ்வாறு போரிட்டனர். வரலாற்றுப் புகழ்மிக்க தலையாளங்காணத்துப் போர் இதற்குச் சான்றாகும். அப்போர்க்களத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் ஒரு புறமும், சேர, சோழ மன்னர்களும் எதிர்ப் புறமாகவும் படை வகுத்துப் போரிட்ட செய்தி புறநானூற்றில் குறிக்கப் பெற்றுள்ளது. இப்போரில் பாண்டியன் நெடுஞ்செழியன் பிற மன்னர்களை விட வலிமை மிக்கவன் என்பதனையும், தனது பேராணைக்குப் பிற மன்னர் அஞ்சி வாழ வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தினான்.[61]

மன்னர் வழிமுறை

பொதுவாக மன்னராட்சி அமைப்பில் பரம்பரை ஆட்சியுரிமை நிலவியது. அஃதாவது, தந்தைக்குப் பின் தனயன் என்ற கொள்கை வழக்கில் இருந்தது.[62] தன் பட்டத்து அரசியும், மூத்த மகனும் தனக்குப் பின் ஆட்சிக் கட்டில் ஏறுவதை மன்னன் மதித்து வந்தான். சிற்சில சமயங்களில் சில

---

60. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப. 89.
61. புறம். 19.
62. Dr. T.V. Mahalingam, South Indian Polity, p.31.

காரணங்களால் மக்கள் இருப்பினும், மன்னன் உடன்பிறந்த மூத்தவன் அரசுரிமை பெறுதலும் உண்டு. சான்றாக இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற சேர மன்னனுக்கு மக்கள் மூவர் இருந்தபோதும், அவனுடன் பிறந்த பல்யானை செல்கெழு குட்டுவன் என்பவன் அரசனானான். இது பதிற்றுப்பத்தால் அறியப்படும்.[63] அக்குட்டுவன் மறைவிற்குப் பின்னரே இமயவரம்பனின் மூன்று மக்களும் ஒருவர்பின் ஒருவராக ஆட்சியில் அமர்ந்தனர் என்பது புலனாகிறது. ஆகவே, பண்டைத் தமிழகத்தில் அரசுக் கட்டில் ஏறுவது என்பது தந்தைக்குப் பின் தனயன் என்பது ஒரு சீராகப் பின்பற்றப்படவில்லை. ஓர் அரசு குடும்பத்தில் மைந்தராயினும், உடன் பிறந்தாராயினும் அவர்களுள் யார் மூத்தவனோ அவனே அரசு கட்டிலுக்கு உரியவனாகத் திகழ்ந்துள்ளான்.[64] மேலும் மன்னாக முடிசூட்டிக் கொள்வதற்கு வயது வரம்பு கருதப்பட்டதாகவும் தெரியவில்லை. மிக்க இளைய அரச குமாரர்களும் முடி தரித்துள்ளனர். அந்நிலையில் அவர்கள் சார்பில் மூத்த அமைச்சர்கள் ஆட்சியை நடத்தியுள்ளனர்.[65]

இதுகாறும் கூறிய செய்திகளை நோக்கும்போது இலக்கிய அடிப்படையில் சில முடிவுகள் வெளிப்படுகின்றன. பண்டைத் தமிழகம் வலிமையான இயற்கை அரண்களையுடையதாக இருந்தது. ஆட்சிமுறையில் நாடு பல பிரிவுகளாக இருந்தாலும், நில அமைப்பில் செறிவாகவும், ஒன்றிணைந்தும் விளங்கியது. பல்வேறு அரசியல் பகுதிகளாக அக்காலத் தமிழகம் விளங்கினாலும், நாடு முழுவதும் வணிகமும், தொழிலும்

---

63. பதிகம். வரி 3–6.
64. புறம். 75.
65. மணி. 4: 107–108.

தடைப்படாமல் நிகழ்ந்து கொண்டிருந்தது. பல்வேறு தலைமைகளின் கீழ் ஆட்சியமைப்புக்கள் இருந்தமையால் மக்களின் வாழ்க்கை வளங்களை அரசர்கள் எளிதில் உண்டாக்க முடிந்தது. பொதுவாக அக்கால மன்னர் தம் பொறுப்புக்களை உணர்ந்தவர் களாகவும், கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுபவர்களாகவும் அமைந்தனர். சில புறனடைகளும் இருந்தன. அடிக்கடிப் போர்கள் நிகழ்ந்தாலும் பிறநாட்டை அடிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அவை நடைபெறவில்லை. வலிமையை வெளிப்படுத்தும் வாயிலாகவே அவை அமைந்தன. மன்னர்களுக்குள் ஒற்றுமை இன்மையாலும், வீண் பெருமையாலும் அக்காலத் தமிழகத்தில் வலிமை மிக்க மைய அரசு அமையவில்லை. அவ்வாறு அமைந்திருக்குமானால் தமிழகத்தின் வரலாறே மாறியிருக்கும்.

2. பொருளியற் சிந்தனைகள்

மூலங்கள்

பண்டைத் தமிழர்தம் பொருளியற் சிந்தனைகளை நன்கு அறிந்து கொள்வதற்குப் பரந்துபட்ட தமிழிலக்கிய அறிவும் ஆராய்ச்சியும் தேவை. கி.மு. நூற்றாண்டுகள் தொடங்கிக் கி.பி. 300 வரையுற்ற இலக்கியத் தொகுதிகள் நன்கு ஆராயப்படுதல் வேண்டும். காலத்தால் தொன்மை வாய்ந்த பேரிலக்கண நூலாகிய தொல்காப்பியம், வாழ்க்கை நூல் என்று பாராட்டப் பெறும் திருக்குறள், நற்றிணை முதலிய எட்டுத்தொகை நூல்கள், திருமுருகாற்றுப்படை முதலிய பத்துப்பாட்டு, இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கண இலக்கியங்கள் பற்றிய ஆழ்ந்தகன்ற சிந்தனை இன்றியமையாதது. தொல்காப்பியம் இலக்கணம் என்றாலும் அதன் உள்ளடக்கம் பொதுவாக மனித வாழ்வுக்குரிய பல்வேறு துறைகளையும் குறிப்பிடுகிறது என்பது மிகையன்று. திருக்குறள் வாழ்க்கையை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டும் ஓர் ஒப்பற்ற சிந்தனைக் களஞ்சியம் ஆகும். அது மனிதகுல வாழ்வுக்கு வேதம் என்று கருதத்தகும். தொல்காப்பியமும், திருக்குறளும் முறையே தொல்காப்பியர், திருவள்ளுவர் என்ற அறிவுலக மேதைகளின் அரிய பெரிய படைப்புக்களாகும்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டும் மேற்கூறிய இருபெரும் நூல்கள் போலன்றி, தொகை நூல்கள் ஆகும். பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு புலவர்களால் பல்வேறு பொருநர்கள் பற்றி இருபாலாராலும் பாடப்பெற்ற ஆயிரக்கணக்கான பாடல்களைப் பின்வந்த சான்றோர் அவற்றின் அருமை பெருமை பற்றிச் சில அடிப்படைகளில் தொகை செய்து போந்தனர். எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்து, பரிபாடல்,

புறநானூறு ஆகிய மூன்றும் ஒழிந்த ஏனைய ஐந்து தொகை நூல்களும் வாழ்க்கையின் அகக்கூறுகளை அல்லது அகப்பொருளை (காதல்) விளக்குவனவாகும். களவு (திருமணத்திற்கு முந்திய நிலை), கற்பு (திருமண வாழ்க்கை) ஆகிய இரண்டு பிரிவுகள் பற்றி இவ்வைந்து நூல்களும் விரிவாகக் கூறிச் செல்கின்றன. ஏனைய மூன்றும் வாழ்க்கையின் புறக்கூறுகளை அல்லது புறப்பொருளைப் (வீரம், கல்வி, கொடை முதலியன) பற்றியவை ஆகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவை எட்டுத்தொகை நூல்கள் ஆகும். திருமுருகாற்றுப்படை, பொருநாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து நெடும் பாடல்களும் பத்துப்பாட்டு எனப்படும். இப்பத்துப்பாட்டினுள் ஒவ்வொன்றும் ஒரு நெடும் பாட்டாகும். இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வாழ்க்கை வரலாறு தழுவிய காப்பியங்களாகும்.

தொல்காப்பியம், கி.மு. நான்காம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படுகிறது; இரட்டைக் காப்பியங்கள் கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டினவாகும். இதுகாறும் கூறிய இலக்கியங்கள் தவிரப் பண்டைய தமிழர்தம் பொருநர் வாழ்வு பற்றிய தடயங்கள் வேறு கிடைப்பது அரிது. தமிழகத்தில் கிடைத்துள்ள செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் மிகப்பலவேனும், அவை காலத்தில் பிந்தியவையாதலின் அறப்பழங்காலத்தில் தமிழர்கள் பொருநர் பற்றி என்ன நினைத்தார்கள் என்பதற்கு அவை பயன்படா. எனவே, இலக்கண இலக்கியங்களை அடிப்படையாக வைத்தே இவ்வாய்வு தொடங்கப்படும் நிலையில் உள்ளது.

மூலநூல்களின் தன்மை

பொதுவாகக் கூறுமிடத்து மிகப்பழமையான நாட்டில் வாழ்ந்த மக்களின் பொருளியல் எண்ணங்கள் அல்லது கருத்துக்கள் அறிவியல் அடிப்படையில் அக்காலத்தில் வரையறை செய்யப் பெறவில்லை. இலக்கியங்களில் ஆங்காங்கு இலைமறை காய்போல மிளிரும் பல்வேறு பொருளியற் கருத்துக்கள் தொகுக்கப்பெற்று ஆராய்ச்சி அடிப்படையில் அணுகப்பெற்றுப் பொருளியற் கோட்பாடுகள் என்ற நிலையைப் பெற்றிருக்கவில்லை. "பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் வாழ்ந்த அறிஞர்களும் சிந்தனையாளர்களும் பொருநர் பற்றிய சீரிய கருத்துக்களை வெளிப்படுத்தினர்; ஆனால் அவற்றை அவர்கள் பொருநர்நூல் வடிவில் அமைத்துத் தரவில்லை. அறிவியல் அணுகுமுறை அக்காலத்தில் வளர்ச்சி பெறாமையால் பொருளியற் கருத்துக்களைத் தத்துவம், சட்டம், ஒழுங்கு, சமயம் முதலிய பல்வேறுபட்ட கருத்துக்களுடன் சேர்த்து ஒரு கலவையாக விட்டுச் சென்றுள்ளனர். சுருங்கக் கூறின், இக்கால மேலைநாட்டு அறிஞர் போன்று பொருநர் நூல்களைத் தனியாக அவர்கள் அக்காலத்தில் யாக்கவில்லை. அறநூல்களிலும், சமய சாத்திரங்களிலும், தோத்திரங்களிலும் தெளித்துச் சென்ற பொருநர் பற்றிய எண்ண அலைகள் தோன்றினவே அன்றி அவை ஒருமுகப்படுத்தப்படவில்லை. அக்காலத்தில் பொருளியல் வல்லுநர்கள் என்று கூறத்தக்க முறையில் அறிஞர்கள் தோன்றவில்லை என்று கூறிவிடலாம்"[1] இதற்குத் தமிழகமும் விலக்கன்று.

சங்ககாலப் புலவர் பெருமக்கள் பேரறிஞர்கள்; நற்சிந்தனையாளர்கள்; பொருளின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தவர்கள். எனவே அவர்கள் பாடிய பாடல்களில் பல

---

1 K.P. Bhatnagar and Sahish Bahadur, A History of Economic thought, pp. 4–5.

பொருளியற் கருத்துக்கள் மிகவும் நுட்பமாக வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அவற்றைத் தனியாக ஒரு முறைப்படுத்தி வகைப்படுத்தி அறிவியற் பார்வையில் அமைக்கவில்லை. காரணம், வாழ்க்கை என்பது முழுமையானது; பல பிரிவுகளில் அடைக்கப்படுவது அன்று என்று அக்காலச் சான்றோர் கருதினர். ஆகவே, அவர்கள் பொருளியலைத் தனியாகப் பிரித்துப் பேசவில்லை என்று கொள்ளல் வேண்டும்.[2]

மேற்காட்டிய இலக்கியங்கள் சிறந்த சமுதாய நூல்களாகவும் (Social Sciences) கருதப்பட வேண்டியவை. "இத்தகைய சமுதாய இலக்கியங்களில் எது பொருளியல்; எது சமுதாயவியல் என்று துணித்துக் கூறவியலாது; அவை இரண்டும் தம்முள் முரண்பட்டவையல்ல. பாலும் தண்ணீரும் போல் அவை கலந்திருப்பவை ஆகும். இவ்விரண்டையும் பிரித்தெடுப்பது இயலாத ஒன்று. நல்ல ஒழுக்கநூல் பொருநர் நூலுமாகும். அஃதாவது பொருநர் நெறி நன்னெறியுமாகும்"[3]. பழந்தமிழ்ச் சான்றோர் பொருளியலோ, அரசியலோ ஒழுக்க நெறியினின்று மாறுபட்டதன்று என்று கருதினர். மேலைநாட்டினரும், குறிப்பாக கிரேக்கரும் அக்காலக்கட்டத்தில் இத்தகைய கருத்தினையே கொண்டிருந்தனர். ஒழுக்கம் அல்லது நன்னெறி என்பது வாழ்க்கையின் இன்றியமையாக் கூறாகக் கொள்ளப்பட்டது.

"நேர்மை, மனிதப்பண்பு முதலியவற்றை ஒதுக்கித் தள்ளும் எந்தப் பொருளியற் கோட்பாடும் உயிரூட்டம் உடையது ஆகாது; வறிதே மெழுகுப் பொம்மை போன்றதாகும். மேனாட்டுப் பொருளியற் கோட்பாடுகள பல்வேறு காலக்கட்டங்களில் உரிய பயனைத் தாராமல் தோல்வியையே தழுவியுள்ளன. எந்த ஒரு

---

2. Dr. Shiva Anand Jha, A critical study of Gandhian Economic thought, Preface.
3. Dr. B. Natarajan, Economic Ideas of Thiruvalluvar, p.30.

தனிப்பட்ட மனிதனோ, நாடோ இத்தகைய போலிப் பொருளியற் கோட்பாட்டினைக் கடைப்பிடிக்கிறதோ, அந்நாடு அல்லது மனிதன் இறுதியில் கேடுறுவான்"[4]

உலகப் பொதுமறை அருளிய திருவள்ளுவரும், தம் நூலில் வாழ்க்கையின் அடிப்படை ஒழுக்கமே என்று கூறினார். அவர் அரசியல் பற்றியோ பொருளியல் பற்றியோ கூறும் இடம் எல்லாம் ஒழுக்கத்தையும் நேர்மையையும் சுட்டிக்காட்டத் தவறமாட்டார்.

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல"[5]

என்பதும்,

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"[6]

என்பதும் அறியத்தகும். சுருங்கக் கூறின், திருவள்ளுவர் ஒழுக்க நெறிப்பட்ட பொருளியலையே வற்புறுத்தியுள்ளார். ஒரு நாட்டின் அல்லது தனிமனிதனின் பண்பு அல்லது ஒழுகலாறு என்பதனை ஊறுபடுத்தும் எந்தப் பொருளியற் கொள்கையும் பாவத்தன்மை உடையது; ஒழுக்கக் கேடானது.[7] இதனால் பழந்தமிழர் பொருநர் விருப்பம் அற்றவர் என்றோ, நிலையாமைத் தத்துவம் பேசி காலங் கழிப்பவர் என்றோ கருதல் தகாது. அவர்கள் உலகியல் நன்குணர்ந்தவர்கள். பொருளின் இன்றியமையாமையை நன்கு புரிந்தவர்கள். வாழ்க்கை வளமாக வாழ்வதற்கே என்ற

4. R.K. Prabhu & U.R. Rao, The mind of Mahatma Gandhi, p. 152.

5. குறள். **39.**

6. குறள். **755.**

7. J.B. Kripalani, Gandhian Thought, p. 152.

முற்போக்கு நோக்குக் கொண்டவர்கள். அரசியல், பொருளியல், ஆட்சியியல் முதலிய கலைகள் பற்றி அவர்கள் வெளிப் படுத்தியுள்ள கருத்துக்கள் காலத்தைக் கடந்து நிற்பவை. இக்கால அரசியல் மேதைகள், பொருளியல் வல்லுநர்கள் கூறும் முற்போக்குக் கருத்துக்களைவிட அக்காலத் தமிழறிஞர்களின் கருத்துக்கள் மிக்க வலிமையுடையனவாகும். ஆனால் அவர்களின் அரசியல், பொருளியல் சிந்தனைகள் நேர்மையையும், நீதியையும் அடிப்படையாகக் கொண்டது. மேலைநாட்டார் போன்று பொருளியலையும், அரசியலையும் ஒழுக்கத்தினின்று வேறுபட்டவை என்று கருதவில்லை. இக்கட்டுரையில் வரும் கருத்துக்கள் எத்துணைப் புரட்சித்தன்மை வாய்ந்தவை என்பதனைத் தெளிவாகக் காட்டும்.

செல்வம் (WEALTH)

பண்டைத் தமிழர் செல்வத்தைப் பற்றி ஆழமாகச் சிந்தித்துள்ளனர். அவர்கள் உலகியல்வாதிகள்; ஒழுக்கம் சார்ந்த பொருளியல் வாதிகள் ஆவர். உழைப்பில் நம்பிக்கை கொண்டு வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளும் கலையை நன்கு கற்றவர்கள். இல்லறத் தலைவன் பொருளீட்ட வேண்டும் என்பது தவிர்க்கமுடியாத கடமை என்பது சுட்டப்பட்டது. வாழ்க்கையின் அச்சு பொருள் என்பது உணரப்பட்டது. இப்பொருளை ஈட்டுவதற்குக் குடும்பத் தலைவன் நாடு கடந்து செல்வதும் உண்டு.[8] திருவள்ளுவர் பொருளின் இன்றியமையாமையை மிக அழுத்தமாகவும், விரிவாகவும் கூறியுள்ளார். பட்டம், பதவி, முதலியன இல்லாத ஒருவனையும் ஏற்றிப் போற்றச் செய்வது பொருளேயாகும் என்பது அவரது கருத்து.[9] எப்பாடுபட்டினும் செல்வத்தை ஈட்ட வேண்டும் என்றும், அச்செல்வமே பகைவரின் செருக்கை வேருடன் அறுக்கும்

---

8. தொல். அகத். 33.
9. குறள். 751.

என்றும் அக்கால மக்கள் கருதினர். பொருளினும் கூர்மையான படைக்கலன் பிறிதொன்றில்லை என்பது அவர்களின் அழுத்தமான நம்பிக்கை.[10]

பழந்தமிழ் இலக்கியங்களில் செல்வம் பற்றிப் பயின்றுவரும் சொற்களும், சொற்றொடர்களும் அக்காலத் தமிழர் எத்துணைப் பொருநர்வயப்பட்டிருந்தனர் என்பதனைப் புலப்படுத்தும். பொருநர், உடைமை, ஆக்கம், செல்வம், பெருக்கம், திரு, கூழ், மாடு, கருவி, வெறுக்கை என்ற பத்துக் குறியீடுகள் தமிழிலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் எல்லாம் பொருநர் என்பதனையே பொதுவாகக் குறிப்பினும் அவற்றின் பொருநர் நுட்பத்தை உணருங்கால் செல்வம் பற்றிய பல்வேறு விளக்கங்கள் கிடைக்கின்றன. பொருநர் என்பது 'பொருவு' என்பதனடியாகப் பிறந்த சொல். பொருவு என்பது சமம், ஒத்த தன்மை, ஏற்றத்தாழ்வின்மை என்று பொருநர்படும். படவே சமுதாயத்தில் மக்களிடையே சமத்தன்மையை உண்டாக்கவல்லது பொருநர் என்பது புலப்படும். உடைமை என்பது ஒருவனுக்குள்ள மதிப்புமிக்க பொருநர்கள் எல்லாவற்றையும் குறிக்கும். ஒருவனை உடையவன், இல்லாதவன் என்று வேறுபடுத்திக் காட்டுவது பொருளேயாதலால் உடைமை என்ற சொல் ஆட்சி பெற்றது. ஆக்கம் என்பது ஆகிவருதல் என்னும் பொருளை உடையது. அஃதாவது ஒன்று பிறிதொன்றாக ஆகிவருவது. எடுத்துக்காட்டாக ஒருவன் பத்து ரூபாய் வைத்திருப்பானேல் அது வெவ்வேறு பொருளாகவும் மாறலாம். அதனை வைத்துப் பல்வேறு பொருநர்களை வாங்கிக்கொள்ளலாம். அன்றியும் வளர்ச்சி என்பதும் இதன் பொருளாகும். ஒருவன் வாழ்க்கையில் படிப்படியாக வளர வேண்டுமானால் அவனுக்குப் பொருநர் தேவை. அவனை மனிதனாக்குவதும் அப்பொருளே. இத்துணை விரிந்த பொருநர் நுட்பங்களை உடையது இச்சொல். செல்வம்

---

10. குறள். 759.

என்பது செல் என்பதனடியாகப் பிறந்தது. அஃதாவது ஓரிடத்தில் நில்லாது வெவ்வேறு இடத்திற்குச் செல்லும் தன்மை உடையது என்பது இதன் பொருள். செல்வம் நிலையாமை உடையது. இது நிலையாக ஓரிடத்தில் தங்குமானால் யாருக்கும் பயன்படாது. அது கைமாறிக்கொண்டே இருக்க வேண்டும். இதனைப் பொருள் நூலார் செலாவணி (Circulation) என்பர். பொருள் தேங்கி நிற்குமானால் சமுதாயத்தில் தனது செல்வாக்கை இழந்துவிடும். ஆகவே, செல்வம் என்ற சொல் பொருளைக் குறிப்பதாயிற்று. அற்கா இயல்பிற்று செல்வம், அது பெற்றால் அற்குப ஆங்கே செயல்" என்ற குறட்பா இதனைத் தெளிவுபடுத்தும். இனி, பெருக்கம் என்பதும் சிந்திக்கத்தகும். பெருக்கம் என்பது ஒன்று பலவாதல். அஃதாவது பொருள் பெருகும் தன்மையுடையது. பொருள் பெற்றான் ஒருவன் மேலும் அப்பொருளின் துணையால் அதனைப் பெருக்கிக்கொள்ள முற்படுதல் வேண்டும். 'பொருளாட்சி போற்றாதாற் கில்லை' என்னும் குறட்பாத் தொடர் ஈண்டு சிந்திக்கத்தகும். பொருளீட்டிய ஒருவன் மேலும் மேலும் அப்பொருளைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்னும் பொருளைக் கொண்டது இச்சொல். திரு என்ற சொல்லும் பொருளைக் குறிக்கும். செல்வத்தின் தெய்வமாகத் திருமகளைக் குறிப்பிடுவோம். இச்சொல்லின் உண்மைப் பொருள் விருப்பத்தை விளைவிப்பது என்பதாகும். திருக்கோவையாரில் 'திருவளர்' என்ற தொடரில் திரு என்பதற்கு 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' என்று பேராசிரியர் உரையெழுதியுள்ளார்.[11] இதன் பொருள் செல்வம் உடையவனை எல்லோரும் விரும்புவர் என்பதாகும். திரு என்பது அழகு எனவும் பொருள்படும். எவ்வாறு கல்வி என்பதும் அழகு எனப்படுகிறதோ அவ்வாறே பொருளும் அழகு எனப்பட்டது. ஒருவனுக்கு உண்மையான அழகு தருவது

---

11. திருக்கோ. இயற்கை. ப. 5.

பொருளாகும். கூழ் என்பது கூழுக்கு ஏதுவாகிய பொருளைக் குறிக்கும் என்பர் பரிமேலழகர். அஃதாவது பொருளிருந்தால் உணவுப் பொருளை வாங்கிக்கொள்ள முடியும் என்பது இதன் கருத்து. கூழ் என்பதன் நேர்பொருநர் உணவு என்பதாகும். இனி மாடு என்பதும் பொருளைக் குறிக்கும் சொல்லாகும். இது பொதுவாக ஆடு, மாடுகளைக் குறிக்கும். பண்டைக் காலத்தில் உலகில் நாணயங்களுக்குப் பதிலாக மாடுகள் பயன்படுத்தப் பட்டன. பண்டமாற்று முறையில் (Barter Economy) பொருநர் களின் மதிப்பை மாடுகளை வைத்தே கணக்கிட்டனர். இன்றைக்கும் நம் நாட்டில் ஆடு, மாடுகள் செல்வமாகவே கருதப்படுகின்றன. கருவி என்பதன் பொருநர் வெளிப்படை. இது தொழிலாளர் பயன்படுத்தும் பல்வேறு கருவிகளைக் குறிக்கும். இதன் அடிச்சொல் கரு என்பதாகும். கரு வளரும் தன்மையுடையது. பொருளும் கருவுக்குச் சமம். அன்றியும் பொருளை ஒரு கருவியாகப் பயன்படுத்தி ஒருவன் விரும்பும் தொழிலைச் செய்ய முடியும். இதனாலும் பொருநர் கருவி எனப்பட்டது. இறுதியாக வெறுக்கை என்பது சிந்தனைக்குரியது. இது ஒன்று சேர்ப்பது என்னும் பொருளை உடையது. எவரிடம் பொருளுள்ளதோ அவருடன் நெருக்கமாகப் பழகும் இயல்பு மனிதனுக்கு உண்டு. பிரிந்து நிற்பவர்களையும் ஒன்றுபடுத்தும் வலிமையுடையது பொருளேயாம்.[12] இவ்வாறாகப் பழந்தமிழர் பொருளின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்திருந்ததுடன் அப்பொருநர் எவ்வெவ்வகையில் பயன்படும் என்பதனையும் உணர்ந்திருந்தனர் என்பதும் புலப்படும்.

பொருநர் பற்றிய தமிழர் சிந்தனை மிக விரிந்தது. மேலை நாட்டுப் பொருநர் நூலார் பொருளுக்குச் (செல்வம்) சில வரையறைகள் கூறியுள்ளனர். பொருநர் அல்லது செல்வம் என்பது யாது? என்பதற்குக் அவர்கள் பின்வரும் கூறுகளையுடையதே செல்வம் என்றனர்:

---

12. குறள். 89, 170, 179, 381, 400, 411, 594, 631, 751, 761.

1. அருமைப்பாடு உடையது (Scarcity)
2. மாற்றப்படுந் தன்மையது (Transferability)
3. புறத்தன்மை வாய்ந்தது (External to Man)
4. பயன்பாடுடையது (Utility).

திருவள்ளுவரும் இவ்வியல்புகளைப் பல்வேறு குறட்பாக்களில் குறித்துள்ளார். ஆனால் அவர் இவற்றோடு அமைதி பெறாமல் பண்புகளையும் பொருநர் அல்லது செல்வம் என்றே குறித்துள்ளார். அடக்கம், ஆற்றல், அருள் முதலிய குணங்களும் செல்வமாகும்.[13] மேனாட்டார் கொள்கையின்படி இக்குணங்கள் செல்வபாகா எனினும், தமிழர்தம் கருத்துச் சிந்தனைக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும். தமிழர் வாழ்க்கை பொருளோடும் பின்னிப் பிணைந்து நின்றது என்பது அகவாழ்வு இலக்கியங்களிலும் பொருளியற் சிந்தனைகள் இடம் பெற்றுள்ளமையால் நன்கு உறுதிப்படும்.[14]

வறுமையும் வளமும்

வறுமையின் கொடுமை பற்றியும் நன்றியில் செல்வத்தின் தீமைகள் பற்றியும் தமிழர் நெடிது சிந்தித்துள்ளனர் என்பதை அறிய வியப்பாக உள்ளது. வறுமையின் கொடிய வடிவம் பசியேயாம். பிணி என்பது அப்பசியைத் தொடர்ந்து உண்டாவதாம். பசியும் பிணியும் மக்களைத் தீண்டும்போது மனித வாழ்க்கை அச்சத்தால் பீடிக்கப்படுகிறது. பசி, பிணி, அச்சம் இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாம். பசிக் கொடுமையினின்று விடுதலை பெறல், பிணியின் தாக்கத்தினின்று விடுதலை பெறல், அச்சம் அகற்றல் ஆகிய முப்பெரும் விடுதலைகளை நாடினர் பழந்தமிழர். அச்சம், அக அச்சம், புற அச்சம் என இருவகைப்படும்.

13. குறள். அதி. 13, 25, 60.
14 கலி. பாலை. 2.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்னும் குறட்பா சிந்தனைக்குரியது.[15]

ஏழைகளை அழிப்பது அவர்களது வறுமையே ஆகும். புகழ்மிக்க பொருளாதார மேதை ஆல்பிரெடு மார்சல் (Alfred Marshall) என்பவர் தமது வரலாற்றுச் சிறப்புடைய "பொருளாதாரக் கொள்கை" களை (Principles of Economics) உருவாக்கியபோது இவ்வாறு கருத்து வெளியிட்டார். இதுவே இக்காலப் பொருளியலின் அடிப்படையாகும். வறுமையின் காரணங்களை ஆராய்வதே மக்களின் அவதிக்கும் தாழ்வுக்கும் உரிய காரணங்களை ஆராய்வது ஆகும். மார்சலின் கருத்துக்களைப் பண்டைத் தமிழர் நன்றாகவே உணர்ந்திருந்தனர் என்பது இலக்கியங்கள் வாயிலாகத் தெளிவுறும்.

வறுமையின் கொடுமையைத் திருவள்ளுவர் மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் கூறியுள்ளார். வறுமையினைப் போலக் கொடியது யாது? இக்கேள்விக்கு வள்ளுவர் வறுமையே வறுமையைப் போலக் கொடியது என்றார்.

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது"

என்பது திருக்குறள். வறுமையைப் பாவி என்கிறார் திருவள்ளுவர். வறுமை ஒருவனுக்கு எய்துமானால் இம்மை, மறுமை இன்பங்களை அழித்துவிடும். நற்குடிப் பிறந்த ஒருவனையும் பிறர் இழிசொற்களால் ஏசும் நிலை ஏற்படும். வறுமைத் துன்பம் பிற எல்லாத் துன்பங்களையும் வருவித்துக் கொள்ளும். கசடறக் கற்று அறிவு மேம்பாடு உடைய ஒருவன், எவ்வளவு நல்ல கருத்துக்களை எடுத்தோதினும் பிறர் அவன்

---

15. குறள். 734.

சொற்களைச் சிறிதும் பொருட்படுத்தமாட்டார். மேலும் வறுமை பீடிக்கப்பட்டவன் பெற்றெடுத்த தாயாலும் வெறுக்கப்படும் நிலையை அடைவான். ஒருவன் நெருப்பில் உறங்கினாலும் உறங்கலாம்; ஆனால் வறுமை என்னும் நெருப்பில் உறக்கமே வராது. இவ்வாறு வறுமையின் பல்வேறு கொடுமைகளைத் திருவள்ளுவர் மிகவும் வலிமையுடனும் விரிவாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.[16]

இத்தகைய வறுமைக் கொடுமையை நன்குணர்ந்த பழந்தமிழர் அதனின்று விடுபடுவது பற்றியும் நன்கு சிந்தித்துள்ளனர். அவர்கள் வறுமையை ஒழிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். ஆனால் அதற்கு யாசித்தலை (இரவு) ஓர் உபாயமாகக் குறிப்பிடவில்லை. அது வறுமை ஒழிப்புக்கு ஒப்புக் கொள்ளத்தக்கது அன்று. இரத்தல் அப்போதைக்கு வறியவன் வயிற்றை நிரப்பிக்கொள்ளப் பயன்படுமே அன்றி, அது ஒரு நிலையான பரிகாரம் ஆகாது. அன்றியும் மானத்தைப் பெரிதாகக் கருதி வாழும் தமிழர் பிறர் கடைவாயிலில் நின்று இரத்தலை இழிவாகக் கருதினர். இரத்தல் என்பது தனது இல்லாமையைப் போக்குவதற்குத் தவிர்க்க முடியா கருவி என்றும், அது இரப்போனது ஊழ் என்றும் தெய்வ நியதி என்றும் கூறப்படுமேயாயின் அவனையும், இவ்வுலகையும் படைத்த கடவுள் ஒருவன் உளனாயின் அவன் கெட்டு ஒழிவானாக எனச் சினந்து கூறுவார் திருவள்ளுவர், இக்கருத்தமைந்த,

> "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்"[17]

என்னும் குறட்பா நினைவுகூரத்தகும். மக்களிடையே இருப்போர், இரப்போர் என்ற வேறுபாடு இறைவன் ஆணை வழி

16. குறள், அதி. 105.
17. குறள. 1062

தோன்றுகிறது என்போரைத் திருவள்ளுவர் கடுமையாகச் சாடுவார். மனிதன் தனது மடமையாலும் தன்னலத்தாலும் இவறல் தன்மையாலும் செய்கின்ற தகாத - அறமல்லாத - செயல்களுக்கு இறைவனைப் பழிப்பானாயின் அச்செயல் உலகினரால் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. இக்கொடுமை மனிதனுக்குரிய இயல்பான மதிப்பையும், இறைவனது ஒருசார்பற்ற தன்மையையும் குறை கூறுவதாகும். தாகத்தால் கதறும் ஒரு பசுவுக்கு அண்டை வீட்டில் சென்று தண்ணீர் இரந்து கேட்டுப் பெற்று வருதலையும் மானமிழக்கும் தன்மை என்று கருதுவார் திருவள்ளுவர்.[18]

இரத்தலினும் இழிவு தரத்தக்கது பிறிதொன்றில்லை என்று கடுமையாகக் கண்டித்த தமிழ்ச் சான்றோர் மனித வாழ்க்கை முறையின் உண்மை நடைமுறைகளை உணராமல் இல்லை. சில வேளைகளில் சிலர் இரந்தேயாக வேண்டும் என்ற நிலைக்கு; தள்ளப்படுகின்றனர். இது பெரிதும் நாணத்தக்கது என்பதில் ஐயமில்லை. ஆனால் தவிர்க்கமுடியாத நிலை உருவாகி விடுவதையும் காண முடிகிறது. அரசும், சான்றோரும் செல்வரும் இச்சமூகக் கொடுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தேயாக வேண்டும். வறியவன் ஒருவன் வளமுள்ளவனிடம் சென்று உதவி கேட்கும்போது, அது மறுக்கப்படுமானால் செல்வனுக்குத்தான் பழியேற்படுமேயன்றி வறியவனுக்கு அன்று என்று கூறுகிறார் திருவள்ளுவர்.[19] மனிதப் பண்பு சிறிதும் அற்றவர்களிடம் செல்வம் இருந்தாலும் அவர்கள் வறியவர் களாகவே கருதப்படுவார்கள். இவ்வாறு வறுமையின் கொடுமையையும் இரத்தலின் இழிவையும் சுட்டிக்காட்டிய தமிழ்ச் சான்றோர் செல்வர்களுக்குச் சில அறிவுரைகளையும் வழங்கியுள்ளனர். "சமுதாயத்தில் தனிமனித மதிப்பீடுகளும்

---

18. குறள். 1066.
19. குறள். 1051.

செயல்பாடுகளுமே சிந்திக்கத்தக்கவை. ஒட்டுமொத்த சமுதாய உணர்வு என்பது தனிமனிதனுடைய சிந்தனையையும், செயல்களையும் பொறுத்தே அமைகிறது".[20] மேனாட்டுப் பொருளியற் பேரறிஞர் 'ஆல்பிரடு மார்சல்' (Alfred Marshall) என்பவர் பொருளாதார முன்னேற்றத்திற்கு மக்கட் சமுதாயத்தின் பண்பியல்புகளும் காரணமாகின்றன என்று கூறியுள்ளார். நம் நாட்டுச் சான்றோர் செல்வர்களை அவர்தம் தேவைக்கும் மிகுதியாக வைத்திருக்கும் செல்வம் முதலியவற்றை வறுமையில் வாடும் ஏழைகளுக்கு வழங்கி மகிழ வேண்டுமென்று அறிவுரை பகன்றுள்ளனர். செல்வர்தம் உள்ளத்தை ஈகையில் ஈடுபடுமாறு வேண்டிக்கொண்டுள்ளனர். பசித்த ஒருவனுடைய துன்பத்தைப் போக்கும் நற்செயலே தனது செல்வத்தை அழியாது பாதுகாக்கும் பெட்டகமாகும் என்பார் திருவள்ளுவர்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருநர்வைப் புழி"[21]

என்பது திருக்குறள். மேலும் எப்போதும் தனக்குரிய உணவைப் பிறருக்கும் பகிர்ந்தளித்துப் பின்னர் தானும் உண்ணுகின்ற ஒருவனைப் பசியென்று சொல்லப்படும் கொடிய நோய் தீண்டாது என்னும் பொருநர்பட,

"பாத்தூண் மரீஇ யானைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது"[22]

என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். தேசத்தந்தை காந்தியடிகளும் இக்கருத்தினைப் பின்வருமாறு விரித்து விளக்கியுளளார். 'செல்வர்கள் தம் தேவைக்கும் மிகைப்பட்ட

20 Dr. B. Natarajan, Economic Ideas of Thiruvalluvar, p. 20.
21. குறள். 226.
22. குறள். 227.

வசதி வாய்ப்புக்களை உடையவர்களாக இருக்கிறார்கள். அவை அனைத்தும் அவர்களுக்குப் பயன்படுவதில்லை. அவற்றை வீணாக்குகிறார்கள். ஆனால், ஏழைகளோ பல்லாயிரக் கணக்கில் உயிர் உடம்பில் ஒட்டி நிற்கும் அளவுக்கு சிறிது உணவுகூட இல்லாமல் மடிகிறார்கள். இருப்பவர்கள் தம் தேவைக்கு மட்டும் வைத்துக்கொண்டு எஞ்சியவற்றைச் சமுதாயத்திற்கு வழங்குவார் களானால் எந்த மனிதனும் பசியால் வாடமாட்டான்; மடிய மாட்டான். இருப்பவர், இல்லாதவர் ஆகிய எல்லோரும் அவ்வசதி வாய்ப்புக்களைப் பகிர்ந்துகொண்டு வளமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ முடியும்".[23]

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் முற்போக்கான பொருளியல் கருத்துக்கள் நிறைந்துள்ளன. ஒவ்வொருவரும் வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் பொருளை ஈட்டவேண்டும். பொருளீட்டும் உரிமை மனிதனுக்கு வழங்கப்பட்டது. ஆனால், அவ்வுரிமை தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது. அற வழியில்தான் பொருளீட்ட வேண்டுமென்பது பழந்தமிழ் இலக்கியங்களில் விதிக்கப்பட்டுள்ளது. ஒரு செயலை வெற்றிகரமாக முடித்தல் வேண்டும் என்பது எவ்வளவு சிறப்புடையதோ அவ்வளவு சிறப்புடையது அச்செயலை முடிப்பதற்குப் பின்பற்றப்படும் வழிமுறையும். அவ்வழிமுறை சட்ட வரம்புக்கு உட்பட்டு இருந்தால் மட்டும் போதாது; ஒழுக்கத்திற்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும். மேலும் ஒருவர் ஈட்டும் பொருநர் ஓரிடத்தில் தங்கிவிடாமல் சமுதாயத்தில் செலாவணியில் இருத்தல் வேண்டும். பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைத்துத் தனக்கும், சமுதாயத்திற்கும் அப்பொருநர் பயன்படாதவாறு செய்வானேயானால் அவன் சமுதாயத்தின் முதல் எதிரி ஆவான் என்பது பழந்தமிழர் கொள்கை. பொருளைச் சேமித்து பயன்படாதவாறு முடக்கி

---

23. M.K. Gandhi, My Socialism, p. 21.

வைப்பவன் இப்பூமிக்குப் பாரமாகக் கருதப்படுவான். செல்வன் ஒருவன் வறுமையில் வாழும் மற்றொருவனுக்குக் கொடுத்து உதவாமல் இருப்பின் அவனது செல்வம் அழகிய பெண்ணொருத்தி தன் அழகினைக் காதலன் ஒருவன் துய்க்குமாறு திருமணம் செய்யாது வறிதே இழிவதற்கு ஒப்பாகும் என்பார். திருவள்ளுவர் மக்கள் நாள்தோறும் கூடி உரையாடி மகிழும்படியான ஒரு பொதுமன்றத்தில் நச்சுத் தன்மை வாய்ந்த பழமரம் பழுத்து நிற்பது போன்றவன் பிறருக்குப் பயன்படாத செல்வன். அவன் சமுதாயப் பகைவனாகவே கருதப்படுவான். இங்குக் கூறிய இப்பொருளியல் கருத்துக்களைத் திருவள்ளுவர்,

"செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃதனிற் கூரிய தில்"

"அன்பொடும் அருளொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"

"ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை"

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று"

எனனும் குறடபாக்களில் விவரித்துள்ளமை காண்க.

இதுகாறும் கூறியவற்றால் பண்டைத் தமிழ்ச் சான்றோர் தமது உயர்ந்த பண்பிற்கேற்ப வறுமை, அதுகாரணமாக இரத்தல், பொருநர்களை முடக்கி வைத்தல் போன்றவை சமுதாயத்தில் பரவாமல் ஒழிக்கப்படுதல் வேண்டுமென்று முழங்கினர். தேவைக்கேற்பப் பொருநர்களை நுகர்வதும் உற்பத்தியான பொருநர்களை நேர்மையாகப் பகிர்ந்து கொடுத்தலும் ஆகிய ஒப்புரவுச் செயல்பாடுகளை அக்கால

அறிஞர் பாராட்டினர். இத்தகைய கருத்துக்கள் பொருளாதாரத் துறையில் ஒழுங்கும், நேர்மையும், சீர்மையும் நிலவ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. அன்றியும் இக்கருத்துக்கள் யாவும் தனிமனிதனை விளித்தே கூறப்பட்டிருப்பினும் அவற்றின் அடிப்படை நோக்கம் சமுதாயத்தைப் பற்றியதேயாம்.

தருமகருத்தா முறை (Theory of Trusteeship)

தருமகருத்தா முறை என்பது காந்தியடிகளால் அறிமுகப் படுத்தப்பட்டது. உருஷ்யா போன்ற நாடுகளில் முதலாளித்துவம் மறைந்து தொழிலாளர் நல அரசு ஏற்பட்டு சமநிலைச் சமுதாயக் கருத்துக்கள் (Socialistic Ideas) பரவிய காலத்தில் அவற்றிற்கு மாற்றாகக் காந்தியடிகள் இக்கருத்துக்களை வெளிப்படுத்தினார். சமநிலைச் சமுதாய அமைப்பில் தனியுடைமைக்கு இடமில்லை. அனைத்தும் சமுதாய உடைமையேயாம். காந்தியடிகள் இது தொடர்பான தம் சிந்தனைகளைப் பின்வருமாறு வெளிப் படுத்தியுள்ளார். 'என்னிடம் ஒரு குறிப்பிட்டளவு செல்வம் குவிந்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அச்செல்வம் நான் மேற்கொள்ளும் தொழிலாலோ, வாணிபத்தாலோ சேர்ந்திருக்கலாம் அல்லது அது முன்னோர் தேடிவைத்து எனக்கு வழிவழியாக வந்ததாகவும் இருக்கலாம். இந்நிலையில் அச்செல்வம் முழுமையும் எனக்கே உரிமையுடையது என்று நான் எண்ணிவிடக்கூடாது. என்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு எவ்வளவு பொருநர் தேவையோ அவ்வளவிற்குத் தான் எனக்கு அதில் உரிமையுண்டு. எஞ்சிய செல்வம் எல்லாம் சமுதாயத்தில் வாழும் பொதுமக்களுக்கே உரியது. அதனால் அச்சமுதாய முன்னேற்றத்திற்கும் பிற அறசெயல்களுக்குமே அச்செல்வத்தை நான் செலவிடுதல் வேண்டும்"[24]. இவ்வாறு காந்தியடிகள் கருதினார்.

---

24. Harijan (3.6.1939), p. 145.

காந்தியடிகள் வெளிப்படுத்தியுள்ள இக்கருத்துக்களைப் பழந்தமிழ்ச் சான்றோர் மிகத் தெளிவாகவே கூறியுள்ளனர். திருக்குறள், புறநானூறு போன்ற உயர்ந்த தமிழ் இலக்கியங்கள் இக்கருத்துக்களை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. மனிதன் உழைப்பிற்கு உரிமையுடையவன். பொருநர் ஈட்டுவதற்கும் உரியவன். ஈட்டிய பொருளைத் தான் துய்க்கலாம். ஆனால் துய்த்தபின் எஞ்சியவற்றை சமுதாயம் பயன்படுத்திக்கொள்ள இசைய வேண்டும். இக்கருத்தினைத் திருவள்ளுவர்,

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"[25]

என்னும் குறளில் விளக்கியுள்ளார். பரிமேலழகர், ஒருவன் தன் முயற்சியால் ஈட்டிய பொருநர் முழுதும் பிறர்க்கு உதவுதற் பொருட்டேயாம் என்பார். 'தானே உண்டல் பொருட்டும், வைத்து இழத்தற் பொருட்டுமன்று' என்று மேலும் அவர் விளக்கியுள்ளார். காந்தியடிகளும், "நீங்கள் பொருளை எவ்வளவு வேண்டுமானாலும் ஈட்டுங்கள். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் வைக்க வேண்டும். அப்பொருநர் முழுவதும் உங்களுடையது என்று எண்ணிவிடாதீர்கள். மக்களுக்கே உரியது"[26] என்று கூறியுள்ளார். அஃதாவது, தேவைக்கேற்ப பொருளைத் துய்த்து எஞ்சியவற்றைப் பொது நலனுக்கே செலவிடுதல் வேண்டும் என்பதாகும். மேலே கூறிய சீரிய பொருளியல் கருத்துக்களைத் திருவள்ளுவர் பின்வரும் மூன்று அரிய குறட்பாக்களில் வியக்கத்தக்க முறையில் விளக்கியுள்ளமை அறிந்து மகிழத்தகும்.[27]

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

25. குறள். **212.**

26. Harijan (1.2.1942), p. 20.

27. குறள். **215, 216, 217.**

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்"

"மருந்தாகித் தப்பா மரத்தாற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"

இந்த மூன்று குறட்பாக்களிலும் மூன்று வேறுபட்ட உவமைகளை வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார். முதற் குறளில், சிறந்த அறிஞன் ஒருவனிடம் சேர்ந்துளள பொருளுக்கு நீர் நிறைந்த ஊருணி உவமமாக வந்துள்ளது. உலக நடையை அறிந்து வாழும் அறிஞன் ஒருவனுடைய செல்வம் ஊரில் வாழ்வார் தண்ணீருண்ணும் குளம் நீர் நிறைந்தாற் போன்றது என்பது முதற்குறளின் திரண்ட பொருநர். இங்குக் குளமாகிய ஊருணி பேரறிவாளனுக்கும், அதில் நிறைந்துள்ள தண்ணீர் அவனது செல்வத்திற்கும் உவமிக்கப்பட்டுள்ளன. பேரறிவாளன் என்பவன் யாவன்? சமுதாயப் பண்பும் அன்பும் உடைய சிரிய உலகியல் அறிவைப் பெற்றவன் இவன். தான் ஈட்டிய செல்வம் தனக்கு மட்டும் உரியதன்று என்ற உயர்நோக்கு உடையவன். எவ்வாறு ஊருணி மக்கள் யாவர்க்கும் பொதுவோ அதுபோன்று தான் சேர்த்த பொருளும் பிறர்க்கு உரியது என்ற சமுதாயப் பார்வை உடையவன். ஊருணி நீர் பாழ் போகாது, நெடிது நின்று யாவர்க்கும் பயன்படுதலின் ஊருணியைப் உவமித்தார் வள்ளுவர் என்று பரிமேலழகர் உரை கண்டிருப்பதும் நோக்கத்தகும். இதனால் செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படுதல் வேண்டும் என்பது புலப்படும்.

இனி அடுத்த குறளில் நயனுடையான்கண் வந்து சேர்ந்த செல்வம் பயன் தரும் பழமரம் ஊர் நடுவே பழுத்து நின்றால் போல்வது என்று கூறப்பட்டுள்ளது. இதுவும ஆழ்ந்த சிந்தனைக்குரியது. மரம பழங்களைத் தரும் மரம்; அம்மரம் ஊர் நடுவே அமைந்துள்ளது. எனவே, அது ஊர் மக்களுக்குப்

பொதுவானது எனபதும் பெறப்படும். அம்மரத்தை ஒருவன் நட்டிருப்பான்; ஆனால் நட்ட இடம் அவனுக்குச் சொந்தமானது அன்று; ஊர்ப் பொதுவிடம். அதனால் அம்மரம் தரும் பழங்கள் அவனுக்கு மட்டுமன்றிப் பொதுமக்கள் யாவர்க்கும் உரியது. நயனுடையான் என்பவன் சமுதாய நீதியை உணர்ந்தவன்; நற்குணங்களையும், செயல்களையும் உடையவன். இவ்வுவமையால் பண்பாளன் ஈட்டிய செல்வம் பலர்க்கும் பயன்படுவதுடன், அது எளிதில் யாராலும் அடையக்கூடிய தன்மையும் கொண்டது என்பது புலப்படும்.

இதனை அடுத்த குறட்பாவில் மருந்து மரம் உவமிக்கப்பட்டுள்ளது. மருந்து மரம் மக்களின் நோயைத் தப்பாது போக்கவல்லது. உரையாசிரியராகிய பரிமேலழகர் இக்குறட் கருத்தைப் பின்வருமாறு விளக்குவார். தப்பாமரம் என்ற தொடர் மக்கள் பார்வைக்கு எளிதில் காணப்படுவது. யாரும் எளிதில் செல்லத்தக்க இடத்தில் உள்ளது. பிற புதர்களாலோ மரங்களாலோ மறைக்கப்படவில்லை. தெளிவாகத் தெரிகிறது; எல்லாக் காலத்தும் எல்லாப் பருவ நிலைகளிலும் பயன்படத்தக்கது. மருந்து மரம் தன்னை அழித்துக் கொண்டாவது பிறர் நோயை நீக்கவல்லது. மேலும் மருந்துமரம் தனது அனைத்து உறுப்புக்களாலும் பிறர்க்கு மருந்தாகப் பயன்படுவது. வேர், பட்டை, அடிமரம், இலை, பூ முதலிய அனைத்தும் நோய் தீர்க்கும் தன்மையது. அதுபோன்று தயாள குணம் நிறைந்த ஒருவனிடம் சேர்ந்துள்ள செல்வம் பிறர் வறுமை நோயைத் தவறாது போக்கவல்லது. அவனிடம் செல்லும் ஒவ்வொருவரும் பயன்பெற முடியும். அவன் பிறர்க்கு உதவுமுகத்தான் அனைத்தையும் தியாகம் செய்யக் கூடியவன். நூற்றுக்கு நூறு முழு நிறைவான சேவையாகும் இது. மக்கள்பால் அவனுக்குள்ள பரிவு மனப்பான்மையையும் தியாக உணர்வையும் குறிக்க வல்லது அவனது ஒப்புரவாண்மை.

இங்குக் காட்டப்பட்ட மூன்று குறட்பாக்களினின்று ஓர் உண்மை தெளிவாகிறது. செல்வர், சமுதாயத்தில் வாழும் பிறரைவிட உயர்ந்த வகுப்பினர் என்று நினைத்தல் தகாது. மாறாக அவர், தன்னிடம் சேர்ந்த செல்வத்திற்குத்தான் அறங்காவலனாகச் செயல்படும் பேறு தனக்குக் கிடைத்ததே என்று நினைந்து மகிழவேண்டும். நம் பண்டைய இலக்கியங்கள் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இத்தகைய முன்னேற்றமான பொருளியற் கருத்துக்களை வெளிப்படுத்தின என்று அறிதல் வேண்டும். இருபதாம் நூற்றாண்டில் காந்தியடிகள் கனவு கண்ட தருமகர்த்தா முறை (Trusteeship) யோடு பழந்தமிழ்ச் சான்றோர் கருத்துக்கள் எத்துணையளவு ஒத்துள்ளன என்பதை அறிய வியப்பாக உள்ளது. இப்பொருளியற் கோட்பாடு காந்தியடிகளின் கருத்துப்படி "சேவைப் பொருளாதாரம்" (Economy of Service) எனக் குறிக்கப்பெறும்.[28]

முதலாளித்துவம்

முதலாளித்துவம் (Capitalism) என்பது தனியுடைமைக் கொள்கையாகும். அஃதாவது தொழிற்சாலைகள், நிலபுலங்கள், சுரங்கங்கள் இன்ன பிறவெல்லாம் தனியொருவரால் அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவினால் (Group) ஆதிக்கம் செலுத்தப்படும் முறையாகும். "பொருளாதாரத்தில் உற்பத்திச் சாதனங்கள்" (Means of Production) என்று அழைக்கப்படுபவை தொழிலாளரால் இயக்கப்படினும் அல்லது செயல்படுத்தப் படினும் அவை அவர்களுக்கு உரியனவல்ல; பயனை (Profit) அத்தொழிலாளர் அடைந்து அனுபவிக்க முடியாது."[29] தனிப்பட்டவரின் உரிமையும், ஊதியமும் அனுமதிக்கப்படுகின்றது இம்முறையில். இந்த அடிப்படையில் பார்க்கும்போது பண்டைத்

---

28. Dr. J.C. Kumarappa, The Economy of Permanance, pp. 8–9.
29. John Strachey, How Socialism Works, p.16.

தமிழகத்தில் நிலவிய பொருளாதார ஏற்பாடு முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்டதே என்பது தெளிவாகும். ஆயின், மேலை நாடுகளில் தொழிற்புரட்சியை அடுத்துத் தோன்றிய தீய விளைவுகளின் தாக்கம் பெரிதாக இல்லை. பண்டைத் தமிழ்ச் சான்றோரும் புலவரும் முதலாளித்துவ முறையை ஒத்துக் கொண்டிருந்தனர். தனியுடைமையும் உரிமையும் அனுமதிக்கப் பெற்றன; கொடிவழி உரிமைகளும் சலுகைகளும் ஒப்புக் கொள்ளப் பெற்றன.[30] அக்காலப் பொருளாதார அமைப்பில் தனியாள் உழைத்துப் பொருளீட்டவும் இலாபம் அடையவும் அனுமதிக்கப்பட்டன.

இனிப் பொதுவுடைமைக் கோட்பாடு பற்றிய மேலை நாட்டுக் கருத்துகளும் பழந்தமிழ்ச் சான்றோர் கருத்துக்களும் இங்கு ஒப்பு நோக்கப்படுவது பொருத்தமாக இருக்கும். பொதுவுடைமை அமைப்பில் நுகர் பொருநர்களும், நிலமும், முதலீடும் சமுதாயத்தின் பொறுப்பில் அமையும். தனிமனித உரிமையும் நினைத்தவாறெல்லாம் தொழில் முயற்சியில் ஈடுபடும் வாய்ப்பும் இவ்வமைப்பால் அறவே விலக்கப்படும்.[31] இந்த வரையறையின் அடிப்படையில் நோக்கினால் பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் இதற்கு ஒப்பான கருத்துக்கள் பொருளாதாரத் துறையில் நிலவின என்று கருதலாம். பொதுவாக நோக்குமிடத்துச் சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வின்மையை ஏற்படுத்துவதே பொதுவுடைமையின் நோக்கமாகும். அஃதாவது இருப்போர், இல்லாதார் என்போரிடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் கூடுமானவரை குறைப்பதே இக்கொள்கையின் குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோளைப் பொறுத்தவரை மேனாட்டுப் பொதுவுடைமைக் கருத்துகளும் தமிழ்ச் சான்றோர் கருத்துக்கும் பெரிய வேறுபாடு இல்லை என்றே கூறிவிடலாம். இவ்விரண்டிற்கும் இடையே முரண்பாடோ உரசலோ இல்லை.

---

30. புறம். 75.

31. Dr Ralph H Blodgett, Comparative Economic System. pp. 48–49

ஆனால் இப்பொதுக் குறிக்கோளை விடுத்தால் மேலை நாட்டுக் கோட்பாட்டிற்கும், தமிழர் கோட்பாட்டிற்கும் இடையே அடிப்படையான வேறுபாடுகள் பல உள. மேனாட்டுப் பொதுவுடைமைத் தத்துவத்தில் வருக்க வேறுபாடும் அது காரணமாக முதலாளி - தொழிலாளி முரண்பாடும் வன்முறையும் தோன்ற முடியும். ஆனால் தமிழ்ச் சிந்தனையாளர் வன்முறையையும் வருக்க வேறுபாடுகளையும் அறவே வெறுத்தனர். தமிழர் கோட்பாடு அமைதியையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்டது. இதில் வன்முறைக்கே இடமில்லை; வெறுப்புக்கும் இடமில்லை. வேண்டுகோளும், மனமாற்றமும் தமிழ்க் கோட்பாட்டின் கருக்களாக அமையகின்றன. மேலைத் தத்துவம் வன்முறையையும் அழிவையும் வழிமுறைகளாகக் கொள்கின்றது. எந்த வகையிலாவது குறிக்கோளை அடைதல் வேண்டும்; அதனை அடையும் வழி எவ்வாறு அமையினும் கவலை இல்லை. அன்பு, அறம் இவற்றின் வாயிலாகத்தான் பொருளாதாரக் குறிக்கோளை அடைய வேண்டும் என்பதில் பொதுவுடைமைவாதிகளுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் தமிழ் நூல்கள் அமையும் வழிகளும் சிறந்தனவாக அமைய வேண்டும் என்று கூறுகின்றன.

மற்றொரு வேறுபாடும் உண்டு. மேலைநாட்டுப் பொதுவுடைமைக் கொள்கையின்படி இறுதியில் அரசு என்பதே அற்றுவிட வேண்டும். அரசற்ற சமுதாயமே அதன் முடிந்த முடிவு. ஆனால் தமிழா கருத்து முற்றிலும் வேறுபட்டது. அரசு இன்றியமையாதது. எத்துணைச் சிறப்புக்களும் செல்வ வளங்களும் ஒரு நாட்டில் இருந்தாலும் அரசன் என்பவன் சிறந்தவனாக இல்லையெனில் அந்நாடு சிறப்படையாது என்பது தமிழ்க் கொள்கை.

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"[32]

---

32. குறள். 740.

என்பது வள்ளுவர் வாய்மொழி. இதனால் அரசன் மக்களுக்கு இன்றியமையாதவன் என்பதும், அரசு நிலை பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் பெறப்படும். இறுதியில் அரசு என்ற ஓர் அமைப்பே உலர்ந்துவிடும் அல்லது மறைந்துவிடும் (Stateless Society) என்னும் சித்தாந்தம் தமிழ்க் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். இதுகாறும் கூறியவற்றால் மேலைநாட்டுப் பொதுவுடைமைக் கோட்பாடு தமிழர் சிந்தனையோடு பெருமளவு மாறுபட்டது என்பது தெளிவாகும்.

சமநிலைச் சமுதாயக் கோட்பாடு

சமநிலைச் சமுதாயக் கோட்பாடும் பொதுவுடைமைக் கோட்பாடும் அண்மைக் காலத்தில் வழக்குப் பெற்றுவிட்ட பொருளியற் சித்தாந்தங்கள் ஆகும். ஆனால் இக்கோட்பாடுகள் பற்றி வெளியிடப்பட்டுள்ள சிந்தனைகள் முற்றிலும் புதியவை என்று கூறிவிட முடியாது. பல கருத்துக்கள், கோட்பாடுகளாக வரையறை பெறாவிடினும், பண்டைய இலக்கியங்களில் இலைமறை காயாக மிளிரும் தமிழர் கருத்துக்களை ஒட்டியவையே ஆகும். பண்டைத் தமிழர் இக்கருத்துக்களை முறைப்படுத்தி ஆய்வு செய்து கோட்பாடுகளாக (Concepts or theories) வெளியிடவில்லை என்பது உண்மை. ஆயின், இவற்றின் அடிப்படைச் சிந்தனைகளின் உரிமை தமிழ்ச் சமுதாயத்திற்கும் உண்டு என்பது மறக்கமுடியாத வரலாற்று உண்மையாகும்.

சமநிலைச் சமுதாயக் கோட்பாடு என்பது யாது? இதுபற்றி காந்தியடிகள் பின்வருமாறு கூறியுள்ளமை சிந்திக்கத்தகும். *சமநிலைச் சமுதாயக் கோட்பாடு* என்பது ஓர் அழகிய - கவர்ச்சி மிக்க தொடராகும். யானறிந்த மட்டில் இக்கோட்பாட்டின்படி, சமுதாயத்தில் வாழும் அனைத்து மக்களும் சமமானவர்கள்; யாரும் தாழ்ந்தவர், உயர்ந்தவர் அல்லர், இப் பாகுபாடு ஆங்கு இல்லை. மனித உடம்பில் தலை உடம்பின் உச்சியில் இருப்பதால் அதனை உயர்ந்தது என்று கூறமுடியாது; பாதங்கள்

உடம்பின் தாழ்ந்த இடத்தில் அமைந்திருப்பதால் அவற்றை இழிந்தன என்று கூறமுடியாது. இது உலகியல் உண்மை. இதுபோன்றே மனித சமுதாயத்தில் மேட்டுக் குடியினர் என்றோ கடைப்பட்டவர் என்றோ பாகுபாடு செய்ய முடியாது; அவ்வாறு செய்வதும் அறமன்று" என்பார் காந்தியடிகள்.[33] மேலும் அவர், "இத்தகைய சமநிலைச் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டோர், மருத்துவர், வழக்கறிஞர், ஆசிரியர், வணிகர் முதலிய பல்வேறு பிரிவினரும் ஒரே சீரான ஊதியம் பெறுவர்; இதுவே யான் காணும் சமநிலைப் பொருளியற் கோட்பாடு" என்றார்.[34]

இக்கோட்பாட்டின் தொடர்பாகப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் மனம் கொள்ளத்தகும். காந்தியடிகள் வெளிப்படுத்திய கருத்துக்களும் இப்புறப்பாடல் வெளிப்படுத்தும் சிந்தனைகளும் ஒத்த தன்மையன என்பது நன்கு புலப்படும். பாடல் வருமாறு:

> "தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
> வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
> நடுநாள் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
> உண்பது நாழி உடுப்பவை இரண்டே
> பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
> செல்வத்துப் பயனே ஈதல்
> துய்ப்போம் எனினே தப்புந பலவே."[35]

கடலால் சூழப்பெற்ற இவ்வுலகனைத்தையும் வென்று ஒரு குடைக்கீழ் ஆளும் மன்னர்க்கு மன்னனாயினும், நள்ளிரவிலும் நண்பகலிலும் கண்படை கொள்ளாது விலங்குகளை வேட்டையாடிப் பிழைக்கும் எளிய வேடனாயினும், இவ்விரு சாராருக்கும் உண்பதற்கு வேண்டப்படுவது நாழி அரிசியேயாம்;

---

33. Harijan, Dated 13.7.1947.
34. Ibid, 1.6.1947.
35. புறம். 389.

உடுக்கப்படுவது இரண்டு உருப்படிகளேயாம்; பிறவும்கூட இருசாரார்க்கும் ஒத்தே உள்ளன. உண்பது, உறங்குவது, இனம் பெருக்குவது போன்ற அனைத்திலும் இவர்களுக்கிடையே வேறுபாடு இல்லை. எனவே, செல்வம் உடையவர்கள் தாமே அதனை அனுபவிக்க வேண்டும் என்று கருதாது பிறர்க்கும் பகிர்ந்தளித்து வாழ வேண்டும். இன்றேல் அவர் செல்வம் கள்வர் முதலிய பிறர் கைப்பட்டுப் பயனிழக்கும். இப்பாடல் தரும் விளக்கம் இதுவே.

செல்வராயினும், வறியவராயினும், உயர்ந்தோராயினும், தாழ்ந்தோராயினும் - யாவரேயாயினும் - மக்களுக்கு வேண்டும் இன்றியமையா அடிப்படைத் தேவைகள் ஒரு நிகரனவாகவே அமைந்துள்ளன. பசி என்பதும் அது தோன்றுங்கால் அதனைத் தீர்ப்பதென்பதும் யாவர்க்கும் ஒத்த நிலையில் அமைந்துள்ளன. இயற்கை நியதி இவ்வாறிருப்பவும் சிலர் அளவுக்கு மீறி அறமல்லாப் பிற வழிமுறைகளைப் பின்பற்றியாவது பெரும் பொருநர் ஈட்ட முற்படுவதும், அவ்வாறு ஈட்டியவற்றைத் தாமும் அனுபவித்துச் சமுதாயத்திற்கும் பயன்படுத்தும் மனவிரிவு இல்லாதவர்களாக இருப்பது வருந்தற்குரியது. சேர்ந்த செல்வத்தை முடக்கி வைக்காமல் நாட்டில் பல்வேறு தொழில்களில் பயன்படுத்தி மக்கள் பலர்க்கும் பயன்படுமாறு செய்தல் செல்வர்தம் கடமையாகும். காந்தியடிகள் இதுபற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:

"ஒருவகையில் நாம் திருடர்களாகவே வாழ்கிறோம். எனது உடனடித் தேவைக்கு வேண்டப்படும் வசதியை அல்லது பொருளைத் தவிரத் தேவைக்கு விஞ்சிய பொருளை வைத்திருப்பேனேயானால் யான் பிறருக்கு உரியவற்றைத் திருடிய கள்வனாகிறேன். இது இயற்கை விதி. இயற்கையன்னை நமக்கு நாள்தோறும் எவ்வளவு தேவையோ அதனை எல்லோர்க்கும் உண்டாக்கி வழங்கிக்கொண்டே இருக்கிறாள். ஒவ்வொருவரும்

இவ்விதியை மனங்கொண்டு தத்தம் தேவைக்கு வேண்டும் அளவு மட்டும் வைத்துக்கொண்டு எஞ்சியவற்றைச் சமுதாயத்திற்கு வழங்குவாரானால், உலகில் பற்றாக்குறை என்பதே இல்லாமற் போய்விடும்; பசித்துன்பமும் இராது. பட்டினியும் பஞ்சமும் பறந்துபோம்."[36] இக்கருத்துக்கள் எத்துணைப் புரட்சிகரமானவை என்பதை உன்னுக.

உழைத்து உண்க

உழைத்து உண்க என்பது ஒரு இன்றியமையாத பொருளியல் தத்துவம். மனித வாழ்வுக்கு உணவு தவிர்க்க முடியாத ஒரு தேவையாகும். அவ்வுணர்வும் உழைப்பால் கிடைப்பதாக இருத்தல் வேண்டும். பிறர் உழைப்பில் உண்பது அறமாகாது. உழைக்க விரும்பாதவர்கள் உண்பதற்கும் உரிமையற்றவர்கள். உழைப்பு என்பது உடலுழைப்பு, மூளை உழைப்பு ஆகிய இரண்டையும் குறிக்கும். ஒவ்வோர் ஆணும், பெண்ணும் தத்தம் உழைப்பில் உண்டு வாழும் நிலை ஏற்படும்போது சுரண்டல் கொள்கை அடிபட்டுப் போகிறது. சுரண்டி வாழ்தல் (Positism) என்பது ஒரு சமுதாயத் தீமை - கொடுமை - ஆகும். உழைத்தால் உணவு; இன்றேல் இல்லை' என்பது ஆதம் சுமித்து (Adam Smith) என்பவரால் உற்பத்திக்குரிய உழைப்பு (Productive Labour) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உழைப்பு இல்லாவிட்டால், நுகர்ச்சி இல்லை என்பது இதன் பொருநர். பேரறிஞர் இரசுக்கின் (Ruskin) மற்றும் தால்சுதாய் (Tolstoy) ஆகியரின் கருத்துக்கள் இங்கு ஒப்பிடத்தகும். பழந்தமிழ் அறிஞரும் ஆக்கமும் உழைப்பும் என்பது பற்றி நன்கு சிந்தித்துள்ளனர்.[37] அவர்கள் உடல் உழைப்பில் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முன் சோழப்

---

36. Social Philosophy of Mahatma Gandhi by Dr. Madadeva Desai (quoted).

37. குறள். அதி. *63*.

பேரரசன் ஒருவன் மேற்கூறிய ஆதம் சுமித்து, இரசுக்கின், காந்தி ஆகியோரின் பொருளியற் சித்தாந்தங்களை ஒரு பாடல் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளான்.

"விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டுஅளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி உள்ளதம்
வளன்வலி உறுக்கும் உளமி லாளரொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ
கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றுஅவண் உண்ணா தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உளவா கியரோ"[38]

நெற்கதிர் நன்கு முற்றி விளைந்துள்ள வயலுக்குள் எலி செல்கின்றது. அங்குள்ள நெற்கதிர்களைக் கள்ளத்தனமாகக் கவர்ந்து சென்று உண்கின்றது. உழவன் பல திங்கள் உழைத்து, நீர்பாய்ச்சி, களை கட்டுப் பாதுகாத்து, உரமிட்டு வளர்த்து விளைவித்தான். எலியோ எவ்வித உழைப்பும் தந்ததில்லை. ஆனால் இதற்கு மாறாகப் புலியைக் கவனிப்போம். அது தனது படுத்துறங்கும் குகையை விட்டு எழுந்து வெளிப்போந்து வலிமை மிக்க யானை ஒன்றினைப் பாய்ந்து வீழ்த்தித் தனது உணவினைப் பெறுகின்றது. அவ்வாறு வீழ்த்துங்கால் யானை புலியின் இடப்பக்கம் விழுமானால் அதனை உண்ண மறுத்து அன்று பசியோடு திரிந்து மறுநாள் மற்றொரு வலிமைமிக்க யானையைக் கொன்று வலப்பக்கமாக விழுமாறு செய்து

38. புறம். 190.

அதனைத் தனகது இரையாக்கிக் கொள்கிறது. அதாவது புலி உழைப்பில் நம்பிக்கை வைத்துள்ளது. எலி, புலி இரண்டின் செயல்களையும் நோக்கிச் சீர்தூக்கி எலி போன்றோர் உறவு கொள்ளற்க; புலி போன்றோர் உறவு கொள்க என்று கூறுகிறான் அச்சோழ மன்னன். எத்தகைய உயர்ந்த பொருளியற் கருத்தினை இப்பாடல் காட்டுகிறது என்பது உணர்ந்து மகிழத்தகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டில் இயற்கை நெறிக் கொள்கை (Physiocracy) தோன்றியது.[39] இத்தொடரை முதன்முதல் பயன்படுத்தியவர் துபோ-தி-நிமூர் (Dupont - de - Nemours) என்பவர் ஆவார். இவர் ஒரு எழுத்தாளர். இயற்கை நெறியாளர் (Physiocrats) எனப்படுவோர். வேளாண்மையை மட்டும் உற்பத்தித் தொழில் என்றும் வளம் பெருக்கும் துறை என்றும் கருதினர். எனவே இந்நெறியாளரை வேளாண்மைப் பள்ளியைச் (Agricultural School) சேர்ந்தோர் அல்லது வேளாண் கோட்பாட்டாளர் என்று அழைக்கப் பெற்றனர். இவர்தம் கொள்கையின்படி கைவினைஞர் (Artificers), ஆக்கத் தொழிலர் (Manufacturers), வணிகர் (Merchants) முதலியோர் ஆக்கம் சேர்க்காத (Unproductive class) குழுவினர் எனக் கருதப்பட்டனர்.[40] ஆதம் சுமித்து என்பார் இக்கொள்கையைப் பின்வருமாறு விளக்குவார்.[41]

"நாட்டுக்கு வளம் சேர்க்காத வகுப்பினராகிய வணிகர், ஆக்கத் தொழிலர், கைவினைஞர் முதலியோர் ஏனைய இருபெரும் வகுப்பினராகிய உழவர் அல்லது வேளாளர், உடைமையாளர் (Proprietors) ஆகியோரால் பேணிக் காக்கப்படுவோராவர்; இவ்விருசாரார் தயவில் வாழ்வோராவர். வேளாளரும் (Cultivators) உடைமையாளரும் (Proprietors)

---

39. Bell. A History of Economic Thought, p.121.
40. Dr. B. Natarajan. Economic Ideas of Thiruvalluvar, p.26.
41. Ibid.

மேலே கூறப்பட்ட வளம் சேர்க்காப் பிரிவினர்தம் தொழிலுக்கு வேண்டப்படும் மூலப்பொருநர்களையும் முதலீடுகளையும் (Funds) வழங்கி அவர்களைப் பணி கொள்வாராவர். உண்பதற்கு உணவுப் பொருநர்களையும் பிற தேவைகளையும் உண்டாக்கித் தருகின்ற திறத்தினர் ஆவர். அன்றியும் உழவரும் உடைமையாளரும் ஏனையோரின் ஊதியத்தையும் அவர்களைப் பணி கொள்ளும் முதலாளிகளின் இலாபத்தையும் தருவோரும் ஆவர்".

மேலோட்டமாகப் பார்க்குங்கால் பழந்தமிழ் அறிஞரும் பதினெட்டாம் நூற்றாண்டைய பிரெஞ்சு அறிஞர்களைப் போன்றே கருதுவாராயினர் என்பது ஒருசார் ஆராய்ச்சியாளர். ஆயின் அது பொருந்தாது; உண்மையுமன்று. பண்டைத்தமிழ் மக்கள் வேளாண்மைக்கு முதலிடம் தந்து போற்றினர் என்பது உண்மை. அதுவே தலைசிறந்த தொழில் என்பதில் எள்ளளவும் ஐயமின்று. இன்றும் உழவுத் தொழிலே நம்மில் பெரும்பான்மை யோரின் தலையாய தொழிலாக உள்ளது.

"சுழன்றுஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"[42]

என்னும் வள்ளுவர் வாய்மொழியும இதனை அரண்செய்து நிற்பது காணலாம். உண்மையில் பழந்தமிழர் கருத்தும் மேலைநாட்டார் கருத்தும் வேறுபாடுடையனவாகும். பழந்தமிழர் கருத்துக்களைப் பிற்காலத்தில் பிறநாட்டில் தோன்றிய கருதுகோள்களுடன் ஒப்பிடுங்கால் மிகுந்த கவனம் தேவை. ஆதம் சுமித்து கூறிய கோட்பாடுகள் நூற்றுக்கு நூறு தமிழ் அறிஞர்தம் கருத்துக்களுடன் பொருந்தும் என்று கொள்ளுதல் தகாது. இருசாராரும் உழு தொழில் அல்லாத பிற தொழில்கள்

42. குறள். 1031 முதல் 1040 முடிய.

புரிவோர் அனைவரும் ஒருவகையில் உழவரை நம்பி வாழ்கின்றவர்களே என்று உறுதியாக நம்பினர். ஆனால் நன்கு ஆராய்ந்தால் இருசாராரும் சிறிது வேறுபட்ட நிலையிலேயே சிந்தித்துள்ளனர் என்பது புலனாகும். பிரெஞ்சு நாட்டு இயற்கை நெறிக் கொள்கையினர் உழவுத் தொழில் ஒன்றுதான் உற்பத்திச் சாதனம் பிறதொழில்கள் எல்லாம் சார்புடையனவே என்று கருதினர். ஆனால் திருவள்ளுவர் போன்ற தமிழரறிஞர்கள் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டிருப்பினும் வாணிகம் போன்ற பிறவும் செல்வம் பெருக்கும் பொருளாதாரச் சாதனங்களே என்று கருதினர்.

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம்"[43]

என்று வள்ளுவரும்,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காயின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
. . . .
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"[44]

என்ற கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் பாடியுள்ள பாடற் கருத்துக்கள் உழவுடன் வணிகம் முதலியனவும் ஒரு நாட்டின் செல்வத்திற்கு இன்றியமையாச் சாதனங்கள் என்பதை வலியுறுத்துவது காணத்தகும். பிரெஞ்சு நாட்டுப் பொருளியல் வாதிகளைப் போல உழவு அல்லாத பிறதொழில்களைத் தமிழ்ச் சான்றோர் இகழ்ந்து ஒதுக்கினாரல்லர். இவ்வேறுபாடு உளங் கொள்ளத்தக்கது.

---

43. குறள். 120.
44. பட்டினப். 185–193.

தமிழரும் கிரேக்கரும்

தத்துவம், நீதி போன்ற துறைகளில் ஒன்றுபட்டு இருந்தாலும் பொருளாதாரச் சிந்தனையில் தமிழரும், கிரேக்கரும் பெரிதும் வேறுபட்டுள்ளனர். கிரேக்கச் சிந்தனை பற்றிய ஆய்வைப் பிளேட்டோ, அரிசுடாட்டில் காலத்திலிருந்து தொடங்க வேண்டியுள்ளது. ஏனெனில், இவர்களிருவரையும்தான், பண்டைய கிரேக்கச் சிந்தனை மற்றும் பண்பாட்டின், பெரிய சிந்தனையாளர்களும் சமூகத் தத்துவ அறிஞர்களும் ஆவர். முற்காணும் பக்கங்களில் பொருளாதாரம் குறித்த தமிழரின் சிந்தனை விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரக் களத்தில் பிளேட்டோ, அரிசுடாட்டில் ஆகியோரின் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆராயலாம்.

பிளேட்டோவின் கருத்துப்படி, அரசிற்கென ஒருவகைப் பொருளாதார மூலம் (Origin) உண்டு. பொருளாதாரப் பயன்களைத் துய்ப்பதற்கு இவ்வரசு அளவிற் சிறியதாய் இருத்தல் வேண்டும். அவர் ஒரு நிலையான அல்லது அசைவற்ற அரசை (Static state) விளக்கியிருக்கிறார்.[45] ஆனால் பண்டைத் தமிழரின் கண்ணோட்டத்தின்படி, அரசு என்பது இயங்கும் அல்லது மாறும் தன்மையதாகும். இதற்கெனத் தனித்த எல்லை வரையறைகள் இல்லை. பிளேட்டோ உறுதியான, நிரந்தரமான சாதி அமைப்பை வற்புறுத்தியுள்ளார். ஆனால், இப்போக்கு பண்டைத் தமிழ்ச் சிந்தனைக்கு முற்றிலும் புறம்பானது. பிளேட்டோவின் பொருளாதாரச் சிந்தனை இன, மதச் சார்பற்றதாக அமையவில்லை. மேலும், அனுபவ அறிவு வகையிலும் விளக்கப்படவில்லை.[46] இதற்கு மாறாகத் தமிழரின்

---

45. K.P. Bhatnagar & Satish Bhahadur, A History of Economic Thought, p.28.
46. Dr. B. Natarajan, Economic Ideas of Thiruvalluvar, p.42.

பொருளதார அணுகுமுறை, நீதி மற்றும் அறத்தை அடிப்படையாகக் கொண்டு இருப்பினும், நடைமுறைச் சாத்தியமானதாக அமைந்துள்ளது.

பிளேட்டோவின் மாணவரான அரிசுடாட்டிலும் சாதி அமைப்பினையும், அடிமைத்தனத்தையும் ஏற்றுக்கொண்டார். இவருடைய கருத்துப்படி, உழவர், வணிகர், கைவினைஞர், இழிதொழிலாளர் போன்றோருக்குக் குடிமக்கள் உரிமைகள் அளித்தல் கூடாது. ஏனெனில் இவர்களின் தொழிலைப் போலவே இவர்களின் பண்பும் தரக் குறைவானதாக இருக்கும்.[47] எனவேதான், ஒரு புகழ் பெற்ற பொருளாதார நிபுணர், 'அரிசுடாட்டிலுக்கு அடிமைத்தனம் மிக முக்கியமானது; சமத்துவமின்மை மிக இயல்பானது; ஏற்றத்தாழ்வு ஏற்புடையது; மக்களாட்சி முறை கிரேக்கர்களாகப் பிறந்தவர்களுக்கு மட்டுமே உரியது' எனக் குறிப்பிட்டார்.[48] ஆனால், பண்டைத் தமிழர்கள் இதற்கு நேர்மாறான கருத்துடையவர்களாய் வாழ்ந்தனர். அவர்களுக்கு, எல்லா மனிதரும் பிறப்பால் ஒத்த தன்மையினராவர். பிறப்பில் உயர்வு தாழ்வு இருப்பதாக அவர்கள் கருதவில்லை. செயற்கரிய செய்தவர் உயர்ந்தோராகவும், அங்ஙனம் செய்யாதவர் தாழ்ந்தவராகவும் கருதப்பட்டனர். யாதும் ஊரே; யாவரும் கேளிர் எனத் தமிழர் உணர்ந்திருந்தனர். அரிசுடாட்டில் உயர்குடியினர் பற்றி மட்டுமே எழுதினார். திருவள்ளுவர் மனித சமுதாயம் முழுமைக்கும் எழுதினார். எனவே, பொருளாதாரத் துறை குறித்த பழங்காலச் சிந்தனையில் கிரேக்கருக்கும் தமிழருக்கும் இடையே அடிப்படை வேறுபாடுகள் பல உள்ளன.

---

47. K.P. Bhatnagar & Satish Bhahadur: A History of Economic Thought, p.29.

48. Dr. B. Natarajan, Economic Ideas of Thiruvalluvar, p.42.

பழங்காலத்தில் (கி.மு. 400 - கி.பி.200) தமிழரின் பொருளாதாரச் சிந்தனைகளை இலக்கிய மூலங்கள் வாயிலாகவே தெரிந்துகொள்ள முடிகிறது. எனவே, ஆழ்ந்த ஆராய்ச்சியும் இன்றியமையாததாகிறது. பண்டைத் தமிழர்களின் பொருளாதாரச் சிந்தனைகள் இன்றைய பொருளாதாரச் சிந்தனைகளோடும் விதிமுறைகளோடும் தொடர்புடையனவாகத் தோன்றுவது குறிப்பிடற்குரியது. தமிழர்களின் பொருளாதாரச் சிந்தனையின் வழிகாட்டி அம்சமாக அறச் சிந்தனை விளங்கியது. பொருளீட்டுவதில் தமிழர் குறிக்கோளாய் இருந்தனர். வறுமையைச் சாபமாகவும் மனிதனால் ஏற்படுத்தப்பட்டதாகவும் கருதினர். இரத்தல் இழிவாகக் கருதி விலக்கப்பட்டது. செல்வர் பொதுமக்களைப் புரக்கும் புரவலராகவும் இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதுவே இன்றைய 'காந்தியப் பொருளாதாரத்தின் அறக்கட்டளைக் கொள்கை' (Trusteeship theory of Gandhian Economics) ஆகும். பொதுவுடைமைத்துவமும், சமதருமமும் இன்றைய பொருளாதாரக் கொள்கைகளாக உள்ளன. பண்டைக் காலத்தில், பொருளாதார வரையறைகளுக்குக் கட்டுப்படுவதும், அகிம்சை வழியில் பொருளாதாரச் சமத்துவத்தைப் பெற முயல்வதும், நியாயமான வழிகளில் பொருளீட்டுவதும் தமிழரின் இரத்தத்தில் ஊறிய சிந்தனைகளாய் இருந்தன. முதலாளித்துவ முறை காணப்பட்டாலும் அறம் வழுவிய இலாபமும் பதுக்கலும் சமூகக் குற்றங்களாகக் கொள்ளப்பட்டன. மனிதன் உண்ணவும் வாழவும் உரிமைகளைப் பெற்றான். காந்தியப் பொருளாதார அறிஞர்கள் இதனை 'உணவு - உழைப்புக் கொள்கை' என அழைப்பர். பழந்தமிழர் இயற்கை முறைக்கு ஏற்ற ஆட்சி வேண்டுமெனக் கருதவில்லை. ஆனால், வேளாண்மைக்கு அவர்கள் உரிய மதிப்பை அளிக்கத் தயங்கவும் இல்லை.

கவனத்தில் கொள்ளத்தக்கவை

நம்முடைய அன்றாடச் சிக்கல்களே நம்மைத் தொல்லைப் படுத்தும்போது, மிகப் பழங்காலத்தில் மக்களின் பொருளாதாரக் கருத்துக்களின் வரலாறு பற்றிய ஆய்வினை இப்போது நிகழ்த்த வேண்டிய தேவையும் நோக்கமும் யாது? என்ற வினா இச்சூழ்நிலையில் இயல்பாய் எழுதல் உண்டு. ஆனால், மனிதப் பொருளாதாரச் செயற்பாட்டுத் துறையில் ஏற்பட்ட கருத்துக்களில் வளர்ச்சியை அறிவது இன்றியமையாதது என்பதனைப் பின்வரும் காரணங்களால் தெளியலாம்:

1. கருத்துக்களும் கொள்கைகளும் மக்களின் வாழ்க்கையில் இன்றியமையா இடத்தைப் பெற்றுள்ளன. இவை, அரசியல், பொருள்ாதாரம் போன்ற துறைகளில் அடிப்படைக் கொள்கைகளை உருவாக்குவதில் ஆழமான தாக்கம் பெற்றுள்ளன. பண்டைத் தமிழர் மனத்தின் மேதைமையைப் பற்றிய உள்ளார்ந்த அறிவைப் பெற பழங்காலக் கருத்துக்களைப் பற்றிய முறையான பகுப்பாய்வு உதவுகிறது. இவ்வறிவு இக்காலத்திய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நமக்குப் பெரிதும் உதவுகிறது.

2. இக்காலத்திய பொருளாதார அறிஞர்கள் இவ்வாய்வின் மூலம் மன ஒழுங்கினைப் பெறுகின்றனர். இவ்வொழுங்கின்றி அறிவியற் சிந்தனையைப் பெற இயலாது.

3. இக்காலத்திய கருத்துக்கள் ஆராய்ச்சியாளர்களின் மனமென்னும் அடிவானத்தில் திடீரென உதித்தவை எனப் பலர் கருதுகின்றனர். இவ்வேளையில் பழங்காலத்தைப் பற்றிய ஆய்வு, இக்கருத்துக்கள் முற்காலத்தில் ஓர் அமைப்பிற்கு உட்படாத வகையில் வெளிப்படுத்தப்பட்டன என்பதனைப் புலப்படுத்துகின்றது. இக்காலத்திய கோட்பாடுகளைக் கருதப்படுவன வெல்லாம் பழங்கருத்துக்களின் விரிவாக்கங்களும் மறு பதிப்புகளுமேயாகும்.

4. இன்றைக்குப் பொருளாதாரத் துறை தனித்துறையாக சிறப்புநிலை பெற்று உள்ளது. இது மக்களின் நடப்பியல் வாழ்க்கைக்குத் தொடர்பில்லாத வகையில் வெறும் நுண்ணிலைக் கணக்குகளாகவும், புள்ளிவிவரங்களாகவும் விரைந்து வளர்ந்து வருகிறது. இது ஆபத்தானது. இதனைக் கட்டுப்படுத்தவும் உண்மையான நிலையைப் புரியவும் உதவும். எனவே, இத்தகைய ஆய்வுச் சிந்தனைகள் இன்றியமையாதன.

5. மனிதச் சிந்தனையின் ஓட்டத்திற்குப் பொருளாதாரக் கல்வி அளித்த - அளிக்கின்ற - கொடை பற்றிய அறிவை இன்றைய பொருளாதார மாணவன் அறிவதில்லை. இவ்வறியாமையைப் போக்குவதற்குக் காலந்தோறும் பொருளாதாரக் கல்வியின் வளர்ச்சி பற்றிய முறையான ஆய்வு உதவுகிறது.

6. கருத்துக்கள் பற்றிய ஆய்வு அவை தோன்றிய இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப இன்றைய பொருளாதார அறிஞர்களின் மனத்தில் நடப்பியல் உணர்வை ஏற்படுத்தும். இக்காலத்திற்குப் பொருந்தாமல் தவறாகத் தோன்றும் கொள்கைகள், சமூகம் தோன்றிய வரலாறு முதலியவற்றுடன் தொடர்புபடுத்தும்போது சரியானவை என்பதை அறிய உதவும். எனவே இடத்தோடும் காலத்தோடும் தொடர்புபடுத்தும் போதுதான் எந்த ஒரு கொள்கையும் சரியானது என்பதை உறுதிப்படுத்த முடியும்.

7. பண்டைக் காலத்தைப் பற்றிய ஆய்வு இத்துறை பற்றி மேற்கொண்டு சிந்திக்கவும் உதவுகிறது. பழங்காலத்துத் தவறுகளை நமக்கு உணர்த்தி, சரியான வழியைக் காட்டுகிறது.

3. பொருள் சார்ந்த வாழ்க்கை

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்பு சேர நாட்டையாண்ட இமயவரம்பனைப் பற்றிக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய பாடல்களிலிருந்து பண்டைத் தமிழ் நாட்டின் சமூக வாழ்க்கை நன்கறியப்படுகிறது. பண்டைத் தமிழகத்தின் சமூக இடைத் தொடர்பு, வாழ்வை இயக்கும் இரு சக்திகளான உண்மை, ஒழுக்க முறைமை ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டிருந்தது. மக்கள் சிந்தை, சொல், செய்கை ஆகியவற்றில் ஒழுக்கத்திற்கு முதலிடம் கொடுத்தனர்; அவர்கள் ஒருபோதும் தேவைகள் மிகுந்தவர்களாகவோ ஏழைகளாகவோ இருக்கவில்லை. அவர்கள் சூழ்நிலை காரணமாகத் தம் உற்றார், உறவினருடன் வாழ்ந்த உறைவிடத்தை விட்டு வெளியேற நேர்ந்ததில்லை. இயற்கையின் செழிப்பு என்றும் பொய்த்து அவர்களை ஏமாற்றவில்லை. அவர்களுடைய தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டதால், அவர்கள் மிக மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். அவர்கள் எவ்வித நோயாலும் அல்லலுறவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுடைய சிறந்த, ஒழுக்கம் மிகுந்த, அரசனும் அவர்களுடைய நலத்தைப் பேணுபவனாகவும், அவர்கள் உயிர் உடைமைகளைத் தன் முழுச் சக்தியுடன் காப்பவனாகவுமிருந்தான். நிலங்களிலிருந்து அள்ள அள்ளக் குறையாத செல்வம் கிடைத்ததால் அவர்களிடம் செல்வச் சேர்க்கை மிகுந்திருந்தது.[1] நகரங்கள் ஊக்கம் நிறைந்த மக்கள் கூட்டத்தைக் கொண்டிருந்தன. நகரங்களில் வாழ்ந்த வணிகர் பலரும் அரசனையும் விஞ்சும் செல்வம் படைத்தவராயிருந்தனர். அவர்கள் வாணிபத்தில் பெரும் வல்லுநராயிருந்தனர். வாழ்க்கையில் எல்லாச் சுகங்களையும் அனுபவித்துக்கொண்டு அரண்மனை போன்ற

---

1. பதிற்றுப். 15: 29–34.

பெரிய வீடுகளில் அவர்கள் வாழ்ந்தனர். பெரும் பணக்காரர்கள் தம் குழந்தைகளைப் பேணி வளர்க்கச் செவிலித்தாயார் என்றழைக்கப்பட்ட வளர்ப்புத் தாயாரை அமர்த்தியிருந்தனர்.[2] பெற்றோர்கட்கு நல்லமுறையில் இல்லற வாழ்வை நடத்த வேண்டிய அனைத்து வசதிகளும் இருந்தன.

சிறுநகரங்களிலும், கிராமங்களிலும் வாழ்ந்தவர்களின் வாழ்க்கையிலும் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. காடுகளால் சூழப்பட்ட ஒரு கிராமத்தில் திடீரென விருந்தினர் வந்து விட்டனராம். அவர்களுக்கு முயலின் ஊனாலான உணவை விருந்தாகப் படைத்தனராம். ஏனெனில், வலைகளை விரித்துக் காட்டுப்புறா முதலிய பறவைகளைப் பிடிக்க அவர்களுக்கு நேரமில்லை. காட்டுப்புறா முதலிய பறவைகளின் ஊன் சுவை மிகுந்ததாகக் கருதப்பட்டது.[3] இவ்வாறு இயற்கை அவர்கள் விருந்து படைப்பதற்குத் தேவையான உணவுகள் அனைத்தையும் அளித்தது. ஏழைப் பெண்கள் நூல் நூற்றுத் தம் வாழ்க்கையை நடத்தினர்.[4] இவ்வாறு நகர்ப் புறத்திலும், கிராமப் புறத்திலும் வாழ்ந்த மக்கள் நல்லிணக்கத்தோடு வாழ்ந்தனர். அவர்கள் வாழ்க்கை சூழ்நிலைக்குத் தக்கவாறு அமைந்திருந்தது. இனி அவர்கள் வாழ்க்கையை நிலத்தின் புவியியல் தன்மையோடு தொடர்புபடுத்தி ஆராயலாம்.

மலை சார்ந்த இடம் (குறிஞ்சி)

மலை வாழ் மக்கள் மூங்கிலின் உட்பாகத்தில் நெடுநாள் பாதுகாத்து வைத்திருந்த குளிர்ந்த கள்ளை அருந்தினர். வேங்கை மரத்தின் தண்ணிய நிழலில் அவர்கள் குரவைக் கூத்தாடி மகிழ்ந்தனர். பாறைகளில் தோண்டப்பட்ட குழிகளில் மூங்கிலரசியைப் பெய்து அதனைச் செம்மை செய்தனர். இவ்வாறு

2. பெரும்பாண். **248–252.**
3. புறம். **319.**
4. புறம். **326.**

மூங்கிலரிசியைக் குற்றுவதற்கு அவர்கள் உலக்கையாக யானையின் நீண்ட தந்தங்களைப் பயன்படுத்தினர். சேம்பின் பெரிய இலைகள் கதிரடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன.[5] ஐவனம் எனப்பட்ட ஒரு வகை நெல்லை அறைக்கச் சந்தன மரக்கட்டையிலிருந்து தயாரித்த ஆயுதத்தை சில பெண்கள் உபயோகித்தனர்.[6]

காடும் காடு சார்ந்த இடமும் (முல்லை)

முல்லை நிலத்து ஆநிரை மேய்ப்பவர்கள் கார் காலத்தில் கொட்டும் மழையைப் பொருட்படுத்தாது அவற்றைக் காத்தனர். அவர்கள் தம் தோள்களில் தொங்கிய உறிகளில் பால் பானைகளையும், தோல் பையில் உணவையும் சுமந்து சென்றனர். மூங்கினாலாகிய வேய்ங்குழலில் பாட்டிசைத்து அவர்கள் அங்குமிங்கும் உலவித் திரிந்தனர்.[7]

ஆயர்கள் தாம் பசுவினிடமிருந்து பெற்ற பாலைத் தம் உறைவிடங்களுக்கு அண்மையில் வாழ்ந்தவர்களிடம் விற்றுப் பொருளீட்டினர். அவர்கள் ஆநிரை மேய்க்கக் காட்டிற்குச் சென்றபோது தீ மூட்டுவதற்காக மரச் சுள்ளிகளைக் கொண்டு சென்றனர். பனை ஓலையினால் வேயப்பட்ட கூடைகள் அவர்களுடைய பின்புறத்தே தொங்கின. அவர்கள் கையில் கோணலான மரக் கோலொன்று இருந்தது. நிரையை விட்டுப் பிரிந்து செல்லும் பசுக்களைத் திரும்ப ஈர்க்க அவர்கள் வாயால் ஒலியெழுப்பினர்.[8] இலந்தை மரங்களால் சூழப்பட்ட வீடுகளில் வசித்த இம்மக்கள் பாலில் வேக வைத்த வரகு அரிசிச் சோறும், தேனும் கொண்டு சென்றனர். விருந்தினர் வந்தால், உறவினர் அனைவரும் அழைக்கப்பட்டு முயலின் ஊனிலிருந்து பெறப்பட்ட அறுசுவையுணவு படைக்கப்பட்டது.[9]

---

5. கலி. 41.
6. கலி. 43.
7. கலி. 106.
8. நற். 142.
9. புறம். 34.

வயல் நிலப் பகுதி (மருதம்)

வயல் நிலப்பகுதி, மற்றவற்றை விடச் செழிப்பு மிகுந்ததாயிருந்தது. நெய்தல், ஆம்பல் முதலிய களைகளைப் பெண்டிர் நிலங்களிலிருந்து நீக்கினர். அவர்கள் கூந்தலில் இலைகளைச் சூடினர். நீர் நிரம்பப் பெற்ற வயல்களில் மலங்கு எனப்படும் மீனினம் பரந்து துள்ளி விளையாடியது. குளங்களிலும், குட்டைகளிலும் பிடிக்கப்பட்ட வாளை என்னும் மீனால் ஆக்கப்பட்ட உணவையுண்டு அவர்கள் வயிறு நிறைந்திருந்தனர். தெங்கிய நீரைப் பருகி, தேங்காயையுண்ட சிறார்கள் அம்பாரம் போல் குவிக்கப்பட்டிருந்த நெல் மேலேறிப் பனம்பழத்தைப் பறிக்க முயன்றனர்.[10] இப்பகுதியில் வாழ்ந்த செல்வந்தர்களின் வாழ்க்கையைப் பற்றிப் பின்னர்க் காணலாம்.

கடலும் கடல் சார்ந்த இடமும் (நெய்தல்)

மீனவரிடையே அரசனோடு ஒப்பிடத்தக்க அளவு செல்வம் பெற்றவர் வாழ்ந்தனர். முத்துக் குளிப்பவர்கள் தினந்தோறும் முத்துச் சிப்பியைப் பெறப் போட்டியிட்டனர். அவர்கள் கடலினின்றும், சிறிய, பெரிய பல முத்துக்களைக் கொண்டு வந்து அவற்றைத் தம்முள்ளே பங்கிட்டுக் கொண்டனர். அவர்கள் தம்மை நடத்திச் செல்ல ஒரு தலைவனையும் தேர்ந்தெடுத்தனர்.[11]

மணற் பரப்பான இடம் (பாலை)

இப்பகுதி ஆறலைக் கள்வர் என்றழைக்கப்பட்ட வலிமை மிகுந்த கொள்ளையர்களை மிகுதியாகக் கொண்டிருந்தது. இந்நிலப்பரப்பு வாரப்படாத சடையுடன் கூடிய தலைமயிரை உடையவரும், புலியைப் போன்று கொலை வெறி மிகுந்தவரும் ஆகிய இம்மக்கள், இரை தேடும் விலங்குகள் போன்று கையில் வில்லும், அம்பும் கொண்டு திரிவர். வழிப் போக்கர்கள், தாம்

10. புறம். 61.
11. அகம். 280.

கைப்பொருநர் ஏதும் கொண்டு செல்லாவிடினும், இவ்வாறலை கள்வர் அவர்களைத் துன்புறுத்தி இன்பமடைவர். இவர்களுக்கு இரக்கக் குணம் சிறிதும் கிடையாது. பறவைகள்கூட இவர்களைக் கண்டு பயந்து இவர்களிருக்கும் பக்கம் பறக்க அஞ்சும்.[12] இவ்விடத்திலிருந்த, காய்ந்துபட்டுப் போன ஒரு வேப்பமரத்தின் உச்சிக் கிளையில் பருந்து மட்டும் கூடு கட்டும். அப்பறவையும் தன் குஞ்சுகளோடு இரை கிடைக்காமல் பசி மிகுந்ததாயிருக்கும். மறவரினக் குழந்தைகள் சிலர் இம்மர நிழலில் நெல்லிக் காயைக் காயாக வைத்துப் பாண்டி என்னும் விளையாட்டை விளையாடுவர்.[13] பருவ மழை பொய்த்ததால் மக்கள் குட்டையில் தேங்கியிருக்கும் கலங்கிய நீரையும் பயன்படுத்துவர். மறவர்கள் இந்நிலத்தில் மரநிறத் துணியணிந்து அம்பராத் துணியுடன் திரிவர். கொள்ளையர்கள் இந்நிலத்தில் உள்ள சிக்கல் மிகுந்த வழியைக் கண்டு மகிழ்வர். அவ்வாறிருப்பதால்தான், வழிப்போக்கர்கள் வழியை மறந்து வேறு வழியிற் சென்று கொள்ளையர் வலையில் சிக்கித் தம் பொருநர் அனைத்தையும் இழப்பர். கொள்ளையர் மழை பொழிந்து நாடு செழிக்க வேண்டுமென்று என்றும் இறைஞ்சுவதில்லை.[15]

இந்நிலத்தில் வாழ்ந்த வேடர்கள் தமக்குதவக் கொடிய வேட்டை நாய்களைக் கொண்டு செல்வர். அவர்களுடைய முதல் இலக்கு மான்; அவற்றின் ஊனைத் தம் உறைவிடத்திற்குக் கொண்டு வருவர். அறுவடைக் காலத்தில் அவர்கள் நிலப்பகுதிக்குச் சென்று நெல் முதலியவற்றை உழவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெறுவர். அதே போன்று இடைப் பெண்டிரும் தாம் கொண்டுவந்த தயிரை விற்ற பிறகு அக்கலம் நிரம்ப நெல்லைச் சுமந்து செல்வர்.[16] இவ்வாறு உழவர்கள் மற்ற நில மக்களோடு நல்லிணக்கத்துடன் வாழ்ந்து அவர்களுக்கு உற்றுழி உதவுவர்.[17]

---

12. கலி. 4.
13. நற். 3.
14. ஐங். 363.
15. அகம். 193.
16. புறம். 33.
17. குறள். 1032.

வளம்

பண்டைத் தமிழகம் அளவிடமுடியாத இயற்கை வளமும் பொருநர் வளமும் பெற்றுத் திகழ்ந்தது. சிலப்பதிகாரம் மதுரையை "தேவர்கோனான இந்திரனுடைய செல்வங் களனைத்தும் குவிந்த நகரம்" என்று வருணிக்கிறது.[18] குறுங்கோழியூர் கிழார் சேர நாட்டுப் பெருமையைப் பற்றிக் கூறும்போது, 'அது இந்திர லோகத்தைப் போன்று செல்வம் மல்கிய நாடு" என்கிறார். அவர் மக்கள் எல்லா வளங்களும் பெற்றுள்ளதைக் கண்டு மிக மகிழ்வெய்துகிறார்.[19] முதலில் நாட்டின் இயற்கை வளத்தைக் கண்டறிதல் மிக்கப் பயனுள்ளதாயிருக்கும்.

இயற்கைச் செல்வம்

வேண்டியவெல்லாம் தரும் பாரியின் மக்கள், பறம்பு மலையில் வாழ்ந்தனர். அவர்கள் தற்சார்பு மிகுந்த மக்கள் கூட்டத்தினராயிருந்தனர். அவர்களுடைய மலை அவர்களுக்கு வேண்டிய இயற்கை வளங்கள் எல்லாவற்றையும் கொண்டிருந்ததால் அவர்கள் பொருளியல் முறையில் எவருக்கும் கட்டுப்பட்டிருக்கவில்லை. மூங்கிலிலிருந்து பெறப்பட்ட அரிசி, பலாப்பழம், கொடிவள்ளி என்னும் கிழங்கு, தேன் ஆகியவை அம்மலையின் எல்லாப் பகுதிகளிலும் நிறைந்திருந்தன. இயற்கை தானாக முன்வந்து இவ்வளங்களை அளித்ததால் அங்கு வாழ்ந்த மக்கள் உழைத்து அவற்றைப் பெறவேண்டிய அவசியம் இருக்கவில்லை என்று கபிலர் கூறுகிறார்.[20] வானத்தில் உள்ள விண்மீன்களைப் போன்று எண்ணிறந்த பல சுனைகள் பறம்பு மலையெங்கும் காணப்பட்டன.[21] இதைப் போன்று மற்ற

---

18. சிலப். ஊர்காண். *68-69*.
19. புறம். *22*.
20. புறம். *109*.
21. புறம். *328*.

மலைப்பரப்புகளும் செழிப்பு மிகுந்திருந்தன. இம்மலையின் சரிவுகள் எல்லாம் தினை என்னும் தானியம் விளையும் வயல்களைத் தன்னகத்தே கொண்டிருந்தன. மரங்கள் எல்லாம் தேனடைகளை மிகுதியாகக் கொண்டிருந்தன.[22] சேவலும் கோழியும் வீட்டின் கொல்லைப்புறத்தே குவிக்கப்பட்ட குப்பையைக் கிளறும்போது, தங்கத் துகள்கள் அவற்றினிடையே ஒளி வீசின.[23] சங்க நூல்கள் பலவும் நாட்டின் பாறை மிகுந்த பகுதிகளில் தங்கமும், மணியும் மற்றும் இரத்தினக் கற்களும் கிடைப்பதைப் பற்றிப் பரக்கப் பேசுகின்றன. ஒரு வீரன் தான் போரிட்டுக் கொன்ற யானையின் தந்தத்தைக் கொண்டு அதை மண்வாரியாகப் பயன்படுத்தித் தங்கத்தைத் தோண்டியெடுக்க முயன்றான். தங்கத்தோடு அவனுக்கு விலைமதிப்பற்ற இரத்தினக் கற்களும் கிடைத்தன. அவனுடைய முயற்சியில் தந்தம் இரண்டாக உடைந்து அதனுள்ளேயிருந்து முத்துக்கள் பனிக்கட்டி உருண்டைகளைப் போன்று வெளியே கொட்டின. இவ்வாறு அவ்வீரன் தன் ஒரே முயற்சியில் பெற்ற தங்கம், இரத்தினக் கற்கள், முத்துக்கள், உடைந்த யானைத் தந்தம் ஆகியவற்றை அவன் காட்டில் வெட்டி வீழ்த்திய சந்தனக் கட்டைகளோடு சுமந்து செல்கிறான்.[24] பழைய இலக்கிய நூல்கள் முத்துக்கள் பலவகையில் பெறப்பட்டன என்று கூறுகின்றன. அவற்றில் கடல் வாழ் சிப்பியிலிருந்து பெறப்பட்ட முத்து, குறிப்பாகக் கொற்கைக் கடற்கரையில் கிடைத்தது சிறப்பானதாகக் கருதப்பட்டது மட்டுமின்றிப் பெருமைப்படத்தக்கதாயிருந்தது. மதுரை நகரக் கடைகளில் பலவகை சங்குகளும், கடல்வாழ் உயிரினங்களின் கூடுகளும், முத்துக்களும், தானியங்களோடு விற்கப்பட்டன. கடைவீதி, தங்கம், இரத்தினங்களை தத்திப் பதித்துத் தலைப்பெய்த பல அணிகலன்கள் நிரம்பப்பெற்ற

22. நற். 328.
23. நற். 389.
24. அகம். 282.

கடைகளை உடையதாக இருந்தது. கொற்கைக் கடற்கரையெங்கும் முத்துக்கள் நிறைந்த சிப்பிகள் அலைகளால் ஒதுக்கப்பட்டிருந்தன. கடற்கரையில் ஓடித் திரியும் குதிரைகட்கு இம்முத்துக் குவியல்கள் மிகுந்த இடர்விளைவித்தன என்று கவிஞர்கள் கூறுகிறார்கள்.[25] கொற்கையையாண்ட பாண்டிய மன்னனின் நாட்டில் தங்கமும், முத்தும் மிகுந்து கிடந்தது. அரசனைச் சுமந்து செல்லும் யானையில் முகபடாமும், ஆடையும் தங்கத்தால் வேயப்பட்டிருந்தன.[26]

நிலங்களின் ஒரு பகுதியில் மக்கள் விதைகளை விதைத்துக் கொண்டிருந்தனர். இன்னொரு பகுதியில் விளைந்த பயிரை அறுத்துக் கொண்டிருந்தனர். மக்கள் விதைகளை நிரப்பிக் கொண்டுவந்த கலத்தில் அறுவடை செய்த தானியத்தை நிரப்பிக்கொண்டு சென்றனர்.[27] சங்க நூல்கள் அனைத்தும் கொள்ள மாளாத செல்வத்தைக் கொண்டிருந்த சோழ நாட்டின் வளத்தைப் பற்றிப் பரக்கப் பேசுகின்றன. சோழ நாடு, சோறுடைத்து என்னும் மூதுரைக்கேற்ப நெல்வளமும், நீர்வளமும் மிகுந்திருந்தது.[28] அறுவடை செய்த நிலங்களின் அருகே குவிக்கப்பட்ட வைக்கோற் போர்கள் மலையைப் போன்று உயரம் மிகுந்திருந்தன. எல்லா வீடுகளும் 'சாலி' என்னும் நெல்வகையால் நிரப்பப்பட்ட மூடைகளை உடையவை யாயிருந்தன. காவிரியாற்றில் ஊட்டப்படும் இந்நாட்டு நிலம் ஒரு வேலி, ஆயிரம் கலம் நெல் விளையக்கூடியதாயிருந்தது. சோழநாடு செழிப்பானதாயிருந்ததில் வியப்பேதுமில்லை.[29] ஒரு புலவர் அந்நாட்டு வீடுகளின் அடுக்களைகளினின்றும் சோற்றிலிருந்து வடித்த கஞ்சி ஆறாகப் பெருகியோடியதாகக் கூறுகிறார். வீதிகளில் தேர்கள் விரைந்தோடும்போது

25. அகம். 130.
26. அகம். 201.
27. ஐங். 3.
28. அகம். 201.
29. பொருநர். 242–248.

அவற்றாலெழுந்த புழுதியில் உலர்ந்த கஞ்சியும் மேலே சென்று வீட்டு மாடங்களில் படிந்ததாம்.[30] வயல்களில் நெற்பயிர்கள் கரும்பைப் போன்று உயர்ந்திருந்தன. நெல் தவிர, கரும்பும் நீர், நிலவளம் குறைவற்றிருந்ததால் எல்லாக் காலத்திலும் பயிர் செய்யப்பட்டது.[31] ஆகவே, கரும்பும் எல்லாக் காலத்திலும் அறுவடை செய்யப்பட்டது. கரும்பாலைகள் பல மிகுந்திருந்தன.[32] அவற்றிலெழும் ஒலி சிங்கத்தால் தாக்கப்பட்ட யானைக் கூட்டம் தம் துதிக்கைகளை எழுப்பிக் கூவும், காது செவிடுபடும் ஒலியை யொத்திருந்தது. அவ்வாலைகளிலிருந்து எழும் புகை கருமேகங்களைப் போன்று வான் முழுவதும் பரந்திருந்தது. இப்புகையினால் புதிதாய் மலர்ந்த நெய்தற் பூக்களும் கருநிறம் பெற்றுக் காட்சியளித்தனவென்று கவிஞர்கள் கூறுவர். இனி, இவ்வாறு செழிப்புற்றிருந்த நகரத்தின் பல பகுதிகளின் நிலையினைக் கண்டறியலாம்.

இடங்கள்

மீனைக் கொடுத்துப் பண்டமாற்றாகப் பெறப்பட்ட நெல் மூடைகள் அளவற்றிருந்தன. எல்லா வீடுகளிலும் மிளகு மூடைகள் பல வரிசைகளாக அடுக்கப்பட்டிருந்தன. கப்பல்களில் கொண்டுவரப்பட்ட தங்க மூடைகள் எங்கும் நிறைந்து கிடந்தன. இவ்வாறாகத் துறைமுக நகரமான முசிறி வருணிக்கப்படுகிறது. முசிறியையாண்ட குட்டுவன் தன்னை நாடி வந்தோர்க்கெல்லாம், தனக்கு மலையும், கடலும் அளித்த செல்வங்களை வாரி வழங்கினான். அரசனும் மக்களும் கள்ளை மிகுதியாகக் குடித்தனர்.[33] வைகையாற்றில் குளிக்க வரும் செல்வம் மிகுந்தவர்கள் தாம் அணிந்திருந்த அணிகலன்களைக் கழற்றி வைத்துவிட்டு வேறு அணிகலன்களை அணிந்தனர். ஆற்றில்

30. பட்டினப். 43–47.
31. பதிற்றுப். 30.
32. பட்டினப். 8–12.
33. புறம். 343.

குளிக்கக் குதிரைகளிலும் யானைகளிலும் வரும் இம்மக்கள் தாம் குளிப்பதற்கெனத் தனித்துறையைத் தேர்ந்தெடுப்பர். அவர்கள் தம்முடன் பன்னீர், புனுகு கரைத்த நீர் ஆகியவற்றால் நிரப்பப்பட்ட கலன்களையும், நீர் விளையாட்டிற்கான அலங்கரிக்கப்பட்ட படகுகளையும் கொண்டு வருவர்.[34] ஒரு புலவர் மழலை பேசும் குழந்தைகளின் வாயினின்றும் பெருகிய உமிழ் நீரால் நனைந்த ஆடை, அணிகலன்களைப் பற்றி விவரித்துள்ளார்.[35] அவர்கள் நெற்றியில் சூடிய பல அணிகலன்களுடன் தலையில் முத்து மாலையையும் அணிந்திருந்தனர். அவர்களுடைய ஆடை மலரைப் போன்று மென்மையானது; அது ஒலி எழுப்பும் சிறு மணிகளைக் கொண்டு புனையப்பெற்று அவர்களுடைய உடலினின்றும் தொங்கியவாறிருந்தது.[36] சிறுதேர் உருட்டி விளையாடும் அவர்கள் செவிலித் தாயாரையும், உணவையும் மறந்து அதில் ஈடுபட்டனர். அவர்கள் முருகக் கடவுளைப் போன்று ஒளி வீசுபவராயிருந்தனர்.[37] செல்வர்களின் உறைவிடம் அழிவற்ற செழிப்பிற்கு எடுத்துக்காட்டாய் இலங்கிற்று. அவை கொள்ளக் கொள்ளக் குறைவற்ற உணவும், போதைப் பொருளும் கொண்டிருந்தன.[38] அவர்களுடைய படுக்கையறைகள் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தன. இரு கட்டில்களை ஒன்றாய் இணைத்து, அவற்றின்மீது மென்மையான நீலநிறப் படுக்கைகள் விரிக்கப்பட்டிருந்தன. படுக்கைகளும், தலையணைகளும், அன்னத்தின் மெல்லிய இறகுகளால் நிரப்பப்பட்டிருந்தன.[39] அவ்வறைகளில் வைத்திருந்த குடிநீர்க் கலன்கள் தங்கத்தாலாகியவை.[40] இவ்வாறு படுக்கையறைகள்

---

34. பரி. 6.
35. கலி. 81.
36. கலி. 81.
37. கலி. 81.
38. மதுரைக். 210–216.
39. கலி. 72.
40. கலி. 51.

அவர்களுடைய செல்வச் செழிப்பைப் பறைசாற்றின. செல்வர்கள் வீட்டுத் திருமண நிகழ்ச்சியில் வெளிப்படுத்தப்பட்ட ஆடம்பரம் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கிருந்தது. கோவலன் - கண்ணகி திருமணத்திற்காக அலங்கரிக்கப்பட்ட மணமேடையைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். முத்துக்கள் பல அம்மேடையின் மேற்கட்டி முழுவதும் தொங்கவிடப்பட்டிருந்தன. அம்மேற் கட்டியைத் தாங்கி நின்ற தூண்கள் முழுவதிலும் வைரங்களும், இரத்தினங்களும் பதிக்கப்பெற்றிருந்தன.[41] அக்காலப் புலவர்கள் இவ்வாறு கொள்ள மாளாச் செல்வம் பெற்றிருந்தவர்களைச் சக்கரவர்த்திகளுக்கும்,[42] அரசர்களுக்கும்[43] அடுத்தப்படியாகக் குறிப்பிடுகின்றனர். அவர்களிடம் அரசரும் கண்டு பொறாமை கொள்ளத்தக்க புரவிகளிருந்தன.[44] திருமணத்தின்போது பெண்களுக்குப் பிறந்த வீட்டுச் செல்வமாக அவர்கள் பெரிய தேரையுமளித்தனர்.[45] தங்க வளையல்களணிந்த மணப் பெண்களும் செல்வச் செழிப்புடன் காணப்பட்டனர். அவளைச் சுற்றிப் பாங்கியர் கூட்டம் அவளிடும் கட்டளைகளை நிறைவேற்றக் கூடியிருந்தது. சிறு குழந்தையாயிருந்தபோது அவள் பாலில் வேக வைத்துத் தேன் கலந்த உணவையுண்டாள். அப்போது தனக்கு உணவூட்டிய செவிலித் தாயாரை விட்டு ஓடி முற்றத்திலிருந்த பந்தலின் நிழலில் ஒளிந்துகொண்டாள். அவளை விரட்டிச் சென்ற செவிலித்தாயார் தம் கைகளில் வைத்திருந்த மலர்க் கற்றைகளால் சூழப்பெற்ற சிறு கோலைக் கொண்டு அவளைப் புடைப்பதாகப் பயமுறுத்தினர். இவ்வாறு மணப்பெண் சிறுமியாயிருந்தபோது தன் கால்களில் அணிந்திருந்த சிறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஓடியாடிய விளையாட்டுகள் எண்ணிறந்தவை.[46]

41. சிலப். மங்கல. 48–49.
42. சிலப். ஊர்காண். 1–21.
43. சிலப். அடைக். 109–110.
44. நற். 81.
45. நற். 308.
46. நற். 110.

அரசரும் அவரளித்த கொடைகளும்

செல்வர்கள் வாழ்வே இவ்வளவு சிறப்பானதாயிருந்தால், அரசர்களைப் பற்றியும் அவர்களுடைய வாழ்க்கை முறைகளைப் பற்றியும் கூற வேண்டியதேயில்லை. ஒரு கவிஞர், அரசன் ஒருவன் நாடோறும் அழகிய நங்கையர் தங்கத்தாலான கிண்ணிகளில் ஊற்றித்தர அதனைப் பருகினான் என்று கூறுகிறார்.[47] அரசன் மதுவை நாடோறும் காலையில் அருந்திவிட்டு மிக மகிழ்ச்சியோடு அரசவைக்குச் செல்கிறான். அவன் தனது அவையில் பாடும் பாணருக்கும், கவிஞருக்கும் தேர், தங்கம் மற்றும் பல செல்வங்களை வாரி வழங்குகிறான்.[48] அவன் தனது வள்ளன்மை, பெருந்தன்மை ஆகியவையால் கிடைக்கும் புகழை விரும்புகிறான்.[49] இவ்வாறாகப் பண்டைத் தமிழர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவும், தம் செல்வத்தை இல்லாதவர்க்கும், அல்லலுற்றவர்க்கும் வாரிக் கொடுப்பதே தம் வாழ்வின் கொள்கையாகக் கொண்டவராகவும் வாழ்ந்தனர். அவர்களின் கொடைப் பண்பே இவ்வுலக வாழ்வில் சிறந்த கொள்கை; அது மறுவுலக வாழ்விற்கு எதிரிடையானதா யிருந்தாலும் குற்றமில்லை என்று எண்ணினர்.[50] இவ்வாறு பண்டைய மன்னர் சிறந்த கொடையுள்ளம் படைத்திருந்தது தமக்கென வாழாது பிறர்க்கென முயலும் பொது நலப் பண்புடையவராயிருந்ததால்தான். அவர்களுடைய இரக்க சிந்தை குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் நலம் பயக்காது எல்லாருக்கும் பயன்பட்டது. அவர்கள் அனைவருக்கும் வாரி வழங்கினர். அவர்கள் ஏழைகள் படும் துன்பத்தைக் கண்டு பொறாது அவர்களுக்குப் பேருதவி புரிந்தனர்.[51] அவர்கள் மனித நேயம் மிக்கவராயிருந்ததால்

---

47. புறம். 56.
48. புறம். 123.
49. குறள். 231.
50. குறள். 222.
51. புறம். 141.

தாம் செய்யும் உதவிக்கு மறு உதவி எதிர் பாராது, மறுவுலகில் நற்கதியைப் பெறுவதையும் சிந்தையில் கொள்ளாது உதவினர்.[52] அவர்கள் தமக்குக் கிடைத்த செல்வமனைத்தும் இறைவன் பிறர்க்கு உதவுதற்காகக் கொடுத்ததென எண்ணினர்.[53] மெய்த்திரு அவர்க்குக் கிடைத்ததற்காக மகிழ்ந்தாரில்லை. அத்திருவைப் பிறர்க்குக் கொடுத்துப் பிரிந்ததற்காக வருந்தினாரில்லை. ஏனெனில் அவர்களுக்கு ஏழைகளுக்குதவும்போது மேலும் மேலும் உதவ வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது.[54] எத்தகைய உயரிய வாழ்க்கையைப் பண்டைத் தமிழரசர்கள் வாழ்ந்து காட்டியுள்ளனர். இக்கொள்கைகளை கைவிட்டு மக்கள் எவ்வாறு கிரழிந்துவிட்டனர்! ஒரு தமிழ் மன்னன் கௌரவர் நூற்றுவர், பாண்டவர் ஐவர் சேனைகளுக்கும் பாரதப் போர் நடந்தபோது உணவளித்திருக்கிறான்.[55] பாணரோ, ஏழைக் கவிஞரோ அரசனைக் காணச் சென்று பொருளுதவி பெறாது திரும்பியதில்லை. அரசர்கள் அளித்த கொடை அவர்களை ஆச்சரியப்படச் செய்யவில்லை. ஆனால் அது அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாயிருந்தது. ஏழைகளுக்குப் பரிசுகள் எதிர்பாராத விதத்தில், புதையல் கிடைப்பதைப் போன்றிருந்ததில்லை. அரசன் அளித்த பரிசுகள் எதிர்ப் பார்த்தவைதாம்; ஆனால் அவர்கள் அவை எதிர்பார்த்ததைவிட அதிகமாயிருந்தன.[56] ஏனெனில், அவ்வண்ணம் அவர்க்குதவுவதை அரசன் தன் கடமையாகக் கருதினான். அக்கால அரசர்கள் எண்ணிலடங்காத தங்கும் விடுதிகளைக் கட்டி அவற்றிற்கு மானியங்களும் அளித்திருந்தனர்.[57] ஏழைக் கவிஞர்களோ, குறைகளுடையவர்களோ தம்மை நாடி வரவில்லை என்றால் அரசர் அவர்களைத் தமது தேரை அனுப்பி அழைத்து வந்து, விருந்தளித்து, மகிழ்வுடன் உரையாடி

52. புறம். 134.
53. புறம். 189.
54. பதிற்றுப். 61: 11-12.
55. புறம். 2.
56. புறம். 70.
57. அகம். 168.

அவர்கட்குப் பரிசுகள் பல அளித்துத் திருப்பியனுப்புவர்.[58] அவர்களுடைய அன்பைப் பறைசாற்ற இதைவிட வேறென்ன வேண்டும்? பத்துப் பாடல்களைப் பாடியதற்காகக் குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவருக்கு உம்பர்க்காட்டில் ஐந்நூறு இடங்களையும், தெற்கிலிருந்து தனக்குக் கிடைத்த வருவாயில் ஒரு பகுதியையும் அளித்தாகக் கூறப்படுகிறது.

நார்முடிச் சேரல் என்னும் இன்னொரு மன்னன் நாற்பது இலட்சம் தங்கக் காசுகளையும், தன் நாட்டில் ஒரு பகுதியையும் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவருக்குப் பதிற்றுப் பத்தில் நான்காவது பத்துப் பாடல்களைப் பாடியதற்காகப் பரிசளித்தான். செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் இன்னொரு மன்னன் நன்றா என்னும் குன்றின் மீதேறித் தன் கண்ணில்பட்ட நாடனைத்தையும், பத்தாயிரம் தங்கக் காசுகளையும் கபிலருக்கு அவருடைய ஏழாவது பத்துப் பாடல்களுக்குப் பரிசாக அளித்தான். அரசர்கள் அளிக்கும் பரிசுகள் எல்லையற்றன வாயிருக்க ஏழைகள் இறையருள் நிரம்பப் பெற்றவராயிருந்திருக்க வேண்டும்.

ஆகவே நாடு குறைவற்ற வளமுடையதாய் எல்லாச் செல்வங்களும் பெற்றிருந்ததால் மன்னர்களும் அன்புடையவர் களாகவும், கொடை வள்ளல்களாகவும் திகழ்ந்தார்கள். மக்களும் அயராது பாடுபட்டுக் காடு கொன்று நாடாக்கி நகரங்களை அமைத்துக் குளங்களை வெட்டினார்கள்.[59] சுருக்கமாகக் குறிப்பிடுவதானால், பண்டைத் தமிழ்நாடு எண்ணமுடியாத அளவிற்குப் பொருநர் வளம் பெற்றிருந்தது. இருந்தபோதிலும், மக்கள் வறுமையில் வாடிய காலங்களும் உண்டு. மேலே கூறியவற்றால், மக்கள் தேவையுடைவராயிருந்தனர் என்பது நம்ப முடியாததாயிருக்கிறது. ஆனால், பொருளாதார நிலையில்

58. பதிற்றுப். 55: 10-12.
59. புறம். 14.

ஏற்றத் தாழ்வுகளாலும், பருவமழை பொய்த்ததாலும் நாட்டில் வற்கடம் ஏற்பட்டு மக்கள் சொல்லொண்ணாத் துயரை அனுபவிக்க நேர்ந்தது. இனிவரும் பகுதிகளில் பண்டைத் தமிழகத்தில் ஏழை மக்கள் எவ்வாறு துயருற்றிருந்தனர் என்பதைக் காணலாம்.

வறுமை

நிலம் செழுமையுற்றிருக்கப் பருவமழையே பெரிதும் துணை புரிந்தது. பருவமழை பொய்த்தபோதெல்லாம் நிலமும் வளம் குன்றியிருந்தது. ஓர் உழவர் இவ்வாறு புலம்புகிறார்: 'இன்றும் வருவது கொல்லோ, நெருநலும் கொன்றது போலும் நிரப்பு'[60] கோடைக்காலம் நீடித்திருந்தால் அது வற்கடம் தோன்றுவதற்கு அறிகுறியாகும். உழவர்கள் வேலையின்றிச் சோம்பி வீட்டிலிருப்பர்.[61] இத்தகைய நேரத்தில்தான் அரசர்கள் அமைத்த அறச்சாலைகள் மக்களுக்குத் தேவையானவற்றை அளிக்கும். மக்கள் தலைவர்களும் தம்மாலியன்ற அளவு துன்பம் நீக்க உதவுவர். அறச்சாலைகளினின்றும் மக்கள் உணவுப் பொட்டலங்களைப் பெற்று சாரிசாரியாகத் திரும்புவர். பசித்தவர்கள் செல்வர்கள் வீட்டிற்கும், ஈகைத் திறமுடையோர் இல்லங்களுக்கும் உதவி நாடிச் செல்வர்.[62] செல்வர்கள் வீட்டில் நாடோறும் ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது. இவ்வாறு உணவு பெறுவோர் குருடர்கள், செவிடர்கள், முடவர்கள், வயதான ஆதரவற்றர்கள், நோயாளிகள் ஆகியோராவர்.[63] பாலை நிலத்தில் உள்ள ஆறலைக் கள்வர் பெருவழிகளிற் செல்லும் மக்களைத் தாக்கி அவர்களுடைய பொருளைக் கொள்ளையடிப்பர்.[64] பாலை நிலத்தின் இயல்புகளை விளக்கும்போது இக்கள்வரைப் பற்றி முன்னரே கூறப்பட்டிருக்கிறது. மருத நிலத்தில் வாழ்ந்த சிலரும்

---

60. குறள். 1048.
61. அகம். 42.
62. புறம். 173.
63. மணி. 13: 111-113.
64. கலி. 15.

இரத்தலைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவ்வாறு இரந்தவர்கள் அதனைத் தொழிலாகக் கொண்டவராகவோ, உலக வாழ்வைத் துறந்து வறுமையை விரும்பி ஏற்றுத் தவவேடம் கொண்ட ஆண்டிகளாகவோ இருப்பர். அவர்கள் வீடுதோறும் சென்று உணவை இரந்து நிற்பதில்லை. ஆனால் ஒரே வீட்டிலேயே இரந்து நின்று உணவைப் பெறுவர்.[65] திருவள்ளுவர் இவ்வாறு இரந்து வாழ்வதைக் கடுமையாகச் சாடியிருக்கிறார். 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்' என்கிறார் வள்ளுவர்.[66] இவ்வாறு இயற்கை அளித்த செல்வம் குறைந்தபோது மக்கள் சிக்கனத்தைக் கடைபிடித்துத் தேவைகளைச் சுருக்கி வாழ வேண்டுமேயல்லாது இரத்தற் தொழிலை மேற்கொள்ளக்கூடாது. உண்மை வீரர்க்கழகு வறுமையோடு போர் தொடுப்பதேயல்லாது அதற்குப் பணிந்து போவதன்று.[67]

பருவ மழை பொய்த்தலும் வற்கடமும்

பண்டைத் தமிழர் பருவ மழையையே தமது செல்வச் செழிப்பிற்கு நம்பியிருந்தனர். மழை அதிகமாகப் பெய்தால் வெள்ளம் பெருகிச் சேதமேற்படும். மழை பொய்த்தால் அதைவிட அதிகச் சேதமேற்படும். இவ்வாறு மழை ஆக்கல், அழித்தல் என இருவகையிற் செயல்படுகிறது.[68] இடைவிடாத மழை கார், கூதிர் இரு காலங்களிலும் பொழியும். இதன் காரணமாகக் குளிர் தோன்றும். இக்காலங்களில் ஆடு, மாடுகளை மேய்ப்பவர்கள் அவற்றை வெள்ளத்தினின்றும் காப்பாற்ற உயரமான பகுதிகளுக்கு இட்டுச் செல்வர். பகற் பொழுதிலும் குளிர் அதிகமாயிருப்பதால், அவர்கள் தீயை மூட்டிக் குளிர்காய்வர். மழையில் அதிகமாக நனைந்த பறவைகள் பறக்க முடியாமல் மரக்கிளைகளினின்றும் கீழே

65. குறுந். 277.
66. குறள். 1062.
67. நற். 110.
68. குறள். 15.

விழும். விலங்குகளும் இரையைத் தேடிச் செல்லாது தம் மறைவிடங்களிலேயே இருக்கும். குரங்குகள் நடுநடுங்கியிருக்கும். தம் மடியிற் பால் குடிக்க வரும் கன்றுகளைத் தாய்ப்பசு உதைத்து விரட்டும். மலைகள் கூடக் குளிரின் மொத்த இருப்பிடமாக மாறுமளவிற்கு மழை இடைவிடாது பெய்கிறது.[69] இவ்வாறு அதிக மழையால் வாடும் மக்கள் இறைவனைக் குரவை என்னும் கூத்தாடித் துதிப்பர்.[70]

இப்போது மழை பொய்த்துப் போவதால் மக்களுக்கேற்படும் துன்பங்களைக் காணலாம். கோடைக்காலம் நீடித்தால் மலைகளின் பாறைகள் அனலின் இருப்பிடமாயிருக்கும். காடுகளும் மரங்களும் வறண்டு வாடியிருக்கும். குளங்களும் குட்டைகளும் நீரின்றி இருக்கும்.[71] நீருற்றுகளும் வற்றி ஓடைகளின் பரப்புகளும் கொளுத்தும் வெய்யிலால் எரிக்கப்பட்டது போலிருக்கும்.[72] நெல்வயல்களில் உள்ள மணிக்கதிர்கள் தேவைக் கதிகமான வெயிலால் கருகியது போலிருக்கும். மக்கள் இதன் பின்விளைவுகளை எண்ணி நடுங்கிக்கொண்டு காத்திருப்பர்.[73] வறட்சி நிலைமை இவ்வாறு நீடிப்பதை அவர்கள் விரும்பமாட்டார்கள். பாண்டிய நாட்டில் ஒரு முறை பன்னிரெண்டு ஆண்டுகள் பஞ்சம் தலைவிரித்தாடியது.[74]

மழையின்மை தவிர வற்கடம் தோன்ற வேறொரு காரணமுமிருந்தது. அரசர்களுக்கிடையே போர்கள் நிகழ்ந்த போது, வென்ற அரசன், தோற்ற அரசனுடைய நாட்டைச் சூறையாடி, பயிர்களை அழித்து, நிலங்களுக்குத் தீயிட்டுச் செல்வதுண்டு. பழைய தமிழ் நூலான தொல்காப்பியமும், தோற்ற நாட்டின் பொருநர்களைக் கொண்டுசெல்வதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பாரியின் பறம்பு மலையில் ஒரு சிறுகுளம்

---

69. நெடுநல். *1–12.*
70. புறம். *143.*
71. புறம். *174.*
72. புறம். *224.*
73. நற். *22.*
74. மணி *14: 53–54.*

தோண்டப்பட்டது. கபிலர், சந்திரனின் பிறை போன்று தோற்றமளித்த இக்குளம் பாரியின் காலத்திற்குப் பிறகு அழிக்கப்பட்டுவிடுமே என்று அஞ்சினார்.[75] ஒரு அரசனின் படைகள் நாட்டைக் காக்கவோ அல்லது அழிக்கவோ கூடும்.[76] முதலில் தோற்ற அரசனுடைய கோட்டை கொத்தளங்கள் அழிக்கப்பட்டு அங்குள்ள விளை நிலங்கள் கழுதைகளைக் கொண்டு உழப்படும். விளைநிலங்களும் அவற்றின் மீது குதிரை பூட்டிய இரதங்களை ஓட்டிச் செல்வதால் பயனற்றதாக ஆக்கப்படும்.[77] "தாங்கள் அணிந்துள்ள மலர்மாலைகள், தாங்கள் எரிக்கும் பகையரசரின் நகரத்துத் தீயின் தழலாலும் பகையாலும் வாடட்டும்" என்று ஓர் அரசனை நோக்கிப் புலவர் ஒருவர் பாடுகிறார்.[78] பகையரசனின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது வழக்கமான செயல்.[79] தோற்ற அரசனின் குடிகள் நகரத்தைக் காலி செய்தபோது வென்ற அரசனின் வீரர்கள் அவற்றின் காவலை ஏற்றுக்கொண்டனர்.[80] அமைதி திரும்பிய பிறகே மக்கள் நகரத்துக்குத் திரும்புவர். இவ்வாறு அரசர்களிடையே தோன்றிய பகைப்போருக்கு வித்திட்டுப் பொருளாதார அழிவிற்கு வழிகோலியதால் மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

ஏழைக் கவிஞர்கள்

கோடைக் காலம் பல மாதங்கள் நீடித்திருந்ததால் அது நாட்டில் பஞ்சம் தோன்றச் செய்கிறது. இச்சூழ்நிலையைப் பற்றிப் பல புலவரும் வருணித்துள்ளனர். ஆனால், அவர்களுடைய வருணனை சிறிது மிகையானது என்பதில் ஐயமில்லை. இருந்தபோதிலும் சங்கநூல்களில் இத்தகைய வருணனை சிறிது

75. புறம். 118.
76. பெரும்பாண். 422–423.
77 புறம். 15.
78. புறம். 6.
79. புறம். 7.
80. நற். 153.

மிகையாக இருந்தாலும் உண்மை நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, இவற்றில் காணப்படும் துயரச் சம்பவங்கள் பலவும் புலவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்தவை என்றெண்ண இடமளிக்கின்றன.

'ஆற்றுப்படை' என்னும் ஒருவகைப் புறத்துறையுள்ளது. இது புலவர்களைப் போற்றும் புரவலர்களின் புகழ் பாடுவது. பொதுவாக இத்தகைய பாடல்களில் அரசன் ஒருவனிடம் பெரும் பரிசு பெற்று வரும் புலவன், வறுமையில் வாடும் மற்றொரு புலவனுக்கு ஆறுதல் கூறித் தான் பரிசு பெற்ற அரசனிடம் சென்று பரிசு பெறுமாறு அறிவுரை கூறுவது மையக் கருத்தாயிருக்கும். இதனையே ஆற்றுப்படுத்துதல் என்பர். புலவன் முதலில் தனக்குப் பரிசளித்த அரசனின் அருமை, பெருமை, செல்வச் செழிப்பு ஆகியவற்றைக் கூறிப் பிறகு துயருற்றிருக்கும் தன் நண்பனின் தேவைகளை விவரிப்பான். புரவலர்களின் கொடைப்பண்பை முற்றிலுமாகப் பயன்படுத்திக் கொள்ள வறுமையைப் பற்றி திரும்பத்திரும்பக் கூறப்படுகிறதோ என்று தோன்றுகிறது. எண்ணம் யாதாயினும், இத்தகைய பாடல்கள் "ஆற்றுப்படை" என்னும் பாடல் வகைக்கு வழிவகுத்தன.

புலவரின் வறுமை உலகறிந்த ஒன்றாயிருந்தது. பாணர் எனப்படுவர்கள் தம் தலையில் பூச்சூடக்கூட முடியாத அளவிற்கு ஏழையாயிருந்தனர்.[81] ஒரு முறை ஔவையார் நாஞ்சில் வள்ளுவன் என்பவனிடம் சிறிது சிவப்புப் பருப்பைக் கேட்டாராம். வேகவைத்த கீரையுடன் கலப்பதற்காக அதனைக் கேட்டாராம். ஆனால் செல்வம் மிகுந்த அப்புரவலனோ ஒரு பெரிய யானையை ஔவையாருக்குப் பரிசாக அளித்தானாம்.[82] இரப்பவர் எவரும் இவ்வளவு பண்புடன் நடந்து கொண்டதுமில்லை; கொடையளிப்பவரும் இவ்வளவு தாராளமாக இருந்ததுமில்லை. சில புலவர்களின் பாடல்களில் வறுமையைக் காட்சி மனத்தை உருக்கும் விதத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

---

81. குறுந். 19. 82. புறம். 140.

ஒரு புலவர் வறுமையின் மறுவடிவாய்த் தன் சுற்றமும் சூழலுமாகவிருக்கிறார். பல நாட்களாக உணவு கிடைக்காத அவரும், அவருடைய சுற்றத்தினரும் மெலிந்து போயிருக்கின்றனர். அவர்கள் தமக்கு உணவளிக்கும் வாய்ப்பைத் தரும் யாழையும் வெறுக்கின்றனர்.[83] சில பாணர்களின் கைகளில் மிக அருமையான 'யாழ்' என்னும் கருவிகள் உள்ளன. ஆனால், அவர்கள் நைந்து கிழிந்த, அழுக்கடைந்த ஆடையை அணிந்துள்ளனர். அவர்களுடைய முகங்கள் வெளிறிப் போயுள்ளன. ஆனால் அவ்வாடைகளையும் வேறு ஆடைகள் இல்லாததால் அவர்கள் போற்றிப் பாதுகாக்க வேண்டியுள்ளது.[84] அவர்களுடைய சிக்கடைந்த தலைமுடி முழுவதும் பேன் நிரம்பியுள்ளது. அவர்கள் காடுகளின் வழியே நகரங்களுக்குச் செல்லுகையில், கொள்ளையர் துன்புறுத்துகின்றனர். மரங்களிலிருந்து குரங்குகள் குதிப்பது போல் குதித்து அவர்களைத் தாக்கி, அவர்கள் வைத்திருக்கும் பொருளை அபகரித்துச் செல்கின்றனர்.[85]

இன்னொரு காட்சி: ஒரு கவிஞனின் ஏழைத் தாய் கையில் கோலூன்றியிருந்தாலும் வீட்டின் முற்றத்தைத் தாண்டிச் செல்ல முடியாதபடி தெம்பின்றிக் காணப்பட்டாள். அவள் தன்னைத் தானே நொந்துகொண்டு, தன்னை இந்நிலைமையினின்றும் விடுவிக்கச் சாவு வராதா என்று ஏங்குகிறாள். வெள்ளை நூலைப் போன்று தொங்கும் அவளுடைய முடியிலிருந்து அவளுடைய துன்பத்தையும் முதுமையையும் அறிய முடிகிறது. பல குழந்தைகளைப் பெற்றெடுத்த அவன் மனைவியோ சமீபத்தில்தான் ஒரு மகவை ஈன்றவள் - மிகவும் களைப்படைந்து காணப்படுகிறாள். சத்தான உணவையும் கொள்ளாத காரணத்தால் சுருங்கிப் போயுள்ள அவளுடைய முலையினின்றும் பால் சுரக்காததால் பச்சிளங் குழந்தைக்குப்

---

83. புறம். 68.
84. புறம். 69.
85. புறம். 136.

பாலூட்ட முடியவில்லை. அவளும் தன் விதியை நொந்து கொள்கிறாள். அன்று அவள் சிறிதளவு கீரையைத் தான் சமைத்திருக்கிறாள். அதில் உப்புக் கூடச் சேர்க்க முடியவில்லை. அரிசியும், மோரும் கூட அவளுக்குக் கிடைக்கவில்லை. அவளுடைய ஆடையும் அழுக்கடைந்துள்ளது. இத்தகைய வறுமை நிலையில் துயருறும் அவள் இறைவனையே சபிக்கிறாள்.[86]

மற்றுமோர் காட்சி: இங்கேயும் கவிஞனின் வீடு சித்திரிக்கப்படுகிறது. உண்ண எதுவுமில்லாததால் குடும்பத் தலைவி என் செய்வதென்று திகைத்து நிற்கிறாள். அவள் பாலூட்டும் குழந்தைக்குப் பால் சுரக்காததால் குழந்தை அழுகிறது. சமையலறைக்குக் கஞ்சியைத் தேடிச் செல்லும் அக்குழந்தை அதுவும் கிடைக்காததால் மேலும் அழுகிறது. குழந்தையின் அழுகையை எவ்வாறேனும் நிறுத்த விரும்பும் தாய், "புலி வருகிறது" என்று பயமுறுத்துகிறாள். அதுவும் பயன் தராததால் குழந்தையை உச்சி முகந்து, அணைத்து, "இங்கே பார், குழந்தாய்! உன் தந்தை எவ்வாறிருப்பார்? கூறு" என்கிறாள். இதுவும் குழந்தையின் அழுகையை நிறுத்தவில்லை. இவ்வாறு ஏழைத் தாய் தன் வீட்டில் துயருற்றிருக்கிறாள்.[87] இன்னொருத்தி, அதே போன்று குழந்தைக்குப் பாலூட்ட முடியாமலிருக்கிறாள். குழந்தை அழும்போது அத்தாய் தானும் அழுதவாறே கவிஞனின் முகத்தை நோக்குகிறாள். இவ்விருவர் துயரத்தையும் காணச் சகியாத கணவன் ஒரு புரவலனைத் தேடிச் செல்கிறான்.[88] இன்னொரு குழந்தை தாய்ப்பால் என்றாலென்ன வென்பதையே அறியாமலிருக்கிறது. தாய் துயருற்று வீட்டின் ஒரு மூலையில் இறந்து கிடக்கும் எலியினின்றும் வரும் நாற்றத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் முடங்கிக் கிடக்கிறாள்.[89] இன்னொரு புலவர் வீட்டில் பிறந்து கண்திறவாத நாய்க்குட்டிகள் சமையலறையில்

---

86. புறம். 159.
87. புறம். 160.
88. புறம். 164.
89. புறம். 211

குடியிருக்கின்றன. வீட்டிலுள்ளவர்கள் உணவளிக்காததால் உணவருந்தாத அந்தத் தாய் நாய் தன் குட்டிகளுக்குப் பால் கொடுக்க முடியவில்லை. சமையலறையில் அடுப்பு மூட்டிப் பல நாட்களாகிவிட்டன. ஆகவே, சமையலறையிலேயே நாய் வாசம் செய்கிறது. வீட்டின் கூரை மிகவும் மோசமாகி விழும் நிலையிலுள்ளது. வீட்டின் மண் தரை மிகவும் மோசமடைந்துள்ளது. வீட்டின் தலைவி உபயோகமற்ற கீரையைப் பறித்துவந்து, உப்புக் கூடப் போடாமற் சமைத்து அதனை எல்லோருக்கும் அளிக்கிறாள். தன்னுடைய வீட்டின் வறுமை நிலைமையைப் பிறர் காணப் பொறாத அத்தலைவி வீட்டின் கதவைச் சாத்துகிறாள்.[90] பண்டைத் தமிழ்நாட்டில் புலவர்களின் நிலைமை இவ்வாறு ஏன் மோசமாயிருந்தது என்பதை ஆராயலாம்.

முன்னர்க் கூறியபடி, பல மாமன்னர்களும், குறுநில மன்னர்களும், கொடை வள்ளல்களும் ஏழைப் புலவர்கட்கு வாரி வழங்கினர். ஆனால் அவர்கள் அனைவரும் வறுமையில் வாடுபவர்கட்கு உதவ எண்ணினர். ஆகவே அவரிடம் உதவி வேண்டிச் சென்ற புலவர்கள் தம்முடைய வறுமை நிலையை மிக வருணித்துப் பாடினர். இத்தகைய "செழுமையிடையே வறுமை" என்னும் நிலையை எவ்வாறு விவரிக்க முடியும்?

இரத்தல் இழி செயலென்றெண்ணப்பட்டது என்பதில் ஐயமேதுமில்லை. இவ்வாறு ஒருவன் இரக்கும்போது அவனுக்கு இல்லையென்பது கொடிய செயலென்று கருதப்பட்டது. ஒருவருக்குப் போதுமென்னுமளவிற்கு உதவுவதே பெரிய செயலாகக் கருதப்பட்டது. இவ்வாறு உதவி கிடைக்கும்போது அதை மறுத்தல் நன்றன்று என்று கருதபபட்டது. தன்னுடைய சொந்த பலத்தையே ஒருவன் நம்பியிருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.[91] பண்டைத் தமிழர்களின் நிலையை ஆராயப்புகும் முன்னர், இத்தகைய ஒழுக்கநெறிகளை எல்லாரும் கருத்தில் கொள்ளவேண்டும்.

---

90. சிறுபாண். 130140.   91. புறம். 204.

பழங்காலப் புலவர்களின் அறிவுடைமையை நன்கறிந்திருந்த புரவலர்கள் அவர்கள் மீது பெருமதிப்பு வைத்திருந்தனர். பரிசை எவரேனும் விருப்பமின்றிக் கொடுத்தால் அதனை வேண்டாமென்று மறுக்குமளவிற்குப் புலவர்கள் மனத்திண்மையுடையவராயிருந்தமைக்கு எடுத்துக்காட்டுகள் பலவுண்டு. அன்றியும் அகம்பாவத்துடன் புரவலர் கொடுத்தால் அதனையும் புலவர்கள் பெறமாட்டார்கள். ஒரு யானையைப் பரிசாகக் கொடுத்தபோது அதனை வேண்டாமென்று புலவர் ஒருவர் மறுத்தாராம்.[92] புரவலர்கள் புலவர்களின் பெருமையை அறிந்து உண்மையான மதிப்போடு அளித்த பரிசுகளையே புலவர்கள் ஏற்றுக்கொண்டனர். புலவர்களைப் புரவலர்கள் நேரில் வந்து வரவேற்று உள்ளத் தூய்மையோடு புகழ வேண்டும். இவ்வாறு பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்பொருநர் வாதிகளாகப் பிறரளிக்கும் பொருட்களை எவ்வாறேனும் பெற வேண்டுமென்றெண்ணியதில்லை.[93] அவர்கள் சுயமரியாதையுடைய பெருந்தன்மையாளராகவும், விசால நோக்கும், சகிப்புத் தன்மை மிகுந்தவர்களாகவுமிருந்தனர். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்பதைத் தமது வாழ்க்கை நெறியாகக் கொண்டிருந்தனர். அவர்கள் வாழ்ந்தவிடத்திலிருந்து தொலை தூரத்து ஊர்களுக்கு "யாதானும் நாடாமல், ஊராமால்" என்ற கூற்றின்படி செல்வம் மல்கிக் கிடக்கும் ஊர்களையும், அவ்வூர்ப் புரவலர்களையும நாடிச் சென்றனர். அரசியல் கட்டுப்பாடுகள் அவர்களுக்கு என்றும் தடையாயிருந்ததில்லை. அவர்கள் பெற்ற பரிசுகளும், செல்வமும் உற்றார் உறவினர்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டன. நாளைக்கு நமக்கு வேண்டுமென்றெண்ணாது, அவர்கள் தமது அன்றையத் தேவைக்கு அதிகமானவற்றை மற்றவர்களுக்குத் தாராளமாகப் பகிர்ந்தளித்தனர். அவர்கள் விரும்பியதெல்லாம், அரசர்களும் புலவர்களும் அவர்களுடைய திறமையைப் போற்ற

---

92. புறம். 159. 93. புறம். 208.

வேண்டுமென்பதுதான்.[94] குமணன் என்னும் கொடை வள்ளலிடம் தான் பரிசு பெற்றுத் திரும்பியதும், பெருஞ் சித்திரனார் என்னும் புலவர் தன் மனைவிக்குக் கூறியது இங்கே நினைவுகூறத்தக்கது. "குமணன் அளித்த பரிசுகளையெல்லாம் உனதருமை நண்பர்கள், நம் உறவினர்கள், உன் நன்மையை நாடுவோர், அண்டை அயலார் ஆகியோருடன் பகிர்ந்து கொள். எல்லோருக்கும் பசியாறும் வரை உணவு கொடு. உனக்குக் கடந்த காலத்தில் பணம், பொருநர் முதலியவற்றைக் கடனாகக் கொடுத்தவர்களுக்கும் எனது தலையசைவிற்காகக் காத்திராது வேண்டுமளவும் பொருநர் கொடு. நானும் அதே அளவிற்குப் பொருநர் கொடுக்க உதவு. எல்லாப் பொருளையும் நாமே எதிர்காலத் தேவைகளுக்காக வைத்துக்கொள்ள வேண்டும் என்றெண்ணாதே.[95] இவ்வாறு பாணரும், புரவலரும் மற்றவர் களுக்கு உதவ வேண்டும் என்னும் சீரிய எண்ணமுடையவரா யிருந்தனர். அவர்கள் செல்வராயிருந்தபோது, வறுமை வருமே என்றெண்ணவில்லை. ஒரு நிலையான பொருளாதாரத் தன்னிறைவு தேவை என்று அவர்கள் நினைக்கவில்லை. தமக்குத் தேவை ஏற்பட்டால் புரவர்கள் உதவுவார்கள் என்று அவர்கள் எண்ணினர்.[96] ஆகவே, பொருளாதாரப் பாதுகாப்பின்மை என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவேயில்லை; அல்லது பொருளாதார நிலைத்த தன்மை அவசியமென்று அவர்கள் கருதவில்லை. அவர்கள் செல்வம், மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ உதவக்கூடியதென்றெண்ணினார் களேயன்றி அதுவே முடிவானதென்று கருதவில்லை. எனவே, மேலும் மேலும் செல்வம் சேர்க்க வேண்டுமென்றோ அதைத் தமது வருங்காலத்திற்குப் பதுக்கி வைக்க வேண்டுமென்றோ எண்ணவில்லை.

அடுத்ததாக வறுமையின் கொடுமையைப் பற்றிப் பாடுவது கவிதை மரபு என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

---

94. புறம். 47.
95. புறம். 163.
96. புறம். 206.

புலவர்களிற் சிலரே வறுமையில் வாடியிருந்தனர். புலவர்கள் பலரும் வேறு தொழில்களில் ஈடுபட்டுக் கண்ணியமாக வாழ்ந்தனர். சில புலவர்கள் அரசர்களாகவும் கோலோச்சினர். வேறு சிலர் கொடை வள்ளல்களாகவுமிருந்தனர். சிலர் பெரிய நிலக்கிழார்களாகவும், சிலர் பரம்பரைச் செல்வர்களாகவு மிருந்தனர். பண்டைத் தமிழ்நாட்டில் செல்வர்களாயிருந்த ஆண்களும் பெண்களும் பாடிய பாடல்கள் பலவுள. பல பாணர்கள் உழவுத் தொழிலிலும் வணிகத்திலும் ஈடுபட்டிருந்தனர்.[97] எனவே பண்டைக்கால கவிதை மரபுப்படி, தமிழ்ப் பாடல்களில் வறுமையைச் சித்திரித்திருப்பது மிகையானது என்று தோன்றுகிறது.

உணவுப் பழக்கங்கள்

பண்டைத் தமிழர் பலரும் ஊனை உண்டு வாழ்ந்தவர்கள். கபிலரைப் போன்று அந்தணர் என்று கூறப்பட்டவர்கள்கூட ஊனுணவை வெறுத்தாரல்லர்; அதை மிகவும் விரும்பினார்கள். ஆனால் திருவள்ளுவரைப் போன்ற சான்றோர் ஊன் உண்பதை வெறுத்தது மட்டுமின்றி அது பாவச் செயலென்றே கருதினர். ஊனுணவை ஒதுக்குவது மற்ற அறச்செயல்களான, உயிர்க் குறுகண் செய்யாமை, அன்பு, கொடைத்தன்மை, அருளுடைமை ஆகியவற்றிற்கு வழி வகுக்கும் என்றெண்ணினர். "உண்ணாமை வேண்டும் புலாஅல், பிறிதொன்றன் புண்ணது உணர்வார்ப் பெறின்" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.[98] விருந்துகள் எல்லாவற்றிலும் பலவ்கை விலங்குகளின் ஊனிலிருந்து பெறப்பட்ட உணவு படைக்கப்பட்டது. சங்ககாலத்தில் நடந்த திருமணமொன்றில் படைக்கப்பட்ட விருந்தைப் பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. விருந்தினருக்கு நெய்யும், பருப்பு வகைகளும் கலந்த வெண்பொங்கல் பரிமாறப்பட்டதாம்.[99]

97. புறம் (முன்னுரை, டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் பதிப்பு)
98. குறள். 257. 99. அகம். 86, 136.

நடுத்தர வர்க்கத்தினரும் செல்வரும்

புதிதாக மணமான பெண்ணொருத்தி தயிரையும் சோற்றையும் கலந்து கொண்டிருக்கும்போது தனது மார்பினின்றும் நழுவிய சேலையைச் சீர்செய்து கொள்கிறாள். அவள் சமையலறையில் புகுந்து அடுப்பினின்றும் எழும் புகை கண்ணிலெரிச்சல் உண்டாக்குவதையும் பொருட்படுத்தாது தனது வேலையில் ஈடுபடுகிறாள். இவ்வாறு அவள் சுவையான புளியஞ்சோற்றை ஆக்குகிறாள். அவள் கணவன் அவ்வுணவைச் சுவைத்துச் சாப்பிட்டு அதன் சுவைக்காக அவளைப் புகழும்போது, அவள் முகத்தில் மகிழ்ச்சி படருகிறது.[100] இன்னொரு பெண் வாழைத் தண்டை அரிந்து அதை உணவாக ஆக்கிக் கொண்டிருக்கிறாள். மற்றொரு பெண் தன் வீட்டிற்கு வந்த விருந்தாளிகட்கு ஊன் துண்டத்தை நெய்யைத் தடவி வறுத்துக் கொடுக்கிறாள். சமையலறையிலுள்ள புகையினால் அவளுடைய கண்கள் சிவந்திருக்கின்றன.[101] மக்கள் மலையிலோ கடலிலோ வேட்டையாடச் சென்றபோது தம்முடன் பலவகை உணவுப் பொருட்களைக் கொண்டு சென்றனர்.[102] செல்வர்கள் பலவகை உணவுகளை, குறிப்பாக ஊன் கலந்த சோற்றைப் பெரிதும் விரும்பியுண்டனர். இதுவே கோட்டைகளைத் தாக்கும் படை வீரர்களும் விரும்பிய உணவாகும்.[103] அக்காலப் புலவர்களுக்கும் ஊன் கலந்த சோறு அளிக்கப்பட்டது. அவர்களும் இவ்வுணவையும் கள்ளையும் விரும்பினர். அவர்கள் மிதமிஞ்சிய அளவில் உண்ணவும், குடிக்கவும் செய்தனர்.[104]

உயர்குடிப் பிறந்த பெண்ணொருத்தி பலவகை உணவு வகைகளை வெறுத்து, ஒரு கோப்பைப் பால் மட்டும் பருக விரும்பினாள். செவிலித்தாய் பால் கொண்டுவந்து கொடுத்த

100. குறுந். 167.
101. நற். 41.
102. பரி. 10: 101–106
103. பதிற்றுப். 45.
104. பதிற்றுப். 12.

போதில் அதில் சிறிதே அவளால் பருக முடிந்தது. மீதியை வேண்டாமென்று கொடுத்தாள்.[105] அழகிய தங்கத் தட்டுகளும் கோப்பைகளும் செல்வர்களால் பயன்படுத்தப்பட்டன. ஒரு பெரிய தட்டு முழுவதும் சோறால் நிரப்பப்பட்டு வைக்கப் பட்டிருந்தது பற்றிய குறிப்பொன்று காணப்படுகிறது. அது முழுநிலவு விண்மீன்களால் சூழப்பட்டிருப்பதுபோல் தோன்றியது.[106] உணவருந்தும்போது களியாட்டங்கள் நடைபெறும். உணவுக்கூடம் முழுவதும் மகிழ்ச்சியும் சிரிப்பும் கூத்தாடும். பெருங்குடி மக்கள் ஏற்பாடு செய்த விருந்துகளில் ஆடுகள் கொல்லப்பட்டு அவற்றின் இறைச்சி மலைபோல் குவித்து வைக்கப்பட்டுப் பலவகை உணவுடன் சேர்த்துப் பெருமளவில் பரிமாறப்படும். கண்ணாடிக் குப்பிகளில் கள் தாராளமாகக் கொடுக்கப்படும்.[107]

வந்த விருந்தினர்கள் புலால் உண்ணாதவர்களாயிருந்தால் மரக்கறி உணவு வகைகளை கொணரப்பட்டு உற்சகாத்துடன் பரிமாறப்படும். கோவலனும் கண்ணகியும் மதுரையில் மாதரி என்னும் இடைப்பெண் வீட்டிற்குச் சென்றபோது, கிடைக்கக்கூடிய காய்கறிகள் அனைத்தும் சமைக்கப்பட்டு, விலையுயர்ந்த பழ வகைகளுடன் பரிமாறப்பட்டன. அவர்களுக்காகச் சமைக்கப்பட்ட அரிசி 'சாலி' என்னும் உயர்ந்தவகை அரிசியாகும்.[108]

இனங்கள்

கடற்கரையில் வாழ்ந்த மீனவர்களும் அவர்களுடைய தலைவர்களும் தாம் பிடித்த மீன்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். ஒரு மீனவத் தலைவன் தன்னுடைய கூட்டத்தினர் கடலிற் பிடித்த அயிரை மீன்களைத் தன் இனத்தவரோடு பகிர்ந்து கொண்டான்.[109] முல்லை நிலத் தலைவனொருவன்

105. குறுந். 356.
106. புறம். 160.
107. புறம். 113.
108. சிலப். கொலை. 24–28.
109. அகம். 70.

குடிசைகளில வாழ்ந்த தன் இனத்தவரோடு தன்னிடமிருந்த கள் முழுவதையும் பகிர்ந்து கொண்டான். அக்கள் வெகுகாலம் பெரிய சாடிகளில் நிலத்திற்கடியில் புதைத்து வைக்கப் பட்டிருந்தது. அவனுடைய மனைவி சோற்றுடன் நெய்யில் வறுத்த அவரை விதைகளைக் கலந்து அதனை எல்லோருக்கும் அளித்தாள்.[110]

குறிஞ்சி நிலத் தலைவனொருவன் தன்னுடைய நிலத்துப் பயிரைத் தன் கூட்டத்தோடும் அழித்துவந்த பெரிய பன்றியை அம்பெய்து கொன்றான். அவனுடைய மனைவி அப்பன்றியின் உடலைக் கூறுகள் போட்டு அவற்றை அண்டை வீட்டாருக்கு அளித்தாள்.[111] இன்னொரு பெண் தன் கணவன் வேட்டையாடிக் கொண்டுவந்த ஆண் பன்றியின் இறைச்சியை மற்றவர்களுக்குக் கொடுத்தாள்.[112] இதனால் பண்டைத்தமிழர் இயற்கை தமக்கு அளவற்ற வகையிற் பொருளைக் கொடுத்ததால் அதனை வருங்காலத்திற்காகச் சேமித்துவைக்க வேண்டுமென்ற எண்ணமின்றியிருந்தனர் என்பது பெறப்படுகிறது. அவர்கள் தம்மிடமிருந்த உணவு முழுவதையும் மற்றவர்க்கு அளித்தனர்.

ஏழை மக்கள்

நான்கு நில மக்களும், தாம் வசித்த இடங்களில் கிடைத்த உணவை உண்டு வாழ்ந்தனர். முல்லை நிலத்தில் வாழுமொருவன் தன் கையிலிருந்த கூரிய ஆயுதத்தால் உடும்பைக் கொன்று அதனை எடுத்துச் செல்கிறான். வீட்டிற்குச் செல்லும் வழியில் அவன் சில காட்டு அணில்களையும் பெருமளவில் ஈசல்களையும் பிடிக்கிறான். ஈசல்கள் வாழும் நிலத்தைத் தோண்ட அவன் மண்வெட்டியைப் பயன்படுத்துகிறான். அவன் முயல்களையும் கொன்று எல்லாவற்றையும் எடுத்துச் செல்கிறான்.

---

110. புறம். 120.
111. நற். 336.
112. நற். 85.

அவன் வீடு சென்றடைந்தவுடன், எல்லாவற்றையும் கீழே வீசி விட்டு, நிறையக் கள்ளைக் குடித்துத் தன் களைப்பைத் தீர்த்துக் கொண்டு நினைவிழந்து கிடக்கிறான்.[113] மருத நிலத்தில் வாழும் தொழிலாளரும் ஈசலை உண்ணுவர். அவர்கள் புளியஞ் சோற்றில் ஈசலையும் வெண்ணெயையும் கலந்துண்பார்கள்.[114] கதிர் முற்றிய வயல்களைக் காக்க வருபவர்கள் மீனைப் பெரிதும் விரும்பியுண்பர். அவர்கள் நிரம்பக் கள்ளையும் இனிய தேங்காயையும் விரும்பியுண்பர்.[115] வேறுசில வேலையாட்கள் நண்டைப் பிடித்து அதனை வறுத்துப் பிறகு ஆமையின் ஓட்டில் மோதி உடைத்து எடுத்துச் செல்வர்.[116] மருத நிலத்து மக்கள் பெருமளவில் மீனையும் அரிசியையும் விரும்பியுன்பர்.[117] மாட்டிடையர்கள் தம்மிடமுள்ள பால் நிரம்பிய பானைகளை மற்றப் பொருட்களைப் பெற பண்டமாற்றுச் செய்துகொள்வர்.[118]

அரண்மனை

இளவரசர் மற்றும் அரச குடும்பத்தினர் தாம் விரும்பியுண்ட உணவு, மது வகைகள் அவர்களுடைய செல்வச் செழிப்பிற்கும் உணவு சுவைப்புத் தன்மைக்கும் சான்று பகர்கின்றன. பல பெண்டிர் தம் கைகளில் ஒளிவீசும் வளையல்கள் அணிந்து, மது நிரம்பிய தங்கக் கோப்பைகளைக் கொண்டுவருகின்றனர். ஓர் அரசன் மதுவைக் குடித்துத் தன் தாகத்தைத் தணித்துக் கொள்கிறான்.[119] உணவை அருந்தவும் எடுத்துவரவும் உபயோகிக்கப்பட்ட பாத்திரங்கள் பல வகைப்பட்டவை.[120] அரண்மனைக்குச் செல்லும் புலவரும்

113. நற். 59.
114. அகம். 394.
115. புறம். 29.
116. நற். 280.
117. நற். 60.
118. குறுந். 221.
119. புறம். 24; பொருநர். 84-89.
120. புறம். 235.

பாணரும் பல்வகை விருந்துண்டு, பாலையும் குடித்துச் செல்வர்.[121] அவர்கள் சோற்றோடு இறைச்சியையும் நெய்யையும் கலந்துண்பர். நெய் தண்ணீரைப் போன்று மிகுதியாகச் செலவிடப்பட்டது. அவர்கள் தம் தேவைக்கதிகமாக உண்டும், கலங்களில் பெருமளவு நெய்யும் உணவும் மீந்திருந்தது. அவர்கள் தம் பற்களின் இடுக்குகளில் உள்ள உணவுத்துகள்களை அகற்றுவதில் ஈடுபட்டிருப்பர்.[122]

புலவர்களும் பாணர்களும் பல நாட்கள் அரண்மனையில் விருந்தாளிகளாகத் தங்குவர். ஒருவரும் தம் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட வேண்டியிருக்கவில்லை. ஆனால் அனைவரும் பெருமளவில் இறைச்சியையும் சோற்றையும் உண்டனர்.[123] அவர்கள் வியர்வை சிந்த நேர்ந்தால் அது கடும் உழைப்பின் காரணமாகவின்றி அவர்கள் உண்ட சூடான புதிய உணவினால்தான் நிகழ்ந்தது. மீன் துண்டங்களை அவர்கள் மெதுவாக அசைபோடவும் செய்தனர். விறலியர் மற்றும் நாட்டிய நங்கைகளின் நடனத்தைக் களித்தவாறே அவர்கள் மீன் துண்டத்தை அசைபோட்டனர்.[124] அரசரேயன்றி மக்களும் புலவரை விருந்தினராய் அழைத்தனர். வரகு அரிசி, வேளை என்னும் செடியின் வறுக்கப்பட்ட பூக்கள், தயிர், புளியஞ்சோறு முதலியன விருந்தினர்க்களிக்கப்பட்டன.[125] சம்பா அரிசியின் சன்ன ரக வகைகளாலாக்கப்பட்ட சோறும், கருணைக் கிழங்கு வறுவலும் அவர்களுக்களிக்கப்பட்டன.[126]

குடிப்பழக்கங்கள்

பண்டைத் தமிழ்நாட்டில் எல்லாத் தரப்பு மக்களும் குடிப்பழக்கத்திற்கு ஆளாகியிருந்தனர் என்றே தோன்றுகிறது. ஏழைகளும், பணக்காரர்களும், ஆண், பெண் பேதமின்றி மதுவின் பல வகைகளையும் அருந்தினர்.

121. புறம். *231.*
122. புறம். *384.*
123. புறம். *14.*
124. புறம். *386.*
125. புறம். *215.*
126. புறம். *395.*

அவர்கள் பூமிக்கடியில் புதைத்து வைக்கப்பட்ட, தேள்கள் கொட்டினால் நஞ்சு ஏறுவதுபோல் போதை ஏறக்கூடிய, குளிர்ந்த கள்ளை அருந்தினர்.[127] காந்தள் மலர் மாலைகளைச் சூடிய செல்வர் புலாவின் இனிய சுளைகளையுண்டு, கள்ளை நிரம்பக் குடித்தனர். இக்கள் பூமிக்கடியில் மூங்கிற் குழாய்களில் புதைத்துப் பல நாட்கள் ஊற வைக்கப்பட்டது. அவர்கள் இத்தகைய போதைப் பொருளை அருந்திக் களியாட்டமாடினர்.[128] போரில் வாகை சூடிய படைகள் போர் முடிந்தபிறகு தமது வெற்றியைக் கொண்டாடும் வகையில் பலமுறை குடிப்பதுண்டு. படைவீரன் எதிரிநாட்டு ஆநிரைக் கலத்தில் மதுவை நிரப்பிப் பூமிக்கடியில் புதைத்து விட்டுச் செல்கிறான். அவனைக் கண்டு அஞ்சும் மற்ற மக்கள் அவன் போரில் வாகை சூடி வந்து அவன் புதைத்து வைத்த மதுவைக் காணவில்லையென்றால், மிகக்கோபம் கொள்வான் என்பதால், அதன் அருகில்கூடச் செல்லாதிருக்கின்றனர்.[129] சோளக் கொல்லையைக் காவல் காப்பவன்கூடத் தன் மனைவி தனக்களிக்கும் கள்ளை மாந்துகிறான்.[130] தாங்கள் வணங்கும் கடவுளர்க்குக்கூட மக்கள் கள்ளைப் படைக்கின்றனர். இக்கள் வகை ஒரு வகை அரிசியினின்றும் பெறப்பட்டது.[131] பதிற்றுப்பத்தில் கள் காய்ச்சும் முறை விவரிக்கப்படுகிறது ஈச்சம் பழத்தினின்றும் ஒரு வகைக் கள் காய்ச்சப்படுகிறது. பண்டைத் தமிழர் இத்தகைய மது, உணவு வகைகளையுண்டு அனுபவித்தனர்.

உடை வகைகள்

பண்டைத் தமிழர் பலவகை ஆடைகளை உடுத்தினர். அவற்றில் சிலவற்றின் பெயர்கள் வருமாறு: அறுவை, கஞ்சுகம், கலிங்கம், காழகம், சிறை, கூறை, சிட்டர், சட்டை, புடவை,

---

127. புறம். *392*. 128. பதிற்றுப். *81*.
129. புறம். *288*. 130. குறிஞ்சிப். *153–154*.
131. அகம். *35*.

மெய்ப்பை, போர்வை, மடி, துகில் இழைகளைக் கண்டறிய முடியாத மெல்லிய ஆடை வகையொன்றிருந்தது.[132] உடல் தெரியும் பலவகை ஆடைகள், சாயங்களில் அமுக்கப்பட்டுக் காட்சியளித்தன.[133] மூங்கிலின் உள்ளே காணப்படும் சவ்வைப் போன்ற வெள்ளி நிற மெல்லிய ஆடையொன்றுமிருந்தது.[135] மேலும் மக்கள் தம்மைப் பலவகை இலை, தழை, மலர்களால் ஆன மாலைகளைச் சூடி அலங்கரித்துக் கொண்டனர். இக்கால மனிதர்களைப் போலன்றி அவர்கள் இயற்கையோடு ஒருங்கிணைந்து வாழ்ந்தனர். கார்காலத்திலும் அவர்கள் குளிர்ந்த, புதிய இலைகளையும் மலர்களையும் சூடினர்.

இலை ஆடைகள்

மலைநாட்டு மங்கையர், மாலைகளைச் சூடி, மயில்களோடு போட்டி போட்டுக்கொண்டு நடனமிட்டனர். அவர்களுடைய கூந்தல் அலங்காரம் சிறப்பாயிருந்தது; அவர்களுடைய கூந்தற் கற்றைகளின்றும் மெல்லிய இலைக் கொத்துக்கள் தொங்கின. இலைகளாற் செய் தழை ஆடைகளினிடையே பலவகை மலர்கள் விரவியிருந்தன. அம்மலர்களைச் சுற்றி வண்டுகள் இசை மீட்டன.[135] பழைய நூல்கள் பல தழை ஆடைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். இனிய தோப்புகளிலும், தோட்டங்களிலும் காணப்படும் நங்கையர், பிடவம், தளவம், தோன்றி, கொன்றை முதலிய பல இலைகளாலும் மலர்களாலும் ஆக்கப்பட்ட மாலைகளைச் சூடி வலம் வந்தனர்.[137] நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் வாகை முதலிய மலர் மாலைகளையும் ஆடைகளையும் சூடிய பெண்டிர் முருகனை வணங்கியதாகக் கூறுகிறார்.[137] குன்றக் குரவர் என்னும் மலை வாழ் மக்கள்

---

132. மலைபடு. 561–562.
133. மணி. 28: 53–55.
134. சிறுபாண். 253–259.
135. முருகு. 198–206.
136. கலி. 102.
137. புறம். 341; குறிஞ்சிப். 101–102.

நிகழ்த்தும் கூத்திற் பங்கு பெறும் இளம் பெண்டிரும், இவ்வாறே ஆடையுடுத்தியதாகக் கூறப்படுகிறது. முன்னர்க் கூறியபடி இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த பழந்தமிழர், மலர்களும், இலைகளும், மகிழ்ச்சியின் அடையாளங்கள் என்றெண்ணினர். இலைகள் நெய்யப்பட்டு ஆடையாக அரையில் உடுக்கப்பட்டது. பழங்காலத்துப் பெண்டிர் தம் மெல்லிய ஆடைகளின் மீது இத்தகைய மலர் இலையாடைகளை உடுத்தினர் போலும்.

செல்வரின் ஆடை

மதுரை மூதூரில் வணிகர் வாழ்ந்த வீதி ஒன்றிருந்தது. அதில் பலவகையான பருத்தி, பட்டு, மயிர் முதலியவற்றால் நெய்த ஆடைகள் விற்கப்படும் கடைகளிருந்தன.[138] விதவிதமான பல்வேறு ஆடைகளும் மலைபோல் குவிக்கப்பட்டிருந்தன. இது சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், பண்டைய ஆடை, அணிவகைகளைப் பற்றி நன்கு விவரித்துள்ளார். அவர்களுடைய ஆடைகள் மலர்களைப் போன்று மெல்லியதாயிருந்தன. வெண்மை பளிச்சிட்ட அவ்வாடைகள் பாம்புச் சட்டை போன்று பளிச்சிட்டு, கண்ணாடி போன்று காட்சியளித்தன. மூங்கிற் சவ்வைப் போன்று மிக மெல்லியதாகவுமிருந்தன.[139] பாண்டிமாதேவி அணிந்திருந்த ஆடையில் சித்திரத் தையல் வேலை செய்யப்பட்டிருந்தது. புறநானூற்றுப் பாடலொன்று மறவன் தன் அரையைச் சுற்றி நீலநிறச் சித்திரத் தையல் வேலை செய்த ஆடைகளையும், மயலிறகாலான மாலையையும் அணிந்திருந்தது பற்றிக் குறிப்பிடுகிறது. பெரும் போர் வீரர்களின் ஆடைகள் மிகவும் கம்பீரமாகவும் மதிப்புமிக்கதாயுமிருந்தன. அங்கி எனப்படும் நீளமான ஆடைகளையும் அவர்கள் உடுத்தனர். அவர்கள் அரண்மனை வாயிற் காப்பவர்களாகவோ, நகரப்

---

138. சிலப். ஊர்காண். *206-208.*

149. புறம். *383.*

படை வீரர்களாகவோ இருந்தனர். அவர்கள் கஞ்சுக மக்கள் என்றழைக்கப்பட்டனர்.[140] தரையிற் பரவுமளவிற்கு நீண்ட ஆடைகளைச் சில படை வீரர்கள் உடுத்தனர். இதுவே அவர் போரிடும்போது உடுத்தும் ஆடையாயிருந்தது.[141] சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கஞ்சக மக்கள் அல்லது சட்டையணிந்த போர் வீரர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. வேலையாட்களும் அரண்மனையிற் பணிபுரிந்த யவனர்களும், மற்ற வெளிநாட்டவரும் சட்டையணிந்திருந்தது குறிப்பிடப் படுகிறது.[142] குடிகாரர்களும், ஊர்ச் சுற்றிகளும் அரையில் உடுத்த ஆடையோடு அலைந்து திரிந்தனர்.[143] கவிஞர்களும் தாம் அணிந்திருந்த கந்தல் ஆடைகளைப் பற்றியும் அவற்றைப் புத்தாடை கிடைத்ததும் தூக்கியெறிந்தது பற்றியும் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுமக்களின் உடைகள்

சுற்றித் திரியும் பாணர் கூட்டம் ஒன்று கந்தலாடையுடன் அரசனைக் காணச் சென்றது. அவர்களணிந்திருந்த ஆடைகளின் இழைகள் கொட்டைப் பாசி என்னும் தாவரத்தின் வேர்களைப் போன்று தொங்கின. முதலில் அரசன் அவர்களுக்குக் காய்ச்சிய பாலினின்றும் எழும் ஆவியையொத்த வெண்ணிற ஆடைகளைக் கொடுத்தான்.[144] சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தான், தன் புகழ் பாடிய புலவர் பரணர்க்கு அத்தகைய ஆடைகளை அளித்தான். புலவர் அணிந்திருந்த ஆடை அழுக்கடைந்து, நைந்து, சிறு பூச்சிகட்கும், ஈக்களுக்கும் உறைவிடமாயிருந்தது. வியர்வையில் நனைந்து நாற்றம் மிகுந்திருந்தது. இழைகள் கிழிந்து தொங்கிய அவ்வாடை பல விடங்களில் ஒட்டுச் சேர்க்கப்பட்டிருந்தது. இதற்கு நேர்மாறாகச்

140. நெடுநல். *145–146.*
141. பதிற்றுப். *34.*
142. முல்லைப். *60–61.*
143. நெடுநல். *1: 35.*
144. பெரும்பாண். *468–470.*

செல்வர் அணிந்த ஆடைகள் இழைகளைப் பிரித்தறிய முடியாத படி ஒளிவீசின. பாம்புச் சட்டை போன்று மெல்லிய அவ்வாடைகள் சித்திரத் தையல் வேலை செய்யப்பட்டவை யாயிருந்தன. சில பட்டால் நெய்யப்பட்டிருந்தன.[145] தங்களுடைய ஆடையின் சிறப்பின்மையைப் பற்றிக் கூறும் புலவர்கள் மிகைபடக் கூறியுள்ளனர் என்று கொள்ளலாம். ஒரு பாணன் வியர்வையில் நனைந்தும், கிழிந்தும், ஒட்டுப் போடப்பட்டுமிருந்த தன் அழுக்காடையைப் பாதுகாப்பதில் மிகக் கவனம் செலுத்தினான்.[146] ஓர் ஏழைப் புலவனின் ஆடையை வருணிக்கப் பல ஒப்புமைகள் குறிப்பிடப்படுகின்றன. மழையில் நனைந்த கழுகின் ஒழுங்கற்ற இறகுகளைப் போன்று அவையுள்ளன. அரசனை அவன் காணச் சென்றதும் முதலில் அவனுக்குப் புதிய, அழகியப் பட்டாடைகள் கொடுக்கப்படுகின்றன.[147] இன்னொரு கவிஞன் அணிந்திருந்த கந்தலாடை குட்டையில் மிதக்கும் கழிவைப் போன்றிருந்தது. எத்தகைய அருவருப்பான புனைவு! அவ்வாடைகள் அகற்றப்பட்டு அக்கவிஞனுக்கு மலரைப் போன்ற மெல்லிய புத்தாடைகள் அளிக்கப்படுகின்றன.[148] இன்னொரு கவிஞனின் கந்தலாடையினின்றும் தொங்கும் நூலிழைகள் புலவருக்குப் பாம்பின் நாக்கை நினைவூட்டுகின்றன. அவனுக்கும் அரசன் அழகிய 'புகன்றை மலர்களையொத்த புத்தாடைகளை அளிக்கிறான்.[149] இவ்வாறு ஏழைப் புலவர்களின் ஆடைகள், செல்வர்களின் ஆடைகளோடு பல பாடல்களில் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. ஏழைகளின் ஆடைகள் கந்தலாகவும், முரடாகவும், நைந்தும், அழுக்கடைந்தும், நாற்றம் வீசுபவையாகவுமிருந்தன. ஆனால் அரசர்களின் உடைகளோ மெல்லியவையாகவும், விண்ணில் எழும் வெண்புகை போன்றுமிருந்தன. ஒரு முறை அரசன், புலவன் உடுத்தியிருந்த

145. பொருநர். *79–83, 153–155.*
146. புறம். *69.*
147. பதிற்றுப். *12.*
148. புறம். *390.*
149. புறம். *393.*

கந்தலாடையைத் தானே களைந்து தன் ஆடைகளை அவனுக்கு அளிக்கிறான். எத்தகைய மாறுபட்ட, அரசனின் பெருந் தன்மையைக் காட்டும் அழகிய சித்திரம்![150] இவையனைத்தும் பழந்தமிழ் அரசர்களும், செல்வர்களும் பெருந்தன்மை மிக்கவர் களாயுமிருந்தனர் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. எவ்விடத்தும் எவரும், தமக்கெனத் தேக்கி வைத்துக் கொள்ளும் எண்ணமில்லாதிருந்தனர். ஏழைகள், அரசர் அல்லது மற்ற செல்வரை நாடிச் சென்றால் உறுதியாக உதவி கிடைக்கும் என்று நம்பினர். இவர்தம் பொருளாதார நிலை மோசமாக இருந்தும், வறுமை நிறைந்து இருந்தும், கவிஞர்கள் முன்னோக்கியோ, பின்னோக்கியோ பார்த்து இல்லாததற்கு ஏங்கவேண்டிய இடர்ப்பாடு இல்லாதிருந்தது.

அணிகலன்களும் அலங்காரப் பொருட்களும்

பண்டைத் தமிழகப் பெண்டிர் தம்மை மலர்களாலும், இலைகளாலும், தங்க நகைகளாலும் அலங்கரித்துக் கொண்டனர். மணமகள் குளித்துவிட்டுக் கூந்தலை உலர்த்திக் கொண்டிருக்கிறாள். தோழிகள் அவளுடைய கூந்தற் கற்றைகளை இலைகளால் அலங்கரிக்கின்றனர். தவிரவும், அவளுடைய கூந்தலில் நறுமணம் வீசும் வாசனைப் பொருட்களைத் தடவுகின்றனர்.[151] அதன்பிறகு அவர்கள் அவளைப் பல அணிகலன்களால் அலங்கரிக்கின்றனர். நெய்தல் நிலத்து அழகியொருத்தி சங்கு வளையல்களை அணிந்திருக்கிறாள். நீரில் இருக்கும் பல கொடிகளின் மலர்களைத் தன் கூந்தலில் சூடியிருக்கிறாள். கடற்கரையில் காணப்படும் ஞாழல் என்னும் மரத்தின் இளந்துளிர் இலைகளையும் அவள் சூடிக் கொண்டிருக்கிறாள்.[152] வைகையிற் குளிக்கச் சென்ற பெண் தன் இரு காதுகளிலும் குண்டலம் போன்று இரு குவளை மலர்களை அணிந்திருக்கிறாள்.

150. புறம். 398. 151. அகம். 141.
152. ஐங். 191.

அசோக மரத்தின் சிவந்த துளிர் இலைகளை இன்னொரு பெண் சூடியிருக்கிறாள். மற்றுமொரு பெண் தன் முன் நெற்றியில் கறுப்புப் பொட்டை வைத்துக் கொண்டிருக்கிறாள். இன்னொரு பெண் குவளைக் கொடியின் மெல்லிய இளந்தளிர்க் கொடிகளைத் தன் இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டிருக்கிறாள்.[153]

மலர்கள், இளந்தளிர்கள், மலர்க் கொடிகள் முதலியன வீட்டிற்கு அழகு சேர்க்கவும், வீட்டைத் தண்ணென்று வைத்துக் கொள்ளவும் உபயோகிக்கப்பட்டன. இளம்பெண்கள் தாங்கள் விளையாடியபோது, இவற்றைச் சேர்த்துக் கொண்டனர். அகநானூற்றுப் பாடலொன்றின்படி ஒரு பெண் தன் கூந்தலில் நறுமணமுடைய குழம்பைத் தடவியிருக்கிறாள். அதன்பிறகு கூந்தலில் மலர்களைச் சூடி நெற்றியில் திலகமிட்டுக் கொள்கிறாள். புதிதாகப் பிறந்த பல மலர்களால் தன் முலைகளைத் தடவுகிறாள். அவற்றில் இருக்கும் மகரந்தத் துகள்களை அவற்றின் மீது தூவுகிறாள். பின் வாசனைக் குழம்பால் தன் தோள்களில் சித்திரங்களையும் வரைந்து கொள்கிறாள். இவ்வாறு செய்தல் தொய்யில் என்றழைக்கப்பட்டது. தன்னுடைய சிவந்த கால்களில் செந்நிறக் குழம்பைத் தடவி அவற்றைச் செந்நிறமுடையதாக ஆக்குகிறாள்.[154] சங்க காலப் பெண்டிர் கூந்தலைப் பாதியாகக் கத்திரிக்கோலால் வெட்டிக் கொண்டார்கள். ஐந்தாறு வகைக் கூந்தல் அலங்காரங்களை அறிந்துள்ள அப்பெண், தன் கூந்தலையும் முன்னதாகத் தெரியும் வகையில் பல மடிப்புகளைக் கொண்டதாகச் செய்து கொள்கிறாள்.[155] இனி அவர்கள் அணிந்திருந்த பொன், நவரத்தினக் கற்களைக் கொண்ட ஆபரணங்களைப் பற்றிக் காண்போம்.

---

153. *பரி. ப. 11.*
154. *அகம். 389.*
155. *கலி. 32.*

நகைகள்

ஒரு செல்வச் செழிப்புள்ள குடும்பத்துப் பெண் தன் கை முழுவதும் இலங்குலிகம் என்றழைக்கப்பட்ட ஒரு வகை வாசனைக் குழம்பால் பலவகைச் சித்திரங்களை வரைந்து கொள்கிறாள். தன் கைகளில் முத்து விரவிய வளையல்களையும் கால்களில் ஒலியெழுப்பும் சிலம்பையும் அணிந்துள்ளாள். அவளுடைய கூந்தல் ஐந்து வெவ்வேறு வகைகளில் மடிக்கப்பட்டுள்ளது.[156] அக்காலப் பெண்டிர் அறுக்கப்பட்ட சங்கு வளையல்களை அணிவது வழக்கம்.[157] ஆற்றில் குளிக்கச் செல்லும் போதும் பெண்கள் பல அணிகலன்களை அணிந்து செல்வர். வைகையில் வெள்ளம் வந்ததையறிந்து நீராடச் செல்லும் பெண்டிர் மின்னலைப் போல் ஒளியுமிழும் ஆபரணங்களை அணிந்து சென்றனர். வேறு சிலர் பூவேலைபாடுகளுடன் கூடிய தங்க நகைகளை அணிந்தனர். அவர்கள் தம் உடலில் படிந்துள்ள சந்தனக் குழம்பை வழித்தெறிந்துவிட்டு, அகிற்புகை போன்று நறுமணம் கமழும் வேறு குழம்பைப் பூசிக் கொள்கின்றனர். அவர்கள் தம் கூந்தலைப் பல மடிப்புகள் கொண்டதாகச் செய்து கொள்கின்றனர். அவர்கள் தம் உடலில் மலரும் வெட்டிவேரும் கலந்து தொடுக்கப்பட்ட மாலைகளை அணிந்துள்ளனர். பாலைப் போன்று வெண்மையான புடவைகளை உடுத்தியுள்ளனர். சிலர் மணம் வீசும் எண்ணையைத் தடவிக் கொள்கின்றனர். வேறுசிலர் கண்ணாடியில் தம் உருவத்தைப் பார்ப்பதில் ஈடுபட்டுள்ளனர். வாசனையான பாக்கையும் வெற்றிலையையும் அவர்கள் மெல்லுகின்றனர். வாகுவலயம் என்றழைக்கப்பட்ட தோளில் அணியும் அணிகலனோடு மற்றவற்றையும் அணிந்துள்ளனர். அவர்கள் நீர் விளையாட்டுக்குச் செல்லும் முன் தம்மை ஒப்பனை செய்துகொள்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளனர். ஆற்றில் நீராடிய பெண்களின் உடலினின்றும்

---

156. கலி. **59**.

157. அகம். **24**.

கீழே நழுவிய அணிகலன்கள் நதியின் படுகையில் விண்மீன்கள் போல ஒளிவீசின.[158] வளையல்கள், தங்கச்சங்கிலி, தங்க அரைஞான் தவிர, மலர்களும், மாலைகளும் அவர்கள் அலங்காரப் பொருநர்களில் பெரும்பங்கு வகித்தன.[159] அவர்கள் காதில் 'மகரக்குழை' என்னும் ஆபரணங்களையும் கழுத்தில் 'கழுத்துமாலை' என்பதையும் அணிந்தனர்.[160] இடுப்பில் மேகலையையும், காஞ்சியையும் அணிந்தனர். தோள்களில் அணியும் ஆபரணங்கள், வளையல்கள், மோதிரங்கள் ஆகியவற்றில் பலவகையானவையிருந்தன. வைகையில் புது வெள்ளம் வரும்போது நீராடும் அவர்களின் அணிகலன்களை அவ்வாற்று வெள்ளம் அவற்றையெல்லாம் கவர்வது போல் தோன்றிற்று.[161] மலர் மாலைகளையும் மற்ற அணிகலன்களையும் தவிர அவர்கள் வைரம் முதலிய நவரத்தினக் கற்கள் பதித்த ஆபரணங்களையுமணிந்தனர்.[162] சில அணிகலன்கள் சிற்றொலியை எழுப்பின என்பதில் ஐயமேதுமில்லை. ஆனால் வேறுசில அணிகலன்களும் அவற்றையணிந்த பெண்கள் விளையாட்டில் ஈடுபட்டதால் ஒலியெழுப்பின.[163] இவ்வாறு ஒலியெழுப்பிய ஆபரணங்களில் குறிப்பிடத்தக்கது கிண்கிணியாகும். குழந்தைகள் காலில் அணிந்த இவ்வணிகலன் தங்கத்தாலானது. சிறு உருண்டைகளைச் சங்கிலியில் கோத்தது போன்று இஃதிருக்கும். அதில் உள்ள மணிகளின் வாய் தவளையினுடையதைப் போன்றது. அதன் உள்ளேயிருக்கும் வெற்றிடத்தில் நீலக்கற்களோ, முத்துக்களோ நிரப்பப் பட்டிருக்கும்.[164] பெண்களும் இதனையோ சிலம்பையோ காலில் அணிவர். கலித்தொகையில் குறிப்பிடப்பெறும் பெண்ணொருத்தி தங்க கிண்கிணியையும், தங்க மணிகளாலும் பவளங்களாலும்

158. பதிற்றுப். *86*.
159. நற். *66*.
160. கலி. *97*.
161. பரி. *7*.
162. பதிற்றுப். *46*.
163. பதிற்றுப். *46*.
164. குறிஞ்சிப். *148*.

மேலே அலங்கரிக்கப்பட்ட தங்க அரை ஞாணையும் அணிந்திருக்கிறாள். இவ்வணிகலன்கள் அனைத்தும் மெல்லிய மேலாடையால் மூடப்பட்டிருக்கின்றன. அவள் வளையல்களும் அணிந்துள்ளாள்.[165]

இன்னொரு பெண் தன் கூந்தலை ஐந்து மடிப்புகள் கொண்டதாகச் செய்துள்ளாள். அவற்றினின்றும் அழகிய குஞ்சலங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவள் கற்கள் பதித்த சங்கிலியையும், குழைக்கடுக்கன் என்னும் தோடுகளையும், மார்புப் பட்டையையும், மேகலை என்னும் இடையிலணியப்படும் அணிகலனையும், தங்கச்சதங்கை அல்லது சிலம்பையும் அணிந்துள்ளாள்.[166] சிலர் மீனின் வாயைப் போன்று தோற்றமளிக்கும் ஓர் அணிகலனைத் தலையில் அணிந்துள்ளனர்.[167] இது நாட்டியமாடும் பெண்கள் விரும்பி அணியும் அணிகலனாகும். இவ்வணிகலனில் உள்ள பதக்கங்கள் அவர்களுடைய முன்நெற்றியில் தொங்குகின்றன.[168] மாதவியைப் பற்றிச் சிலப்பதிகாரத்தில் காணப்படும் வருணனை தமிழகத்தின் நாட்டியமாடும் பெண்களைப் பற்றிய ஒரு முழுமையான சொற்சித்திரம் எனலாம். அவள் முதலில் பத்துவகைத் "துவர்" என்னும் மருந்துப் பொருநர்களையும், ஐந்துவகை நறுமணப் பொருநர்களையும், முப்பத்திரண்டு மணம் வீசும் மூலிகைகளையும் கரைத்த நீரில் நீராடுகிறாள். பிறகு அவள் அகிற்புகையில் கூந்தலை உலர்த்துகிறாள். அதன்பின் உடல் முழுவதும் நறுமணம் வீசும் குழம்பைப் பூசிக்கொள்கிறாள். பின் பலவகை மோதிரங்களை அணிந்துகொள்கிறாள். அவளுடைய கால்களில் தங்கச் சதங்கை முதலிய அணிகலன்களை அணிந்து கொள்கிறாள். அவளுடைய தொடைகளிலும் அணிகலன்களை அணிகிறாள். மலரைப் போன்ற பட்டினாலான மேலாடையை அணிகிறாள். அவள் தோளில் பல

165. கலி. 85.
166. கலி. 56.
167. கலி. 54.
168. கலி. 79.

அணிகலன்களையும், தங்கம், விலையுயர்ந்த கற்கள் பவளம் முதலியவையாலான வளையல்களை அணிகிறாள். அவற்றிலொன்று வாயகன்ற மீனைப் போன்றுள்ளது. அவள் தங்க, முத்துச் சரங்களையும் அணிகிறாள். அதன்பிறகு தன்னை நாட்டிய அரங்கேற்றத்திற்குத் தயார் செய்து கொள்கிறாள்.[169] சிலம்புதான் பண்டைய அணிகலன்களில் மிகச் சிறந்ததாயிருந்தது. பல பாடல்களிலும் அதன் அதிக உபயோகம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.[170] பலவகையான தங்கத் துகள்களால் அணி செய்யப்பட்ட கச்சைகளும் உபயோகிக்கப்பட்டன.[171] அவர்கள் அத்தகைய கச்சைகளைத் தாம் உடுத்திய தழையாடைகள் மீது அணிந்தனர்.[172] கழுத்தில் அணியப்பட்ட அணிகலன்கள் பலவாகும். ஒரு பெண் பெரிய முத்துப் பதிக்கப்பட்ட பதக்கத்தையுடைய நீளத் தங்கச் சங்கிலி யை அணிந்திருந்தாள். இம்முத்து இருளில் ஒளிவீசும் பூனையின் கண்களைப் போன்றிருந்தது.[173] காதில் அணியப்பட்ட அணிகலன்களுக்குப் பல பெயர்கள் தரப்பட்டிருந்தன. அவைகள் பொதுவாகக் 'குழை' என்றழைக்கப்பட்டன. காதில் சுலபமாக இதை அணியவும் கழற்றவும் முடியும். கீழ்க்கண்ட குறிப்பு இதை நன்குணர்த்துகிறது. ஒரு முறை ஒரு பெண் வீட்டு முற்றத்தில் உலர்த்தியிருந்த தானியத்தைக் கொத்தவந்த சேவலைத் தன் குழையை வீசி விரட்டினாள் என்று கூறப்படுகிறது.[174] உடலின் பல உறுப்புகளையும் அணி செய்யப் பல அணிகலன்கள் அணியப்பட்டன. ஏழைகள் திடீரென அவை தமக்குக் கிடைத்தால் அவற்றை எவ்வாறணிவது என்று குழம்பிப் போவார்கள். ஒருமுறை புலவரின் குடும்பத்தினர் அரசன் அளித்த பலவகை அணிகலன்களைக் கண்டு திகைத்துப் போயிருந்தனர். கை விரல்களில் அணியவேண்டிய மோதிரங்களை அவர்கள் கால்

---

169. சிலப். அந்திமாலை. 75–107.
170. நற். 12.
171. ஐங். 310.
172. அகம். 264.
173. அகம். 72.
174. பட்டினப்.

விரல்களில் அணிந்தனர். சிலர் இடுப்பிலணிய வேண்டிய அரைஞாணைக் கழுத்திலணிந்தனர். சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது, அவள் தான் அணிந்திருந்த பல அணிகலன்களைக் கழட்டிக் கீழே வீசியெறிந்தாள்; அவற்றைக் கண்ட வானரங்கள் அவற்றை ஒழுங்கற்ற முறையிலணிய முற்பட்டன. ஒரு கவிஞர் நகைச் சுவையுணர்வோடு இதனைக் குறிப்பிடுகிறார்.[175] இங்குக் கூறியவற்றில் கற்பனை கலந்திருப்பினும் அதன்கீழ் படிந்துள்ள உண்மை நிலையும் உணரத்தகும்.

ஆண்களின் அணிகலன்கள்

ஒவ்வொரு சிறுவனும் புலி நகம் கோர்த்த தாலி போன்ற சரட்டினைத் தன் கழுத்திலணிந்தான். சில செல்வந்தர் வீட்டுக் குழந்தைகள் அதனுடன் கிண்கிணியையணிந்தனர்.[176] சில நேரங்களில் புலி நகம் கோர்த்த தங்கச் சங்கிலியில் ஒலியெழுப்பும் சிறு கற்கள் பதித்த மணிகளும் சேர்க்கப் பட்டிருந்தன.[177] இத்தகைய சங்கிலி ஐம்படைத்தாலி என்றழைக்கப்பட்டது. இதனைப் பெரியவர்கள் அணிய மாட்டார்கள். சிறுவன் வளர்ந்து பெரியவனாகும்போது, அவன் கால்களில் செருப்புகளணிந்து, அங்கியையும், தோலினாலான கச்சு என்பதனையும் உடுத்துகிறான். அதனினின்றும் ஒரு சிறு கத்தி தொங்குகிறது.[178] இக்கச்சையை, வேலையாட்கள் உட்பட எல்லா இளைஞர்களும் இறுக்கமாகக் கட்டியிருந்தனர். ஓய்வெடுக்கும்போது இதனை அவிழ்த்து வைப்பர்.[179] போர் வீரர்களும் அரச குடும்பத்தினரும் தம் கால்களில் "வீரக்கழல்" என்னும் அணிகலன் அணிந்தனர். தோலினாலான அங்கியின் கரைகளில் தங்க மணிகள் சேர்க்கப்பட்டிருந்தன. ஆதிமந்தியைக்

---

175. புறம். 378. 176. குறுந். 161.
177. அகம். 7. 178. பெரும்பாண். 69-72.
179. நற். 21.

காதலித்த ஆட்டனத்தி காவிரியில் நீராடும் போது கழலையும் கச்சையும் அணிந்திருந்தான்.[180] வெளியே செல்லும்போது எல்லாரும் செருப்பணிந்து சென்றனர். காலை முழுவதும் மூடிய இச்செருப்புகள் தோலினாற் செய்யப்பட்டு அழகூட்டுபவையாயிருந்தன.[181]

செல்வர்களும் அரச குடும்பத்தினரும் தம் யானைகளையும் குதிரைகளையும் பலவிதங்களில் அலங்கரித்தனர். யானையின் தலையில் ஓடை எனப்படும் அணிகலனை அணிவிப்பர். அது யானையின் தலையினின்றுமிழிந்து அதன் துதிக்கையின் தொடக்கம் வரை இருந்தது. அரசனின் பட்டத்து யானை தங்கத்தாலான ஓடையால் அணி செய்யப்பட்டிருந்தது.[182] அவர்கள் மிக விரும்பிய குதிரைகளின் கால்களில் ஒலியெழுப்பும் சதங்கைகளை அணிவித்தனர்.[183] அரசர்களும் தம் செல்வச் செழிப்பின் அடையாளமான மலர்களைப் பெரிதும் விரும்பினர். ஒரு கவிஞர் வறுமையைப் பற்றிப் பேசும்போது குழந்தைகள் பாலுக்காக அழுவதையும், பெண்கள் மலர்களைக் கூடக் கூந்தலிற் சூட முடியாதிருப்பது பற்றியும் கூறுகிறார்.[184] தங்க, இரத்தின அணிகலன்களைவிடப் பண்டைத் தமிழர் மலர்களைப் பெரிதும் விரும்பினர்.

உறைவிடம்

தம் வீட்டைக் கட்ட விரும்புவோர் கால்கோள் செய்ய நல்ல நாளையும் நேரத்தையும் தேர்ந்தெடுத்தனர். இவ்வாறு நாளையும் வேளையையும் தேர்ந்தெடுக்க அவர்கள் சோதிடரின் உதவியை நாடினர். அதன் பிறகு தேர்ந்த பொறியாளரும், கட்டடக் கலைஞரும் அரண்மனையில் கால்கோள் நாட்ட அழைக்கப்பட்டனர். சித்திரை மாதத்தின் பதினொன்றாம்

180. அகம். *374*.
181. அகம். *129, 191*.
182. நற். *296*.
183. நற். *361*.
184. புறம். *44*.

தேதிக்கும் இருபதாம் தேதிக்கும் இடைப்பட்ட நாட்களில் ஒன்றை வழக்கமாகத் தேர்ந்தெடுப்பர். பின்னர் கீழ்த்திசை, மேற்றிசைகளை உறுதிசெய்து கொள்வர். மனையை ஒரு நீண்ட நூலைக் கொண்டு வரையறுப்பர். அதன் பிறகு தரையில் கூடம், முன்வாயில் என்று பல பகுதிகளாகப் பகுக்கப்படும். முன்வாயிலில் இரு கதவுகளிருக்கும். கதவுகளை ஆணிகளையும், இரும்புகளையும் கொண்டு செய்து அவற்றில் இருக்கும் பள்ளங்களைக் செந்நிற அரக்கால் நிரப்புவர். குவளை மலரையொத்த கைப்பிடிகள் அக்கதவுகளை அணி செய்யும். கடுக்காய்ப் பசையால் மேற்பூச்சுப் பூசப்பட்டு எண்ணெய்யால் பளபளப்பேற்றுவர். கதவுகள் மூடப்பட்டால் அவற்றிற்கிடையே இடைவெளியிராது.[185] அரசனின் உறைவிடம் கோவில் என்றும் அழைக்கப்பட்டது. பொதுவாக பெரிய கோபுரங்களும், மதிற் சுவர்களும் கொண்ட இறைவனின் இருப்பிடம்தான் இவ்வாறு அழைக்கப்பட்டது. அரண்மனைகள் கோவில்களைப் போன்று மிகப் பெரியவையாயிருந்தன.

கோட்டைகளும் கோபுரங்களும்

அரண்மனைக் கோட்டையின் வாயிற் கதவுகள் பெரியவையாகவும் அகலமானவையாகவும் இருந்தன. அரசன் போரில் வெற்றி வாகை சூடி நுழையும்போது பெரிய யானைகள் உட்செல்லுமளவுக்கு உயரமாகவும், கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கும்படியுமிருந்தன. நுழைவாயிலில் பெருங்கோபுரத்தோடு கூடிய கூரையையுடைய அவை கோபுர வாயில் என்றும் அழைக்கப்பட்டன. திறந்த வெளியில் மணல் பரப்பப்பட்டு மூன்றில் ஒரு பங்கு இடத்தில் கவரிமான்களும் அன்னங்களும் அழகு நடையிடும். இவ்வெற்றிடத்தின் முடிவில் இலாயம் அல்லது கொட்டில் இருக்கும். இதற்கருகில் ஒரு நீண்ட அகலமான திறந்த வெளியிருக்கும். அதில் அரசன் நிலவொளியில்

---

185. நெடுநல். 72–86.

உலவுவதுண்டு. நிலவொளி முற்றம் என்று அழைக்கப்பட்ட அவ்விடத்தைச் செயற்கை நீருற்று அணி செய்யும். மீன் போன்று தோற்றமளிக்கும் ஓர் உருவத்தின் வாயினின்றும் நீருற்றுப் பெருக்கெடுக்கும். அதைச் சுற்றிலும் அழகு மயில்கள் ஆடும். அதனையடுத்து அரசனின் மனைவியும் அவளுடைய தோழியரும் உறையும் அந்தப்புரமிருக்கும். அதனைச் சுற்றிப் பாதுகாவல் நிறையவிருக்கும். அரசனையின்றி வேறெவரும் உட்புகமுடியாது. அங்கே இரவில் யவனர்கள் வடித்த பெரும் விளக்குகளும், தீப்பந்தங்களும் ஒளியையுமிழும்.[186] அரண்மனையின் உட்புறங்களில் ஊமைகளான யவனச் சேவகர்களிருப்பர். அவர்கள் புனிதமற்றவர்கள் என்று பொருநர்பட மிலேச்சர்கள் என்றழைக்கப்பட்டனர்.[187] மலையைப் போன்ற அரண்மனைகள் உயர்ந்திருந்தன. மலையில் தோன்றும் மின்னல் போன்று அரண்மனை மீது மலர்க்கொடிகள் படர்ந்திருந்தன. பெரும் தூண்கள் நீலமணிக் கற்கள் போன்று பளப்பளப்பாயிருந்தன. சுவர்கள் செம்பைப் போன்று உட்புக முடியாதபடியும் கனமாகவுமிருந்தன.[188] கோட்டைச் சுவர்களின் உட்புறங்கள் வெள்ளையடித்துச் சுத்தம் செய்யப்பட்டு அவற்றில் பூச்சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. அரசனின் பள்ளியறை அலங்கரிப்பில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. கட்டிலின் கால்கள் தந்தத்தால் ஆகியவை. அவற்றில் பல பூ வேலைகள் செய்யப்பட்டிருந்தன. அன்னத்தின் இறகுகளால் நிரப்பட்டிருந்த மென்மையான படுக்கைகள், தலையணைகள் அவற்றில் பரப்பட்டிருந்தன. அவை நறுமணமூட்டப்பட்ட துணிகளால் போர்த்தப்பட்டிருந்தன.[189] அரண்மனையிலிருந்து ஒரு இரகசிய வழி மூலம் உட்செல்லவோ, வெளிவரவோ முடியும்.[190] அரசனின்

---

186. நெடுநல். *87–114.*
187. முல்லைப். *59–66.*
188. நெடுநல். *112–113*; மதுரைக். *484–485*; புறம். *201.*
189. நெடுநல். *124–135.*
190. பரி. *20*; சிலப். ஊர்காண். *65.*

தனியறைக்குள் யாரும் பாணர்கள், கவிஞர்கள் தவிர உட்புகமுடியாது.[191] கோட்டையின் வாயிற்கதவு நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தது. வையையாற்றின் வற்றாத நீர்ப் பெருக்கினைப் போன்று கோட்டை வாயிலுக்கு உட்செல்வோரும் கால்நடைகளும் வழிப்போக்கர்களும் வந்தவண்ணமாயிருந்தனர். கோட்டைச் சுவரில் ஆயுதங்களின் கிடங்குகளும், திசைகளின் காவற்றெய்வங்களுக்குச் சிறு கோயில்களுமிருந்தன.[192] சிலப்பதிகாரம் மதுரைக் கோட்டையில் வைக்கப்பட்டிருந்த பல ஆயுதங்களைப் பற்றிக் கூறுகிறது. அரசனின் தனிக்கொடி கோட்டை வாயிலின் கோபுரத்தின் மீது பட்டொளி வீசி எப்போதும் பறந்து கொண்டேயிருக்கும். கோவலன் வாயிற் காப்போர் அறியா வண்ணம் உட்சென்றதாகச் சொல்லப் படுகிறது.[193] புலவர்களும் பாணர்களும் வாயிற்காப்போர் அனுமதி பெற என்றும் காத்திருந்ததேயில்லை.[194]

செல்வர்களின் மாளிகைகள்

செல்வர்களின் மாளிகைகள் மிகவும் பரந்தும் பெரியவை யாகமிருந்ததால் அவை இருந்த பகுதிகள் "நகர்" என்று அழைக்கப்பட்டன. இவ்வாறு ஏழடுக்கு மாடிகள் கொண்ட வீடுகள் புலவர்களால் 'நகர்' என்று குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாடியும் அவ்வப் பருவ காலத்திற்கேற்றவாறு அணி செய்யப்பட்டு இருந்தது.[195] ஊர்ந்து செல்லும் மேகங்களைக் கோபுரங்கள் தடுப்பது போன்று அம்மாளிகைகளும் வானளாவியிருந்தன.[196] வண்ணச் சித்திரங்களைப் போன்று அழகுற விளங்கிய மாளிகைகள் பெரிய கூடங்களைக்

191. புறம். 390.
192. மதுரைக். 351–358.
193. சிலப். ஊர்காண். 66–67.
194. பொருநர். 12–13.
195. சிலப். மனையறம். 12–13.
196. நற். 221; அகம். 35.

கொண்டிருந்தன.[197] சுவர்கள் அனைத்தும் சுண்ணாம்பு பூசப்பட்டு, திறந்த முற்றங்களுடன் விளங்கின.[198] முற்றத்தில் புதுமணல் பரப்பப்பட்டிருந்தது.[199] அரண்மனை முற்றங்கள் நிலவொளியைப் போன்று வெண்மையான மணல் பரப்பப்பட்டு, அகன்றும் நீண்டுமிருந்ததால் அவற்றில் தேர்கள்கூடச் செல்ல முடிந்தது.[200] திறந்த வெளியிருந்த நீண்ட நெடிய மரங்களில் தேனடைகளிருந்தன. தேனடைகள் சுவர்களிலும்கூடக் காணப்பட்டன. அவற்றினின்றும் பெறப்பட்ட தேன் உயர்ந்த தரமுடையதாயிருந்தது.[201] அம்மாளிகைகள் பெரியவையாக, அரசன், யானை, அணிதேர்ப் புரவி, ஆட்பெரும் படையுடன் இருக்க இடம் உள்ளவையாயிருந்தன.[202] நிலவொளி முற்றத்தில், பல மரங்களும், சிறுவர், சிறுமியர் வளர்த்த மலர்க் கொடிகளும், செடிகளும் காணப்பட்டன. அவர்கள் வயலை என்னும் பசலைக் கொடியையும் மல்லிகைச் செடியையும் விரும்பி வளர்த்தனர்.[203] அக்கட்டிடங்களில் புறாக்கள் தாம் விரும்பியபடி வசிக்கவிடப்பட்டன.[204] செம்மறியாடுகளும், கவரிமான்களும் அங்கே காணப்பட்டன.[205] பெண்டிர் அன்னங்களையும், கிளிகளையும் வளர்த்தனர்.[206] அம்மாளிகைகளில் உறைந்தவர்கள் புலவர்களையும், பாணர்களையும் புரந்தனர். அவர்களைப் புலவர்கள் அரசர்க்கடுத்துச் சிறப்புடையவர் என்று புகழ்ந்தனர். இனி சாதாரண மக்களின் உறைவிடம் பற்றிக் காணலாம்.

197. பதிற்றுப். *61, 68*; புறம். *251*; நற். *182*.
198. கலி. *96*; சிலப். அந்தி மாலை. *31*.
199. ஐங். *348*; நற். *182*.
200. நற். *140*.
201. நற். *268*.
202. சிலப். ஊர்காண். *147*.
203. நற். *324*.
204. நற். *71*; நெடுநல். *45–49*; அகம். *47*.
205. சிலப். நாடுகாண். *5–8*.
206. அகம். *34*.

பொதுமக்களின் உறைவிடம்

மக்கள் எல்லோருடைய இல்லங்களிலும் செல்வத் திருமகள் குடிகொண்டிருந்தாள். இல்லங்கள் கம்பீரமான தோற்ற முடையவையாக இல்லாதிருந்தாலும், அவற்றில் வசித்தவர்கள் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடுமிருந்தனர். அத்தகைய வீடுகளுக்கு உதவி நாடிச் செல்பவர் எவரும் வெறுங்கையோடு திரும்பமாட்டார். இவ்வாறு அவ்வீடுகள் எல்லாம் அன்பிற்கும் பெருந்தன்மைக்கும் அடையாளமாகத் திகழ்ந்தன. ஆகவே அவற்றில் திருமகள் குடி கொண்டிருப்பதாகக் கருதப்பட்டது. அவை வாயிலில் இரு கதவுகளுடன் பாதுகாக்கப்பட்டிருந்தன. ஆனால் கதவுகள் எப்போதும் விருந்தினருக்கும் உதவி நாடி வருபவர்களுக்கும் திறந்தேயிருக்கும்.[207] ஒவ்வொரு வீட்டைச் சுற்றியும் நொச்சி மரங்கள் அரண் போலத் திகழ்ந்தன.[208] பசுக்களும், கன்றுகளும் ஒருபுறத்தே தறிகளில் கட்டப்பட்டிருந்தன. இன்னொரு புறத்தே நெல்லைச் சேமித்து வைக்கும் களஞ்சியங்களிருந்தன.[209] அத்தகைய வீடு சமவெளியில் வாழ்ந்த ஒரு செல்வம் படைத்த நிலக்கிழாருடையது. முல்லை நிலத்து வீடுகளில் ஆடுகளைக் கட்டிவைக்கக் கொட்டம் தனியாக இருந்தது. ஆடுகள் தின்னப் புல்லும், கீரையும் சுவரில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றைப் பாதுகாக்கும் இடையன் அருகிலேயே ஒரு தோற்படுக்கையில் படுத்திருந்தான்.[210] அந்நிலத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் கோழி முதலிய பறவைகளையும் வளர்த்தனர்.[211] அவர்களிற் சிலர் எருமைகளையும் வளர்த்தனர்; அவற்றிற்கெனத் தனியே தொழுவமிருந்தன. சாணம் முதலிய கழிவுப் பொருநர்கள் ஒரு

207. கலி. 83.
208. நற். 115.
209. பெரும்பாண். 243–247.
210. பெரும்பாண். 147–154.
211. குறுந். 139.

புறத்தே குவித்து வைக்கப்பட்டிருந்தன.[212] சிலர் எருமைக் கன்றுகளை வீட்டின் உள்ளேயிருந்த தூண்களில் கட்டி வைத்திருந்தனர். பழந்தமிழ்ப் புலவர்கள் இத்தகைய காட்சிகள் இன்பம் பயப்பவையாயிருந்தன என்று கூறியுள்ளனர்.[213] இனி ஏழை மக்களின் குடிசைகளுக்குள் எட்டிப்பார்க்கலாம்.

ஏழை மக்களின் குடிசைகள்

வயல்கள், காடுகள், கடற்கழிமுகம் ஆகியவற்றில் வேலை செய்தவர்கள் தம் வசதிக்கேற்ற வகையில் கட்டிய சிறு குடிசைகளிலும் வீடுகளிலும் வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்திலிருந்த சிறுவீடு ஒன்று முட்புதர்களால் சூழப்பட்டிருந்தது. அதன் முன் பகுதியில் பருத்தி சிதறப்பட்டு அவ்வீடுகளில் மக்கள் குடியிருப்பதை அறிவித்தது. வீட்டைச் சுற்றியுள்ள அரணுக்கும் வீட்டிற்குமிடையேயிருந்த வெற்றிடத்தில் புல் வளர்க்கப்பட்டிருந்தது. வீட்டின் கூரைமீது பீர்க்கங்கொடி படர்ந்திருந்தது. மூங்கில் இலை, கழிவுப் பொருநர்கள் முதலியன வீட்டின் ஒரு மூலையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.[214] அரணுக்கு வெளியேயிருந்த பொதுவிடத்தில் ஏழை மக்கள் கூடித் தம் கடவுளர்களை வழிபடுவர். வீட்டின் கூரைகள் தழைகளாலும் இலைகளாலும் வேயப்பட்டு அவற்றை மேகங்கள் சூழ்ந்தபோது கண்ணுக்கினியனவாகக் காட்சியளித்தன.[215] கூரைகள் மூங்கிலிலைகளாலும் வரகுத் தாள்களாலும் வேயப்பட்டன. தேக்கின் பெரிய இலைகளும் உபயோகப்படுத்தப்பட்டன. இத்தகைய கூரைகளோடு கூடிய ஒரு வீடு பெரும் புதர் போன்று காட்சியளித்தது.[216] இடைமரத்தின் இலைகளால் வேயப்பட்ட கூரையை, அவற்றின் கூரிய இலைகள் அணில்கள், எலிகள் முதலியவற்றிற்கு இடையூறு செய்ததால் மக்கள் பெரிதும்

212. நற். *271*.
213. நற். *120*.
214. புறம். *116*.
215. ஐங். *252*.
216. அகம். *315*.

விரும்பினர்.[217] வயல்களினருகேயிருந்த குடிசைகளில் சிலர் வாழ்ந்தனர். இக்குடிசைகளைச் சுற்றி நொச்சி மரங்களிருந்தன. அம்மரங்களின் நிழலில் ஆமைகள் தம் குஞ்சுகளோடு உறைந்தன.[218] எல்லாக் குடிசை வாழ் மக்களும் கடினமாக உழைத்து மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். அவர்கள் தம் விருந்தினரிடத்தே அன்பாயிருந்தனர்.

பொருளாதார நிலைமை

பண்டைத் தமிழ் நாட்டின் பொருளாதார நிலைமை அவ்வப்போது அரசோச்சிய மன்னரைப் பொறுத்திருந்தது. "மன்னன் எவ்வழி, மன்னுயிர் அவ்வழி" என்னும் மூதுரையில் நம்பிக்கை வைத்து வாழ்ந்தனர். மக்களை நாட்டின் உடலெனக் கொண்டால், உயிராக அரசன் கருதப்பட்டான். அவன் மக்களை எல்லா வழிகளிலும் ஊக்கப்படுத்தி, அவர்களுடைய விருப்பங்களைப் பொருளுடையனவாகவும், உறுதியான வையாகவும் செய்தான்.[219] தன்னுடைய பொறுப்புக்களை நன்கறிந்திருந்த அரசன், அவற்றை என்றும் நிறைவேற்றத் தவறியதில்லை. அரசாண்மையென்பது இன்பங்களை யனுபவிப்பது மட்டுமன்று; கடுமையான பொறுப்புகளை நிறைவேற்றுவதுமாகும் என்பதை அவன் நன்குணர்ந்திருந்தான்.[220] அவன் தன்னுடைய நாட்டு மக்களின் பொருளியல் நலவாழ்வு தன்னையே சார்ந்துள்ளது என்பதையுணர்ந்து அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றையளித்து அவர்களை மன நிறைவோடிருக்கச் செய்தான். நில, நீர் வளங்களைப் பெருக்குவது அவனுடைய முக்கிய பொறுப்பாயிருந்தது. அவன் எடுத்த நடவடிக்கைகளில் உணவும், நீரும் அளிப்பதற்குத் தலையாய இடம் அளித்தான்.[221] அடுத்துத் தவறான முடிவுகளெடுத்து

217. பெரும்பாண். 83–89.
218. பொருநர். 185–187.
219. புறம். 186.
220. சிலப். காட்சி. 100–104.
221. புறம். 18.

அதனால் மக்களுக்கு அமைதியின்மை ஏற்படக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தான். நாட்டிற்கு உள்ளேயும், வெளியேயுமிருந்த எதிரிகளினின்றும் மக்களைப் பாதுகாத்தான். அன்றியும் காட்டு விலங்குகள் நாட்டினுட்புகுந்து அவர்களுக்கு திங்கிழைக்காமலும், தொற்று நோய்களினிறும் அவர்களைப் பாதுகாத்தான். இவ்வாறு பண்டைத் தமிழக மக்கள் நல்லாட்சியின் எல்லாப் பலன்களையும் அனுபவித்தனர். நாட்டில் போரின்றி அமைதி தவழ்ந்தபோது அவர்கள் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடுமிருந்தனர்.

மேலே கூறியபடி பண்டைத் தமிழ்நாட்டின் மக்கள்தொகை கட்டுக்குளடங்கியிருந்தது. அன்றியும், நிலம் இன்றுள்ளது போலன்றி மிகுந்த வளம் பெற்றிருந்தது. பல பாடல்களில் ஒரே நிலத்தில் விளைந்த பல பொருநர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுவதிலிருந்து இது நன்கு விளங்குகிறது. பறம்புமலை வானுலகில் காணப்படுவது போன்று பல பொருநர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. நால்வகை உணவுகள் மக்களுக்குக் கிடைத்து அவற்றை முழுவதுமாக அவர்கள் அனுபவித்தனர். மக்கள் உழைக்கவேண்டிய அவசியமின்றியிருந்தது. அங்கே கிடைத்த உணவுப் பொருநர்கள் மூங்கிலரிசி, பலவின் பழம், இனிய கிழங்குகள், தேன் முதலியனவாகும்.[222] பலாச்சுளைகள் ஒருபுறத்தே குவித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றினுள்ளே யிருந்த கொட்டைகளும் உணவுப் பொருட்களாகப் பயன்பட்டன. ஆனால் குழந்தைகள் சுளைகளின் உள்ளேயிருந்த கொட்டைகளை எடுக்கப் பொறுமையற்றவர்களாகக் கன்றுகளைப் பலாச்சுளைக் குவியல்கள் மீது ஓடவிட்டுக் கொட்டைகளை வெளிவரச் செய்தனர்.[223] அன்றிருந்த இயற்கைவளம் எவ்வாறு பொறாமைப் படக்கூடியதாயிருந்திருக்கிறது! மக்கள் அதிக உழைப்பைத் தருபவர்களாயிருந்ததால் இயற்கையும் அவர்களுக்குப

222. புறம். 109. 223. மலைபடு. 337–339.

பெருந்துணை புரிந்திருக்கிறது. நிலத்தின் மிகச்சிறிய பகுதியாகக் கருதப்பட்ட ஒரு வேலி நிலம்கூட ஆயிரம் கலம் சாலி நெல் விளைச்சலுடையதாயிருந்திருக்கிறது.[224] நிலத்தில் உழைப்பைப் பெய்தவர் எவரும் துன்பமடையவில்லை. திருக்குறளும், "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்" என்று கூறுகிறது.[225] மரங்களும் செடிகளும் எல்லாக் காலங்களிலும் கனிகளும், காய்களும் நிறைந்து காட்சியளித்தன. கரும்பு எல்லாக் காலங்களிலும் பயிர் செய்யப்பட்டு அதன் அறுவடை ஆண்டு முழுவதும் நீண்டிருந்தது.[226] நிலம் ஒரேவகை விதை விதைக்கப்பட்டாலும் பல பொருநர்கள் விளையுமிடமாக இருந்தது.[227] இவ்வாறு பண்டைத் தமிழ்நாடு இயற்கையன்னை தன் செல்வச் செழிப்பையெல்லாம் பொழியுமிடமாகக் காட்சியளித்தது. இதைப் பற்றிய மற்றைய விவரங்களை வேளாண்மை என்னும் தலைப்பிட்ட பகுதியிற் காணலாம்.

கல்வியும் கலையும்

பண்டைத் தமிழ்நாட்டில் இன்மையும், பஞ்சமும் தலைவிரித்தாடிய நாட்களுமுண்டு. ஆனால் அந்நாட்கள் எப்போதாவதுதான் வந்தன. அன்றியும் அவை மக்களை வறுமையுறச் செய்யுமளவிற்கு நீடிக்கவுமில்லை. மணிமேகலையில் நெடுங்காலம் நீடித்திருந்த பஞ்சம் பற்றிக் கூறப்படுவது கற்பனையாயிருக்கலாம். ஏனெனில் பன்னிரண்டாண்டுகள் பஞ்சம் நீடித்திருக்குமேயானால் அந்நாட்டில் ஆடல், பாடல் முதலிய கலைகளின் அடிச்சுவடே இல்லாது போயிருந்திருக்கும். அக்காலத்திற்றான் புலவர்கள் செழிப்போடு வாழ்ந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. அன்றியும் சில பெண்பாற் புலவர்கள் அப்போதிருந்திருக்கின்றனர்.

---

224. பொருநர். 246–247.
225. குறள். 1040.
226. பதிற்றுப். 30.
227. புறம். 116.

கல்வியின் பெருமை எல்லாராலும் உணரப்பட்டிருந்தது. அரசனொருவன் இயற்றிய பாடலில் கல்வியின் பெருமையையும், தேவையையும் பற்றிக் கூறியுள்ளான்.[228] கணக்கு, இலக்கியம் முதலிய அறிவியல், மனிதவியல் ஆகியவற்றின் அறிவு மனிதர்களுக்கு இன்றியமையாததாகக் கருதப்பட்டது.[229] மக்கள் கண்ணுடையவராயிருப்பது கற்றறிவதற்காகவே என்று கருதப்பட்டது. கடலினாழத்தையும், நிலப்பரப்பின் அளவையும், காற்றின் திசைகளையும் கணித்தறியக்கூடிய புவியியல், அறிவியல் வல்லுநர்கள் பலரிருந்தனர். விண்ணின் பரிமாணத்தைக் கணக்கிடும் வல்லுநருமிருந்தனர்.[230] நிலையாமை, மாறுந்தன்மை ஆகியவற்றைப் பற்றி அறிவுறுத்தக்கூடிய ஆசிரியர்கள் பலரிருந்தனர். அவர்கள் எப்போதும் மாறும் இப்பிரபஞ்சத்தின் தன்மையை நன்கறிந்தவர்களாயிருந்தனர். வாழ்வின் நிலையாமையைப் பற்றியும் முடிவுற்ற பிறப்பு, இறப்புகளைப் பற்றியும் விவாதிக்கும் தத்துவ வித்தகர்களிருந்தனர்.[231] காற்றின் இயல்பு, சூரிய மண்டலத்தின் புரியாப் புதிர்கள் ஆகியவற்றை நன்கு கணித்தறிந்த வான நூலாருமிருந்தனர். அவர்களுடைய அறிவு தாம் பார்த்ததைக் கண்டறிக்கூடியதாயிருந்ததேயன்றி வெளி உதவிகள் தேவைப்படவில்லை.[232] சில சைன மதத் துறவிகள் ஒருவருடைய கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை நன்கறிந்து, பல கோள்களின் மேலாதிக்கத்தையும் கணக்கிட்டனர்.[233] பல ஊர்களுக்கும் சென்று அறிவொளி பரப்பிய அறிஞர் கூட்டத்திடம் இதற்குரிய பொறுப்பிருந்தது.

நுண்கலைகளான நாட்டியம், இசை முதலியன பண்டைத் தமிழகத்தில் நன்கு பராமரிக்கப்பட்டன. பெருநகரங்களில் நாடகக் கொட்டகைகள் பலவிருந்தன; மற்றவிடங்களில் பொது, திறந்தவெளிக் கொட்டகைகள் இதற்காகவென்றே அமைக்கப்

228. புறம். 183.
229. குறள். 393.
230. புறம். 20.
231. புறம். 27.
232. புறம். 30.
233. மதுரைக். 477-481.

பட்டிருந்தன. நாடோறும் குரவைக் கூத்து எனப்படும் ஒரு வகை நாட்டிய நாடகம் நிகழ்த்தப்பட்டது. சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும், பாடல்கள், ஆடல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு மகிழ்ச்சியாயிருந்தனர்.[234] செல்வர்கள் தம் மாளிகை களிலிருந்த பெரிய கூடங்களில் இவற்றை நிகழ்த்தச் செய்தனர்.[235] திருவிழா நாட்களில், பொதுக் கூடங்களில் ஆடற்பெண்டிர் தம் நிகழ்ச்சிகளின் மூலம் மக்களை மகிழ்வித்தனர். அரசர்களின் ஆதரவும் அவர்களுக்கு குறைவறவிருந்தது. அரசர்கள் அவ்வப்போது சிறந்த நாட்டிய மகளிரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் 'தலைக்கோல் அரிவை' என்று பட்டமளித்துக் கௌரவித்து, அவர்களுக்கு ஆயிரத்தெட்டுப் பொற்காசுகள் அளித்தனர்.[236] இவ்வாறு பல வகைகளிலும் செழிப்புற்றிருந்த தமிழகம், ஏழ்மை, பஞ்சம் காரணமாகச் சில சமயங்களில் துயருற நேர்ந்தது ஏன் என்பது புரியாத புதிராயிருக்கிறது. இப்புதிரை எவ்வாறு அவிழ்ப்பது? அதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. பண்டைத்தமிழர் உணவுத் தானியங்களைச் சேமித்து வைத்துத் தேவையான காலங்களில் உபயோகப்படுத்தும் கலையைக் கற்கவில்லை. அவர்கள் மறுநாளைப் பற்றி எண்ணாத தாராள மனம் படைத்தவராயிருந்தனர். உணவுப் பொருட்களை வெகு நாட்களுக்குப் பாதுகாத்து வைக்க முடியாது. அவர்களுடைய வாழ்க்கைக் காலமும், உலக வாழ்க்கையும் நிலையற்றவை என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், அவர்கள் பொருட் சேமிப்பைப் பற்றிப் பொருட்படுத்தவில்லை. அத்தகைய கொள்கை எதிர்காலத்திற்குத் திட்டமிடவேண்டும் என்னும் வலுவான உணர்விற்கு மாறானதாகும்.

---

234. மதுரைக். 615–616.
235. பட்டினப். 113–114.
236. சிலப். அரங். 150–163.

வாழ்க்கையின் நிலையாமை

தமிழர்களின் அடிப்படை நம்பிக்கையான மனித வாழ்வு நிலையற்றது என்பதற்குப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. அன்றியும் அது மாறுந்தன்மைத்து என்று கருத்துமிருந்தது. வாழ்வின் முடிவு எப்போதும் எதிர்பாராமலும் திடீரென்றும் ஏற்படக்கூடும். அது வாழ்வின் எந்தக் கட்டத்திலும் வரலாம்.[237] ஆகவே இயற்கையாகத் தற்காலிகமான இவ்வாழ்வினை நன்கு பயன்படுத்த வேண்டுமென்றால், இளமைக் காலத்தைப் பயனுள்ள வகையிற் செலவிட வேண்டும். இதற்கு இளமையில் அனைவரும் ஒன்றுகூடி வாழ்ந்து, வாழ்க்கையை அனுபவிக்கவேண்டும்.[238] வீட்டையும் ஊரையும் விட்டு வெளிச்செல்லும் ஒருவனுடைய செல்வம் அழிவிற்கும் மாறுதலுக்கும் ஆளாகலாம்.[239] திரைகடலோடித் திரவியம் தேடுவதும் வீணானது என்ற எண்ணமுமிருந்தது. வெளிநாடுகளனைத்தும் வந்தாரை வாழ்வித்துச் செல்வர்களாக்குமளவிற்குச் செழிப்பானவையா என்னும் கேள்வியும் எழுப்பப்பட்டது, அல்லது வெளிநாடு சென்று செல்வமீட்டாத அனைவரும் இங்கே பட்டினியில் மடிந்தனரா? ஆகவே ஒருவன் தன் உற்றார் உறவினருடன் இங்கேயே தங்கிச் செல்வம் ஈட்டுவதே மேலானது என்று கருதப்பட்டது.[240] பலர் வாணிபம் செய்வதற்காக வெளிநாடுகள் சென்றபோதும் அந்நாடுகளில் எவரும் நெடுநாள் தங்கி அந்நாட்டு மக்களாகத் தம்மை மாற்றிக் கொள்ளவில்லை. இறப்பு எந்த நேரத்திலும் வரலாமென்று கருதப்பட்டதால் இங்கேயே வாழ்ந்து மடிவதே நலம் என்னுமெண்ணம் மேலோங்கியிருந்தது. இறப்பைப் பற்றிய இவ்வெண்ணம் தமிழர்களை ஏன் பீடித்திருந்தது என்ற கேள்வி எழுகிறது? கடல்கோள்களால் தமிழகத்தின் பெருப்பகுதி மறைந்தது ஒரு காரணமாயிருக்கலாம்.

---

237. கலி. *12*.
238. கலி. *8*.
239. ஐங். *302*.
240. கலி. *18*.

பூம்புகார் என்னும் கடறக்கரைப் பட்டினம் கடலால் கொள்ளப்பட்டது. இத்தகைய நிகழ்ச்சிகள் மக்களின் மனத்தில் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கலாம் அவர்கள் மற்றெல்லாவற்றையும்விடக் கடலைக் கண்டு மிகவும் அஞ்சினர். திருமுடிக்காரி என்னும் சிற்றரசனின் மலை நாட்டைப் பற்றி ஒரு புலவர் 'கடலால் விழுங்க முடியாத நாடு" என்று புகழ்ந்து பேசுகிறார்.[241] இத்தகைய அச்ச உணர்வே அவர்கள் கடவுட் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவரா யிருக்கவும், துறவுக் கொள்கையைப் போற்றவும் காரணமாயிருந்தது. இவ்வச்ச உணர்வே அவர்கள் ஒன்று கூடி வாழவும், அவர்களுடைய கொள்கைகளான பெருந்தன்மை, கூட்டுவாழ்க்கை, வாழ்க்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகியவை ஏற்படவும் காரணமாயிருந்தது. இத்தகைய கொள்கையே அவர்கள் எகிப்தின் சாய்வுக் கோபுரங்கள் (பிரமீடுகள்), கிரேக்கக் கோயில்கள் முதலிய பெருங் கட்டடங்களைப் போன்று இங்கேயும் அமைக்காதிருக்கக் காரணமாகவிருந்தது.

பணமும் பண்டமாற்றமும்

பணம் புழக்கத்திலிருந்தால் அதனைச் சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் எழும். ஆனால் பண்டைத் தமிழர்களோ பொருளைக் கொடுத்துப் பொருளைப் பெறும் பண்டமாற்று முறையையே நம்பியிருந்தனர். இவ்வாறு நெல்லும், உப்பும் சம விகிதத்தில் மாற்றிக் கொள்ளப்பட்டன.[242] சிறு கிராமங்களில் உப்பை விற்பவர்கள் 'ஒரு படி நெல்லுக்கு ஒரு படி உப்பு' என்று கூவுவார்களாம்.[243] தங்க நாணயங்கள் வெளி நாட்டினருடன் வாணிபத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. கிரேக்க நாட்டுக் கப்பல்கள் தங்க நாணயங்களைக் கொண்டுவந்து

241. புறம். 122.
242. அகம். 140.
243. அகம். 390.

கொடுத்து அவற்றிற்குப் பதிலாக கறுப்புத் தங்கம் என்று கருதப்பட்ட மிளகைப் பெற்றுச் செல்லுமாம்.[244] தங்க நாணயங்கள் சிறிது நீளமாகவும், உருண்டையாகவும், வேப்பம் பழத்தைப் போன்று காட்சியளித்தன.[245] அவற்றிற் சில நெல்லிக் காயைப் போன்றுமிருந்தன. தங்க நாணயங்கள் கொடுக்கல் வாங்கலுக்குப் பெரிதும் துணைபுரிந்தன.[246] அக்காலப் பெண்டிர் தங்க நாணயங்களை மாலையாகக் கோர்த்து அணிந்தனர்.[247] அவர்களிற் சிலர் தங்க நாணயங்களைக் கோர்த்து அரைஞாணாக இடுப்பிலுமணிந்தனர்.[248] உள்நாட்டு வாணிகத்திற்குத் தங்க நாணயங்கள் பயன்படுத்தப்படவில்லை. சிலர் தங்க நாணயங்களை விரும்பாது வேறு பொருநர்களைக் கேட்டுப் பெற்றனர். ஓர் ஆயர் குலப்பெண் தான் கொடுத்த நெய்க்கு மாற்றாகத் தங்கக் காசுகளை ஏற்காது, எருமைக் கன்றுக்குட்டியை இட்டுச் சென்றாளாம்.[249] இவ்வெடுத்துக் காட்டுகள் பண்டமாற்று முறையைப் பண்டைத் தமிழர் நடைமுறை வழக்கத்தில் கொண்டிருந்தனர் என்பதையும் அவர்கள் பணத்தைச் சேமிக்கும் வழக்கத்தை ஏற்கவில்லை என்பதையும் அறிவிக்கின்றன. இதைப் பற்றிய விவரங்களைப் பின்னால் ஒரு பகுதியில் பரக்கக் காணலாம்.

வாழ்க்கைச் செலவு

மக்கள் பணத்தைச் சம்பாதிப்பது மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதற்காகவே என்ற எண்ணமுடையவராகவும், தம் உற்றார் உறவினர்கள் தம்மைச் சுற்றி மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும் என்ற விருப்பமுடையவராகவுமிருந்தனர் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன.[250] ஆனால்

---

244. அகம். 149.
245. நற். 274; குறுந். 67.
246. ஐங். 316.
247. அகம். 269.
248. ஐங். 310.
249. பெரும்பாண். 164–165.
250. குறுந். 38; குறள். 1107; நற். 130.

பணத்தை உழைத்துத் தம் கடமையை நிறைவேற்றச் சம்பாதிப்பதில் அவர்கள் பெரும் நம்பிக்கையுள்ளவராயிருந்தனர். ஒவ்வொரு பழங்காலத் தமிழரும் தம் சொந்த உழைப்பு மூலமாகச் சம்பாதிப்பதிலும், அவ்வாறு சம்பாதித்தது ஒருகையளவு நீராயினும், அதைச் சுவைத்துக் குடிப்பதிலும் பெரும் நம்பிக்கை யுள்ளவராயிருந்தனர்.[251] தற்சார்புக் கொள்கையில் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை அவர்கள் தம் வாழ்வை நேர்மையான வழியிற் செலுத்த உதவியது. தன் முன்னோர்கள் சொத்தில் வாழ்ந்தவன் தகுதியற்றவனாகக் கருதப்பட்டான்.[252] இவ்வாறு சோம்பிய வாழ்க்கை வெட்கப்படத்தக்கதாகக் கூறப்பட்டது. இயற்கையாகவே உழவர்களும், வேளாளர்களும் தம் நிலங்களை உழுவதில் பெரிதும் கவனம் செலுத்தினர். நிலங்கள் என்றும் நீர் நிரம்பியிருந்தன. உழவர்களின் வீடுகளில் நெற்குவியல்கள் காணப்பட்டன. வணிகர்கள் வாழ்ந்த வீதிகளில் தங்கக் குவியல்கள் காணப்பட்டன.[253] இச்சொற்சித்திரம் பணிவுள்ள மக்கள் வாழ்ந்த வீடுகளைப் பற்றியதேயன்றி, அரசர்களும், பெருங்குடி மக்களும் வாழ்ந்த வீடுகளைப் பற்றியதல்ல. அவர்கள் எல்லாரும் பணிவோடும் மகிழ்வோடும் மனநிறைவோடு மிருந்தனர். பண்டைத் தமிழ்நாட்டில் வாழ்ந்த மக்களின் பெரும்பகுதியினர் உழவர் பெருமக்களாயிருந்தனர். அவர்கள் தம் செல்வத்தை நன்கனுபவித்தும் அவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துண்டும் வாழ்ந்தனர். மூவேந்தர்களும் அவர்களுடைய நல்லாட்சியினாலும் நாட்டைப் பகைவரிடமிருந்து காத்ததனாலும் பெரும் புகழ் பெற்றிருந்தனர். அவர்களுடைய வெற்றிமுரசு மலையில் காணப்பட்ட சந்தனமரம் போலும், கடலிலிருந்து பெறப்பட்ட முத்துக்களைப் போலவும் பெரும் புகழ் பெற்றிருந்தது. ஆகவே, நாடு சோற்று வளமும் ஆற்று வளமும் பெற்றுத் திகழ்ந்தது.[254] தங்கமும் நவரத்தினங்களும் அடிக்கடி குறிப்பிடப்பட்டாலும், உணவையும், நீரையும் போன்று எளிதாகக் காணக்கூடியனவாயில்லை.

---

251. குறள். 1065. 252. குறுந். 283.
253. புறம். 338. 254. புறம். 58.

முடிவாக, அழகிய மாளிகைகளில் வாழ்ந்த, வெளிநாடு களுடன் வணிகத் தொடர்புடனிருந்த செல்வர்களைப் பற்றிக் குறிப்புக் காணப்படுகிறது.[255] ஆனால் அவர்கள் சிறுபான்மையினரேயாவர். அதே சமயம் சிறுகுடிசைகளில் வாழ்ந்த, தமது உணவை அன்றாட உழைப்பின் மூலம் பெற்ற ஏழை மக்களைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. பெரும்பான்மையினராய் வாழ்ந்த இம்மக்கள் பெருஞ்செல்வர் களுக்கும் வறியவர்களுக்கும் இடைப்பட்ட நிலையிலிருந்தனர். இம்மக்கள் மகிழ்ச்சியோடு கவலையின்றி வாழ்ந்தனர். அவர்களுடைய நிலங்கள் எல்லா வளங்களும் பெற்றுத் திகழ்ந்தன. அவர்கள் நடுத்தர மக்களாவர். மலைகளில் விளைந்த நால்வகை உணவுப் பொருட்கள் பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமவெளிப் பிரதேசத்தில் நெல்லும், கரும்பும் முக்கிய விளை பொருட்களாகும். காடுகளில் வரகு, தினை, கொள்ளு, அவரை முதலியன விளைந்தன.[256] கடற்கரையில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நகர்ப்புற மக்களின் வாழ்க்கையோடு போட்டியிடும் வகையிலிருந்தது. நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்களிடையேயும் கண்ணியத்திற்கும், வீரத்திற்கும் பெயர் பெற்ற குடும்பங்களிருந்தன.[257] பொதுவாகக் கூறின் பண்டைத் தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் நிறைவளிப்பதாக இருந்தது. மக்கள் அவர்கள் எத்தரப்பின ராயினும் சரி - அரசர்கள், வணிகர்கள், நிலக்கிழார்கள், உழவர்கள் ஆகியோர் செல்வச் செழிப்புடனிருந்தனர். எல்லாருக்கும் பொருளாதாரப் பாதுகாப்பிருந்தது. இதனால்

---

255. புறம். 335.

256. நற். 45.

257. சிலப். ஊர்காண். 68–69.

அமரர் தலைவன் இந்திரனுடைய செல்வங்களனைத்தும் பண்டைத் தமிழகத்தில் குவிந்து கிடந்தனவென்று எண்ண வேண்டியத்தில்லை;[258] ஆனால் செல்வர்களிடம் தேவைக் கதிகமான தங்கக் காசுகள் குவிந்து கிடந்து, அவை பாதுகாப்புப் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருந்தன.[259] எடுத்துக்காட்டாக, இருந்தூரைச் சேர்ந்த தோயன் மாறன் என்பவன் மிகுதியான செல்வமுடையவனாக இருக்கவில்லை. அவன் ஒரு போர்வீரன். எனவே போர் நடக்கும்போது அதில் பங்கேற்று அரசர்க்குதவுவது அவன் வழக்கம். ஆனால் அவன் தான் பெற்ற ஊதியத்தில் தன் தேவைக்கதிகமானவற்றைத் தன்னிடம் உதவி நாடி வருபவர்களுக்குத் கொடுத்து வந்தான். மதுரைக் குமரனார் அவனைப் பற்றி "அவன் பெருஞ்செல்வனல்லன்; இருந்தபோதும் தன்னை நாடி வந்தவர்க்குதவாதிருந்ததில்லை" என்று கூறுகிறார். அவனைப் போன்ற நிலையிலிருந்தவர்கள் எல்லாரும் அவனளவு பரந்த மனமுடையராயிருந்திருப்பர் என்றெண்ண வேண்டியதில்லை. ஆனால், ஈகைத் தன்மையேயற்றுப்போய் மக்கள் துயரமுற்றனர் என்பதற்குச் சான்றுகளுமில்லை.

---

258. குறுந். 233.

259. புறம். 180.

4. அரசுப் பொருளாதாரம்

பொருளாதாரம் என்பது இன்று ஒரு பெருங் கலையாக வளர்ந்துள்ளது. சங்க காலத்தில் தமிழர்தம் பொருளியற் கருத்துக்கள் கலையினது கட்டுக்கோப்பைப் பெறவில்லை எனினும், அவர்தம் கருத்துக்கள் இக்காலப் பொருநர் நூல்கள் கூறும் கருத்து நுட்பங்களுக்குப் பேரளவு ஈடுகொடுக்கத் தக்கவை என்பது ஒருதலை. இவ்வுண்மையை எடுத்துக்காட்டுவதே இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் நோக்கம்.

அரசுப் பொருளாதாரம்

அரசுப் பொருளாதாரம் என்பது ஓர் அரசாங்கத்தினது பொருளாதார நிலையைக் கூறுவதாகும். இதனை நாட்டுப் பொருளாதாரம் என்றும், பொதுப் பொருளாதாரம் என்றும் கூறலாம். இப்பொருளதாரக் கூறு இன்று ஒரு பெருங் கலையாகக் கருதப்படுகின்றது. ஒரு நாட்டின் அரசாங்கம் இயங்குவதற்குரிய மூலாதாரம் அதன் வரவு, செலவு, வருவாய்க்குரிய வழிகள், செலவாகும் விதம், எவ்வாறு செலவு செய்தல் வேண்டும் என்ற முறை, இன்ன பிறவற்றை விரிவாகக் கூறுவது இப்பொருளாதாரக் கலையின் பணியாகும்.

பொருளாதாரம் தனிப் பொருளாதாரம், பொதுப் பொருளாதாரம் என இரு வகைப்படும். தனிப் பொருளாதாரம் என்பது குடும்பப் பொருளாதாரம். பொதுப் பொருளாதாரம் என்பது நாட்டுப் பொருளாதாரம். இவ்விரண்டினுக்குமிடையே உள்ள ஒற்றுமைகள் சில; வேற்றுமைகள் பல. இவற்றை விரிப்பது இங்கு மற்றொன்று விரித்தலாக முடியும். ஆகவே, பொதுப் பொருளாதாரமாகிய நாட்டுப் பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளையும் ஈண்டு ஆராய்வோம்.

நாட்டுப் பொருளாதாரம் அல்லது அரசுப் பொருளாதாரம் என்பது இருபெரும் பிரிவுகளுள் அடங்கும். ஒன்று வருவாய் பற்றியது; மற்றொன்று செலவு பற்றியது. ஒரு நாட்டிற்குரிய பொருநர் வருவாய் என்பது அந்நாட்டு மக்கள் தரும் வரி அல்லது கடமை முதலியனவாகும். பொருளின்றித் தனிமனித வாழ்க்கை இல்லையாதலால் போல ஓர் அரசும் பொருளின்றேல் இயங்காது.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருநர்"[1]

என்பார் வள்ளுவர். இப்பொருளை அரசு எவ்வாறு ஈட்டுவது? உலகில் நாகரிகம் தொடங்கிய நாள்முதல் ஓர் அரசு தனக்குரிய பொருளை மக்களிடமிருந்து பலவகை வரிகள் வாயிலாகப் பெறுகிறது. அரசு இதற்கென வரிவிதிப்புக் கொள்கைகளையும் வரையறை செய்து கொள்கிறது. இவ்வரிவிதிப்புக் கொள்கை ஆராயுமிடத்து, மக்களிடையே நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்யவும் பயன்படுகிறது.

வருவாய்க்குரிய வழிகள்

ஒரு நாட்டினது அல்லது அரசினது வருவாய்க்குரிய வழிகள் மிகப் பலவாகும். அவற்றுள் ஒன்று மக்களிடமிருந்து பெறும் வழிகள் என்பதனை முன்னர்க் கண்டோம். அவ்வரிகள் யாவை? தமிழ் நூல்களில் வரி பற்றிய பல்வேறு கலைச் சொற்கள் காணப்படுகின்றன. இறை, திறை, இரவு, கடமை, குடிசை ஆயம், கொண்டி, உறுபொருநர், உல்குபொருநர் முதலிய சொற்கள் மக்கள் அரசுக்கு வழங்கும் பல்வேறுபட்ட வரிகளைக் குறிப்பனவாகும். இக்கலைச் சொற்கள் நுட்பமான பொருநர் வேறுபாடுகள் கொண்டு வழங்கப்பட்டன. எனவே இவற்றை

---

1. குறள். 751.

ஆழமாகச் சிந்தித்தல் வேண்டும். இவை தமிழ் மொழியின் சொல் வளத்தை எடுத்துக்காட்டுவதோடு அம்மொழியின் நுட்ப திட்பங்களையும் புலப்படுத்துவனவாகும். தமிழர் தம் பொருளாதாரச் சிந்தனைகள் எத்துணை விரிவும் விளக்கமும் உடையன என்பதும் நன்கு புலப்படும். ஓர் அரசின் முக்கிய வருவாய் நிலவரியாகும். நிலங்கள் தரம் பிரிக்கப்பட்டு அளவீடு செய்யப்பட்டன. மா, வேலி, நஞ்செய், புஞ்செய் என்பன காண்க. கோவில்கள், தொழிலாளர் குடியிருப்பு, சுடுகாடு போன்றவை வரிவிலக்கு அளிக்கப்பட்டன.[2]

வரிகள்

(அ) இறை

இஃது இறைவன் அல்லது அரசனுக்கு மக்களால் வழங்கப்படுவது எனப் பொருநர்படும். அக்காலத்தில் அரசன் இறைவன் என்று கருதப்பட்டான். "உலகபாலர் உருவாய் நின்று உலகங் காத்தலின் 'இறை' என்றார் என்பது பரிமேலழகரது உரைவிளக்கம்.[3] 'இறு' என்பதன் அடியாகப் பிறந்த 'இறை' என்பது மக்களால் இறுக்கப்படுவது அல்லது வழங்கப்படுவது என்னும் பொருளாகும். இது பெரும்பாலும் நிலத்தின் மீது விதிக்கப்படும் வரியாகும். நிலமுடையார் யாவரும் அரசுக்கு நிலவரி இறுத்தல் வேண்டும் என்பது அன்று முதல் இன்று வரையுள்ள நடைமுறையாகும். 'இறையிலி', 'நிலம்' என்னும் தொடர்ப் பொருளும் ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

(ஆ) திறை

திறை என்பது தோற்ற மன்னர்கள் வென்ற மன்னர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கும் பொருளாகும்.

---

2. டாக்டர் மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி, ப. 65.

3. குறள். பொருள். உரை அவதாரிகை.

'பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்திறை கொண்மார்'[4]

என்னும் மதுரைக் காஞ்சி அடிகள் இதனை வலியுறுத்தும்.

(இ) இரவு

இஃதும் ஒருவகை வரியாகும். இது மக்கள் முறையாகக் கட்ட வேண்டியதன்று. சில சூழ்நிலைகளில் மக்களிடமிருந்து கட்டாயமாகப் பெறவேண்டிய பொருநர் இதனுள் அடங்கும். மக்களது விருப்பம், விருப்பமின்மைக்கு அப்பாற்பட்ட நிலையில் ஓரளவு அச்சுறுத்தலின் வாயிலாகக் கொள்ளப்படுவது இரவு எனப்படும். ஆறலை கள்வர் வழிப்போக்கரிடமிருந்து வலிதிற் பிறக்கும் கொள்ளைப் பொருநர் போன்றதாகும் இது.

"வேலொடு நின்றான் இடு என் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு"[5]

என்னும் குறட்பா இதற்கு எடுத்துக்காட்டு. இதற்குப் பரிமேலழகர் "வேலொடு நின்றான் என்றதனால் பிறரொடு நில்லாமையும், இரவு என்றதனால் இறைப்பொருநர் அன்மையும் பெற்றாம், தாராக்கால் ஒறுப்பல் என்னும் குறிப்பினன்" எனக் கூறும் விளக்கவுரை இதனை மேலும் வலியுறுத்தும். ஆயின், ஒருசார் ஆராய்ச்சியாளர் நாட்டில் ஏற்படும் எதிர்பாராச் சூழ்நிலைகள் காரணமாக அரசு செல்வர்கள்பால் வேண்டிப் பெறும் அல்லது இரந்து பெறும் சிறப்புப் பொருநர் என்பர். இஃது இக்கால வழக்கில் நன்கொடை எனப்படும். எது எவ்வாறாயினும், இரவு என்பது அரசுக்கு வழங்கப்படும் சிறப்பு வரிப்பொருநர் எனவே கொள்ளப்படும்.

---

4. மதுரைக். 229–230.
5. குறள். 552.

(ஈ) புரவு

புரவு என்பது புரத்தல் அல்லது காத்தல் எனப் பொருநர்படும். எனவே, இது ஒரு காப்பு வரியாகும். நாட்டில் யாதேனும் ஒரு பகுதியினர் சிறப்பாகப் புரக்கப்பட வேண்டுமெனில் அப்போது அரசு ஒருவகைச் சிறப்பு வரி விதிப்பதுண்டு. குறிப்பாக, ஒரு நெருக்கடி நிலை தோன்றுகிற போது அதனைப் பொருளாதார முறையில் சந்திப்பதற்கு இத்தகைய புரவு விதிக்கப்படுவதுண்டு.[6] 'குடிபுரவு இரக்கும்' என்னும் புறநானூற்றுத் தொடர் இதனை நன்கு விளக்கும்.

(உ) கடமை

இதன் சொற்பொருநர் உரிமை என்பதன் மறுதலைப் பொருளாகும். ஒவ்வொரு குடிமகனும் அரசுக்குச் சில கடமைகள் ஆற்ற வேண்டும். அக்கடமை உழைப்பாகவும் இருக்கலாம்; பொருளாகவும் இருக்கலாம். இதனையே, இக்காலத்தார் நிலவரி என்பர். இஃது ஒருவனது நிலவுடைமையால் ஏற்படும் கடமையாகும்.[7] இறை என்பது கடமை என்பதும் ஒரே வகையான் வரியைக் குறிப்பதற்குப் பல்வேறு காலக்கட்டங்களில் வழங்கப்பட்ட ஒரு பொருநர் கிளவிகளாகும்.

(ஊ) குடிமை

இது குடி அல்லது குடும்பம் என்பனவற்றோட்டு தொடர்புடைய சொல். சமுதாயத்தில் தனிமனிதன் சிறப்பிக்குரிய அங்கமாகக் கருதப்படுவதில்லை. அவன் இல்லறம் ஏற்றுக் குடும்ப வாழ்வு நடத்தும் நிலையில்தான் அரசு அவனைச் சமுதாயத்தின் அங்கமாக மதிக்கிறது. அவன் நாடோடியாகத் திரியாமல் அவன் மனையறம் மேற்கொள்ளும் போது தனக்கென வீடமைத்துத் தங்குகிறான். அவனது குடும்ப உடைமையாகிய

---

6. புறம். 75.
7. டாக்டர் மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி, ப. 66.

வீடு, வீட்டுமனை ஆகியவற்றின் மீதும் அரசு வரி விதிக்கிறது. குடி மீது விதிக்கப்பட்ட வரி குடிமை எனப்பட்டது. ஆயின், வரலாற்றுப் பேரறிஞராகிய நீலகண்ட சாத்திரியார் இதனை மக்கள் அரசுக்குப் பொதுவாக வழங்கும் வரியைக் குறிப்பதாகவே கொண்டார்.[8]

(எ) ஆயம்

திருவள்ளுவர் காலத்தில் சூதாட்டத்தில் பங்குபெறும் இருவர் வரையறுத்துக் கொள்ளும் பந்தயப் பொருளே ஆயம் எனப்பட்டது. சூதாட்டத்தில் வென்றவன் தோற்றவன்பால் பெற்ற தொகை ஆயமாயிற்று. காலப் போக்கில் ஆயம் என்பது பொருநர் மாற்றம் பெற்றது. மக்களுள் ஒரு சாரார் தத்தம் தொழில் நிமித்தம் அரசுக்கு வழங்கும் தொழில் வரி ஆயம் என்று குறிக்கப்பட்டது. ஆடை வெளுத்துத் தரும் தொழிலாளி தான் துவைப்பதற்குப் பயன்படுத்தும் கல்லின் மீது வரி செலுத்தியமை காணப்படுகிறது. இது கல்லாயம் எனப்பட்டது. வரலாற்றுப் பேரறிஞர் மகாலிங்க சாத்திரியார் தமது 'தென்னிந்திய ஆட்சி' முறை என்னும் ஆங்கில நூலில் இதனை விவரித்துள்ளார்.[9]

(ஏ) கொண்டி

சங்க காலத்தில் அரசர்களுக்கு இடையே நடந்த கடற்போரில் வென்ற அரசன் தோற்றவனிடமிருந்து கொண்ட பெரும்பொருநர் கொண்டி எனப்பட்டது. இது போர் குறித்த ஒன்றேயாகும். அமைதிக் காலத்தில் இது பற்றிய பேச்சில்லை. 'கொண்டி வேண்டுவனாயின்' என்னும் புறநானூற்றுத் தொடர் இதனை மெய்ப்பிக்கும்.

---

8. The Cholas, pp. 522–523.
9. Dr. T.V. Mahalinga Sastri, South Indian Polity, pp. 168–169.

(ஐ) உறுபொருநர்

இது வரி அன்று. ஆயினும் இதுவும் அரசுக்குரிய பொருளே. செல்வர் வழித் தோன்றல்களின்றி இறப்பரேல் அவர்கள் ஈட்டிவைத்த பொருளும், பிற உடைமைகளும் அரசின் உடைமைகள் ஆயின. அன்றியும் கண்டெடுக்கப்படும் அல்லது தோண்டி எடுக்கப்படும் பொருட்குவைகள் அரசுக்கே உரியவாயின. இவ்வாறு வரும் பொருநர் உறுபொருளாம்.

> "உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருநர்"[10]

என்னும் குறளும், அதற்குப் பரிமேலழகர், 'வைத்தார் இறந்து போக நெடுங்காலம் நிலத்தின்கண் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறாததூஉம்' எனவுரைக்கும் விளக்கமும் இங்கு நோக்கத்தகும்.

(ஒ) உல்குபொருநர்

இது இக்காலத்து வழங்கி வரும் வணிக வரி, சுங்க வரி போன்றதாகும். ஒரு நாட்டிலிருந்து பிற நாட்டுக்கு ஏற்றுமதியாகும் பொருநர் மீதும் இறக்குமதியாகும் பொருநர் மீதும், விதிக்கப்படும் வரி சுங்கவரியாகும். இத்தொடருக்குப் பரிமேலழகர், 'சுங்கமாகிய பொருளும்' என்று கூறிப் பின்னும், 'சுங்கம் கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது' எனக் கூறும் விளக்கம் இங்கு மனங்கொள்ளத்தகும்.[11]

(ஓ) தெறுபொருநர்

தெறுதல் என்பது பகை வெல்லுதல் எனப் பொருநர்படும். இதுவும் போர்க்காலத்தில் தோற்றவனிடமிருந்து வென்றவன்

---

10. குறள். 756.

11. குறள். 756, பரிமேலழகர் உரை.

போர்க்களத்தே வாரிக்கொண்டு வரும் பொருளாகும். இப்பொருளை அரசன் அரசுடைமையாகக் கருதாது தனக்கு வெற்றி விளைவித்த வீரர்களுக்குப் பகிர்ந்து தரப்பட்ட பொருளாகும். இது கொண்டியினும் வேறுபட்டது. கொண்டியும் தோற்ற அரசன்பால் பெறுவதாயினும் அஃது அரசுக்கே உரியதாம்.[12]

இதுகாறும் அரசுக்குரிய பொருநர் வரும் பல்வேறு வழித்துறைகளும், வரி வகைகளும் ஆராயப்பட்டன. இனி, அரசு விலக்கத்தகும் சில வரவினங்கள் பற்றிச் சிந்திப்போம்.

விலக்கப்பட்டவை

திருவள்ளுவர் ஓர் அரசு எவ்வெவ் வகையில் பொருளீட்ட முற்படுதல் தகாது என்பதனை வலியுறுத்திக் கூறியுள்ளார். வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது ஆகிய மூன்று அதிகாரங்களும் அரசுக்கு விலக்கப்பட்ட பொருநர் பற்றி விரித்துரைக்கின்றன. கள்ளின் மீதும், வரைவின் மகளிர் மீதும், சூதாட்டத்தின் மீதும் வரி விதிப்பதன் வாயிலாக அரசுக்குப் பெரும்பொருநர் கிடைக்கலாம். கௌடில்லியர் தமது அர்த்தசாத்திரத்தில் இவற்றை வரவேற்றிருப்பவும், திருவள்ளுவப் பெருந்தகை இவற்றை விலக்கியுள்ளமை நினைந்து மகிழத்தகும்.[13] ஓர் அரசின் கடமை அங்கு வாழும் மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதேயாம். வாழ்க்கை நலமாவது ஒருவனது உடலையும் உள்ளத்தையும் பொறுத்தது. மேற்கண்ட மூன்றனுள் கள்ளும், வரைவின் மகளிரும் உடல்நலக் கேட்டுக்குக் காரணம். சூது ஒருவனது உளநலத்தைக் கெடுக்கும். அன்றியும் மக்களை எளிய முறையில் வேகமாகக் கவர்ந்து ஈர்த்து அவர்களைக் கெடுப்பவையாகும் இவை. எனவே, வாழ்வாங்கு வாழ வைக்க

---

12. குறள். 756, பரிமேலழகர் உரை.

13. குறள். 920.

விரும்பிய வள்ளுவப் பெருந்தகை இம் முத்தீமைகளையும் கடிந்தொழிந்தார். 'குடி குடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும்' என்னும் விளம்பரத்தையும் தொங்கவிட்டு, கள்ளுக்கடைகளைத் திறப்பதும், அதன் வாயிலாகப் பொருநர் ஈட்டுவதும் வள்ளுவர் உள்ளத்தைப் புண்படுத்துவதாகும்.

> "ஈன்றான் முகத்தேயும் இன்னாதால்"[14]
>
> "சூதின், வறுமை தருவதொன் றில்"[15]

என்று வள்ளுவர் கூறியிருப்பதும், இவை அங்கவியலுள் கூறப்பட்டிருப்பதும் சிந்திக்கத்தகும்.

> "மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
> கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்"[16]

என்ற மணிமேகலை அடிகளும் கவனத்தில் கொள்ளத்தக்கவை. எனவே, தமிழ்ப் பண்பாடு, மக்களுக்கு நல்வாழ்வு தரும் நல்லொழுக்கப் பொருளியற் கொள்கையையே சங்ககாலம் தொடங்கி வலியுறுத்தி வருகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும்.

அரசுப் பொருளாதார அமைப்பு

அரசுப் பொருளாதாரம் அல்லது பொதுப் பொருளாதாரம் (Public Finance) எவ்வாறு அமைக்கப்பெற வேண்டும், எவ்வாறு நிருவகிக்கப்படவேண்டும் என்பது பற்றிய நெறிமுறைகள் எவையேனும் அக்கால ஆட்சியமைப்பில் வரையறுக்கப் பட்டிருந்தனவா என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியத்தில் தெளிவான குறிப்புகள் இல்லை. அன்றைய அரசியல் அமைப்பில்

14. குறள். 922.
15. குறள். 934.
16. மணி. 16: 84, 85.

அரசனே அனைத்தும் செய்ய வல்லன் என்றிருந்தமையின் இக்காலத்தில் அமைந்திருப்பது போலக் கட்டமைப்புகளும் வரையறைகளும் அரசுப் பொருளாதாரத்திற்கு விதிக்கப் படவில்லை. வரவு - செலவுத் திட்டம் தயாரித்து நாட்டுப் பொருளாதார நிலையைத் துணித்தறிந்து செயல்படும் நிலை அன்றில்லை. மேனாட்டுத் தாக்கம் ஏற்பட்ட பின்னரே பொருளாதாரத் துறையில் பல மாறுதல் ஏற்பட்டன. அரசன் தன் அமைச்சர்களின் ஆலோசனைகளைக் கேட்டு அரசுப் பொருளை நிருவகித்து வந்தான். திருவள்ளுவர் இதுபற்றி விரிவாகக் கூறியுள்ளார்.[17] அக்கால மன்னர்கள், பொதுவாகக் கடமை உணர்வுடன் ஆட்சி புரிந்தமையின் பொருநர் நிருவாகத்தையும் அவர்கள் பொறுப்பிலேயே வைத்திருந்தனர் என அறியலாம்.

வரிவிதிப்புக் கொள்கை

ஓர் அரசு தன் குடிமக்களிடம் வரி மூலம் பணம் பெறுவது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை. அனைத்து நாகரிக அரசுகளும் இதனைச் செய்யக் கடமைப்பட்டுள்ளன. ஆனால் அரசு நினைத்தவாரெல்லாம் வரிகளை விதிக்க முடியாது. இதற்குச் சில நெறிமுறைகள் வல்லுநர்களால் விதிக்கப்பட்டுள்ளன. அவை வரிவிதிப்புக் கொள்கைகள் அல்லது கோட்பாடுகள் (Canon of Taxation or Taxational Policy) எனப் பெயர் பெறும். பொதுவாக எந்த வரி விதிக்கப்பட்டாலும் மக்களை அது பெரிதும் பாதிப்பதாக இருத்தல் கூடாது. ஒரு செடியில் உள்ள பழுத்த பழத்தைப் பறிக்கும்போது அச்செடிக்கு ஊறு விளையாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். அதுபோன்றே வரிவிதிப்பு முறையும் என்று சிந்தனையாளராகிய கவுடில் கூறியுள்ளார். ஓர் ஆட்டின் உரோமத்தைக் கத்தரித்து விடலாமே தவிர அதன் தோலையே உரித்துவிடக்கூடாது. நிலக்கரி அல்லது மரக்கரி வியாபாரி ஒருவன் கரி தயாரிக்க ஒரு

17. குறள். *64–73.*

மரத்தையே வெட்டிச் சிதைத்துக் கட்டைகளாகக் குறைத்துக் குவித்துப் பின்னர் அவற்றை மூட்டம் போட்டு நெருப்பிட்டுக் கரியாக்கி விற்றுச் சிறிது ஊதியம் பெறுவது போன்று இருத்தல் கூடாது. அரசு வரிவிதிப்பு என்பது சுருங்கக்கூறின், வற்புறுத்தி மக்கள் அவதிப்படும் வகையில் வரிவிதிப்பு அமைதல் கூடாது. மலர் சேகரிக்கும் ஒருவன் எவ்வாறு செடிகள் தோறும் உள்ள மலர்களை மென்மையாகப் பறித்து மலர்ச் செடிகள் மீண்டும் தளிர்த்து அரும்பு விடுமாறு செய்கிறானோ அதுபோன்றே அரசனும் அல்லது ஆட்சியாளனும் மக்களை நோவவிடாது வரித் தண்டிப்புச் செய்தல் வேண்டும் என்று பொருளியல் வல்லுநர் விளக்குவர்.[18]

பண்டைத் தமிழ் அரசர் தம் வரி விதிப்புக் கொள்கையைப் பொறுத்தமட்டில், எந்த அடிப்படையில் வரிகள் விதிக்கப்பட்டன என்பதற்கு எழுத்து மூலமான ஆதாரங்கள் தெளிவாகக் கிடைக்கவில்லை. ஆனால் அக்கால அரசர்கள் வரிகள் மக்களைப் பெரிதும் தாக்கி அழிக்காதவாறு ஒரு வகையான கொள்கையைப் பின்பற்றி இருப்பதாக ஊகிக்க முடிகிறது. புறநானூற்றில் இதற்குரிய எடுத்துக்காட்டு ஒன்று காட்டலாம்.

"காய்ந்து முற்றிய நெல்லை அறுத்துக் கவளம் கவளமாகக் கொடுத்தால் ஒரு மா அளவிலான · குறுகிய நிலப்பகுதியில் விளைந்த நெல்லாயினும் அது ஒரு யானைக்குப் பலநாட்களுக்கு உணவாகும். மாறாக நூறு செய் அளவு பரப்புடைய நிலத்தில் விளைந்த மிக்க நெற்குவையாயினும் அவ்யானையை அவிழ்த்துவிட்டுத் தானே மேயுமாறு செய்தால் அதன் வாயினுள் செல்லும் நெற்கவளத்தை விடக் கால்களால் உழக்கப்பட்டு வீணாகும் நெல்மணிகள் மிகப் பலவாகும். இது ஓர் உலகியல் உண்மை. இந்த எடுத்துக்காட்டின் வாயிலாகப் புலவர் ஒருவர் ஓர் உண்மையை வரி விதிப்புத் துறையோடு சார்த்தி

---

18. Dr. J.C. Kumarappa, Fublic Finance & Our Poverty, p.3.

உணர்த்துகிறார். அஃதாவது, அறிவு சான்ற அரசன் ஒருவன் வரி கொள்ளும் முறையறிந்து செயல்படுவானாயின் அவன் நாடு கோடிப் பொருநர் வழங்கித் தானும் சிறந்தோங்கும். மாறாக அரசன் அறிவிலியாக மாறி நாள்தோறும் தரம் அறியாது பிதற்றித் திரியும் சுற்றத்தார் பேச்சினைக் கேட்டு அன்பின்றி மக்களை வருத்தி வரிவசூல் செய்வானாயின் அந்த யானை புகுந்த வயல் போலத் தானும் செல்வம் பெறான்; நாடும் கெடும்".

இதனைப் பின்வரும் புறப்பாடல் விளக்குவது காண்க.

"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை (வு) இல்லதும் பன்னாட்(கு) ஆகும்
நூறுசெறு வாயினும் தமித்துப்புக்(கு) உணினே
வாய்புகுவ தாயினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே"[19]

இப்புறநானூற்றுப் பாடல் எத்துணைப் பெரிய பொருளியற் கருத்தினைக் கொண்டுள்ளது என்பது நோக்க வியப்பு ஏற்படுகிறது. பிற்கால மேனாட்டறிஞர் கூறும் வரி விதிப்புக் கொள்கையின் சாரமாக இப்பாடல் திகழ்கிறது. இப்பாடல் அரசன் மிக்க அறிவும் உலகியல் ஞானமும் கொண்டிருக்க வேண்டும் என்பதனோடு, எவ்வகையில் மக்களிடமிருந்து வரிகளை வசூல் செய்ய வேண்டும் என்பதனையும் தெரிவிக்கிறது.

19. புறம். 184.

இது ஈக்கள் பூக்களிற் சென்று தேனை உண்ணும்போது அப்பூக்கள் அவ்வுண்டலைத் தெரியாதவாறு வரிதண்ட வேண்டும் என்பதனைப் புலப்படுத்தும் என்பார் பொருளியல் மேதை குமரப்பா அவர்கள்.[20] அன்றியும் இப்பாடற் கருத்து மேனாட்டுப் பொருளியல் அறிஞர் வெளிப்படுத்தியுள்ள வரி விதிப்புக் கொள்கைகள் சிலவற்றோடு ஒத்து விளங்குவது கண்டு மகிழத்தகும். மேனாட்டுக் கொள்கைகள் சிலவற்றை இங்குக் காணலாம்.

தவறாத் தன்மைக் கொள்கை (Canon of Certainity)

தவறாத் தன்மைக் கொள்கை என்பது மக்கள் அரசுக்குத் தவறாது கொடுத்துவிடும் கோட்பாடாகும். மேலே கண்ட புறப்பாடலில் அமைந்துள்ள சில அடைமொழிகளை நன்கு கவனித்தல் வேண்டும். அவையாவும் நுட்பமான பொருட் செறிவுடையவையாகும். *காய்* (நெல்) என்று நெல்லுக்குக் காய்தல் அடைமொழியாக வருகிறது. நெற்கதிர் நன்கு முற்றிய பின்னரே அறுவடை செய்யும் பருவத்தை அடைகிறது. முற்றுவதற்கு முன்னர் விளைவித்தவனுக்கு உடனடித் தேவை ஏற்படினும் அறுவடை செய்ய இயலாது. அதுபோல அரசனும் உரிய காலம் வரும்வரை வரி வாங்குவதற்குக் காத்திருத்தல் வேண்டும் என்பது இதனால் பெறப்படும். அவ்வாறு காத்திருந்தால் அரசன் விரும்பிய பொருளைக் குடி மக்களிடமிருந்து உறுதியாகப் பெறமுடியும் என்பது கருத்து. இக்கொள்கை ஆதம் சுமித்து என்பார் பெரிதும் பொருளாதாரம் பற்றிப் பேசும்போது வெளியிடும் "தவறாமைக் கோட்பாட்டினை" (Canon of Certainity) ஒத்திருப்பது காண்க. இதன்படி ஒரு குடிமகன் தான் அரசுக்குக் செலுத்தவேண்டிய வரித்தொகை எவ்வளவு? என்பதை முதலில் தெரிந்து கொள்ளுமாறு நிலையாக

---

20. Dr. J.C. Kumarappa, Public Finance & Our Poverty, p.3.

அல்லது உறுதியாக அது வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆண்டுதோறும் அல்லது பருவந்தோறும் அரசு நினைத்தபடியெல்லாம் மாற்றம் பெறுவதாக இருத்தல் கூடாது. அன்றியும் அவ்வரி எப்போது செலுத்தப்பட வேண்டும் (Time of Payment), எவ்வகையில் (Manner of Payment) செலுத்தப்படல் வேண்டும் முதலிய விவரங்கள் முன்கூட்டியே வரி கொடுப்போருக்குத் தெரிதல் வேண்டும். இதனை, 'உறுதிக் கொள்கை' அல்லது 'நிலையான கொள்கை' என்றும் கூறலாம். இவ்வாறு அறுதியிடப்படாவிடின் வரிவசூல் செய்யும் அதிகாரிகளின் மனம் போன போக்கில் ஒவ்வொரு முறையும் கூட்டப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் மக்கள் சொல்லொணாத் துயரம் அடைவர்.[21] எனவே உறுதிக் கோட்பாடு அல்லது தவறாமைக் கோட்பாடு என்னும் வரிக்கோட்பாடு தெளிவாக்கப்பட்டுள்ளது. 'காய்நெல்' என்ற தொடரமைப்பில் என்பது கவனிக்கத்தகும்.

இனி ஏனைய இரண்டு அம்சங்களாகிய எவ்வளவு வரி? எவ்வகையில் செலுத்துவது? போன்ற இரண்டும் இப்பாடலில் வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும், அக்கால ஆட்சியாளர் இவை பற்றி ஒரு குறிப்பிட்ட முறையைக் கடைப்பிடித்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம். இதன் விவரம் பின்வரும் பகுதியில் விளக்கப்படும்.

சமத்துவக் கோட்பாடு (அ) திறன்/சார்கோட்பாடு (Canon of Equality or Ability)

மேலே காட்டப்பட்ட புறநானூற்றுப் பாடலில் மற்றொரு அடைமொழியாகிய 'கவளம்' என்பதும் கவனத்திற்குரியது. அறுவடை செய்யப்பட்ட நெல்மணி கவளம் ஆக்கப்பட்டு அதன் பின்னரே யானைக்குக் கொடுக்கப்படல் வேண்டும் என்பதன் நுட்பம் யாது? அரசன் குடிகளிடமிருந்து அளவுக்கு மீறிய

21. Dr. Kewal Krishna Dewett quoted in "Modern Economic Theory", pp. 548, 549.

பெருந்தொகையை வரியாக எதிர்பார்த்தல் கூடாது; பேராசை கூடாது. மாறாக, அவ்வரிப்பளு மக்களால் தாங்கக் கூடியதாகவும் அளவில் குறைவானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதும் பெறப்படும். குடிமகன் ஒருவன் தன் சக்திக்கு மேற்பட்ட வரிப்பளுவை தாங்க முடியாது. அவனது பொருளாதார நிலை எத்தகையது என்பதறிந்து வரி விதித்தல் வேண்டும் என்பதை இக்கோட்பாடு விளக்குகிறது. சமுதாய நீதி என்பது மக்கள் தத்தம் ஆற்றலுக்கு ஏற்ப அரசுக்கு வரி செலுத்துவதேயாகும். இவ்வாறு அமைந்தால்தான் அரசன் அல்லது ஆட்சியாளன் மக்களிடமிருந்து வெறுப்பு ஏற்படாதவாறு அன்புடன் வரி செலுத்த முன்வருவர்; அதனால் நாடும் பொருநர் வளம் பெறும். ஆதம் சுமித்து இக்கோட்பாட்டினைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்: "ஒரு நாட்டின் குடிமக்கள் அந்நாட்டு அரசுக்குத் தங்களால் இயன்ற அளவு வரி செலுத்த வேண்டும் என்பது நியதி; இன்றேல் அரசு செயல்பட முடியாது. ஆனால் அவ்வரி விகிதம் அல்லது தாக்கம் மக்களின் சக்திக்கு ஏற்பவும் அவர்கள் அரசிடமிருந்து பெறும் நன்மைகளுக்கு ஏற்பவும் அமைதல் வேண்டும்".[22] மேலே காட்டிய புறநானூற்றுப் பாடற் பொருநர் ஏறத்தாழ இக்கோட்பாட்டின் துடிப்பைப் புலப்படுத்துகிறது எனலாம். வரிகள் குறைவாக இருந்தால் மக்கள் எளிதில் செலுத்திவிட முடியும்.

இவ்வாறு இப்பாடற் பொருளையும் அதன் நோக்கத்தையும் இக்காலப் பொருளியற் கோட்பாட்டிற்கு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிக்க விழிப்புடன் சிந்திக்க வேண்டியதும் இன்றியமையாதது. ஏனெனில் அப்பாடலில் அமையாத கருத்துக் களை அதில் ஏற்றிப் பார்ப்பதும் தவறாகும். ஆனால் பண்டைத் தமிழ்ச்சான்றோர் அறிவியலின் அடிப்படையில் சிந்தித்துள்ளனர் எனக் கொள்வதில் தவறொன்றும் இல்லை.

---

22. Dr. Kewal Krishna Dewett quoted in "Modern Economic Theory", pp. 548, 549.

வரி விதிப்பின் விகிதம் (Rate of Assessment)

பண்டைக் காலத்தில் அரசுக்குரிய வருவாயில் பெரும்பகுதி நிலவரியாகத்தான் இருந்துள்ளது. ஆகவே அக்காலத்தில் வரி விதிப்புக்கு வேண்டப்படும் நில அளவைப் பற்றியும் சிந்தித்திருப்பார்கள் எனக் கொள்ளலாம். பொதுவாக விளைவில் ஆறில் ஒரு பங்கு அரசுக்கு நிலவரியாகக் (Land Tax) கொடுத்திருக்கிறார்கள் எனக் கருத இடமுள்ளது. அன்றியும் அக்காலத்தில் நிலவரி பொருநர்களாகவே (தானியம் அல்லது பிற விளைபொருநர்) வழங்கியிருக்கிறார்கள் என்பது இதனால் பெறப்படும். ஒரு சார் அறிஞர் அக்காலத்தில் ஆறில் ஒன்று (One Sixty) என்பது வழக்கில் இருந்ததில்லை என்று கூறுகின்றனர்.[23] தமிழ் இலக்கியச் சான்றுகளைப் பொறுத்த மட்டில் இதற்குரிய ஆதாரம் மூலநூல்கள் வாயிலாகக் கிடைக்கவில்லை. ஆனால் திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர் இரண்டு இடங்களில் இதுபற்றி விளக்கம் தந்து சென்றுள்ளார்.[24] ஒரு இல்லறத்தான் தனது வருவாயில் ஆறில் ஒரு பாகத்தை அரசுக்கு அளிக்கவேண்டும் என்று பரிமேலழகர் கூறுகிறார்.

> "தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு
> ஐம்புலத்துஆறு ஓம்பல் தலை"

என்னும் குறட்பாவிற்கு உரை எழுதும் பரிமேலழகர், "அரசனுக்கு இறைப்பொருநர் (வரி) ஆறில் ஒன்று ஆயிற்று, இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூற வேண்டுதலான் என்பதறிக" என்று விளக்குவது காண்க. அன்றியும்,

> "உறுபொருளும், உல்குபொருளும் தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருநர்"

23. S.K. Govindasamy Pillai: Manimalar, p.44
24. குறள். 43, 756 பரிமேலழர். உரை

என்னும் குறட்பாவிற்கு உரை எழுதுங்கால் பரிமேலழகர், "ஆறில் ஒன்று ஒழியவும் உரியன கூறியவாறு" என்று மீண்டும் வலியுறுத்துவது காணலாம். இதனால் அக்காலத்தில் அவ்வழக்காறு இருந்துள்ளது என்று கோடலே பொருந்துவதாகும். ஒருசார் வரலாற்று ஆசிரியர்கள் "சங்க காலத் தமிழகத்தில் நிலவரி பற்றிய உறுதியான ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை' என்றும் 'சோழர் காலத்தில் பெரிதும் மனுநீதியே பின்பற்றப்பட்டது' என்றும் கூறுவர்'.[25] இக்கூற்றும் கவனிக்கத்தகும்.

வரிகளின் தாக்கம் (Incidence of Taxation)

வரி வதிப்பின் தாக்கம் அல்லது அழுத்தம் (Impact) எனப்படுவது சமுதாயத்தில் யார் யார் வரி கட்டுவது என்பதைப் பொறுத்ததாகும். பொதுவாக, மக்கள்தாம் வரி தருகிறார்கள் என்பதில்லை. சில வேளைகளில் வரிகள் பிற பகுதியினர் மீதும் தாக்குகின்றன.[26] அரசு வரி விதிக்கும்போது சில நெறி களையும், கொள்கைகளையும் கடைப்பிடிக்கிறது. இக்காலத்தில் இது இன்றியமையாதது. ஏனெனில் அரசின் குறிக்கோளே மக்கள் நலனைப் பேணுவதும் அவர்களின் வசதிகளைப் பெருக்குவதும் ஆகும். சமநிலைச் சமுதாய அமைப்பு வேண்டும் என்று குரல் எழுப்பும் இக்காலக் கட்டத்தில் வரி விதிப்பில் அரசு பெரும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் பண்டைக் காலத்தில் இக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதா என்பது ஆய்வுக்குரியது. இலக்கியங்களில் இதற்குரிய நேரடியான - வெளிப்படையான - குறிப்புக்கள் அல்லது ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால் மதி நுட்பத்துடன் துருவி அவற்றை ஆராய்வோமாயின் இதுபற்றிய சில மறைமுகமான தடயங்கள் இருப்பதை உணர முடியும்.

25. Dr. T.V. Mahalingam, South Indian Polity, p.162.
26. Kewal Krishna Dewett, Modern Economic Theory, p.568.

வரிப்பளுவின் தாக்கம் அல்லது அழுத்தம் (Incidence of taxation) என்பது மறைமுக வரி விதிப்பில்தான் (Indirect taxes) பெரும்பாலும் அமைகிறது. நேர்முக வரிகளில் (Direct taxes) அத்துணைப் பளு தென்படுவதில்லை. பொதுவாகப் பல்வேறு நுகர் பொருநர்கள் அல்லது அன்றாடத் தேவைப் பண்டங்கள் மீது விதிக்கப்படும் வரிகளே மறைமுக வரிகள் எனப்படும். இப்பண்டங்கள் மீது விதிக்கப்படும் வரிகள் முதலில் விற்பனையாளர் (Dealer) மீது விழுந்தாலும், இறுதியில் தாங்கிக் கொள்வோர் நுகர்வோரே (Consumer) ஆவர். இந்தப் பின்னணியில் சுங்கவரி (Customs Duty) இறக்குமதி ஏற்றுமதி வரி முதலியனவும் அக்காலத் தமிழகத்தில் எவ்வாறு அமைந்திருந்தன என்பது பற்றியும் சிந்திக்கவேண்டும்.

தமிழ் இலக்கியங்களில் இது தொடர்பான குறிப்புக்கள் பல்கிக் கிடக்கக் காணலாம். மிளகு, வாசனைப் பொருநர்கள் (Spices), பவளம், முத்து, மயில்தோகை முதலியன பற்றிய குறிப்புக்கள் பரவலாக உள்ளன. அக்காலத் தமிழகத்தில் பொதுவாக இறக்குமதியைவிட ஏற்றுமதியே அதிகம் என அறியலாம். இது நாட்டின் செல்வ வளத்தின் அறிகுறியாகும்.[27] இறக்குமதிப் பொருநர்கள் ஏற்றுமதிப் பொருநர்கள் ஆகிய இரண்டின் மீதும் வரிகள் விதிக்கப்பட்டன.[28] ஆயின் எத்தகைய வரி இவற்றின் மீது விதிக்கப்பட்டன என்பது துல்லியமாக விளங்கவில்லை. தமிழ்நாட்டிற்குச் சாதகமான ஏற்றுமதி இறக்குமதி வணிகம் (Favourable Balance of Trade) அமைந்திருந்த போது இத்தகைய வரிகள் தமிழ் வணிகரை விடப் பிற நாட்டின் வணிகர் மீதும் தான் அதிகமான தாக்குதல் நேர்ந்தது. ஏற்றுமதிப் பொருநர்கள் அதிகரித்தமையால் அவற்றை வாங்கும் பிற நாட்டார் அவற்றின் மீது விதிக்கப்பட்ட வரிப்பளுவைத் தாங்க

---

27. M.S. Poornalingam Pillai, Tamil India, pp. 73–77.
28. பட்டினப். 124, 125; குறள். 756.

நேர்ந்தது. வெளிநாட்டுச் செலாவணி (Foreign Exchange) நமக்குச் சாதகமாக அமைந்தது. ஏனெனில் தமிழக வர்த்தகம் வளர்ச்சியை நோக்கி நடை போட்டது. இந்நாட்டுப் பொருநர்கள் பலவற்றிற்கு மேலைநாடுகளிலும், கீழை நாடுகளிலும் மதிப்பும் தேவையும் அதிகரித்திருந்தன. ஆக தமிழ்நாட்டுச் செல்வநிலை (Public Wealth) மேம்பட்டு விளங்கியது.[29]

பொதுச் செலவினங்கள் (Public Expenditure)

ஒரு நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தில் வருவாய்க்குரிய வழி முறைகளைக் கண்டுபிடித்துப் பொருநர் திரட்டுவது எத்துணை இன்றியமையாததுவோ, அதற்கு மேலும் கவனிக்கப்பட வேண்டியது செலவினங்களாகும். பெரும்பாலான நாடுகளில் இன்று அரசின் கவனத்தை ஈர்த்து நிற்பது அரசுச் செலவினம் பற்றியேயாகும். இக்காலப் பொருளியல் சித்தாந்தத்தின்படி தனிமனிதன் செலவினம், அரசுச் செலவினம் ஆகிய இரண்டுக்குமுள்ள வேறுபாடு கவனிக்கத்தக்கது. ஓர் அரசு தனது வருவாய்க்குத் தக்க முறையில்தான் சமுதாயப் பணிகளுக்குச் செலவிடவேண்டும் என்பது புதிய பொருளாதார சிந்தனைக்கு ஒவ்வாது என்பர். வருவாயைவிடச் செலவுகள் பல்வேறு துறைகளுக்கும் கூடுதலாகவே செய்யப்படவேண்டிய கட்டாயம் ஏற்படும். ஆனால் தனி ஆள் வரவு-செலவு அவ்வாறன்று. சில வல்லுநர்கள் அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டுதோறும் துண்டுவிழும் நிலை (Deficit Budget) உருவாவது தவிர்க்க இயலாதது என்பர். ஆனால் அவர்கள் தனிப்பட்டவர் வாழ்வில் அவ்வாறு வரவுக்கு மிஞ்சிய செலவினம் கூடாது என்பர்.[30] இத்துறையில் பழந்தமிழ்ச் சான்றோரும் புலவர் பெருமக்களும் அரசர்களுக்கு எத்தகைய அறிவுரை அல்லது கருத்துரை வழங்கினர் என்பது சிந்திக்கத்தகும்.

---

29. Kewal Krishna Dewett, Modern Economic Theory, p. 568.
30. Dr. B. Natarajan, Somammal Endowment Lectures, pp. 35,36

வரவு-செலவுத் திட்டம்: தமிழ்ச் சான்றோர் கண்ணோட்டம்

சங்கச் சான்றோர் பலருள்ளும் தலையாய சிந்தனையாளராகிய திருவள்ளுவர் ஓர் அரசு தனக்கு வரும் செல்வத்தின் அளவைவிட அதிகமாக எக்காரணம் கொண்டும் செலவழித்தல் கூடாது என்று உரைத்துள்ளார்.

> "ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
> போகாறு அகலாக் கடை"[31]

என்றும்,

> "அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
> இல்லாகித் தோன்றாக் கெடும்"[32]

என்றும் வள்ளுவர் அறுதியிட்டுரைப்பாராயினார். இவ்விரு குறள் களும் அரசியலில் வருகின்றன; குடியியலில் அன்று. அஃதாவது, 'அரசர்க்குப் பொருநர் வருகின்ற நெறி அளவு சிறிதாயிற்றாயினும் அதனால் கேடு இல்லையாம்; போகின்ற நெறி அளவு அதனின் பெருவிதாயின் என்றவாறு' என்பது பரிமேலழகர் தரும் விளக்கமாகும். அன்றியும், 'தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கு ஏற்ப வாழமாட்டதான் வாழ்க்கைகள் உள்ளன போலத் தோன்றி மெய்ம்மையின் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இன்றிக் கெட்டுவிடும்' என்றும் உரைவிளக்கம் செய்வர் பரிமேலழகர். மேலும், 'அவ்வெல்லைக்கேற்ப வார்தலாவது, அதனின் சுருக்கக்கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்தும் துய்த்தும் வாழ்தல் (Balance of Budgetting) இதனால் முதலின் செலவு மிகமால் வரும் ஏதம் கூறியவாறு' என்றும் விளக்கியுள்ளார்.

---

31. குறள். 478.
32. குறள். 479.

மேலே காட்டிய இரு குறட்பாக்களும் அவற்றிற்குப் பரிமேலழகர் தரும் விளக்கமும் பண்டைக் காலத்தில் தமிழறிஞர் துண்டுவிழும் வரவு-செலவுத் திட்டத்தைக் கைவிடுமாறு வற்புறுத்தினர் என்பது புலப்படும். தனியாள் அல்லது குடும்பமாயினும் அரசாயினும் வரவுக்கேற்பவே செலவு செய்தல் வேண்டும் என்று கூறியுள்ளனர் பழஞ்சான்றோர். ஆயின் பிற்காலத்துப் புலவர் ஒருவர், "சான்றோர் கடன் கொண்டும் செய்வார் கடன்"[33] என்று அவசியம் ஏற்படும் போது சமுதாய நலன் நோக்கியும் தனிமனித முன்னேற்றம் நோக்கியும் கடன் பெறுவதில் தவறில்லை எனக் கூயியுள்ளது ஈண்டு மனங்கொள்ளத்தகும். இங்கு திக்கென்சு (Dickens) என்பார் கூற்றும் ஒப்பிடத்தக்கது.[34] "ஆண்டு வருவாய் இருபது பவுண்; ஆண்டுச் செலவு பத்தொன்பது பவுண். முடிவு மகிழ்ச்சியே; ஆண்டு வருவாய் இருபது பவுண்; ஆண்டு செலவு இருபது பவுண்; முடிவு வேதனையே" என்பது அவர் கூறிய அறிவுரை. எனவே திருவள்ளுவர் போன்ற தமிழ்ச் சான்றோர் நாடும் வீடும் மகிழ்ச்சியாக அமைய வேண்டுமாயின் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டம் அறவே கூடாது என்று வலி யுறுத்துவாராயினர். எனவே,

> 'முடிந்தால் வரவுக்குக் குறைவாகவே திட்டமிடு;
> முடியாதாயின் வரவையும் செலவையும் சமன்செய்;
> ஆனால் ஒருபோதும் பற்றாக்குறைத் திட்டம் திட்டாதே'[35]

இதுகாறும் கூறியவற்றால், 'கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற கூற்றுப் போலப் பற்றாக்குறையை 'நிரப்பக் கடன்கள் (உள்நாடு, வெளிநாடு)

33. முன்றுரையரையர்: பழமொழி நானூறு: பாடல் 82.
34. Dr. B. Natarajan: Quoted in "Economic Ideas in Thiruvalluvar" p.36.
35. Ibid

வாங்கினால் வேதனையும் மகிழ்ச்சிக் குறைவுமே மிஞ்சும் என்பது பண்டைத் தமிழரின் முடிவு. ஆனால் இக்கட்டுப்பாடு இக்கால மேலைநாட்டுப் பொருளியல் வல்லுநரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இன்று எல்லா வளர்ச்சி பெறாத - வளர்ச்சி பெறும் - நாடுகளிலெல்லாம் அரசாங்கம் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தைத்தான் செயல்படுத்துகின்றன. இக்காலப் பொருளாதார நிபுணர் சிலர் ஒவ்வொரு வரவு-செலவுத் திட்டமும் சமநிலையில் அமைய வேண்டுமென்பது இல்லை என்றும், காலப்போக்கில் வேறுபல பொருளாதாரக் காரணிகளால் அது சமன் செய்யப்பட்டுவிடும் என்றும் கருதுகின்றனர். பொதுவாகக் கூடியவரை அரசுகள் பற்றாக்குறைத் திட்டங்களைத் தவிர்த்தல் நன்று. ஏனெனில் பற்றாக் குறையைச் சீர்படுத்தக் கடன் பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, காலப்போக்கில் இது காரணமாகவே நாட்டின் பொதுக்கடன் அல்லது அயல்நாட்டுக் கடன் கூடிவிடும். இது தவிர்க்கப்படல் வேண்டும். வரன்முறையில்லாமல் கிடைக்கும் கடன் எல்லாம் பெற்று ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வலிமைப்படுத்துவது கருதிய பயனைத் தராது. மேலும், 'சில அரசுகள் பெற்ற கடனைத் திருப்பச் செலுத்த முடியாமல் போகலாம்; அல்லது கடனைத் திருப்பித் தருவதற்கே மேலும் கடன் வாங்கவேண்டிய நிலை ஏற்படலாம்; சில அரசுகள் நிலைதவறி மாற்றம் பெற்று விடுகின்றன; இன்னும் சிலசில நேரங்களில் வல்லரசுகளின் கெடுபிடியால் தம் பொருளாதாரச் சுதந்திரத்தையும், நாளடைவில் அதுகாரணமாக அரசியல் சுதந்திரத்தையும் இழக்கவேண்டிய சூழ்நிலையும் உண்டாகிவிடும்'.[36] இக்காரணங்களால் தொலைநோக்குடைய திருவள்ளுவப் பெருந்தகை வரவுக்கு மீறிய செலவினம் கூடாது என்பதைத் தெளிவாகவே கூறியுள்ளார்.

---

36. Dr. B. Natarajan: Quoted in "Economic Ideas in Thiruvalluvar"

திட்டமிடல் (Planning)

பொருளாதாரத் துறையில் திட்டமிடல் என்பது ஒரு புதிய ஏற்பாடாகும். இது மிகவும் கவனமாகவும் நுட்பத்துடனும் செய்யப்படல் வேண்டும். இதுபோன்ற வேறு பல அம்சங்களும் இன்றைய பொருளாதாரச் சிந்தனையில் புதுவதாக மேற்கொள்ளப் பட்டுள்ளன. அக்காலத்தில் இப்போது இயங்குவது போன்ற வல்லுநர் குழுக்கள் (Expert Committee or Commission) இருக்கவில்லை. ஆனால் ஒன்று உறுதியாக நினைவுகூரத்தகும். அக்காலத்திலேயே தமிழ்நாட்டில் ஒரு சிறந்த கட்டுக்கோப்பான நாகரிக அரசு செயல்பட்டுள்ளது. இதற்கு வரலாற்றிலும் இலக்கியங்களிலும் போதிய சான்றுகள் உள்ளன. அத்தகைய சீரிய அரசு இருந்திருக்கும்போது நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு பெருக்குவது, திட்டமிடுவது, செயல்களை மேற்கொள்வது போன்ற துறைகளில் பழந்தமிழ்ச் சான்றோர் சிந்திந்திருத்தல் வேண்டும்.

அரசியல் சிந்தனைச் சிற்பியாகிய திருவள்ளுவர் ஓர் அரசில் எத்தகைய அமைச்சரவை இருத்தல் வேண்டும் என்பதனையும் அமைச்சரின் கடமைகளும் பொறுப்புகளும் எவை என்பதனையும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். ஓர் அமைச்சருக்கு இருக்கவேண்டிய பல்வேறு திறமைகளுள் மிகவும் இன்றியமையாது அமைய வேண்டுவது, நாட்டு நலனுக்குரிய பல்வேறு திட்டங்களையும் செயல்களையும் எவ்வாறு திட்டமிட்டுச் செயல்படுவது என்பது பற்றிய அறிவேயாகும். திட்டங்கள் நிறைவேறுகின்றனவா என்பதை மேற்பார்வையிடுவது மிகவும் இன்றியமையாக் கடமையாகும்.[37] திருவள்ளுவர்,

"பொருநர்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"[38]

37. குறள். அதி. 68.
38. குறள். 676.

என்றும்,

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்

யானையால் யானையாத் தற்று"[39]

என்றும் கூறியுள்ளமை ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. இதற்குப் பொருநர் விளக்கம் செய்த பரிமேலழகர், 'வினை செய்யுமிடத்துப் பொருளும் கருவியும் வினையும் இடனும் ஆகிய ஐந்தனையும் மயக்கமற எண்ணிச் செய்க' என்று கூறியுள்ளார். மேலும் அவர், "செய்கின்ற வினையாலே அன்னது பிறிதுமோர் வினையை முடித்துக் கொள்க; அது மதத்தால் நனைந்த கபோலத்தினையுடைய யானையாலே அன்னது பிறிதுமோர் யானையைப் பிணித்ததனோடு ஒக்கும்" என்றும் விளக்கியுள்ளமை கருதற்பாலது. இவ்விரு குறட்பாக் களின் கருத்துக்களை நோக்குமிடத்துப் பொருளாதாரத் துறையில் திட்டமிடல் என்ற ஒரு பகுதி பற்றித் திருவள்ளுவர் எத்துணை அறிவு பெற்றிருந்தார் என்பது அறிந்து மகிழத்தகும். இனி, இவ்வதிகாரம் (அதி.68) எவ்வாறு திட்டமிடல் வேண்டுமென்பதையும், அதற்கு வேண்டும் உறுதுணைகள் பற்றியும் கூறுகிறது.

பொருளாதாரத் துறையில் திட்டமிடலுக்கு மிகவும் கவனிக்கப்பட வேண்டியது அதற்குரிய நிதி ஆதாரங்கள் அல்லது கையிருப்பு வசதிகள் ஆகும். வசதிகள் (Resources) இருவகைப்படும். ஒன்று, உள்நாட்டில் திரட்டப்படுவது; மற்றொன்று வெளிநாட்டில் பெறப்படுவது. வசதி அல்லது

39. குறள். 678.

ஆதாரம் என்பது பொதுவாக ஒரு நாட்டின் மக்கள் சக்தியையும் பொருநர் உடைமையையும் குறிக்கும். எனவே, எந்த ஒரு நல்ல செயல் நாட்டின் முன்னேற்றம் குறித்து மேற்கொள்ளப்பட்டாலும் அதற்கு உள்நாட்டில் கிடைக்கக்கூடிய உதவி வாய்ப்பு அல்லது வாய்ப்பு வளம் அனைத்தும் ஒருசேரத் திரட்டப்படுதல் வேண்டும். இதனைப் பொறுத்தே திட்டத்தின் தன்மையும் அளவும் விரிவும் அமையும். இவ்வாறு கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்களைத் திரட்டியபின் அடுத்து அரசு எந்திரம் அல்லது அமைச்சு கவனத்தில் கொள்ளவேண்டுவது கருவி என்பதாம். கருவி என்பது திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்குரிய எந்திரம் முதலிய சாதன வசதியாகும். வசதி வாய்ப்புக்கள், சாதன வசதிகள் ஆகிய இரண்டு காரணிகளையும் பொறுத்தே திட்டம் வரையறை செய்யப்படும். கிடைக்கும் வசதி வாய்ப்புகளுக்கும் மேற்பட்ட நிலையில் பேராசைப்பட்டுப் பெரிய திட்டங்களை மேற்கொள்ளின், அவை முற்றுப்பெறாமல் இடையில் நின்று விடும். அதனால் விளையும் துணைக்கேடுகள் பலவாம்.

மற்ற வசதிகளாகிய காலம், இடம் என்பனவும் இன்றியமையாதனவே. ஒரு தொழில் தொடங்கப்படு முன்பு அதனை எந்த இடத்தில் தொடங்கலாம் என்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். மூலப்பொருநர்கள் கிடைக்கும் வாய்ப்புள்ள பகுதியா, தொழிலாளர் கிடைப்பார்களா முதலிய அம்சங்கள் கவனிக்கப்படல் வேண்டும். ஏனெனில் திட்டத்தின் வெற்றி அதனைப் பொறுத்தே அமைவதாகும். அடுத்த அது தொடங்குவதற்குரிய காலம் சிந்தனைக்குரியது. மேற்கொள்ளப் படும் திட்டம் எத்துணை மாதங்கள் அல்லது ஆண்டுகள் கழித்துப் பலன் தரும் என்ற நிலையும் நன்கு தெளிவாக வேண்டும். ஏனெனில் ஒரு தொழிலில் அல்லது திட்டத்தில் முதலீடு செய்யப்படும் பொருளின் அளவுக்குரிய விதத்தில் பலன் கிடைக்குமா? என்பது போன்ற அம்சங்கள் ஆராயப்படுதல் வேண்டும். மாறாக எதிர்பாராத வகையில் கால நீட்டிப்பு

ஏற்படுமானால் அது முற்றுப் பெறுவதும்கூட தடைப்பட்டுப் போகலாம். கருதிய விளைவு அல்லது பயன் தருவதற்குப் பதிலாக மாறான விளைவும் உண்டாகிவிடலாம்.

திருவள்ளுவர் போன்ற தமிழ்ச் சான்றோர் கூறியுள்ள பொருநர் பற்றிய கோட்பாடுகள் காலத்தால் பழையனவாக இருப்பினும் அவற்றின் பயன் நோக்கி இக்காலப் பொருளியல் அறிஞர் பலர் கவனமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். அவர்கள் பொருநர் வாழ்வு பற்றிக் கூறியுள்ள பலதரப்பட்ட கருத்துக்கள் இக்காலச் சிந்தனையாளரையும் அறிவியல் வாதிகளையும் வியப்புறச் செய்கின்றன. பல அறிஞர்கள் இன்று இவற்றைத் தமது ஆய்வுக்கு ஆதாரமாகவும் கொள்கின்றனர்.

திருவள்ளுவர் கூறியுள்ள, "வினையால் வினையாக்கிக் கோடல்" என்று தொடங்கும் குறட்பா பிறிதொரு மிக முக்கியமானதும் பெரியதும் பயன்பாடுடையதுமான கருத்தினைப் புலப்படுத்துகிறது. இங்குத் திருவள்ளுவர், "ஒரு வினையால் பிறிதொரு வினையைச் செய்து கொள்வது, ஒரு மதயானையால் பிறிதொரு மதயானையைப் பிணித்தாற் போலும்; இது, தமக்கு ஒரு பகைவர் தோன்றினால், அவர்க்குப் பகையாயினாரை அவரோடு பகைக்குமாறு பண்ணுவார் பக்கல் பகையாய் வருவார் இல்லை" என்று விளக்கம் தருவது சிந்தித்தற்குரியது.[39(அ)]

இவ்வுவமையைப் பொருளியல் தொடர்பாகப் பொருநர் கொள்வோமாயின், ஒரு திட்டம் செயல்படும்போது, அதன் வளர்ச்சியாலும் விளைவாலும் தொடர்புடைய பிறிதொரு தொழிலையும் தொடங்குவதற்கு ஏற்பத் திட்டமிடல் (Perspective Planning) வேண்டும் என்பதாம். எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில் தொங்கிச் செயல்படும் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தைக் குறிப்பிடலாம்.[40]

39(அ). குறள். 678 மணக்குடவர் உரை.

40. C. Subramaniam, The Hindu Survey of Indian Industry, 1960, Sec. I, p.9.

இத்திட்டத்தின் முதன்மையான நோக்கம் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதேயாகும். இதனைச் செயல்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் மத்திய அரசு ஒரு அமைப்பை (Corporation) உருவாக்கியது. எதிர்பாராத வகையில், மிகமிக ஆழமாகத் தோண்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவ்வாறு பூமிக்கடியில் ஆழமாகத் தோண்டிச் செல்லுகையில், பேரளவில் தண்ணீர் ஊற்றுக்கள் கிளம்பி நீர்ப் பெருக்கினை ஏற்படுத்தின; இதனால் தோண்டுதல் பணியும் நின்றுவிடுமோ என்ற ஐயமும் அச்சமும் ஏற்பட்டது. ஆனால் வல்லுநர்கள் கூடி ஆராய்ந்து இத்தண்ணீர் வீணாகிவிடாமல் தேக்கி வைக்கப் பட்டால், வேண்டும்போது ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாசன வசதி அடையும் என்று கருதப்பட்டது. அதனால் பெரிய தேக்கங்கள் கட்டப்பட்டு நீரினைத் தேக்கி வைத்தார்கள். இது வினையால் வினையாக்கி கோடல் அன்றோ?

மேலும் பழுப்பு நிலக்கரியும் அளவில் கூடுதலாகவே கிடைத்தது. அதனால் நிலக்கரியின் உதவியால் பெரிய அனல் மின்சார நிலையம் (Thermal Project) அமைக்கலாம் என்ற கருத்து உருவாயிற்று. அவ்வாறே அது அமைக்கப்பட்டு மின்சார உற்பத்தியும் செய்யப்படுவதாயிற்று. பின்னர் இந்நிலக்கரியையும் சேலத்தில் கிடைக்கும் இரும்புத் தாதுவையும் சேர்த்துப் பயன்படுத்தி அங்கு ஓர் உருக்காலை (Steel Plant) தோன்றுவதற்கும் வழி வகுக்கப்பட்டது. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டம் எத்தனைத் துணைத் திட்டங்களுக்கு இடம் தந்தன என்பதை நோக்கும் போது வள்ளுவர் கூறிய குறட்கருத்து எத்துணை அளவு காலம் கடந்து பயன் தருகிறது என்பது அறியப்படும்.

திருவள்ளுவர் திட்டம் செயல்படுத்துவதில் மற்றொரு கருத்தும் வெளியிட்டுள்ளார். திட்டம் போடுவதற்கு முன்னரே அதற்குரிய பொருளைக் கைவசம் அகப்படுத்திக் கொள்ள

வேண்டும் என்கிறார். திட்டத்தைத் தொடங்கியபின் எதிர்பார்த்த பொருநர் உதவிக் கிட்டாதாயின் அது நிறைவேறாமல் நடுவில் நின்றுபோய்விடும். ஆகவே தனிமனிதனுக்குக் கூறுவது போலவே அரசுக்கும் அறிவுரை கூறுகிறார். இதனைப் பின்வரும் குறட்பா இனிது விளக்கும்:

> "குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்னகத்தொன்று
> உண்டாகச் செய்வான் வினை"[41]

என்பது குறட்பா. யானைப் போர் காண்பதற்கு உவகை தருவதாகும். ஆனால், அதனை ஒருவன் அதன்பக்கம் தரையில் நின்றுகொண்டு யானைப் போரினைக் காண்பானேயானால் யானையால் அவனுக்கு இடையூறு வருவதற்கும் வழியுண்டு. மாறாக, ஒரு குன்றின் மேல் ஏறி அமர்ந்துகொண்டு கீழே நடைபெறும் யானைகளின் சண்டையைக் காண்பது அவனுக்கு அச்சமும் இன்றி இன்பமும் மகிழ்ச்சியும் தோன்றும். அதுபோன்று, திட்டம் நல்லமுறையில் கருதிய பயனைத் தர வேண்டுமாயின், கடனை எதிர்பார்த்துத் தொடங்குதல் கூடாது. அனைத்து வசதிகளையும் பொருளையும் சேகரித்துக்கொண்டே தொடங்குவது நன்று என்கிறார் திருவள்ளுவர். இதுவும் இக்கால அறிஞர் மனங்கொள்ளத் தகுவதாகும்.

அரசு செலவிடத் தகுவன (Items of Expenditure)

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் அரசு செலவு செய்த தொகை வருவாயின் அளவை விடச் சிறியதாக இருந்தது என்று கூறியுள்ளார் அறிஞர் மகாலிங்க சாத்திரியார் அவர்கள்.[42] ஆனால் அரசு எவ்வளவு செலவு செய்தது என்பது பற்றிக் கவலை இல்லை: செய்த செலவினம் முழுமையும் மக்களின்

41. குறள். 758.
42. South Indian Polity, p. 195.

பெரும்பான்மையான நன்மைகளுக்கே செலவிடப்பட்டுள்ளன. இதுபற்றி தால்டன் என்ற பேரறிஞர் பின்வருமாறு கூறியுள்ளார்: "பொதுப் பொருளாதாரம் (Public Finance) என்பது ஓர் அறிவியலாகவும், பொருளியற் கலையாகவும், அரசியல் சித்தாந்தமாகவும் கருதப்படவேண்டுமாயின் அது ஒரு கொள்கைக் கோவை மட்டும் அன்று; ஓர் உயர்ந்த பொதுநலத் தத்துவம் அதன் அடிப்படையான துடிப்பாக இருத்தல் வேண்டும்; அதனால் மக்களுள் பெரும்பாலானோர்க்குப் (Maximum good for maximum number) பெரும்பான்மையான சமுதாய நலன்கள் அமைதல் வேண்டும்" என்று கூறினார்".[43]

திருவள்ளுவர் பொதுப் பொருளாதாரச் செலவினம் பற்றிக் கூறும்போது 'வகுத்தல்' (Distribution) என்ற ஒரு கருதுகோளைப் புகுத்தியுள்ளார்.[44] அக்காலத்தில் அவர் விநியோகித்தல் அல்லது பகுத்து வழங்குதல் என்ற பொருளியற் கருத்துப் பொதிந்த தொடராக அதனைப் பயன்படுத்தியிருக்க மாட்டார் எனக் கருதினும் ஒன்று மட்டும் உறுதியாக நினைத்திருப்பார். அஃதாவது, மக்களுள் பெரும்பான்மை யானவர்களுக்கு அரசன் பொருளைச் செலவிட்டு நலன்கள் பல செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார் எனக் கொள்வது தவறாகாது. புறநானூற்றுப் பாடல் ஒன்று அரசுப் பொருநர் எவ்வாறெல்லாம் செலவழிக்கப்படல் வேண்டும் என்பதனை விளக்குவது காண்க: 'மன்னர் பெருமானே, நீ அரசுப் பணத்தை அறம், பொருநர், இன்பம் ஆகிய மூன்று துறைகளுக்குச் செலவிட வேண்டும்".[45] அப்பாடல் அடிகள் வருமாறு:

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றாமைநின் போற்றா மையே" - (புறம். 28)

---

43. Dalton, Public Finance, p.9
44. குறள். 385.
45. புறம். 28.

ஈண்டு அறம் என்றது மக்களின் வாழ்க்கையை வளமாக்கும் பல்வேறு செயல்திட்டங்களுக்குச் செலவிடுதலைக் குறிக்கும், எனக் கொள்வது பொருந்துவதாகும். பொருநர் என்பது மேலும் பொருநர் வரும் வழியில் செலவிடுதலாம்; இன்பம் என்பது மக்கள் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும், நிறைவாகவும் இருக்கும.்று பல்வேறு செயல்களை அல்லது வினைகளை அரசு மேற்கொள்வதாகும். இவ்வாறு மூன்று முக்கிய துறைகளில் அரசு பொருளைச் செலவு செய்யவேண்டும் என்பது பழந்தமிழ்ச் சான்றோர் அறிவுரையாகும்.

அரசாங்கத்தின் பொதுச் செல்வம் (அரசனது செல்வம்) தெய்வ பூசனை வழிபாடு முதலியவற்றிற்கும், அறிஞர், வறிஞர் முதலியானவர்க்கும், புகழின் பொருட்டும் (நாட்டின் பெருமை) செலவிடப்பட்டதாகத் தெரிகிறது. அன்றியும், அரசன் தான் நாடு காவலுக்கு வைத்திருந்த நால்வகைப் படைகளுக்கும் (தேர், யானை, குதிரை, காலாள்) செலவு செய்துள்ளான். பகைவர் வலி தொலைப்பதற்கும், நட்பினைத் தேடுவதற்கும் பொருநர் செலவிடப்பட்டது. அடுத்தபடியாக மக்களின் பல்வேறு வசதிகளுக்கும், மண்டபம் கட்டல், பொழுதுபோக்குக்குரிய பூங்கா, நந்தவனம் முதலியன நிறுவுதல் போன்ற இனங்களுக்கும் பொதுச் செல்வம் செலவிடப்பட்டது.[46]

பண்டை இலக்கியங்களை நுணுகி ஆராயின், அக்காலத்தில் பாதுகாப்பு, வளர்ச்சிப் பணி (Development) வாணிகம் (Commerce) ஆகிய முப்பெரும் இனங்களுக்குச் செலவிட வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. பாதுகாப்பு என்பது வெளிநாட்டுப் பகையை விலக்குவதற்குப் படையும், உள்நாட்டுக் காவலுக்குக் காவலரும் (Police) ஆகிய இருதிறத்தார்க்கும் செலவிட்டு அவர்களை மனநிறைவுடன் வாழ வைப்பது ஆகும். பொதுவாகப் பண்டைத் தமிழகத்தில் முடியுடை வேந்தரும்

46. குறள். 385 (பரிமேலழகர் உரை விளக்கம்).

வேளிரும் தத்தமக்குள் பகைமை பூண்டு அடிக்கடி போர் செய்து வந்தனர் என்பது புறநானூறு போன்ற சங்க நூல்கள் சான்று பகரும். எனவே, அரசர் எப்போதும் நிலையான படையை (Standing Army) வைத்துப் பேண வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. திருவள்ளுவர் படைமாட்சி, படைச் செருக்கு என்ற இரு அதிகாரங்கள் அமைத்துப் படையின் இன்றியமையாமையை வலியுறுத்துவது காணலாம்.[47] புறநானூறும் இதனை விவரித்துப் பேசும். எளிய காரணங்களுக்கும் போர்கள் நிகழ்ந்த காலம் அக்காலம். எனவே படை இன்றியமையாததாயிற்று.

ஒரு நாட்டின் பாதுகாப்புப் படைவீரர்கள் மனக் குறையோ, பொருட்குறையோ இன்றி மகிழ்ச்சியாக வாழும் வகையில் அரசன் அவர்களைப் பேணிவருதல் வேண்டும் என்பார் திருவள்ளுவர்.[48] மேலும் அப்படை வீரர் எண்ணிக்கையில் குறைவாகவோ, வறுமையின் பிடியிலோ இருத்தலும் தகாது என்பார்.[49]

"சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை"

என்பது குறட்பா. சிறுமை - எண்ணிக்கையில் சுருங்குதல்; துனி - நீங்காத வெறுப்பு; வறுமை - பற்றாக்குறை. இம்மூன்று வகையான குறைபாடுகள் இல்லாமல் அமைவதே வெற்றிப் படைக்கு இலக்கணமாகும். எனவே நிலையாக இத்தகு படையைக் காத்தல் வேண்டின் பொருட்செலவு பெரிதாகும் என்பது தெளிவு. இதற்கு ஓர் அரசு பின்வாங்குதல் கூடாது. பகைவன் எப்போது தாக்குவான் என்பது தெரியாது. எனவே நிலைப்படையை (Standing Army) அக்காலத்தில் அரசர்கள் போற்றிக் காத்து வந்துள்ளார்கள்.

---

47. குறள். அதி. 77, 78.
48. குறள். 382 பரிமேலழகர் உரை.
49. குறள். 382 பரிமேலழகர் உரை.

இவ்வுண்மை (நிலைப்படை இருந்தமை) புறநானூற்றாலும் தெளிவாகும். சங்க காலச் சோழ மன்னருள் ஒருவனான நலங்கிள்ளி என்பவன் பெரும்படையை வைத்திருந்தான். அவன் காலத்தில் அமைதி நிலவியதால் படைவீரர் போர்கள் புகும் நிலை இல்லாததாயிற்று. அரசனால் வழங்கப்பட்ட வசதிகளை நன்கு நுகர்ந்து மனவெழுச்சியும், தோள் தினவும் கொண்டு பாசறையில் ஒய்வெடுத்து வந்த படைவீரர் சிலர் பகைவரொடு பொருதும் வாய்ப்பு நெடுநாட் கிட்டாமையால் தமக்குள் ஒருவரை ஒருவர் மோதித் தினவு தீர்த்துக் கொண்டனர் என்று புறப்பாடல் ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

> "மண்பதை காக்கும் நன்னாட்டுப் பொருநர்ன்
> உட்பகை ஒருதிறம் பட்டெனப் புட்பகைக்கு
> ஏவா னாகலின் சாவேம் யாமென
> நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப"

என்பது கோவூர் கிழார் பாட்டு.[50] சோழ மன்னன் விரிச்சி (சகுனம்) நோக்கிப் போர்க்கு எழாமல் போக, படைவீரர் தோள் தினவெடுப்பதால், தம்மில் உட்பகை முளைத்ததோ என்று ஐயுறும் வண்ணம் ஒருவரை ஒருவர் போலியாகப் பொருது தமது போர்ப் பண்பினைப் பேணி வந்தனர் என்பது இப்பாடலின் பொருநர். இதனால் நிலைப்படை எப்போதும் இருந்தது என்பதும் அதனை அரசன் நன்கு கவனித்து வந்தான் என்பதும் புலப்படும். படவே அதற்குச் செலவும் கூடுதல் ஆயிற்று. இது அக்கால அரசுகள் தவிர்க்கமுடியாத ஒன்று. இன்றும் இதே நிலைதான் என்பது வெள்ளிடை மலை.

பொதுமக்களுக்கு நலம் பயக்கும் வளர்ச்சித் திட்டங்கள் சில அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கும் பொருநர் ஒதுக்கப்பட்டது. வரலாற்றில் இடம்பெற்றுள்ள புகழ்மிகு

---

50. புறம். 68.

கரிகாலன் என்ற சோழ மன்னன் பொதுப்பணிகள் சிலவற்றை மேற்கொண்டு செயல்படுத்தியுள்ளான். காடு கொன்று நாடாக்கியது. நீர்ப்பாசனக் குளங்களை வெட்டியது போன்ற நலத் திட்டங்கள் அவனால் நிறைவேற்றப்பட்டுள்ளன. புதிதாக மக்கள் குடி ஏறும் சேரிகளும் அமைத்துத் தரப்பட்டன.[51] புறநானூற்றிலும் இதுபோன்ற செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. மழை நீர் வீணாகக் கடலில் சென்று கலக்காமல் வேளாண் மாந்தர்க்குப் பயன்படுமாறு ஆங்காங்குத் தேக்கங்களும் கண்மாய்களும் அமைக்கப்பட்டு நீர் தேங்கி நிற்கும் வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

"உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் புணர்ந்திசி னோரே
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகல்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே அதனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலன்நெறி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே
தள்ளா தோரிவண் தள்ளா தோரே"[52]

இதனால் வேளாண்மையின் இன்றியமையாமையும் அதற்கு நீர்ப்பாசன வசதி எத்தனை வேண்டற்பாலது என்பதும் வலியுறுத்தப்பட்டன.

இனி மற்றொரு வகையான செலவும் அரசனால் செய்யப்பட்டது. இது நிருவாகச் செலவு எனப்படும் (Administrative Expenditure). வணிகம் தொடர்பான சுங்கவரி முதலியவற்றைக்

51. பட்டினப். 283–285.
52. புறம். 18.

கண்காணிக்கும் அலுவலர் சிலர் அரசின் அமைப்பில் பணி புரிந்தனர். அவர்களுக்கு ஊதியம் முதலியன தரப்பட்டன. கரிகால்சோழன் காலத்தில் கடற்கரையில் இறக்குமதி ஏற்றுமதி தொடர்பான அலுவலர்கள் விழிப்பாகக் கண்காணித்து வந்தனர். அவ்வலுவலர்கள் அரசனால் நன்கு பேணப்பட்டனர்.[53]

மேலும் அரசர்கள் அக்காலத்தில் அவைக்களப் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் பொன்னும் பொருளும் கொடுத்து உதவியமை அறியப்படுகிறது. இதுபற்றிய குறிப்புகள் பண்டை இலக்கியங்களில் நிரம்பக் காணப்படுகின்றன. அக்காலத்தில் புலவர்கள் அரசர்களுக்குத் தொடர்பு அதிகாரிகளாகப் (Liasion Officers) பணியாற்றினர். சமுதாய வாழ்வில் மக்களுக்கும் மன்னனுக்கும் இடையே பாலமாக அமைந்திருந்தனர் பழம்புலவர்கள். அதனால் அவர்கள் அரசனால் மதிக்கப்பட்டனர்; பொருளும் பெற்றனர்.

பொருநர்ற்றுப்படையில் ஓர் அழகிய எழுத்தோவியம் தீட்டப்பட்டுள்ளது. கரிகாலன் அவையில் ஒரு கலைக் குடும்பம் எவ்வாறெல்லாம் நடத்தப்பெற்றது; எத்துணைச் சிறப்புக்கள் செய்யப் பெற்றனர் என்பது போன்ற செய்திகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. பரிசுகள் பல வழங்கப்பட்டன.[54] மேற் கூறியவற்றால் பண்டைக் கால அரசரும் அமைச்சரும் மக்களுக்கு நலம் பல செய்தலில் பெரு முனைப்புக் காட்டிப் பெரும் பொருநர் செலவு செய்தனர் என்பதும் தெளிவாகும்.[55] சுருங்கக் கூறின் அக்கால அரசர் பலர் மக்கள் நலன் நாடுவதில் அக்கறை காட்டினர் எனக் கொள்ளலாம். முடியாட்சி நிலவியிருந்தாலும் அரசர்கள் குடி தழுவிக் கோலோச்சியதனால் 'நல அரசு' (Welfare State) என்று இக்காலத்தில் கூறப்படுவதுபோல ஒருவகையில் மக்கள் மனநிறைவு எய்துமாறு போற்றிப் பேணப்பட்டனர்.

---

53. பட்டினப். 120–137.
54. பொருநர். 77–129.
55. பொருநர். 152–176.

பொதுக்கடன் (Public Debt)

தனிமனித வாழ்க்கையில் ஒருவன் பற்றாக்குறை ஏற்படும் போது வாழ்க்கைச் செலவினை ஈடுகட்டப் பிறரிடமிருந்தோ பிற வணிக நிறுவனங்களிடமிருந்தோ கடன் பெறுகிறான். இது உலகில் உடனடியாகத் தனது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள இயலாத நிலையில் இவ்வாறு அவன் கடன்படுகிறான். இது தனிமனிதன் படும் கடனாகும் (Individual or personal debt) எனப்படும். அதேபோல் ஒரு நாடும் சில சமயங்களில் கடன் பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுவதுண்டு. அதுபோது அது மக்களிடமிருந்தோ பிற நாட்டினரிடமிருந்தோ கடன் பெறுகிறது. இதற்குப் பொதுக்கடன் (அ) அரசுக் கடன் (Public Debt or State Debt) என்பது பெயர். வழக்கமாக இத்தகைய பொதுக்கடன் படையைக் காத்தற்கும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் வாங்கப்படும். இவ்வாறு நாடு மற்றொரு நாட்டிடம் கடன் வாங்குவது என்பது புதிய பொருளாதார உத்தியாகும். பண்டைக் காலத்தில் இது வழக்குப் பெறவில்லை. இந்தியாவைப் பொறுத்த மட்டில் வெள்ளையர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர்வரை பொதுக்கடன் அல்லது அரசாங்கக் கடன் என்பது கேள்விப்படாத ஒன்றாகும். முடியரசர்கள் ஆண்ட காலத்தில் அரசன் கடன் படுவானானால் அது அவனது தனிக்கடனாகும். மக்கள் தர வேண்டியதில்லை. அரசனே கடனைத் தீர்ப்பான்.[56] பழந் தமிழகத்தில் அரசர்கள் பொதுக்கடன் வாங்கினார்களா என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. ஆயினும் சில ஊகங்கள் மேற்கொள்ளப்படலாம்.

பண்டைக் காலத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெரிய நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே பெரும் பொருநர் செலவழிக்க வழியில்லை. ஒருகால் சில நன்மைகள் செய்யப்பட்டிருப்பினும் கடன் பெற்றுச் செய்தல் என்பது அன்று

56. Dr. J.C. Kumarappa, Public Finance & Our Poverty, p.44.

கனவிலும் கருதப்படாததொன்றாம். எனவே பொதுக்கடன் அல்லது அரசுக் கடன் என ஒன்று ஏற்பட வழியில்லை. மேலும் அடிக்கடி நடந்த போர்களும், அரசர்களாலேயே பராமரிக்கப்பட்டன. அதற்காகக் கடன் வாங்கும் பழக்கம் இல்லை. போருக்கென்று தனியாக மக்களிடமிருந்து கடன் பெற்றதாகக் குறிப்பொன்றும் இல்லை. சிற்றரசர்கள் அல்லது நட்பரசர்கள் போர் நிகழும்போது பேரரசருக்குப் பொருளும் படையும் உதவியுள்ளனர்.

முடிவாகக் கூறுமிடத்துப் பண்டைக் காலத்தில் அரசர்கள் பொருளின் இன்றியமையாமையை உணர்ந்து அதனை ஈட்டும் முயற்சிகள் மேற்கொண்டனர். பெரும்பாலும் வரிகளின் மூலமே பொருநர் சேர்க்கப்பட்டது. அன்பொடும் அருளொடும் வந்த பொருளையே அக்கால அரசர் விரும்பினர். அவர்கள் அறத்தின் மீது நம்பிக்கைக் கொண்டிருந்தனர். வரிகள் பொருநர் களாகவே (In kind) பெரும்பாலும் தரப்பட்டன. வரவுக்கும் செலவுக்கும் இணையாகவே செலவழிக்கப்பட்டது. பற்றாக் குறை வரவு - செலவு (Deficit Budgetting) என்பது அன்று இல்லை. எதனையும் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும் என்ற கருத்துக் கால் கொண்டிருந்தது. பெரும்பாலும் மக்கள் நலன் விரும்பிய அரசரே ஆட்சிபுரிந்ததால் குழப்பமோ கலகமோ ஏற்பட்டதாகக் குறிப்பொன்றும் கிடைத்திலது. புலவர் பலர் பல சமயங்களில் பாடிய புறப்பாடல்கள் பல இக்காலப் பொருளியல் அறிஞர்களால் வியப்புடன் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகையில் பண்டைய இலக்கியங்கள் ஆட்சிக் கலைப் படைப்பாகவே விளங்குகின்றன எனக் கூறுவது மிகையாகாது.

5. வேளாண்மை

வேளாண்மையின் இன்றியமையாமை

தமிழில் வேளாண்மையைக் குறிக்கப் பல சொற்கள் உள்ளன. சொற்களின் தோற்றம் பற்றிய ஆய்வின்படி, "உழவு" என்னும் சொல் உழைத்து வேலை செய்வதைக் குறிக்கும். வேளாண்மை என்னும் சொல் ஒரு முயற்சி மேற்கொள்வதைக் குறிக்கும். சங்க நூல்கள் பலவற்றிலும் உழுத்தல் என்னுஞ் சொல், அல்லற்படுதல், துன்புறுதல் என்னும் பொருளிலேயே கையாளப்பட்டுள்ளது.[1] மூன்று முதன்மைத் தொழில்களான, வேளாண்மை, நெசவு, வணிகம் ஆகியவற்றில் பண்டைத் தமிழ்நாட்டில் வேளாண்மையே சிறப்பானதாகக் கருதப்பட்டது. பாண்டிய நாட்டு மக்கள் வேளாண்மையிலும் வணிகத்திலும் சிறப்புப் பெற்றிருந்தனர்.[2] சிசரோ ஒருமுறை, "பயனடையும் எல்லாத் தொழில்களிலும் வேளாண்மையைப் போன்று அதிக ஆதாயம் தருவதும், மகிழ்ச்சியளிக்கக் கூடியதும், மனிதனைத் தளைகளினின்றும் விடுபடச் செய்வதுமான வேறு தொழி லில்லை" என்று கூறியுள்ளார்.[2(அ)] பாண்டிய மன்னன் தன் ஒரு கையில் கலப்பையையும் மற்றொன்றில் சமன் செய்து சீர்தூக்கும் கோலையும் ஏந்தி மக்களைக் காத்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.[3] திருக்குறளில் ஒரு முழு அதிகாரமே உழவுக்கு ஒதுக்கியிருப்பதால் அதன் தனிச்சிறப்பு நன்கறியப்படுகிறது. அவ்வதிகாரத்தில் தெய்வப்புலவர் வேளாண்மையின் பெருமை களைப் பற்றியும், வேளாண் தொழிலாளர்களும் உழவர்களும் ஆற்றும் பணியைப் பற்றியும், வேளாண் முறைகளைப் பற்றியும்

---

1. குறுந். 13, 48, 141, 149, 302, 360, 400.
2. மதுரைக். 122-123.
2(அ). Alexander Gray, The Development of Economic Doctrine, p.35.
3. சிலப். அழற்படு. 65-66.

பரக்கப் பேசியுள்ளார். அன்றியும், திருவள்ளுவர், குடிசெயல் வகை, வேளாண்மை, இன்னல் ஆகியவற்றை முறைப்படுத்திப் பேசியிருப்பது, ஒருவன் தன்னுடைய நிலத்தில் பாடுபட்டுக் குடும்பத்தைப் பேணாவிட்டால் வளம் பெற்று வாழ முடியாது என்பதைக் குறிப்பால் உணர்த்துவது போன்றுள்ளது. இவ்வுலகில் வளம் பெற வேண்டி மனிதன் செய்யும் எல்லாத் தொழில்களும், தேடல்களும் வேளாண்மையையே மையமாகக் கொண்டுள்ளன வாகலின் வேளாண்மையே எல்லாவற்றிலும் சிறப்புப் பெற்ற தொழில் என்பதனைச் "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்னும் குறள் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்.[4]

ஆகவே, வேளாண்தொழிலில் இன்றியமையாமை பண்டைத் தமிழர்களால் நன்குணரப்பட்டிருந்தது. இன்றைய இந்தியாவின் முற்போக்கான உள்ளம் கொண்டவர்களும் அதே கருத்தைக் கொண்டிருந்தனர். நேரு பெருமகனார் ஒரு முறை "இந்நாட்டில் வேளாண்மை தோல்வி யுற்றால், நாம் தோல்வி யுறு கிறோம், அரசு தோல்வி யுறுகிறது, ஏன், நாடே தோல்வி யுறுகிறது" என்று கூறியுள்ளார்.[4(அ)] இத்தகு மதிப்புடைய தொழில் செழிக்க வேண்டுமெனில், காலத்தில் மழை பெய்ய வேண்டும். ஆகவே, திருவள்ளுவர் வான்சிறப்புப் பற்றியும் கூறியுள்ளார். நக்கீரரும் பிசிராந்தையாரும் நாடு வறட்சியடைந்தபோது வேளாண் தொழிற்கருவிகள் வீட்டு மூலைகளில் கிடத்தி வைக்கப்பட்டிருந்த வெறுமைச் சொல்லோவியத்தை நன்கு தீட்டியுள்ளனர்.[5]

வேளாளர்

பண்டைத் தமிழ்நாட்டில் வேளாளர், உழவர் ஆகியோர் வாழ்வு நெறி பற்றிப் பல பாடல்கள் கூறுகின்றன. "உழுவார்

---

4. குறள். 1031.
4(அ). The Hindu, dated August 3,1963 (First Page)
5. அகம். 141; புறம். 212.

உலகத்தார்க்கு ஆணி" என்று கூறப்பட்டுள்ளது. உழவர்கள் வாழத் தம் கலப்பையையே நம்பியிருந்தனர்.[6] நிலம் என்னும் நல்லாளை நம்பிய எவரும் கைவிடப்படுவதில்லை; நிலத்தினின்றும் பெறப்பட்ட நெல் மலைபோல் குவிக்கப் பட்டிருந்தது;[7] உழவர்கள் முழுவதும் நிரப்பப்பட்ட கலயங் களினின்றும் கள்ளை மாந்தி மகிழ்வுற்றிருந்தனர்.[8] உழவர் வாழ்வைப் பற்றிய சொல்லோவியம் ஒன்றைப் பட்டினப்பாலை தீட்டியுள்ளது. உழவர்கள் அல்லது கலப்பையை ஏந்தியவர்கள் கடவுளரை வணங்குவர்; கொலை, கொள்ளை முதலிய மறத் தொழில்களில் ஈடுபடுவாரல்லர்; கடவுளர்க்கு உயிர்ப்பலி கொடுப்பர்; நான்கு மறை நூல்களையும் நன்கு கற்றவரை மதித்திருப்பர். அவர்கள் தம் எருதுகளை நன்கு பேணிக் காத்தனர். அவர்கள் தாராள மனமுடையவராய் விருந்தினர்க்கு உணவையும், இன்சுவைப் பொருட்களையும் அளித்தனர். அவர்கள் நிலங்களில் பாடுபட்டதால் இயற்கையோடு ஒன்றியிருந்தனர். அவர்கள் நல்லவர்களாகவும், மகிழ்ச்சி யுடையவர்களாகவும், மனநிறைவு பெற்றவர்களாகவுமிருந்தனர். அவர்கள் இருபிரிவினரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு, அதனை ஆராயும்போது நடுவுநிலை பிறழாது தீர்ப்பளித்தனர். அவர்கள் உணர்ச்சி வயப்படுபவர்களாகவும் வாய்மையே பேசுபவர்களாகவுமிருந்தனர். பொய் பேசுவதாலுண்டாகும் அவமானத்தையும், மதிப்புக் குறைவையும் அவர்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் தமது விளைபொருட்களைக் கொடுத்து மற்றவற்றைப் பெறும்போது, குறைவாகக் கொடுத்தோ, அளவிற்கதிகமாக பெற்றோ மற்றவரை ஏமாற்றும் எண்ண மில்லாதவராயிருந்தனர். அவர்களுடைய நேர்மையுணர்வையும் வாய்மையையும் சொல்லால் வருணிக்கவியலாது.[9] வேளாண்மை

---

6. புறம். 93.
7. நற். 60.
8. அகம். 37, 346; புறம். 379; குறுந். 155.
9. பட்டினப். 199–212.

என்னும் சொல்லுக்கு, கொடைப்பண்பு என்னும் பொருளுமுண்டு.[10] அவர்கள் தம்முடைய வயல்களினருகிற் செல்லும் அனைவருக்கும் கரும்பை அளித்தனர்.[11] அவர்கள் வீட்டிற்குச் செல்பவரனைவருக்கும் மூங்கிற் குடுவைகளில் நிரப்பிய தேனையும், கால்வாய்களிற் பிடித்த வாளை மீன் கறியையுமளித்தனர்.[12] அவர்கள் நடிகர்களுக்கும், நாட்டிய நங்கைகளுக்கும் நெய்யிற் சமைத்த ஊனை அளித்தனர்.[13] இரப்பவர்க்குக்கூட நெய் கலந்த சோறு அளிக்கப்பட்டது.[14] இவ்வுழவர்கள் தம்மிடம் மிகுதியாயிருந்த உணவுப்பொருட்களைப் பதுக்கி வைக்கவில்லை. மிகுதியாயிருந்த அனைத்துப் பொருட்களும் தேவையுள்ளவருக்களிக்கப்பட்டன.[15]

உழவர்கள் பண்டை நாளில் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர். அவர்கள் ஏரோர் (கலப்பையைக் கையாளுபவர்), களமர் (வயலில் வேலை செய்பவர்), வேளாளர் (வேளாண்மை செய்பவர்) என்று அழைக்கப்பட்டனர்.[16] அவர்கள் உலகத்தின் அச்சாணி என்று கருதப்பட்டனர். கலப்பையை ஓச்சுபவர்களும், வேளாண்மை செய்பவர்களும் செழிப்புடன் வாழ்ந்தனர். மற்றவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்பட்டும், அவர்களுக்குக் குற்றேவல் புரிபவர்களுமாயிருந்தனர்.[17] வேளாண்மை செய்தவர்கள் என்றும் இரந்ததில்லை. அவர்கள் மற்றவர்களுக்குத் கொடுத்துதவினர். இவ்வாறு அவர்கள் தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலும் பெற்றியராயிருந்தனர். தம்பொருள் அனைத்தையும் மற்றவர் களுடன் பங்கிட்டு வாழ்ந்தனர்.[18] உலகப் பற்றுகளை

10. திவாகர நிகண்டு.
11. புறம். 28.
12. புறம். 42.
13. அகம். 136.
14. குறுந். 277.
15. புறம். 328, 333.
16. பரி. 20; நற். 125.
17. குறள். 1032, 1033.
18. புறம். 46; குறள். 1035.

விட்டவர்களுக்கும் உதவக் கூடியவர்களாக உழவர்களிருந்தனர்.[19] வலிமையும், வளமையும் மிகுந்த அரசர்களையும் காப்பாற்றுபவர்கள் உழவர்களேயாவர்.[20] தன் நாட்டின் வயல் வளத்தைச் செழிக்கச் செய்யும் மன்னன் பல நாடுகளையும் கையகப்படுத்திப் பலகுடை நீழலும் தம் குடைக்கீழ்க் காணும் பான்மையனாயிருக்க முடிந்தது.[21] உழவர்களை நன்கு பேணிக்காத்து, அவர்தம் துயர்நீக்கி, அவர்களுக்கு வேண்டிய வசதிகளையளிக்கும் மன்னவர்க்குப் பிற மன்னர்கள் அடிமைப் பட்டவரென்றெண்ணினர்.[22] இயல்பாகவே வேளாண் துறையினரையும், உழவரையும் காத்து, ஊக்குவித்து, உதவுவதே அரசர்தம் தலையாய கடமையாயிருந்தது. இதுவே நல்லாட்சியின் அடையாளமுமாகும்.[23] வேளாளரிற் சிறந்தவர் "வேள்" என்னும் பட்டத்தைப் (நிலத்தையாள்பவர்) பெற்றனர். இவ்வாறு சிறப்புப் பெற்ற குடும்பத்தினருடன் மண உறவு கொள்வது பெருமையாகக் கருதப்பட்டது. வேளாண் தொழில் விரும்பத்தக்கதாகவும், குற்றமற்றதாகவும் கருதப்பட்டதில் வியப்பேதுமில்லை.[24]

நீர்வளச் சிறப்பு

காலத்தில் மழை பெய்தாற்றான் நிலங்கட்குத் தேவையான நீர்வசதி செய்துதர முடியும். ஆகவே பண்டைத் தமிழ்ப் புலவர் பலரும் மழையின் பெருமையைப் பரக்கக் கூறியுள்ளனர். மழையில்லையெனில் வறட்சியும் பஞ்சமுமேற்படும். ஆண்டு முழுவதும், விசும்பினின்றும் துளி மழைகூட விழாவிடின், நிலம் வறண்டு, புல் பூண்டுகூட வாடிவிடும்.[25] எழினி நல்காதொழியின் நெடுங்கடலும் தன் நீர்மை குன்றி முத்து, மீன் முதலிய பல செல்வங்களையும் அளிக்க முடியாததாகி விடும்.[26]

---

19. குறள். 1036. 20. சிலப். நாடுகாண்.
21. குறள். 1034.
22. புறம். 35; சிலப். அலற்படு. 228-229.
23. சிறுபாண். 233.
24. சிலப். இந்திர. 43; அழற்படு. 86.
25. குறள். 16. 26. குறள். 17

மாறாக, மழை பொழிந்தால் எல்லாக் குளங்களும், கேணிகளும், குட்டைகளும், நீர் நிரம்பி காணப்படும். அப்போது நிலங்களுக்குத் தேவையான நீர் வசதி கிடைக்கும். பண்டைத் தமிழர் ஆற்று நீரை அணைகட்டித் தேக்கி வைக்கும் அறிவுடையவராயிருந்தனர். அன்றியும் அவ்வாறு தேக்கிய நீரை வாய்க்கால்கள் மூலம் கொண்டு சென்று வயலுக்குப் பாய்ச்சினர். அக்காலப் புலவரும் அரசர்க்கு நீர்வளத்தைப் பெருக்குமாறு அறிவுரை கூறினர். குடப்புலவாயினார் என்னும் புலவர் நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனுக்கு இவ்வாறு அறிவுரை கூறுகிறார்: "அரசே, உன்னுடைய இலக்கு - முத்தியடைவது அல்லது வானுலகம் எய்துதல் அல்லது இவ்வுலக வாழ்வில் ஒப்பற்ற வாழ்க்கை அல்லது இறப்பினும் இறவாப் புகழுடைதல் - யாதாயினும் ஆகுக. யான் கூறுவதைக் கேள். நீ இயற்ற வேண்டிய கடமைகள் எவையெனின் நிலத்தையும், நீரையும் பெருக்கி உயிர்வாழத் தேவையான உணவுற்பத்தியைப் பெருக்குக. இவ்விரண்டையும் பெருக்குபவர்களே உண்மையில் வாழ்ந்தவராவர். பெருமளவில் நிலமிருந்தும் அது வறண்டிருப்பின் அதனால் என்ன பயன்? இத்தகைய நிலங்களில் தாழ்ந்த நிலையில் உள்ளவற்றிற்கு நீர்வளமளிப்பவரே வாழ்த்துப் பெறத் தகுந்தவராவர். தம் நிலத்தில் நீர்வளத்தைப் பெருக்கி அவற்றைச் செழிப்புள்ளவையாக ஆக்காதவர் வாழ்ந்தும் வாழாதவராவர்".[27]

எத்தகைய அறிவுறுத்தும் பேச்சிது, எந்த மன்னன் அதனைக் கேட்டும் அதன்படி நடவாதொழிவான்? மன்னவர்கள் வெட்டிய வாய்க்கால்களும், அவற்றிற்கு அவர்கள் அமைத்த கரைகளும் எண்ணிறந்தவை.[28] நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்காகப் பல குளங்கள் வெட்டப்பட்டன.[29] கரிகாற் பெருவளத்தான்

27. புறம். 18
28. புறம். 176; அகம். 237, 326; பதிற்றுப். 27.
29. புறம். 33; நற். 340.

காவிரியின் கரையையுயர்த்திக் கல்லணையைக் கட்டினான்.[30] தமிழக ஆறுகள் எல்லாவற்றிலும் காவிரியே பெருமை பெற்றதாயிருந்தது. அதன் எல்லையிலாப் பெருமையைப் பண்டைத் தமிழ் நூல்கள் பலவும் புகழ்ந்துள்ளன.[30] காவிரியாற்று நீர் பாய்ந்த வயல்களனைத்தும் மிகுதியான விளைபொருள் அளித்தன. அவற்றில் விளைந்த நெல் கொள்ள மாளாததாயிருந்தது. அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர் கற்றைகள் குன்று போல் குவிக்கப்பட்டிருந்தன. கதிரடிக்கப்பட்ட பிறகு குவிக்கப்பட்ட வைக்கோலும் மலை போலிருந்தன. நெல் மூடைகள் எங்கும் காணப்பட்டன. ஒரு வேலி நிலம் ஆயிரம் கலம் சாலி நெல் விளையக் காவிரியாறே உதவியது.[31] காவிரியாற்று நீர் தவிர, கிணற்று நீரும் பாசனத்திற்குப் பயன்பட்டது. கிணற்று நீர், "சால்" என்றழைக்கப்பட்ட பெரிய கலங்கள் மூலமும், ஏற்றத்தின் மூலமாகவும் இறைக்கப்பட்டது.[32] கிணற்று நீரை நம்பியிருந்த மக்கள், மழை காலத்தில் கிணற்று நீர் வளம் மிகுந்திருந்தபோது உழவுத் தொழிலை மேற்கொண்டனர்.[33]

இந்தியக் துணைக் கண்டம் ஆறுகளும் காடுகளும் நிரம்பிய மலைகளால் சூழப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலம் மலைகளிலிருந்த சுனைகளாலும் நீரூற்றுகளாலும், முல்லை நிலம் காலத்திற் பெய்த மழையாலும், மருதநிலம் பொய்யாக் குலக்கொடி என்றழைக்கப்பட்ட வற்றாத ஆறுகளாலும், நெய்தல் நிலம் கடற் செல்வத்தாலும் செழிப்புடையவையாயிருந்தன.

நீரூற்றுகளும் நீர்வீழ்ச்சிகளும்

தமிழகத்திலுள்ள மலைகளிற் பெரும்பாலானவை வற்றா நீரூற்றுக்களும், நீர்வீழ்ச்சிகளுமுடையவையாயிருந்தன.[34]

30. புறம். 35; பட்டினப். 5-7.
31. பொருநர். 242-248.
32. மதுரைக். 40.
33. குறுந். 351.
34. புறம். 124; மதுரைக். 42.

பண்டைக் காலப் புலவர் பலரும் நீர்வீழ்ச்சிகளினின்றும் எழும் பேரிரைச்சல் போர் முரசு கொட்டப்படுவதையொத்திருந்தது என்று கூறுகின்றனர்.[35] மலையுச்சியினின்றும் கீழேயிருந்த பிளவை நோக்கி இழிந்த நீர்வீழ்ச்சிகளும் தம் விசையால் பாறைகள் பலவற்றை உருட்டிச் சென்றன. இக்கற்கள் வீழ்வது ஒருவருடைய மார்பில் முத்துமாலையணிந்திருப்பதை யொத்திருந்தது.[36] அன்றியும் அவை கறையேதும் படாத வெண்ணிற ஆடையைப் போன்றிருந்தன.[37] மலையினின்றும் அவை இழியும்போது மலைக்கு மெல்லிய வெண்ணிற ஆடை போர்த்தியிருப்பது போன்றிருந்தது. பிறகு அவை வேகமாக வீழ்ந்தபோது பூமித்தாய்க்கு மாலைகள் சூட்டியது போன்றிருந்தது.[38] காடுகளூடே பெருகியோடும் மலைகளின் நீரூற்றுத் தண்ணீரைப் பற்றிப் பல குறிப்புகளுள்ளன.[39] வேள் பாரியின் பறம்பு மலைச் சிகரங்கள் பல நீர்வீழ்ச்சிகளைக் கொண்டிருந்தன. வான் பொய்த்தாலும் இவை வற்றவில்லை. நீர்வீழ்ச்சிகளின் நீர்த்துளிகள் தரையிலிறங்கியபோது அவை புது மலர்களைப் போலிருந்தன. மலைச்சுனை நீர், அங்குள்ள நிலம், தினை விதைப்பதற்காக உழப்பட்ட பகுதியின் வழியே வாய்க்கால் போல் பெருக்கெடுத்தோடி வறண்ட நிலங்களை வளமுள்ளதாக்கியது.[40] இவ்வாறு மலையிலிருந்த நிலங்களும் வற்றாத நீரூற்றுகளாலும் நீர்வீழ்ச்சிகளாலும் வளம் பெற்றிருந்தன.

மழை

மேய்ச்சல் நிலம் வேளாண்மையின் பொருட்டு மழையைப் பெரிதும் நம்பியிருந்தது. மழை பெய்யாத காலங்களில் மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வதே இந்நிலத்து மக்களின்

---

35. புறம். 143, 148, 399.
36. புறம். 50, 158, 159.
37. குறிஞ்சிப். 54–55.
38. சிறுபாண். 1–3.
39. நற். 81; அகம். 133.
40. புறம். 105.

முதற்றொழிலாயிருந்தது. மழை பெய்தபோது இவ்விடையர்கள் நிலத்தை உழுது வேளாண் தொழிலும் ஈடுபட்டனர். இங்குள்ள நிலங்கள் மழையையே பெரிதும் நம்பியிருந்ததால் அவை "புன்பலம்" என்றழைக்கப்பட்டன.[41] ஆனால் மழை பெய்யின் அவை அழகுறக் காட்சியளித்தன. மழை பெய்யாவிடின் இம்மேய்ச்சல் நிலம் வறண்டிருந்தது.[42] கார்காலம் என்றழைக்கப்பட்ட மழைக்காலத்தில் இங்கு மழை பெய்தது. ஆகவே மழையும், மழையைத் தன்னகத்தே கொண்ட மேகமும் "கார்" என்று அழைக்கப்பட்டன. குளிர்காலம் தொடங்கியவுடன் இடியுடன் கூடிய மழை மேகங்கள் காணப்பட்டன. மழை மிகுதியாகப் பெய்ததும் மல்லிகைக் கொடி மலர்களால் நிரம்பியிருந்தது. வீடுகளின் புறத்தேயிருந்த கொன்றை மரமும் மலர்களையளித்தது. அருகேயிருந்த காடுகளில் பலநிறப் பூக்களையுடைய மரங்கள் நிறைந்திருந்தன. இடியோசை கேட்டுப் பயந்த மான்கள் இங்குமங்கும் ஓடின.[43] பெருமழை பெய்த பிறகு குளிர்ச்சி மிகுந்திருந்தது. காடுகள் குளிர்ந் திருந்ததால் உழவர் மனமும் குளிர்ந்திருந்தது. அவர்கள்தம் கலப்பையைச் சீர் செய்வதிலும் விதையைச் சேகரிப்பதிலும் கவனம் செலுத்தினர். ஆறுகளும், ஓடைகளும் மகிழ்ச்சியுற்றவை போல் அவற்றில் புதுவெள்ளம் பெருக்கெடுத்தோடியது.[44] பண்டைத் தமிழர்கள் கோள்களின் நிலையைக் கொண்டு மழை பெய்யுமா, பெய்யாதா என்பதையறியும் ஆற்றலுடைய வராயிருந்தனர். வெள்ளி அல்லது சுக்கிரன் தெற்கு நோக்கிச் சென்றால் அல்லது கரிய விண்மீன் தோன்றினால், அல்லது தூமகேது என்னும் வால் நட்சத்திரம் தோன்றினால் மழை

41. புறம். 8.
42. குறிஞ்சிக்கலி 2; மருதக்கலி 13; அகம். 164.
43. அகம். 4.
44. அகம். 314; மலைபடு. 60-61.

பொய்த்து நிலம் வறண்டு போகுமென்று நம்பினர். இத்தகைய சில நிமித்தங்கள் தோன்றியும் பெருமழை பெய்தது என்று சில புலவர்கள் கூறுவர்.[45]

ஆறுகள்

வயல்வெளிகளை வளமுள்ளவையாக்க ஆறுகளும், குளங்களும் பெரிதும் உதவின. கோடைக் காலத்திலும் இந்நிலப் பகுதி குளிர்ந்தும் செழித்துமிருந்தது. நிலங்களில் நீர் நிரம்பி, நண்டுகளும் நத்தைகளும் ஆம்பற் கொடியைச் சுற்றியிருந்த பகுதியில் காணப்பட்டன.[46] வற்றாத பொன்னி, சோழ வளநாட்டு வயல்களில் வண்டலை நிரப்பி வளமுடையதாகச் செய்தது. தமிழ் மக்களின் பசியை ஆற்றும் வகையில் தன் முலைகளில் பால் நிரம்பவுடைய தாய் போன்று காவிரித்தாய் காட்சியளித்தாள் என்று கோவூர்கிழார் கூறுகிறார்.[47] பாண்டிய நாட்டில் ஓடிய பஃறுளி, குமரி என்னும் இரு ஆறுகள் வெகுகாலத்திற்கு முன்பே கடல்கோளால் விழுங்கப்பட்டன.[48] மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்துப் பாண்டிய நாடு வைகையாற்றினால் வளமுற்றிருந்தது. பரிபாடல் இவ்வாற்றின் பெருமையைப் பாடல்கள் மூலம் உணர்த்தியுள்ளது. இவ்வாற்றில் வரும் புதுவெள்ளம் இதற்குத் தனி அழகூட்டுவதாயிருந்தது.[49] பாண்டிய நாட்டைச் சுற்றிச் செல்லும் இவ்வாறு, அந்நாடு என்றும் வளமுற்றிருக்க உதவியது.[50] இளங்கோவடிகளும் காலத்தாற் புகழ் பெற்ற இவ்வாற்றைப் பெரிதும் பாராட்டுகிறார். என்றும் இளமையுடன் திகழும் ஒரு அழகிய நங்கையாக அதனைக் கற்பனையில் காண்கிறார்.[51]

45. புறம். 35, 117, 386, 388; பட்டினப். 1–2.
46. புறம். 266.
47. பட்டினப். 5-7; புறம். 68.
48. புறம். 9 சிலப். காடுகாண் 19–20.
49. அகம். 256.
50. புறம். 71.
51. சிலப். 13: 159–170.

சேரநாட்டின் பேரியாற்றின் பெருமையையும் அவர் குறிப்பிடுகிறார். அந்த ஆறு அப்பெருமலையினின்றும் பெருகி வருவது சிவபெருமானின் கழுத்தில் தாங்கும் மாலையை யொத்திருக்கிறது.[52] பேரியாறு நுரை பொங்கும் வெள்ளத்துடன் வேகமாகச் செல்கிறது.[53] மலைபடுகடாம் சேர நாட்டிலோடிய செய்யாறு என்னும் ஆற்றைப் பற்றிக் கூறுகிறது.[54] சேரர் தலைநகரான வஞ்சி ஆன்பொருநை என்னும் ஆற்றினால் சூழப்பட்டிருந்தது.[55] வஞ்சி நகரக் கோட்டையின் வெளிச் சுவர்களைத் தொட்டு ஓடிய இவ்வாறு அங்கிருந்த வயல்களை வளமுறச் செய்தது.[55(அ)] இவ்வாறு பல நதிகளால் வளப்படுத்தப்பட்ட இப்பகுதிகளை, இனிய நீர் உலகு என்று தொல்காப்பியர் கூறுவதில் வியப்பேதுமில்லை.[56]

குளங்கள்

பண்டைத் தமிழகத்தில் நீரைத் தேக்கி வைக்க அணைகள் கட்டப்பட்டன; குளங்கள், கால்வாய்களின் வரப்புகள் உயர்த்தப்பட்டன; கால்வாய்களுக்குக் குறுக்கே மதகு அணைகள் கட்டப்பட்டன. தொழிலாளர்கள் எளிதாக வேலைக்குக் கிடைத்தனர். அரசு, மக்களைக் கால்வாய்கள், குளங்கள் வெட்டுமாறு ஒரு பொது அறிவிப்பை வெளியிடும். உடனே யானைக் கூட்டங்கள் போன்று மக்கள் ஆயிரக்கணக்காக விரைந்து அரசாணையை நிறைவேற்றத் தன்னலமற்ற செயலாக எண்ணி வருவர்.[57] மழைக் காலங்களில் குளங்களில் நீரைத் தேக்கி வைப்பர்.[58] கோடைக் காலத்திலும் வற்றாத பல குளங்களிருந்தன. பெரிய குளங்கள் "ஏரி" என அழைக்கப்பட்டன.

52. சிலப். காட்சி. 21-22. 53. அகம். 149.
54. மலைபடு. 476-477; 554-555.
55. புறம். 11; அகம். 93.
55.(அ) புறம். 387. 56. தொல். அகத். 5.
57. அகம். 30; பதிற்றுப். 21; சிலப். காடுகாண். 108-109.
58. புறம். 142, 376.

சிறு குளங்கள், குட்டைகளில் தேக்கி வைக்கப்பட்ட நீர் வயல்களை வளப்படுத்த உபயோகிக்கப்பட்டது.[59] அன்றியும், பண்டைத் தமிழர் குளிர் நிலவின் தண்ணொளி பயிர்களை வளர்க்க உதவியது என்பதனையுமறிந்திருந்தனர்.[60] அவர்கள் விளை நிலங்களை விரிவுபடுத்தக் காடு கொன்று நாடாக்கினர்.[61] இவ்வேலையில் திறமை மிகுந்தவராகக் கருதப்பட்ட சோழர்கள் "வளவர்" என்று அழைக்கப்பட்டனர்.

மண்

நிலத்தின் செழிப்பிற்குத் தகுந்தவாறு நிலம் இருவகையாகப் பிரிக்கப்பட்டது. முதல் வகை மிசை அல்லது மேற்பகுதி நிலம் என்றழைக்கப்பட்டது. இரண்டாம் வகை அவல் அல்லது கீழ்ப்பகுதி நிலம் என்றழைக்கப்பட்டது. மிசை நிலம் "வன்பால்" "வன்புலம்" "புன்செய்" அல்லது "வறண்ட நிலம்" என்றும் அழைக்கப்பட்டது.[62] கீழ்நிலம் "செழிப்பு நிலம்" என்றும் அழைக்கப்பட்டது. அது "பள்ளம்" என்றும் அழைக்கப்பட்டது. இந்நிலத்தை "மென்புலம்", "நன்செய்" என்றுமழைத்தனர். விளை நிலம், வயல், செய், பழனம், செறு, கழனி என்றும் இன்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டது.[63] ஔவையார் கூறுகிறார், "மேட்டு நிலமானால் என்ன? கீழ்நிலமானால் என்ன? மக்கள் தாழாது உளற்றுபவராகவும், ஊக்கமுடையவராயுமிருப்பின் எல்லா நிலங்களும் பயன் தரத்தக்கனவாயமையும்".[64] திருவள்ளுவரும் நிலத்தை நங்கைக்கு ஒப்பிட்டு, வாழுவழியில்லை என்று கூறுவோரைக் கண்டு நிலமென்னும் நல்லாள் நகும் என்று கூறுகிறார்.[65] எல்லா நாடுகளிலும் சோழ

59. நற். 5.
60. பாலைக்கலி 31: 1–11 (நச். உரை).
61. பட்டினப். 283–284.
62. ஐங். 409; குறுந். 202; புறம். 42, 117, 325.
63. புறம். 42, 209, 395.
64. புறம். 137.
65. குறள் 10..

நாடே செழிப்பானதாயிருந்தது. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னனின் நாட்டைப் புகழ்ந்து ஆவூர் மூலங்கிழார் கூறுவதாவது: ஒரு பெண் யானை படுத்துறங்கும் அளவுள்ள சிறு நிலப்பரப்பில் விளையும் நெல் ஏழு களிறுகளுக்கு உணவளிக்கப் போதுமானதாயிருந்தது. சோழ நாட்டு நில வளம் அத்தகையதாயிருந்தது.[66] ஒரு நாட்டிற்கு இலக்கணம் கூறப்போந்த திருவள்ளுவர் தள்ளாவிளையுள் உடையதே சிறந்த நாடு என்று கூறுகிறார்.[67] அவர் மேலும் ஒரு நன்னாடு, மனிதரின் கடின உழைப்பின்றித் தானாகவே விளையுளை மிகுதியாகத் தருவது என்றும் கூறியுள்ளார்.[68] எல்லாப் புலவர்களும் ஒருசேரச் செழிப்பான நாட்டைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.[69] நிலங்களில் உள்ள பயிர்கள் ஓங்கி வளர்ந்து யானை நின்றால் அது மறையுமளவிற்கு உயரமாயிருந்தன. அவை செழித்த கதிரோடும் கம்பீரமாகக் காட்சியளித்தன.[70] முற்றிய தானியங்களோடு கதிர்கள் அவற்றின் தண்டுப் பகுதி கண்ணுக்குத் தெரியாதவாறு அகன்றிருந்தன. நிலங்கள் "நெற்கழனி" அல்லது நெல் விளையும் நிலம் என்று கூறப்படாது "கதிர்க்கழனி" என்று அழைக்கப்பட்டன. முற்றிய கதிர்கள், வரப்புகளால் சூழப்பட்ட வயல்களில் காற்றில் அசைவது கடலில் கரைகள் மீது மோதும் அலைகள் போன்றிருந்தன.[72] இது அந்நாளில் விளை நிலங்கள் எவ்வாறு செழிப்புற்றிருந்தன என்பதைக் காட்டுகிறது. நிலத்தின் செழிப்பைப் பேணிக் காப்பதில் வேளாண் பெருமக்கள் எவ்வாறு கண்ணும் கருத்துமாயிருந்தனர் என்பதை இதனாலறிய முடிகிறது. நிலத்தைப் பற்றி இவ்விதம் கூறியபிறகு, பண்டைத் தமிழரின் உணவுப் பழக்கம் பற்றியும், நிலத்தின் விளை பொருட்களைப் பற்றியும் விரிவாக ஆராயலாம்.

---

66. புறம். 40.
67. குறள். 731.
68. குறள். 739.
69. புறம். 200.
70. மதுரைக். 247.
71. அகம். 243.
72. அகம். 13.

விளைபொருட்கள் - திணை

மலைப் பகுதியிலும், காட்டிலும் வாழ்ந்த மக்கள், உணவாகக் கொண்டது திணை என்னும் தானியமாகும். நிலத்தை உழுதபிறகு திணை விதைக்கப்பட்டது. ஆனால் இந்நிலப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நிலத்தினை உழ வேண்டியிருக்கவில்லை. ஏனெனில், நிலத்தைச் சுற்றித் திரிந்த காட்டுப் பன்றிகள் நிலத்தைப் பலவிடங்களில் தோண்டிப் பள்ளங்களை உண்டாக்கின. அத்தகைய நிலங்களை நன்கு உழப்பட்ட நிலங்கள் என்றே புலவர்கள் அழைக்கின்றனர். திணைப்பயிரின் தண்டுப்பகுதி குட்டையாயிருந்தாலும் அவற்றிலிருந்த கதிர்ப்பகுதி மிகப் பருத்திருந்தது.[74] திணைப்புனம் கொல்லை என்றழைக்கப்பட்டது. எவ்வளவு குறைந்த அளவு விதை விதைத்தாலும் விளைச்சல் மிகுதியாயிருந்தது.[75] திணை ஒரு புன்செய்ப் பயிராக, வறண்ட பகுதிகளில் பயிரிடப்பட்டது. இருந்தபோதிலும் அந்நிலத்திலும் களை வளர அனுமதிக்கப் படவில்லை. களைகள் பச்சை நிற மரகதம் போன்று ஒளி வீசின.[76] நன்கு விளைந்த திணைப் பயிரின் தண்டுப்பகுதி கரும்பைப் போன்று கனமாயிருந்தது.[77] கதிர்கள் முற்றியதும் பயிர்கள் நிலம் நோக்கித் தாழ்ந்தன. அது கவிஞர்களுக்கு யானையின் துதிக்கையை நினைவூட்டியது.[78] கதிர்க்கற்றைகள் நல்லறிவுடையவர்கள் கேலி செய்யப்படின் நிலம் நோக்கித் தலை குனிவது போன்றிருந்தன.[79] குரங்குகள், பன்றிகள், குருவிகள், கிளிகள் முதலியவை முற்றும் விளைந்த கதிர்களை உணவாகக் கொண்டன. பல நிலங்களில் விளைந்த பயிர்களில் கதிர்கள் காணப்படவில்லை.[80] ஆகவே நிலங்களைப்

74. புறம். 168.
75. நற். 209.
76. நற். 317, 344.
77. குறுந். 198; அகம். 302.
78. குறிஞ்சிப். 36–37; குறுந். 360; நற். 317.
79. குறிஞ்சிக்கலி 4.
80. நற். 22; பரி. 18.

பகற்பொழுதில் காவல் காக்க வேண்டியிருந்தது. அந்நிலப் பெண்டிருக்கு இதுவே முக்கியத் தொழிலாயிருந்தது.[81] அவர்கள் கவண் மூலம் சிறு கற்களை வீசிப் பறவைகளை விரட்டினர். அவர்கள் சிறு பாறைகளைத் தட்டி ஒலி எழுப்பியும் அவற்றை விரட்டினர்.[82] அவர்கள் பரண் என்றழைக்கப்பட்ட மேடைகளை வயல்களின் நடுவே அமைத்துக்கொண்டு அவற்றிலிருந்து பறவைகளை விரட்டினர். இரவுப் பொழுதுகளில் அவற்றிலிருந்து ஆண்கள் காவல் காத்தனர். இவ்வாறு இரவு நேரங்களில் வயல்களைக் காத்தவர்கள் காடுகளில் வசித்தவராவர். காட்டுப் பன்றிகள் வயல்களில் நுழைந்தவுடன் அவற்றை விரட்டியடிக்க எரியும் தீப்பந்தங்களை அவற்றை நோக்கி வீசியெறிந்தனர்.[83] கதிர் முற்றியதும் அவற்றின் மீது போர்த்தியிருந்த பட்டை விலகித் தானியங்கள் பெரியவையாகவும் கனமானவையாகவும் காட்சியளித்தன. இதுவே அவற்றை அறுவடை செய்ய வேண்டிய தருணமாயிருந்தது.[84] அறுவடை பகலிலும் இரவிலும் செய்யப்பட்டது. இப்பணியிற் பங்கேற்றவர்கள் இரவில் பறையைத் தட்டி ஒலியெழுப்பினர். இதற்காக உபயோகிக்கப்பட்ட பறை முண்டகப் பறை என்றழைக்கப்பட்டது.[85] தினைப் பயிர் இருவகைப்பட்டது. நன்கு பருத்துப் பெரிதாக இருந்தது. சடைத்தினை அல்லது இரட்டி என்றழைக்கப்பட்டது.[86] சிறியதாகவிருந்தது சிறுதினை என்றழைக்கப்பட்டது. மூன்றாவது வகை செந்தினையாகும்.[87] அறுவடை முடிந்ததும் இந்நிலப் பகுதியில் வாழ்ந்த குன்றவரின் மக்கள் முதலில் அறுவடை

81. அகம். 28; நற். 22, 104, 328; குறிஞ்சிப். 38–40.
82. நற். 206.
83. அகம். 73, 88.
84. நற். 313; மலைபடு. 107–108.
85. குறுந். 375.
86. குறுந் 214.
87. அகம்.133, 198, 335; அகம்.88.

செய்யப்பட்ட திணைக் கதிர்களை இந்நிலத் தெய்வமான முருகனுக்களித்து வழிபட்டனர்.

ஐவனம்

ஐவனம் என்பது மலைப்பகுதியில் அருவிகளினின்றும் இழிந்த நீரைக் கொண்டு பயிர் செய்யப்பட்ட ஒருவகை நெல்லாகும். இதைப் பல பாடல்களில் வெண்ணெல் என்றும் அழைக்கப்படுவதைக் காணலாம். இதையே இன்று வெள்ளைக் கட்டை அல்லது வரநெல் என்றழைக்கின்றனர்.[88]

அவரை

அவரை என்றழைக்கப்பட்டது பெரிய விதைகளைத் தன்னகத்தே கொண்ட காயாகும். இஃதன்றே வேறு காய்கறிகளும் திணைப் புனங்களின் ஒரு பகுதியில் பயிரிடப்பட்டன. இப்பகுதியின் காடுகளில் அவரைக் கொடிகள் செழித்து வளர்ந்திருந்தன. பச்சைக் கொடிகளில் காய்கள் கொத்துக் கொத்தாகக் கிளிகளின் வளைந்த மூக்கைப் போன்று காய்த்துத் தொங்கின.[89] இக்கொடிக்கு அதள் கிடையாது.[90] அறுவடை செய்யப்பட்ட திணைப் புனங்களில் அவரைக் கொடிகள் திணைப் பயிரின் தண்டுப் பகுதிகளைச் சுற்றிப் படர்ந்திருந்தன. குரங்குகள் அவரை விதைகளை விழுங்கியும் வாயில் அடைத்துக் கொண்டும் காணப்பட்டன. இவ்வாறு வாய் கொள்ள அவை அவரைக் கொட்டைகளை அடைத்துக் கொண்டு காட்சியளித்தது வணிகர் பெரும் பணப்பையுடனிருப்பது போன்று தோன்றியது.[91] புறப்பாடலொன்று, குன்றவர் அவரைக் காய்களை உரிய காலத்தில் பறித்து விருப்பத்துடன் உண்டதைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

---

88. குறுந். 100, 371, மலைபடு. 114-155.
89. குறுந். 240.
90. அகம். 104.
91. ஐங். 271.

பருத்தி

தினைப் புனங்களையடுத்திருந்த நிலப்பகுதிகளில் பருத்தி விளைவிக்கப்பட்டது.[92] இப்பயிர் பருத்தியைக் கோடைக் காலத்தில் தந்தது எல்லா வீ டுகளிலும் எண்ணிறந்த அளவில் பருத்தியால் நிரப்பப்பட்டிருந்த மூடைகள் காணப்பட்டன.[93] ஒவ்வொரு இடத்தைச் சுற்றியும் பருத்தி விளையும் நிலங்கள் காணப்பட்டன. பருத்தி வறண்ட நிலத்தில் பயிரிடப்பட்டது.[94] இதனுடைய முற்றாத சிறுகாய்கள் சாறு நிறைந்தும் இனிமையாகவுமிருந்தன. ஆகவே ஆண் பறவைகள் அவற்றைத் தம் அலகுகளால் பறித்துக் கூடுகளுக்குக் கொண்டு சென்றன. அங்கே அவற்றை அவைதம் பேடைகளோடு பகிர்ந்துண்டன. நன்கு விளைந்த பருத்திக் காய்கள் வெடித்து அவற்றினின்றும் பஞ்சும் விதைகளும் சிதறின. ஏழை மக்கள் அவ்விதைகளைச் சேகரித்து அவற்றை உண்டனர்.[95] அதனின்றும் ஒரு சுவை நீரையும் பெற்றனர். புஞ்சைப் பயிரான பருத்தி தவிர, நஞ்சைப் பயிர்களான வாழை முதலிய நீர்வளம் மிக்க பகுதிகளில் காணப்படுவனவும் மலைப்பகுதிகளில் பயிரிடப்பட்டன.

பழங்கள்

வாழை, பலா, இஞ்சி, குங்குமப்பூ முதலியன பயிரிடப்பட்டும் தாமாகவே வளர்ந்தும் காணப்பட்டன.[96] வாழைப்பூ நிமிர்த்திப் போடப்பட்டுள்ள பெண்களின் கொண்டை முடிச்சினைப்போன்றிருந்தது.[97] பலாமரம் பெரியதாகவும் சிவந்த அடிப்பகுதியையுடையதாகவும் காணபட்டது. பழங்கள் எல்லாவற்றிலும் பலாவே

---

92. குறுந். 72.
93. புறா். 393.
94. புறம். 299, 324.
95. அகம். 129.
96. நற். 176, 188; மதுரைக். 289-290.
97. நற். 225.

இனியதாகவிருந்தது.[98] அதிலேயே சுவை மிகுந்த வேர்ப்பலா என்பதுமிருந்தது.[99]

பயறு வகைகள்

இந்நில வாழ் மக்கள் கொள், துவரை, உளுந்து முதலிய பலவகைப் பயறுகளையும் பயிரிட்டனர். பயறு வகைகளை வணிகர்கள் கூலம் என்றழைத்தனர்.[100] எருமைகள் உளுந்துக் கொடியையும்,[101] மான்கள் உளுந்துப் பயறையும் விரும்பியுண்டன. உளுந்து மாரிக் காலத்தில் பயிரிடப்பட்டது. அதனுடைய இலைகள் அகன்றும் அதன் தண்டு சிவந்தும் காணப்பட்டன.[102]

வரகு

தரிசு நிலங்களில் பயிரிடப்பட்ட தானியங்களிலொன்று வரகாகும். இடைக்காடனார் என்னும் புலவர் இது பயிரிடப்பட்ட முறையைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். மழை பெய்த பிறகு நிலம் ஈரமாகவிருந்தபோது, உழவர்கள் நிலத்தை ஆழ உழுதனர். நிலம் செம்மண் பூமியாகவிருந்ததால் கலப்பையின் கொழுவால் மேலே கொணரப்பட்ட ஈரமண் கிழித்தெடுக்கப்பட்ட சதையை ஒத்திருந்தது. நிலம் உழப்பட்ட போது பறையொலி எழுப்பப்பட்டது. தானியக் கதிர்கள் முற்றி விளைந்த போது அவற்றை மயில்கள் கொத்தின.[103] முயல்களும் விளைந்த தானியத்தை விரும்பியுண்டன.[104] தானியங்களைக் கதிரடிக்க எருதுகள் உபயோகப்படுத்தப்பட்டன. அன்றியும் இளைஞர்களும் அவற்றைக் காலால் மிதித்துத் தானியங்களைக் கதிர்களினின்றும்

98. நற். 232.
99. குறுந். 18.
100. அகம். 339.
101. புறம். 297.
102. நற். 89; குறுந். 68.
103. அகம். 194.
104. அகம். 284.

பிரித்தெடுத்தனர்.[105] அவற்றின் காய்ந்த அடிப்பகுதி கூரை வேயப் பயன்படுத்தப்பட்டது.[106] வரகு நிலங்களில் எள்ளும் பயிரிடப்பட்டது. வரகுத் தானியத்தை உண்ண வந்த எலிகளை எள்ளை உண்ண வந்த சேவல்கள் விரட்டின. இவ்வாறு விரட்டப்பட்ட எலிகள் வரகுப் பயிரின் தண்டுகளில் ஒளிந்து கொண்டன.[107] வேளாண் பெருமக்கள் விளைந்த வரகைத் தம்முடன் பாடுபட்ட உழவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். அதுவன்றிப் பசித்த பாணருக்கும் அதனையளித்தனர். அவர்கள் விளைந்த வரகு முழுவதையும் தாமே வைத்துக்கொள்ளாது மற்றவருடன் பகிர்ந்துகொள்ளும் பெற்றியுடையவராயிருந்தனர். அவர்களுடைய கொடை மடம் காரணமாகத் தம் குடும்பத்திற்குத் தேவையான வரகை அவர்கள் கடனாக வாங்க வேண்டி நேர்ந்தது.[108] முன்னர் கூறியபடித் தமிழக வேளாண் மக்கள் குற்றங்கூறத்தக்க அளவில் கொடைமடம் மிகுந்து காணப்பட்டனர். முல்லை நிலத்து மக்கள் சமைத்த வரகைப் பெரிதும் விரும்பியுண்டனர்.[109]

நெல்

நெல் வறண்ட, புன்செய் நிலங்களிற் பயிரிடப்படவில்லை.[110] அது செந்நெல், வெண்ணெல் என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டிலும் வெண்ணெல் உயர்ந்த வகையாகக் கருதப்பட்டது. நிலவளம், நீர்வளத்துக்குத் தக்கவாறு பயிர்களும் பிரிக்கப்பட்டன. குலநெல், குளத்து நீர்பாய்ச்சப்பட்ட வயல்களிற் பயிரிடப்பட்டது. அது வெண்ணெல் வகையைச் சேர்ந்தது.[111] மற்ற நீரைக் கொண்டு "முடந்தை" நெல் பெருவாரியான நிலங்களிற் பயிரிடப்பட்டது.[112] இந்நெல் வகை மேட்டுப் பாங்கான நிலப்பகுதிகளிற் பயிரிடப்பட்டது. அது

105. புறம். 327. 106. அகம். 367.
107. புறம். 321. 108. புறம். 327.
109. புறம். 215. 110. புறம். 328.
111. புறம். 33 ஃ 112. பதிற்றுப். 29. 3-4.

செந்நிறமாகவும் பருமனாகவுமிருந்தது.[113] ஒரு பறவையின் பெயரைக் கொண்ட நெல்லைப் பற்றிப் பெரும்பாணாற்றுப் படை கூறுகிறது. பேராசிரியர் மு. இராகவையங்கார் இவ்வகை நெல் விளைய ஆறு மாத காலமாகும் என்று கூறுகிறார். இப்போது இதனை, 'கருடன் சம்பா' என்றழைக்கின்றனர்.[114] இவையேயன்றி, 'சாலி' என்னும் ஒரு வகை நெல்லும் பயிரிடப்பட்டது.[115]

நெல்லின் இன்றியமையாமை

சில நெல் வகைகள் அவை பயிரிடப்பட்ட நிலங்களின் பெயரைக் கொண்டிருந்தது போலச் சிலவிடங்கள் அங்கே பயிரிடப்பட்ட நெல் வகைகளின் பெயர்களாலும் அழைக்கப்பட்டன. பண்டைய கவிஞர்கள் அத்தகைய ஊர்களின் பெயரை வெள்ளூர், உறந்தை, அள்ளூர், வல்லம், பருவூர், ஊணூர், மூதூர், பரவை என்றும் இன்னும் பலவாகவும் அழைக்ககின்றனர். அவையனைத்தும் அவ்விடத்து விளைந்த நெல்லாகப் பெயர் பெற்றவையாகும்.[116] இருப்பை என்னும் கிராமம் அங்கிருந்த நெல் இருப்பின் காரணமாகப் பெயர் பெற்றதாகும்.[117] புலவர்கள் பெரிய வீடுகளில் எண்ணிறந்த அளவில் நெல் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது பற்றித் திரும்பத்திரும்பக் கூறியுள்ளனர்.[118] சோழ நாட்டைப் பற்றிப் பேசப்புகும் புலவரெவரும் அந்நாட்டின் வளத்தைப் பற்றிக் கூறாமலிருக்கவில்லை.[119] அந்நாட்டு நிலப்பகுதி அளவுக்கதிகமான

113. மலைபடு. 436–437; பெரும்பாண். 130–131.
114. பெரும்பாண். 305.
115. பொருநர். 243.
116. அகம். 6,44,46,96,166,222,306,356; புறம். 24,97,352; ஐங். 4.
117. ஐங். 58.
118. அகம். 176; புறம். 338.
119. அகம். 201.

நெல் விளைச்சலுடையதாயிருந்தது. ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது.[120] புதிய பயிர்களின் அடிப்பகுதி அறுவடை செய்யப்பட்ட பின் எங்கும் குவிக்கப்பட்டிருந்தது. வேளாண் மக்கள் அவற்றைக் கூரை வேயவும், கால் நடைகளுக்கு ஆண்டு முழுவதும் உணவாகவும் உபயோகப்படுத்தினர்.[121]

பயிர்செய் முறை

பெரும்பாணாற்றுப்படை நெற்பயிர் செய்யும் முறையைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. முதலில் நீர்நிறைந்த பகுதிகளில் வளரும் ஆம்பல் முதலிய கொடிகள் நீர் மிகுந்த நிலங்களினின்றும் களைகளோடும் அகற்றப்படுகின்றன. அதன்பிறகு ஈரமான நிலம் உழப்படுகிறது. பிறகு அதை உழவர்கள் சமன் செய்கின்றனர். அதன்பின் நாற்று நடப்படுகிறது. இச்செழிப்பான நிலத்தில் விளைந்த பயிர்கள் வளமையானவையாகக் காணப்பெறுகின்றன. அவற்றின் விளைந்த கதிர்கள் தண்டினோடு அறுக்கப்பட்டுக் கட்டாக மருதமர நிழலில் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் குவியல் கதிர் அடிக்கப்படும் வரை உயர்ந்து கொண்டேயிருக்கிறது. இடைப்பட்ட நேரத்தில் சிலந்திகள் அக்குவியல்களில் தம் வலைகளைப் பின்னுகின்றன. நிலங்கள் பரந்து கிடந்ததால் அவற்றிலுள்ள பயிரை அறுவடை செய்ய நீண்ட காலமாகிறது. அதிக விளைச்சலால் மகிழ்ச்சியடைந்த வேளாண் பெருமக்கள் நெற்கதிர்க் குவியல்களைச் சுற்றி ஆடிப்பாடி மகிழ்கின்றனர். அவர்கள் ஆடும் கூத்து துணங்கைக் கூத்தாகும். அதன்பிறகு அறுவடை செய்யப்பட்ட நெற்பயிர் பரப்பப்பட்ட அவற்றின் மீது எருதுகள் சுற்றிச்சுற்றி வருமாறு செலுத்தப்படுகின்றன. இவ்வாறு கதிர்களினின்றும் தானியம் பிரித்தெடுக்கப்படுகிறது. சாலியும்

---

120. பொருநர். **242-248**
121. பெரும்பாண். **225**; புறம். **125, 366**.

பிரித்தெடுக்கப்படுகிறது. அதன்பிறகு பொன்னிறம் பெற்றுப் பளபளக்கும் நெல் குவிக்கப்பட்டு இமயமலையின் பொற் சிகரம் போல் காட்சியளிக்கிறது.[122] வேளாண் மக்கள் தம் நிலத்திற்கு வரும் பாணருக்கும் கவிஞருக்கும் நெல்லையளிக்கின்றனர். அத்தகையவர்கள் 'ஏர்க்களப் பொருநர்' என்றழைக்கப்பட்டனர்.

மாரிக் காலத்தில் பயிர்கள் பருத்துக் காணப்பட்டன. கதிர்களிற் காணப்பட்ட அடர்ந்த இலைப்பகுதி தீயின் நாக்குப் போலவும் மேலெழும் அலைபோலும் காணப்பட்டது.[123] அதன் பிறகு நிலங்கள் நீரால் நிரப்பட்டன. ஆம்பல், நெய்தல் போன்ற களைகள் பெண்டிரால் அகற்றப்படுகின்றன. அங்குள்ள நீரில் "விலாங்கு" போன்ற மீன்கள் விளையாடின.[124] தானியம் தோன்றியதும் கதிர்களிலிருக்கும் காய்ந்த பூக்கள் தாமாகவே விழுந்து சிதறுகின்றன. வயல்களில் காணப்பட்ட நண்டு வளைகள் முழுதும் இவ்வாறு காய்ந்த பூக்கள் காணப்பட்டன.[125] விளைந்த நெற்கதிர்கள் அரிவாளால் அறுக்கப்பட்டன. அறுவடையின் போது தொழிலாளர்கள் "தண்ணுமையென்னும் பறையையறைந்து பாடினர். அருகிலிருந்த மற்ற நிலங்களிலும் குளங்களிலுமிருந்த கொக்குகள் இப்பறையொலியைக் கேட்டுப் பறந்தோடின.[126] இப்பறையொலியைக் கேட்டு எருமைகளும் பயந்தனவாம்.[127] நெற்பயிரை அறுவடை செய்யும் போது அந்நிலங்களில் விளைந்திருந்த தாமரைக் கொடிகளையும் அவர்கள் அறுத்தெடுத்தனர். நெற்கதிர்க் கட்டுகளின் குவியல் களிடையே தாமரை மலர்களும் விரவியிருந்தன.[128]

---

122. பெரும்பாண். *205–241.*
123. அகம். *13*; நெடுநல். *21–22.*
124. புறம். *61*; அகம். *184.*
125. ஐங். *30.*
126. நற். *350*; அகம். *40, 204.*
127. மலைபடு. *471–427.*
128. அகம். *84, 116.*

இக்குவியல்கள் ஆட்டுமந்தையைப் போன்றுமிருந்தன.[129] நெற்பயிரோடு வாளை மீன்களும் கொண்டு செல்லப்பட்டு அவை களத்தில் நெளிந்த வண்ணமிருந்தன.[130] எருமைக் கன்றுகள் நெற்பயிரையுண்டும் மரநிழலில் ஓய்வெடுத்தொதுங்கியு மிருந்தன.[131] ஊரிலிருந்த எல்லாக் களங்களிலும் நெற்பயிர்க் குவியல் நிறைந்திருந்தது. அக்குவியல்கள் மலையையொத்து ஓங்கியுயர்ந்திருந்தன.[132] ஏற்கனவே கூறியபடி அவற்றினிடையே சிலந்திகள் வலையைப் பின்னின. அன்றியும் தேனீக்களும் தம் கூடுகளை அவற்றின் மீது கட்டினவாம்.[133] அக்குவியல்கள் பின்பு பரப்பப்பட்டு அவற்றினிடையே ஆடும் மயில்களின் சிறகுகள் சிதறியிருந்தன.[134] பிறகு அவற்றின் மீது எருதுகள் செலுத்தப்படுகின்றன. எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேளாண் மக்களுக்கும் நிலவுடைமையாளர்கள் உணவளிக் கின்றனர்.[135] அதன்பிறகு நெல் அளக்கப்பட்டு மூடைகளில் நிரப்பப்படுகிறது. அது களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்படுகிறது.

கரும்புப் பயிர்

ஔவையாரின் பாடலொன்று தமிழகத்தில் முதன்முதலாகக் கரும்பு அதிகமானின் முன்னோரொருவராற் பயிர் செய்யப்பட்டது என்று குறிப்பிடுகிறது.[136] ஆகவே இப்பயிர் தமிழகத்துக்கே சொந்தமானதன்றென்று அறியப்படுகிறது. அது நீர்வளம் மிக்க நிலங்களில் மட்டும் விளையும் நன்செய்ப் பயிராகும். முன்னாளில் கரும்பு, நெற்பயிர் விளையும் நிலங்களின் அண்மையில் உள்ள பகுதிகளில் பயிர்

129. மலைபடு. *414–415.*
130. நற். *400.*
131. பட்டினப். *13–15.*
132. அகம். *236*; ஐங். *58.*
133. பொருநர். தனிப்பாடல் *3.*
134. புறம். *13.*
135. மலைபடு. *461–462.*
136. புறம். *99, 392.*

செய்யப்பட்டது. தன்னுடைய நெல் வயலில் மேய்ந்த பசுவை விரட்டிச் சென்ற வேளாண் மக்களிரொருவன் அதற்குக் கரும்பையளித்தான்.[137] சமவெளிப் பகுதியில் நெல்லும், கரும்பும் அருகருகே பயிர் செய்யப்பட்டிருந்தது. விழாக் காலங்களிற் காணப்படுவது போன்ற அழகிய காட்சியாகவிருந்தது.[138] கரும்பு நடவிற்கு முன்பு, நிலம் பல பாத்திகளாகப் பிரிக்கப்பட்டது. அவை யானையின் காலடிகள் போற் காட்சியளித்தன.[139] அப்பாத்திகளில் நீர் நிரப்பப்பட்டுப் பிறகு கரும்பு நடப்பட்டது. நீர்த்தாவரங்களான ஆம்பல், நெய்தல் முதலியவை நிலத்தில் நிரப்பப்பட்ட நீரில் முளைத்தன.[140] கரும்புப் பயிர் சிறிது சிறிதாக விளைந்து அதனுடைய பூ, வேல் போன்று காட்சியளித்தது.[141] கரும்பின் வெள்ளை நிறப் பூக்கள் வாசனையற்றவை. சிறு பறவைகள் அவற்றைப் பறித்துக் கூடுகட்ட இட்டுச்சென்றன.[142] அம்மலரின் மொட்டுகள் சூல்கொண்ட பச்சைப் பாம்பைப் போன்று காட்சியளித்தன.[143] மாரிக் காலத்தில் அவை மலர்ந்தபோது அவை காற்றிலடித்துச் செல்லப்பட்டன. குளிர்காலத்தின் ஆரம்பத்தில் கரும்பு அறுவடை செய்யப்பட்டது. கரும்பின் விளைச்சல் எல்லாக் காலங்களிலும் மிகுதியாயிருந்தது.[145]

பண்டைத் தமிழ் நாட்டில் கரும்பினின்றும் வெல்லம் பெறப்பட்டது. கரும்புத் தோட்டத்தில் வெல்லம் காய்ச்சப் பல ஆலைகள் இருந்தன. இவற்றினின்றும் வெளியேறிய புகையால் அந்நிலங்களிலிருந்த நெய்தல் போன்ற மலர்கள் கருமை நிறம் பெற்றன.[146] கரும்பை நசுக்கவும் அதிலிருந்து சாறு பெறவும்

137. அகம். 156.
138. புறம். 22.
139. குறுந். 262.
140. ஐங். 65; பதிற்றுப். 3.
141. புறம். 35.
142. பட்டினப். 162; குறுந். 85.
143. குறுந். 35.
144. அகம். 13, 217.
145. பதிற்றுப். 30: 14-15.
146. பட்டினப். 8-12.

எந்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. அவற்றின் ஒலி, யானை பிளிறுவதையொத்திருந்தது. அது யானையை, யாளி அல்லது சிங்கம் தாக்கும்போது, எழுப்பும் கூக்குரல் போலுமிருந்தது. அங்கு சீனியும் உற்பத்தி செய்யப்பட்டது. இந்நிலங்களைக் காண வந்தவருக்குக் கரும்புச்சாறு அளிக்கப்பட்டது.[147] அருகிலிருந்த நிலங்களில் வாளை மீன் அச்சமிகுதியால் மிரண்டு ஓடி ஒளிந்தது.[148] சர்க்கரை ஆலைகளினின்றும் எழுந்த புகை மேகத்தை ஒத்திருந்தது.[149]

தென்னையும் கிழங்குகளும்

தென்னந்தோப்புகள் பலவிருந்தன. அவற்றிலிருந்த மரங்களிற் காய்கள் தரையைத் தொடுமளவிற்கு அடர்ந்து தாழ்ந்திருந்தன. வாழை மரங்கள் கொத்து கொத்தாகப் பழங்களையளித்தன. பல வெற்றிலைக் கொடிகளும், வரிசை வரிசையாகப் பனைமரங்களும் காட்சியளித்தன. சேம்பு, இஞ்சி முதலிய கிழங்குகள் வீட்டைச் சுற்றியிருக்கும் நிலத்தில் பயிர் செய்யப்பட்டன. இப்பகுதிகளில் வேளாண் மக்கள் தோப்புகளிலேயே வசித்தனர். தென்னோலையால் வேயப்பட்ட கூரைகளையுடைய குடிசைகளில் வசித்தனர். பலா மரங்களும், வாழை மரங்களும் பனை மரங்களும் தோப்புகளில் வளர்க்கப்பட்டன.[150] குங்குமப்பூ, சேம்புச் செடிகள் மரங்களின் அடியில் வளர்க்கப்பட்டன. இச்செடிகளினருகில் எருமைகள் நிழலில் ஓய்வெடுத்தன. சேப்பங்கிழங்கைத் தரையைத் தோண்டித் தின்ன முயன்ற பன்றிகள் விரட்டியடிக்கப்பட்டன.[151] நன்கு விளையாத குங்குமப்பூ பச்சை வண்ணம் பெற்றிருந்தது. கிழங்குகள் நன்கு விளைந்ததும் தரையைத் தோண்டி அவற்றை வெளியே எடுத்தனர்.[152]

---

147. ஐங். 55; பெரும்பாண். 256-261.
148. புறம். 322.
149. மலைபடு. 340-341.
150. பெரும்பாண். 352-362.
151. சிறுபாண். 42-44; மலைபடு. 343-344.
152. நற். 101; அகம். 336; மலைபடு. 125-126.

விற்பனை முறை

வேளாண் தொழிலில் பலரும் ஈடுபடக் காரணம், விளை பொருட்களை உடனுக்குடன் விற்க முடிந்ததால்தான்.[153] இதைப் பற்றி விரிவாகத் "தொழிலும் வணிகமும்" என்னும் பிரிவில் விவாதிக்கலாம். ஆனால் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்காத வகையில் விற்பனைமுறை அமைந்திருந்தது என்பதைக் கூறித்தானாக வேண்டும். பல நிலங்களிலும் விளைந்த பொருட்கள் பண்டமாற்று முறையில் பகிர்ந்து கொள்ளப்பட்டன. குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலப்பகுதிகளில் இப்பொருட்கள் மிகுதியாக விளைந்தன. பாலை அல்லது தரிசு நிலங்களில் வாழ்ந்த மக்கள் கொள்ளையடிப்பதன் மூலமாகப் பொருளீட்டினர். நெய்தல் நில மக்கள் மீன், உப்பு முதலிய கடலிற் கிடைத்த பொருட்களைக் கொடுத்துத் தாம் வேண்டியவற்றைப் பெற்றனர்.

உப்பை விற்றவர்கள் உமணர் என்றழைக்கப்பட்டனர். அவர்கள், சாரிசாரியாக வண்டிகளில் உப்பைக் கொண்டு சென்று விற்றனர். அவர்கள் குறிஞ்சிப் பகுதிக்கும் சென்று உப்பை விற்றுத் தாம் வேண்டியவற்றைப் பெற்றனர்.[154] சில நேரங்களில் உப்பும், மீனும் படகுகளில் எடுத்துச் செல்லப்பட்டு விற்கப்பட்டன. அவர்கள் உப்பு, மீனுக்குப் பதிலாகப் பொருட்களையே பெற்றனர்.[155] உப்பைக் கொடுத்து நெல்லைப் பெற்றது பற்றிய பல குறிப்புகள் சங்க நூல்களிற் காணப்படுகின்றன.[156] மீனும் கொடுக்கப்பட்டு நெல் பெறப்பட்டது.[157] தயிரும் நெல்லுக்கு மாற்றாகக்

---

153. டாக்டர் டி.வி. மஹாலிங்கம், விஜயநகரப் பேரரசு மக்களின் பொருளியல் வாழ்வு.
154. புறம். 60; பெரும்பாண். 64-65.
155. பட்டினப். 29-30.
156. நற். 183, 254; குறுந். 209; அகம். 60, 140, 390.
157. ஐங். 49; புறம். 343.

கொள்ளப்பட்டது.[159] கள்ளும், நெல்லைக் கொடுத்துப் பெறப்பட்ட பொருளாகும்.[158] கிரேக்க நாட்டு வணிகர்கள் கப்பல் முழுவதும் தங்கத்தை நிரப்பிக் கொண்டுவந்து, அதற்கு மாறாகக் 'கருப்புத்தங்க'மான மிளகைப் பெற்றனர்.[160] வேளாண் விளைப் பொருள் 'கூல வீதி' என்றழைக்கப்பட்ட சந்தைப் பகுதிகளில் விற்கப்பட்டன. வணிகர்கள் கூலவணிகர் என்றழைக்கப்பட்டனர். சாத்தனார் என்னும் பெரும்புலவர் மதுரையைச் சேர்ந்த வணிகராவார். ஆகவே அவர் மதுரைக் கூலவாணிகன் என்றழைக்கப்பட்டார். வணிகர்களின் நலன் மன்னனால் நன்கு பாதுகாக்கப்பட்டது. ஏனெனில் அந்நாளைய மன்னர்கள் இவர்களால் நாட்டு முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட பெரும்பணியைச் சிறிதும் மறக்கவில்லை.[161]

கால்நடை

வேளாண்மைக்குத் தேவையான கால்நடைகளைப் பற்றிய செய்திகள் அதிகம் கிடைக்கவில்லை. ஆனால், ஏரைப் பற்றியப் பல குறிப்புகள் காணப்படுவதால் அவற்றைப் பூட்டி உழத் தேவையான எருதுகளிலிருந்து பெறப்படுகிறது. அன்றியும், தரிசு, மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாத்தமை, அவற்றால் தம் பசியாறிய பல கால்நடைகளிருந்தமை அறியப்படுகிறது.[162] எருதுகள் ஏரையோட்டப் பயன்படுத்தப்பட்டன. சிலநேரங்களில் எருமைகளும் அவற்றிலீடுபடுத்தப்பட்டன. தம் நிலங்களில் தொழில் செய்திட ஒவ்வொருவரும் கால்நடைகளைப் பெரிதும் உபயோகப்படுத்தியமை நன்கறியப்படுகிறது. பண்டைத் தமிழ்நாட்டில், கால்நடைச் செல்வம் மிகுந்திருந்தது பற்றிய குறிப்புகள் இலக்கியகளிலுள்ளன. ஒவ்வொரு வேளாண் வீட்டு

158. அகம். 146.
159. புறம். 33.
160. அகம். 149.
161. பதிற்றுப். 13: 23-24.
162. டாக்டர் டி.வி. மஹாலிங்கம், விஜயநகரப் பேரரசின் பொருளியல் வாழ்வு, ப. 67.

முற்றத்திலிருந்த கற்றூண்களில் எருமைக் கன்றுகள் கட்டப்பட்டிருந்தன. இத்தகைய வீடுகள் நல்வாழ்விற்குரியவையாயிருந்தனவென்று புலவர்கள் புகழ்கின்றனர்.[163] சமவெளிப் பகுதிகளில் வாழ்ந்த எருமைகள் சிறுகுட்டைகளில் ஓய்வெடுத்தன. அவை நீர்த்தாவரங்களை நன்கு தின்றதால், கொழுப்புடன் காணப்பட்டன. அவை மண்ணில் நன்கு உறங்கி ஓய்வெடுத்தன. அவற்றின் உடல் மீது மகன்றைப் பூக்கள் காணப்பட்டன. அவை மாலையில் வீடு திரும்பும்போது போர் வீரர்கள் அணிவகுத்துச் செல்வதைப் போலிருந்தன.[164] அவை தெருக்களில் குடித்துவிட்டுச் செல்லும் ஊர்சுற்றிகள் தம் கைகளில் கம்புகளைக் கொண்டு செல்வது போன்றிருந்தன.[165]

இளங்கோவடிகள் ஆநிரைகளை வளர்க்கும் ஆயர்களின் வாழ்க்கையே குற்றமற்றது என்று கூறுகிறார்.[166] முல்லை நிலத்து மக்கள் ஆநிரைகளையன்றி, எருதுகள், அவற்றின் கன்றுகள், ஆடு, மாடு, முதலிய செல்வங்களை நன்கறிந்திருந்தனர். அவர்கள் இரும்பினாலான தொரட்டி என்னும் ஆயுதத்தை உபயோகித்தனர்.[167] அவற்றை மழைக் காலத்தில் நீர் படமுடியாதபடி உயர்ந்த பகுதிகளில் வைத்திருந்தனர். மாடுகளையும் மழையில் நனையாதபடி காக்க வேண்டியிருந்தது. காயடிக்கப்பட்ட கன்றுகளாகவும், பொலிகாளைகளாகவும் வளர்ப்பதில் கவனம் செலுத்தினர். பொங்கல் நாளில் எருதுகளோடு பொருதும் வீரவிளையாட்டில் அவர்கள் ஈடுபட்டனர். இதில் வெற்றி பெற்றவர்கள் திறந்த வெளியில் திரிந்த காளையை அடக்க வேண்டும். இது பின்னாளில் "சல்லிக் கட்டு" என்றழைக்கப்பட்டது. சில எருதுகள் தம்மைப் பிடிக்கவந்த இளைஞர்களைக் குத்திக் கொலை செய்யுமளவு

163. நற். *120*; குறுந். *181*.
164. அகம். *316*.
165. நற். *267*.
166. சிலப். அடைக். *51–52*.
167. நெடுநல். *51–52*.

வலியுடனிருந்தன.[168] வேளாண் குடியினரின் வீடுகளில் காளைகளைக் கட்டி வைக்குமளவிற்குத் தனிப்பகுதிகளிருந்தன.[169]

உரத்தைப் பற்றிப் பேசும்போது எவ்வளவு மாட்டுச் சாணம் உபயோகிக்கப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. ஆனால், நிலத்தில் எரு இடுதலில் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். திருவள்ளுவர் எரு இடுதலின் இன்றியமையாதமையைப் பற்றிக் கூறும்போது, "ஏரினும் நன்றால் எரு இடுதல், கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு" என்று கூறியுள்ளார்[170] இப்போதிருப்பதுபோல அக்காலத்திலும் கால்நடைகள் மிகுந்திருந்தனவென்றாலும், அவற்றின் சாணம் முழுவதும் உரமாக உபயோகிக்கப்படவில்லை என்று ஊகிக்கலாம். அவற்றில் பெரும்பகுதி தரிசு நிலங்களிலும், விளை நிலங்களிலும் சேகரிக்கப்படாமல் வீணாகியிருக்கலாம். அதில் ஒரு பகுதி வரட்டியாகி அடுப்பெரிக்க உபயோகிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இவற்றாலெல்லாம் பண்டைத் தமிழர் நிலத்துக்கு உரமிடுதலில் கவனம் செலுத்தவில்லை என்று கூறமுடியாது.

வேளாண்மைக் கருவிகள்

வேளாண் குடியினருக்குத் தேவையானவை, நீர், நிலம், மழை, கருவிகள் எனலாம். இவையன்றி நல்ல விதைகளும் இன்றியமையாததாகும். இவ்விதைகள் முளைப்பது மழையைப் பொறுத்திருந்தது.[171] விளைப்பொருட்கள் அதிகமாகக் கிடைப்பது அவர்களுக்குக் கிடைத்த ஏர், மேழி, கொழு, சால், எருது ஆகியவற்றைப் பொறுத்திருந்தது.

பண்டைத் தமிழ்நாட்டு வேளாண் குடியினர், போர் வந்தபோது, ஆயுதம் ஏந்தத் தயங்கினாரல்லர். அமைதி நிலவிய போது அவ்வாயுதங்களைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தினர்.

---

168. முல்லைக்கலி. *3*.
169. பட்டினப். *51–52*.
170. குறள். *1038*.
171. மணி. அத். *28: 230–233*.

அமைதி நிலவியபோது, அவர்கள் உபயோகப்படுத்திய ஒரே ஆயுதம் கலப்பை.[172] பூமியின் யானை, துதிக்கையை அடித்துப் பள்ளம் எழுப்புவதைப் போன்று அவர்கள் நிலத்தை ஆழ உழுதனர்.[173] யானையின் வாய் போன்ற அமைப்பைக் கலப்பை பெற்றிருந்தது. அவற்றின் நுனியில் பொருத்தப்பட்ட 'கொழு' உடும்பைப் போன்றிருந்தது. அது மிக்க வலிமையுடையதா யிருந்தது.[174] கண்ணனின் தமையனான பலராமர் தம்முடைய கொடியில் ஏரின் உருவத்தைப் பொறித்திருந்தார்.[175]

கொட்டில் எனப்படும் வீட்டின் பின்பகுதியில் வேளாண்மைக்குத் தேவையான கருவிகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன.[176] கலப்பையின் கைப்பிடி மேழி என்றழைக்கப்பட்டது. அது வளைந்திருந்தது. எருதுகளின் கழுத்திலமுந்திய பகுதி 'நுகத்தடி' எனப்பட்டது. இவ்விரண்டு பகுதிகளும் 'பலகணி' என்னும் பகுதியாலிணைக்கப்பட்டன. அது கலப்பையின் நடுப்பகுதியாகும். ஆகவே அதை நடுநிலைமைக்கு அடையாளமாகக் கொண்டனர்.[177]

கொழு எனப்படும் இருப்பினாலாகிய நுனிதான் மிக முக்கியமான பகுதியாகும். இதுவே நிலத்தைத் தோண்டி மண்ணை வெளிக் கொணர்ந்தது.[178] இவையனைத்தையும் ஒரு சேர உபயோகிக்க உதவியவை எருதுகளாகும்.[179] அவை இக்கருவிகள் வைக்கப்பட்டிருந்த கொட்டிலிலே கட்டப் பட்டிருந்தன. இப்பகுதி எருதுச் சாலை என்றழைக்கப்பட்டது. நிலங்களுக்கு நீர்பாய்ச்சச் சிலமுறைகள் கையாளப்பட்டன.

172. புறம். 20.
173. பாலைக்கலி. 8: 4–5.
174. புறம். 19; பெரும்பாண். 99–100.
175. புறம். 56.
176. பெரும்பாண். 188–189.
177. பட்டினப். 205–207.
178. பொருநர். 117.
179. பரி. 20.

கமலை முறையின்படி நீர் கிணறுகளிலிருந்தும் சால் என்னும் பாத்திரங்கள் மூலம் இறைக்கப்பட்டது. இதற்கு எருதுகளும் சிறு உருளைகளும் பயன்படுத்தப்பட்டன. இன்னொரு முறை மனிதர்கள் மட்டுமே பங்கு பெற்ற ஏற்றம் எனப்பட்ட ஒரு வித மேலும் கீழும் செல்லும் நீண்ட கழியின் மூலம் நீர் இறைக்கப்பட்டது.

பிற்சேர்க்கை

தானியம், பயறு, வேலை, செடி, கொடி ஆகியவற்றின் பகுப்பாய்வு

கருப் பொருள்கள்	குறிஞ்சி	முல்லை	மருதம்
பறவைகள்	கிளி, மயில்	கோழி, சேவல் முதலிய பறவைகள்	அன்னம், நாரை, பெட்டைக்கோழி, புறா, மகன்றில்
விலங்குகள்	புலி, கரடி, சிங்கம், யானை	மான், முயல்	எருமை, நாய், பசு முதலியன
நீர்நிலை	அருவி, குட்டைகள் சுனைகள்	ஆறு, குளம்	கிணறு, ஆறு, ஓடை, குளம்
பூக்கள்	வேங்கை, காந்தள், குறிஞ்சி	குவளை, முல்லை, பிடாரம், தோன்றி	தாமரை, அல்லி, கழுநீர் மலர்
மரங்கள்	சந்தனம், தேக்கு, அகில், மூங்கில், அசோகு	கொன்றை, காயா, குருந்தம்	மருதம், காஞ்சி, வஞ்சி முதலியன
உணவு	தினை, ஐவனம், மூங்கிலரிசி	வரகு, சாமை, முதிரை, உளுந்து பருப்பு வகைகள்	நெல் - வெள்ளை, சிகப்பு நிறத்தவை
தொழில்	விதைவிதைத்தல், தேனீ வளர்த்தல், பயிர் காத்தல், வேர், கிழங்கு முதலியவற்றைத் தோண்டுதல்	விதைவிதைத்தல், களையெடுத்தல், அறுவடைசெய்தல், ஆடு மாடு முதலியன வளர்த்தல்	களையெடுத்தல், அறுவடைசெய்தல், கதிரடித்தல், ஏரி குளங்களைச் சீரமைத்தல், புதிய கால்வாய்களை வெட்டுதல் முதலியவை

கருப் பொருட்கள்	நெய்தல்	பாலை
பறவைகள்	கடற்காக்கை	கழுகு
விலங்குகள்	சுறா, இறா	செந்நாய், வேட்டைநாய்
நீர்நிலை	கடற்கரைக் கிணறு	வறண்டகிணறு, குளம்வு
பூக்கள்	நெய்தல், தாழை, முண்டகம், அடப்பம்	குரா, மரா
மரங்கள்	காந்தள், புன்னை, ஞாழல்	உழிஞை, ஓமை, இருப்பை முதலியன
உணவு	மீன், உப்பு மீனைத் தந்து உணவுப் பொருட்கள்	கொள்ளையடித்துப் பெற்ற பொருட்கள்
தொழில்	மீன்பிடித்தல், உப்பு எடுத்தல், அவற்றை விற்றல், மீனை உலர்த்துதல் முதலியன	சண்டை பிடித்தல், கொள்ளையடித்தல்.

6. வணிகமும் தொழில்களும்

முதற்பகுதி

வணிகம்

வணிகத் தொடர்புகள்

ஒரு நாடு செழித்தோங்க, மிக்க விளைச்சல் செய்யும் உழவர், சான்றோர், தாழ்விலாச் செல்வர் ஆகிய மூவரும் இன்றியமையாதவர்கள் என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.[1] இவ்வாறு நல்லாட்சி நடக்கும் நாட்டில் வேளாண்மையும் வணிகமும் நன்கு முன்னேற வேண்டும். பண்டைத் தமிழ்நாட்டில் வணிகரும் வேளாண் மக்களும் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தனர்; அவர்களுடைய நலனைக் காப்பது மன்னனின் தலையாய கடமையாகக் கருதப்பட்டது.[2] வணிகவியல், வேளாண்மை பற்றி அக்காலத்தில் நூல்கள் எழுதப்பட்டன. பண்டைத் தமிழகத்தில் பொருளியல் நூல்கள் இருபத்தியொன்று இருந்ததாகக் கூறப்படுகிறது.[3]

பண்டைத் தமிழ் வணிகர்கள் அனைவரும் மனத்தின்மை பெற்றவர்களாகவுமிருந்தனர். அவர்கள் வெளிநாடுகளில் வணிகம் புரிந்து தம் செல்வத்தைப் பெருக்குவதில் ஈடுபட்டனர். இரான், இராக்கு முதலிய நாடுகளில் வாழ்ந்த சுமேரியர்கள் தமிழகத்திலிருந்து சென்றவர்கள் என்று கருதப்படுகிறது. அங்கே கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள், சிலைகளிற் காணப்படும் சுமேரியர்களின் உருவ அமைப்பு, அங்கே வாழ்ந்த மற்ற மக்களின் குறிப்பாக செமட்டிக்கு, ஆரிய மொழிகளைப் பேசியவர்களின் உருவ அமைப்புகளுடன் ஒத்திருக்கவில்லை. அவர்களுக்கும் பண்டைத் தமிழ் மக்களுக்கும் உள்ள ஒற்றுமைகள்

---

1. குறள். 731.
2. மதுரைக். 120-123
3. புறம். 166 (உரையைப் பார்க்கவும்).

பலவாகும். ஆகவே சுமேரியர்கள் பெர்சியா(இரான்)வைக் கடல் வழியிலும் தரை வழியிலும் கடந்து மெசபடோமியாவின் பள்ளத்தாக்கையும் வாழுமிடமாகக் கொண்ட தமிழர்களேயன்றி வேறல்லர்.[4] சுமேரியர்களின் தலைநகராக, கிறித்து பிறப்பதற்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு விளங்கிய 'உர்' பகுதியின் இடிபாடுகளில் தமிழகத்திலிருந்து கொண்டுசெல்லப்பட்ட தேக்குமரத் துண்டுகள் காணப்பட்டன. பழங்கால நகரமான பாபிலோனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்தவர்கள் அணிந்த உடைகளில் ஒன்று "சிந்து" என்று பெயர் பெற்றிருந்தது. திராவிட மொழிகளில் "சிந்து" அல்லது "சிந்தி" என்பது துணியையும் கொடியையும் குறிக்கும். இவ்வுடை, சிந்து நதிப் பள்ளத்தாக்கிலிருந்து சென்றிருந்தால் அது "உறிந்து" என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.[5]

கிறித்து பிறப்பதற்குப் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பு அரசோச்சிய சாலமன் மயிலின் தோகை, யானைத் தந்தம், வாசனைப் பொருட்கள் ஆகியவை கப்பல் மூலம் தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்டதை அறிந்திருந்தானாம். எமரேய மொழிச் சொல்லான "துகி" என்பது தமிழ்ச் சொல்லான தோகையின் திரிபாகும். மற்றத் தமிழ்ச் சொற்களான அகில், அரிசி, இஞ்சி முதலியனவும் எபிரேய மொழியில் சிதைந்து காணப்படுகின்றன.

தமிழகத்திலிருந்து திமிலுடன் கூடிய எருதுகள் பெர்சிய வளைகுடா நாடுகளுக்கும் ஆப்ரிக்காவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. சேரநாட்டு மிளகு போனீசியக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டது. பண்டைத் தமிழர்கள் தம் பொருட்களை ஏடன் துறைமுகத்திற்குக் கொண்டு சென்றனர். அங்கே அவற்றை அரேபிய வணிகர்கள் பெற்று ஆப்ரிக்கர்களுக்கு விற்றனர்.[6]

---

4. கே. கோவிந்தன், தமிழர் வணிகம், பக். 8–9.
5. மேலது, 9.
6. பி.டி.எஸ். ஐயங்கார், தமிழர் வரலாறு, 129–134.

கிறித்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் பொருட்கள் பிலிப்பைன்சு நாட்டில் காணப்படுகின்றன. இச்சான்றுகள் அனைத்தும் தமிழர்கள் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே பிறநாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை விளக்குகின்றன.

ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களான மயில், அரிசி, சந்தனமரம் முதலியவை திராவிடப் பெயர்களாலேயே அழைக்கப்பட்டன. கிறித்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே அவை பாபிலோனியாவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

பண்டைத் தமிழர்களுடன் அதிக அளவு வணிகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள் கிரேக்கர்களாவர். அவர்கள் தமிழகத்துடன் கி.மு.500க்கு முன்பே தொடர்புடையவராயிருந்தனர். அவர்கள் பண்டைத் தமிழருடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது கிரேக்க மொழியில் வழக்கிலுள்ள ஒரியா (அரிசி), கற்பியோன் சிங்கிபார் (இஞ்சி), பெப்பரி ஆகிய சொற்களாலறியப்படுகிறது.[7]

எகிப்து நாட்டை கி.மு. 30ல் வெற்றி கொண்ட உரோமானியச் சக்கரவர்த்தி சீசர் இந்தியாவுடன் வணிகத் தொடர்பை மேம்படுத்த விரும்பினானாம். கி.மு.21ல் பாண்டிய நாட்டு வணிகத் தூதர் குழு அவனைச் சென்று கண்டது. பண்டைத் தமிழர்கள் விற்ற பொருட்களை வாங்கியவற்றை விட அதிகமாயிருந்தது. ஆகவே, பண்டைத் தமிழ்நாட்டில் உரோமானிய நாட்டுக் காசுகள் அதிகம் வழக்கத்திலிருந்தன.

கிழக்கிந்திய நாடுகளான கடாரம், மலேயா, சீனா முதலியவற்றுடன் நமது முன்னோர்கள் வாணிகத் தொடர்புடையவராயிருந்தனர். இந்நாடுகளுக்கு மிளகும் வாசனைப்பொருட்களும் அதிக அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவற்றைக்

---

7. எம்.எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை, தமிழ் இந்தியா, ப. 16.
8. பி.டி.எஸ். ஐயங்கார், தமிழர் வரலாறு, ப. 76.

கொடுத்து பட்டாடைகளையும் சீனியையும் பெற்றனர். தமிழர்கள் சைனாவிலிருந்து இறக்குமதி செய்த பட்டாடைகளைக் கிரேக்க நாட்டினரான யவனர்களுக்கு விற்றனர்.

கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த தமிழர்கள் கடாரம், இந்தோ-சைனா ஆகிய நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அங்குள்ள "தக்கோலா" என்னும் பெயர், நம் தமிழ் நாட்டிலுள்ள தக்கோலத்தை நினைவுபடுத்துகிறது.[9]

உரோமானியர்கள், முத்து, தந்தம், மசுலின் துணி, மிளகு ஆகியவற்றை நல்ல விலை கொடுத்து வாங்கினார்கள். உரோமானிய அரசு குடும்பத்தினரும் பெண்களும் முத்தைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்க அதிகம் செலவு செய்தனர். இதனை அந்நாட்டு அரசியல் தலைவர்களும் ஆட்சியாளர்களும் கண்டித்தனர். அக்கால உரோமாபுரி மட்டுமே இந்தியாவிற்கு ஒவ்வோர் ஆண்டும் ஆறு லட்சம் தங்கக் காசுகளைத் தர வேண்டியிருந்ததாகக் கூறப்படுகிறது.[10] தைபீரியசு என்ற பேரரசர் தம் நாட்டு ஆட்சி மன்றத்திற்கு எழுதிய மடலில், தம் நாட்டுப் பெண்கள் முத்தை வாங்குவதால் நாட்டின் செல்வம் முழுவதும் செலவாகிறது என்று புலம்பியுள்ளார். மாறாகப் பண்டைத் தமிழர் தங்க, வெள்ளி நாணயங்களையும், மதுவையும் பெற்றனர்.[11] அக்காலத்து மன்னர்கள் தங்கக் குப்பிகளில், தம்மைச் சுற்றி நின்ற பெண்கள் நிரப்பிக் கொடுத்த மதுவை மிகவும் விரும்பிக் குடித்தனர்.[12]

---

9. பி.டி.எஸ். ஐயங்கார், தமிழர் வரலாறு, ப. 205–206.
10. ஆர். சத்தியநாத ஐயர், இந்திய வரலாறு, பகுதி 1, ப.222–223.
11. பி.டி.எஸ். ஐயங்கார், தமிழர் வரலாறு, ப. 304–305.
12. புறம். 56.

உரோமாபுரிக்கு அனுப்பப்பட்ட கப்பல்களில் பாதியளவு மிளகு, நிரப்பப்பட்டதாம். மற்றவை ஏலம், இலவங்கம் ஆகிய வாசனைப் பொருட்களும், வெல்லம், நல்லெண்ணெய், உறையூரில் நெய்யப்பட்ட ஒரு மெல்லிழைத் துணி, தேக்கு, அகில், சந்தனக் கட்டைகள், அரிசி, வாழைக்காய், புளி, வெற்றிலை, பாக்கு, தேங்காயெண்ணெய் மருந்து மூலிகைகள் முதலியன. விலையுயர்ந்த கற்களான வைரம் போன்றவை முசிறியிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. உரோமானியர்கள், அவற்றுக்குப் பதிலாகத் தங்க, வெள்ளிக் காசுகள், மதுவகைகள், பவளம், காரீயம், தகரம், சில எந்திரப் பொறிகள் ஆகியவற்றைக் கொடுத்தனர்.[13]

பிளினி, உரோமாபுரிப் பேரரசு முத்து, துணி மற்றும் பல விலையுயர்ந்த இன்ப வாழ்க்கைக்குகந்த பொருள்களைத் தமிழகத்திலிருந்து பெற, பெருமளவு பணத்தைச் செலவழிக்கிறது என்று குறை கூறியுள்ளார்.[14] அவர் கடற்பயணத்தின் இடர்ப்பாடுகள் பற்றியும் எழுதியுள்ளார்.[15]

பெரிப்புளூஸின் பெயர் தெரியாத ஆசிரியரும் (கி.மு. 60) இந்தியத் திருநாட்டின் துறைமுகங்கள் செழித்தோங்கியதைப் பற்றிய விரிவான குறிப்புகளை வரைந்துள்ளார். அவர் சேர நாட்டுத் துறைமுகங்களான முசிறி, குமரி, பாண்டிய நாட்டுத் துறைமுகமான கொற்கை, சோழ நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம் ஆகியவற்றையும் குறிப்பிடுகிறார். பயங்கரக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களே முசிறியில் முத்துக்குளிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டதாக அவர் கூறுகிறார். முத்து வணிகத்திற்கு உறையூர் பெயர் பெற்றிருந்தது. தமிழ்நாட்டின் கிழைக்

---

13. இலங்கை வரலாறு, தொகுதி 1, பகுதி 1, ப. 213.
14. மேலது ப. 305–309.
15. டாக்டர் எஸ்.ஏ.ஜி. ஹுசைன், பாண்டிய நாட்டு வரலாறு, ப. 15.

கடற்கரையினின்றும் பெரும் வணிகக் கப்பல்கள் கங்கைச் சமவெளிப் பகுதி நகரங்களுக்கும், பர்மாவிற்கும் செல்லத் தயாராயிருந்ததாக அவர் குறிப்பிடுகிறார்.[16] மணிமேகலையும் தமிழகக் கப்பல்கள் வடநாட்டிற்குச் சென்றது பற்றிக் கூறுகிறது.[17]

தாலமி (கி.மு. 150) பண்டைத் தமிழகம் பற்றிய சுவையான குறிப்புகளைத் தந்துள்ளார். சேரநாட்டின் கடற்கரை நெடுகிலும் யவனர்களின் (கிரேக்கர்கள்) குடியிருப்புகள் இருந்தனவாம். அக்குடியிருப்புகளில் அகஸ்டசின் கோயிலுமிருந்தது. யவனர்கள் தமிழரசர்களின் மெய்க்காவலர்களாயிருந்தனர்.[18] சிலப்பதிகாரம், கோவலன் மதுரை நகரக் கோட்டைக் காவல் செய்த யவனர்களின் கண்ணில் படாதவாறு உட்சென்றான் என்று கூறுகிறது.[19] பாண்டிச்சேரியில் கிடைத்த சில சுவையான பொருட்கள் அங்கே யவனரின் தொழிற்சாலை முன்பிருந்ததைக் காட்டுகின்றன. உரோமானிய நாட்டுச் செப்பு நாணயங்கள் மதுரையின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன.[20] பல யவன, கிரேக்கப் பொறியாளர்கள், தமிழ் மன்னர்களுக்காகப் போர் ஆயுதங்களைச் செய்வதில் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாயுதங்கள் பலவும் மதுரைக் கோட்டையின் உட்பகுதியில் உபயோகத்திலிருந்தன. சிலப்பதிகாரம் இவை பற்றிய விரிவான குறிப்புகளை யளிக்கிறது.[21] பல யவனர்கள் இங்கே தச்சுத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து நிலைகொண்டிருந்தனர். இவ்வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வடிவமைத்த உருவங்களுடன் கூடிய விளக்குகள் தமிழர்களின் வீடுகளில் ஒளியைத் தந்தன.[22]

---

16. Schoff (Ed.), The Periplus of the Erythenaen Sea, pp. 40–47.
17. மணி. 16: 1–11.
18. இலங்கை வரலாறு, தொகுதி 1, பகுதி 1: ப. 213–214.
19. சிலப். 14: 66–67
20. பி.டி.எஸ். ஐயங்கார், தமிழர் வரலாறு, ப. 301–312.
22. சிலப். 11: 207–217.

நியாய உணர்வும் நேர்மையும்

பண்டைத் தமிழகத்தில் வெளிநாட்டு வணிகம் செழித்தோங்கியிருந்தது. இதைத் தமிழர்களின் நீதி நியாய உணர்விற்குக் கிடைத்த பரிசு எனலாம். பண்டைக் கால வணிகர்கள் ஏமாற்றுதலை வெறுத்தது மட்டுமின்றி, உண்மைபேசி, நேர்மையுடன் செயல்பட்டனர். அவர்களனைவரும் வெளிப்படையாகப் பேசி வணிகம் செய்தனர். செல்வத்தை முறையான வழியில் ஈட்டினர். பண்டமாற்று, ஒரு குறிப்பிட்ட முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர்கள் பொருட்களை வாங்க வந்தவர்களுக்கு, அவர்கள் பெற வேண்டிய அளவின்படி கொடுத்து ஏமாற்றாமலிருந்தனர்.[23] திருவள்ளுவர் வணிகம் செய்பவர்கள், தமது செயலில் நெறி பிறழாமலிருக்க வேண்டும்; அன்றியும் பிறர் பொருளைத் தம் பொருள் போற் பேணிக் காக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.[24] ஆனால், எவரும் பொருள் முதலீடு செய்யாமல் வணிகத்தில் ஈடுபட முடியாது. அம்முதலீட்டை இழக்குமளவிற்கு எவரும் அறிவற்றவர் களாயிருக்கவில்லை. திருவள்ளுவர், அறிவுடையவர்கள் ஆக்கம் கருதி முதலை இழப்பவரின் செயல்களை ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று கூறியுள்ளார்.[25] இவ்வாறு பழங்கால வணிகர்களனைவரும் இலாபம் பெறுவதில் கண்ணாயிருந்தனர். ஆனால், அதேசமயம் அவர்கள் மிகுந்த நேர்மையுடன் செயல்பட்டதால் உண்மையே பேசினர். உண்மையிலேயே அவர்கள் அறநெறியுடன் செயல்பட்ட நல்ல வணிகராவர். வணிகம் என்னும் சொல் தாராளம் என்னும் பொருளுடைய வண்மை என்ற சொல்லினின்றும் பெறப்பட்டதாகும். பண்டைக் காலத்தில் வணிகர்கள் மன்னர்களுக்கு அடுத்து மதிக்கப்பட்டனர்.[26]

23. பட்டினப். 205–212.
24. குறள். 120.
25. குறள். 449, 463.
26. சிலப். 15: 1–21.

ஆகவே அவர்கள் "மன்னர் பின்னோர்", "அரசர் பின்னோர்", "பெருங்குடியினர்" என்றழைக்கப்பட்டனர்.[27] அவர்கள் பல மாடிகள் கொண்ட பெரிய மாளிகைகளில் இன்ப வாழ்வு வாழ்ந்தனர் என்பது அறியப்படுகிறது.[28]

திவாகரம் என்னும் நிகண்டு நூல் வணிகர்கள் பின்பற்றிய ஒழுக்க நெறியைப் பற்றிய சுவையான தகவலையளிக்கிறது. இந்நூல் வணிக முறைகளில் கூட்டுறவிற்கு வழியில்லையென்று கூறுகிறது. அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் வணிகமுறையில் கூட்டுறவு தேவையென்று கருதவில்லை. வணிகமுறைகளில் கோபதாபங்களுக்கு இடமில்லையென்று கருதினர். அவர்கள் தம் குறைநிறைகளை மனத்தில் கொண்டு அதற்கேற்றவாறு சமூக வாழ்வியல் முறைகளைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் தம்முடைய வாக்குறுதிகளைக் குறித்த காலத்தில் நிறை வேற்றுவதுடன், இலாப நட்டம் பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அவர்கள் பொருளை இழக்க வேண்டி வந்தால் அதற்காக மனச்சோர்வு கொள்ளக்கூடாது. பொருளைச் சேர்க்கும் கலையை நன்கறிந்திருப்பதுடன், அதனை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளும் முறையையும் நல்வழியில் செலவு செய்யும் முறையையும் அறிந்திருக்கவேண்டும்.[29]

கடல் வணிகம்

பண்டைக் காலத்தில் வணிகர்கள், ஆறு, கடல், கடலின் கழிமுகம் ஆகியவற்றில் பலவிடங்களுக்கு ஓடங்களில் சென்று உப்பு, நெல் ஆகியவற்றைப் பண்டமாற்றுப் பொருள்களாகக் கொண்டு வணிகம் செய்தனர். இத்தகைய படகுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கடலில் உள்ள திட்டுப் பகுதிகளில் கட்டப்பட்டு நிற்கும்.[30] பெரிய கப்பல்கள் துறைமுகங்களில்

27. சிலப். 2 : 1–76.
28. சிலப். 5 : 41–42.
29. திவாகர நிகண்டு.
30. பட்டினப். 29–30.

நிற்கும்.[31] பன்னாட்டுக் கப்பல்களும், வரைபடங்களுமுடையனவாய் விளங்கும். அவை கடலில் பருவக்காற்று கொண்டுசெல்ல, எவ்வித மனித முயற்சியுமின்றி செயல்படும்.[32] அவற்றினின்றும் எடுக்கப்பட்ட சரக்கு மூடைகள் மணற்பாங்கான கடற்கரையில் எங்குமிடைந்து கிடக்கும். இவ்வாறு பன்னாட்டுப் பொருள்களும் குவிந்து கிடந்திருப்பது, அந்நாடுகள் ஓர் ஒன்றியம் அமைக்கக் கூடியது போல் தோற்றமளிக்கும். இத்தகைய இடங்களிற்றான் கொள்ளமாளாச் செல்வமுடைய வணிகர்கள் கூடி வாழ்ந்தனர். அவரனைவரும் கடல் வணிகத்தில் ஈடுபட்டவராவர்.[33]

கப்பல்களைக் கட்டப் பலரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் 'கலம்புணர் கம்மியர்' என்றழைக்கப்பட்டனர்.[34] நாவாய் என்னும் படகுகள் மூலம் வெள்ளம் கரை புரண்டோடிய ஆறுகளைக் கடந்தனர். படகுகள் சிங்கம், குதிரை அல்லது யானை உருவங் கொண்ட முகப்புடையனவாய் விளங்கின. இத்தகு படகுகள் வெள்ளம் நிரம்பிய வைகையாற்றில் உலாவந்தன.[35] தாமிரபருணியாறு கடலுடன் சேருமிடத்திலிருந்து கொற்கைத் துறைமுகமும் பல படகுகள் வந்தவாறும் சென்றவாறும் உயிர்ப்புடன் தோற்றமளித்தது.[36] கப்பல்கள் கடலில் மிக வேகமாகத் துடுப்புகளையும் பாய் மரங்களையும் உபயோகித்து, மீகாமனாற் செலுத்தப்பட்டன. சோழ அரசர்கள் கப்பல் செலுத்தும் முறையையும், காற்றின் போக்கையும் கண்டறியும் கலையில் ஈடுபட்டவர்களைப் பெரிதும் ஊக்குவித்தனர்.[37]

31. பதிற்றுப். 52.
32. நற். 295.
33. சிலப். 2: 5–7.
34. மணி. 7: 1–70.
35. சிலப். 13: 176–177.
36. டி.ஆர். சேஷஐயங்கார், திராவிட இந்தியா, பக். 144–146.
37. புறம். 66.

பண்டைத் தமிழர்கள் பெர்சியா, மெசபடோபியா, ஆசியா, மைனர், பாலஸ்தீனம், சிரியா, எகிப்து, சோமாலியா, கிரேக்கம், உரோமாபுரி ஆகியவற்றுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்து, ஆசியா மைனர், மெசபடோமியா ஆகிய நாடுகளில் நடந்த அகழ்வாய்வுகள் தமிழரின் பன்னாட்டு வணிகத் தொடர்பிற்குச் சான்று பகர்கின்றன.[38] அவர்கள் சுமத்திரா, சாவா, மலாயா, சீனா முதலிய கீழ்த்திசை நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பண்டைத் தமிழகத்திற்குச் சீனத்திலிருந்து சீனியும், சாவாவிலிருந்து கரும்பும் வந்தன. பழைய இலக்கியங்களில் கடலிற் சென்ற வணிகக் கப்பல்களைப் பற்றிய சொல்லோவியங்கள் பலவும் காணப்படுகின்றன.[39] ஒரு கவிஞர், பெருங் கப்பலொன்று துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நிற்பது, பெருநிலப் பகுதியின் நடுவே கோட்டையொன்று தோன்றுவது போலுள்ளது என்று கூறியுள்ளார்.[40] புகார்த் துறைமுகத்தில் கப்பல்கள் பல நிற்பது களிறுகள் கூட்டமாயிருப்பதை ஒத்திருந்தது. அவற்றின் கொடிமரங்களில் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தனவென்று இன்னொரு புலவர் கூறுகிறார்.[41] பெருங்கப்பல்கள் இலக்கியங்களிற் பலவிடங்களில் களிறுகளுக்கு ஒப்புவமை செய்யப்பட்டிருக்கின்றன.[42]

கடற்றுறைமுகங்களில் பல பகுதிகளில், பல பொருட்களும் குவித்து வைக்கப்பட்டிருந்தன. வடக்கு மலையினின்றும் பெறப்பட்ட தங்கமும், இரத்தினங்களும் ஒருபுறத்தே குவிக்கப்பட்டிருந்தன. மேற்குத் தொடர்ச்சி மலையின் அகில், சந்தனம், தென்கடல் முத்துகள், கீழைக்கடற் பவளம், காவிரி,

38. கரந்தைக் கட்டுரை வெள்ளிவிழா வெளியீடு, பக்.256.
39. புறம். 338.
40. புறம். 338.
41. பட்டினப். 172–175.
42. நற். 74; புறம். 13; பட்டினப். 172.

கங்கை வள நாடுகளில் விளைந்த பல பொருட்கள், இலங்கையினின்றும் வந்த உணவுப் பொருட்கள், பர்மாவில் செய்முறையால் பெறப்பட்ட பொருள்கள், ஆகிய பலவும் துறைமுகப் பண்டக சாலைகளில் இங்குமங்கும் ஒழுங்கின்றிக் குவிக்கப்பட்டிருந்தன.[43] அவற்றினோடும் பல மிளகு மூடைகள் ஏற்றுமதி செய்யும் பொருட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வெளிநாடுகளினின்றும் இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகள் ஒருபுறத்தே கட்டப்பட்டிருந்தன.[44] இவ்வாறு இடையீடின்றி இறக்குமதி - ஏற்றுமதி நடவடிக்கைகள் நிகழ்ந்தமையை ஒரு புலவர், "ஆறுகள் கடலுடன் கலக்குமிடத்தே எழும் முகிற் கூட்டம் போலவும், அம்முகிற்கூட்டம் மழையாக மாறிக் கடலிற் கொட்டுவது போலும்" இருந்ததாக வருணித்துள்ளார். உள்நாட்டுப் பொருட்கள் வெளிநாடுகளுக்குக் கடல் வழியே சென்றன. வெளிநாட்டுப் பொருட்கள் கடல் மூலமும், அங்கிருந்து நாவாய்கள் மூலமும் ஆற்றின் வழியே உள்நாடுகளைச் சென்றடைந்தன. இவ்வாறு பெறப்பட்ட பொருட்கள் அளவிடற்கரியவையாயிருந்தன. அவையனைத்தும் சுங்க வரித்துறையினரால் கணக்கிடப்பட்டு வரி விதிக்கப்பட்டன. இப்பகுதிகளை ஆயுதந் தாங்கிய படைவீரர்கள் விழியுறங்காது காத்து நின்றனர். பொருள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வரிவிதிக்கப்பட்டவுடன் அவற்றின் மீது அரசு முத்திரை யிடப்பட்டது. அப்பொருள்கள் துறைமுகங்களினின்றும் கொண்டுபோகும் முன் குன்று போற் காட்சியளித்தன.[45]

கடல் வணிகத்திலீடுபட்டவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கப்பட்டது. கடற் கொள்ளைக் காரர்களிடமிருந்து இக்கப்பல்கள் கடற்படைக் கப்பல்களாற் காக்கப்பட்டன. கடற் கொள்ளைக்காரர்கள் மேலைக் கடற்பகுதியிலிருந்த சிறு

43. பட்டினப். *185–192*.
44. மதுரைக். *321–323*.
45. பட்டினப். *126–138*.

தீவுகளிலின்றும் வந்தனர். அவர்கள் வணிகர்களுக்குப் பெருந்துன்பம் விளைவித்தனர். சேர மன்னனான செங்குட்டுவன் இக்கடற் கொள்ளைக்காரர்களை ஒழித்து வணிகர்களுக்குப் பெரும் உதவி புரிந்தான். ஆகவே, அவன் 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' என்றழைக்கப்பட்டான். பரணரும் அவனுடைய இவ்வீரச் செயலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[46]

கடலில் அவர்களுக்குத் திமிங்கலங்களும், பனை மீனும் பெருந்தீங்கு விளைவித்தன. வணிகர்கள் இவற்றைக் கண்டு பெரிதும் நடுங்கின. இவ்விரண்டில் திமிங்கலம் எல்லாரும் அறிந்ததே. இலக்கியங்களும் இதைக் குறிப்பிடுகின்றன. பனை மீன் என்பது யானையையும் விழுங்கக் கூடியதாயிருந்தது. இதை யானை மீன் என்றும், மோங்கில் என்றும் கூறுவர். மதுரைக்காஞ்சி இவ்வகை மீனைப் பற்றிக் கூறுகிறது.[47] அடுத்தபடியாகப் புயலாலும், சூறாவளியாலும் அவர்களுக்குப் பெருமளவில் ஆபத்துக் காத்திருந்தது. சுழற்காற்றில் சிக்கிய கப்பல்களைக் காப்பாற்ற முடியாமற் போயிற்று. கடற் கொந்தளிப்பு அவற்றின் கொடி மரங்கள், உடையவும், கயிறுகள் அறுபடவும் காரணமாயிருந்தன. அவற்றின் நங்கூரங்கள் பெயர்க்கப்பட்டு கப்பல்கள் கடலில் அலைப்புண்டு தத்தளித்தன.[48]

பண்டைத் தமிழ் வணிகர்கள் இடர்கள் பல எதிர்ப்படினும் அவற்றை எதிர்நோக்கும் மனத்திட்பம் பெற்றிருந்ததுடன், வெளிநாட்டு வணிகத்தைத் தொடர்ந்து நடத்தும் திறன் பெற்றிருந்தனர். அவர்களுடைய முயற்சியுடைமை வியக்கத்தக்கதாயிருந்தது. உரோமாபுரிப் பேரரசு தமிழகத்தினின்றும் பத்து

46. பதிற்றுப். 41.
47. மதுரைக். 375.
48. மதுரைக். 375–379.

லட்சம் பொற்காசுகளுக்குப் பொருட்களை வாங்கி அவற்றை வேறு நாடுகளுக்கு நூறு மடங்கு அதிக விலைக்கு விற்றதாம்.[49] பண்டைத் தமிழ்நாட்டுப் பொருட்கள் மிகப்பெரிதும் விரும்பப்பட்டன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க வரலாற்றாசிரியர் ஒருவர், 'இந்தியா (தமிழகம்) தங்கம் கொழிக்குமிடமாக 'எல்டொரடோ' போன்றும், இந்தியர்கள் கிரேக்கர்களைவிடச் செல்வச் செழிப்புடனுமிருந்தனர்' என்று கூறியுள்ளார்.[50] அப்போதே, உரோமானியர்கள் முசிறியில் ஆயிரம் வீரர்களைக் கொண்ட இரு படைப் பகுதிகளைத் தமது வணிகப் பொருட்களைக் காப்பாற்றிக்கொள்ள வைத்திருந்தனர். அன்றியும் அகஸ்டசின் கோயிலொன்றும் அங்கேயிருந்தது.[51]

உள்நாட்டு வணிகம்

உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் பண்டைத் தமிழகத்தில் செழித்தோங்கியது. வணிகர்கள் ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்குக் கூட்டங் கூட்டமாகச் செல்வர். இக்கூட்டம் 'சாத்து' என்றழைக்கப்பட்டது. இக்கூட்டங்களிலிருந்த பெருவணிகர் 'மாசாத்துவர்' அல்லது 'மாசாத்து வணிகர்' என்றழைக்கப்பட்டனர்.[52] இக்கூட்டங்களிற் சிறந்தவர்கள் அரசர்களால் 'எட்டி' என்னும் பட்டம் கொடுக்கப்பட்டனர். இவ்வாறு பட்டமளிக்கப்பட்டவர்கள் வணிக நெறிகளை முறையாகக் காப்பாற்றுபவராகவும், செல்வத்தை நல்வழியில் ஈட்டுபவராகவுமிருந்தனர். இச்சமூகத்தினருக்கு அவர்களுடைய பொருளாதார நிலைகளுக்கேற்ப, "இப்பர்", "கவிப்பர்", "பெருங்குடியர்" என்றும் பட்டங்கள் அளிக்கப்பட்டன. பல்வேறிடங்களுக்கும் செல்லும் வணிகர்கள் தம்மைக்

---

49. 1800 ஆண்டுகட்கு முந்திய தமிழர்கள், ப. 38.
50. செந்தமிழ், தொகுதி 4, ப. 173.
51. Malasar Manual, Vol. I. p. 199.
52. சிலப். 1: 190; 20: 1–58; குறுந். 390.

கொள்ளையரிடமிருந்தும், ஆறலைக் கள்வரிடமிருந்தும் காத்துக் கொள்ள வேண்டியிருந்தது.[53] வணிகர்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிப்பது அரசரின் பொறுப்பாயிருந்தது. பெருவழிகளில் ஆயுதந் தாங்கிய வீரர்களின் படை வீடுகளிருந்தன. அவர்கள் வழிப்பறி செய்தவர்களை இரும்புக் கரங்கொண்டு ஒடுக்கினர்.[54] கழுதைகள் பண்டங்களை ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்குக் கொண்டுசெல்லப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு கழுதைகளைப் பயன்படுத்திய வணிகர் கூட்டம் "கழுதைச் சாத்து" என்றழைக்கப்பட்டது.[55] பொருட்களை இரட்டை மாட்டு வண்டிகளிலும் கொண்டு சென்றனர். அவ்வாறு செல்பவர்கள் வெகு தொலைவு செல்ல வேண்டியிருந்ததால் தம்முடன் கூடுதல் அச்சினைக் கொண்டு சென்றனர். ஏனெனில், சாலைப் பகுதிகள் பலவும் மோசமாயிருந்தன. இவ்வாறு கொண்டு செல்லப்படும் அச்சு "சேம அச்சு" என்றழைக்கப்பட்டது.[56] வண்டிகள் பலவும் ஒன்றன்பின் ஒன்றாக ஒருசேரச் செல்லும். இம்முறை கொள்ளையர்களிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள அவர்களாற் பின்பற்றப்பட்டது.[57] உப்பு வணிகர்கள் கடற்கரைத் துறைமுகப் பகுதிகளினின்றும் உப்பைப் பெற்று அதனை முல்லை, மருத நிலப் பகுதிகளில் விற்பதற்குக் கொண்டு சென்றனர்.[58] இப்பகுதிகளிலிருந்த வணிகர்கள் கடற்கரைப் பகுதிகளில் நெல் மூடைகளைக் கொடுத்து உப்பு மூடைகளைப் பெறுவர்.[59] மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றபோது, அவர்களுடைய மனைவியர் உப்பங் கழியிலிருக்கும் உப்பைக்

---

53. மணி. *22: 111–114*; புறம். *84*; அகம். *291*.
54. சிலப். *12: 134*; பெரும்பாண். *39–41*; *81–82*.
55. பெரும்பாண். *79–80*; அகம். *89*, *337*.
56. புறம். *102*.
57. சிறுபாண் *56*; பெரும்பாண். *64–65*; புறம். *116*, *313*; நற். *354*; அகம். *310*; குறுந். *124*, *388*.
58. புறம். *60*.
59. நற். *183*.

கொடுத்து நெல்லைப் பெறுவர்.[60] உப்பை விற்பவர்கள் அதனை மாட்டு வண்டியிற் கொண்டு செல்வர். அவர்கள் மாட்டைச் செலுத்தும்போது எழுப்பும் ஒலி அருகிலிருந்த குன்றுகளில் எதிரொலிக்கும்.[61] அவர்கள் நெடுந்தூரம் பயணம் செய்யும்போது உணவு சமைக்க மூன்று கற்களை அடுப்பாக உபயோகிப்பர்.[62] அவர்கள் தம்மோடு மரக்கட்டைகளை விறகாக உபயோகிக்கக் கொண்டு செல்வர். மலைகளிலிருந்து இழியும் அருவி நீரை உணவு சமைக்கவும், குடிநீராகவும் உபயோகிப்பர்.[63] அவர்கள் வழியிலிருக்கும் செடிகளில் உள்ள மலர்களால் தம்மை அலங்கரித்துக் கொள்வர். அவர்கள் செருப்பணிந்து, சாட்டையைச் சொடுக்கிச் சீழ்க்கை யொலியெழுப்பிக் காளைகளை விரட்டி வண்டியைச் செலுத்துவர். இவ்வாறு அவர்களுடைய வண்டிகள் பெருவழியிற் செல்லும் போது சத்தம் மிகுந்திருக்கும். அவ்வாறு இவர்கள் செல்லும்போது ஓர் ஊரே நகர்ந்து செல்வது போன்றிருக்கும். பலவிதக் குழப்பமான சத்தங்களினுடன், காளைகளின் கழுத்துமணி ஒலியும் கலந்திருக்கும்.[64] இவ்வாறு வணிகத் சாத்துக்கள் செல்லும்போது அவர்களுடன் நடந்து செல்லும் வழிப்போக்கர் கள்வர் பயமின்றிச் செல்வர்.[65] கோடைக் காலங்களில், இவ்வாறு பயணம் மேற்கொள்ளும் வணிகர்கள் தம் விடாயைத் தீர்த்துக் கொள்ள நீர்நிலைகளைத் தோண்டுவர். இவை அவ்வழிகளில் செல்லும் மற்றவர்களுக்கும் பயன்படும்.[66] சிலர் உப்பை விற்றே தாம் வாழ்வதற்குத் தேவையான பொருளை ஈட்டுவர்.[67] நெல்லும் உப்பும் சம அளவில் பண்டமாற்றுச் செய்யப்பட்டதாக அறிய

60. குறுந். *269.*
61. அகம். *17.*
62. அகம். *119, 159.*
63. அகம். *169.*
64. அகம். *191; 303.*
65. அகம். *191.*
66. அகம். *295.*
67. அகம். *390.*

முடிகிறது. பிற பொருட்கள் இடம்விட்டு இடம் கொண்டு செல்லப்பட்டு விற்கப்பட்டன. முன்னரே கூறியபடி மயிற்பீலிக் கற்றைகளும், மயிற்கூட்டமும் தமிழகத்திலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.[69] ஆகவே, மற்பீலிக் கற்றைகள் கடற்றுறைப் பட்டினங்களுக்கு மாட்டு வண்டிகளிற் கொண்டு செல்லப்பட்டன என்று கொள்ளலாம்.[70]

பண்டைத் தமிழர்கள் வடவருடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பனி படர்ந்த இமயமலைச் சிகரங்கள், வளம் கொழிக்கும் கங்கைச் சமவெளி, பாடலி புத்தரம் என்னும் நகரின் செல்வச் செழிப்பு தமிழர்களைப் பெரிதும் ஈர்த்தன. வடக்கே வாழ்ந்த மக்கள் கையாற் செய்த விசிறிகள் தமிழகத்தில் விற்கப்பட்டன. வடக்கிலிருந்து கொணர்ந்த வட்டக் கற்களில் சந்தனத்தை அறைத்துத் தமிழர்கள் சந்தனக் குழம்பைத் தயாரித்தனர்.[71]

இரண்டாம் பகுதி

தொழில்கள்

பண்டைய தமிழ்நாட்டில் பிற தேசத்தவர்களும் வந்து தொழில் புரிந்தனர். மகத நாட்டுத் தொழிலாளர்களும், மராட்டியத்துக் கைவினைஞர்களும், அவந்தி நாட்டுக் கம்மியர்களும் தமிழகத்திற் குடியேறித் தம் தொழிலிலீடுபட்டு வளம் கொழித்தனர். தமிழ்நாட்டுக் கைவினைஞர்கள் அவர்களுடன் ஒத்துழைத்து வேலையில் ஈடுபட்டனர்.[72] கூர்ச்சர நாட்டுச் சிற்பங்கள், கோசல நாட்டு ஓவியங்கள், வத்சய நாட்டுக்

69. பி.டி.எஸ். ஐயங்கார், தமிழர் வரலாறு, பக். 129-134.
70. குறள். 475.
71. நெடுநல். 51; சிலப். 4: 37-38.
72. மணி. 19: 107-111.

கைவினைப் பொருட்கள் தமிழர்களாற் பெரிதும் விரும்பப்பட்டன.[73] பித்தளைப் பாத்திரங்களை வார்ப்பதில் ஈடுபட்டவர்கள் 'செப்புக் கோட்டிகள்' என்றும், கருமார்கள் 'கொல்லர்' என்றும், ஓவியர்கள் 'கண்ணுள் வினைஞர்' என்றும் அழைக்கப்பட்டனர். திருப்பரங்குன்றத்திலிருந்த எழுத்தெழில் அம்பலத்தில் புராணக் கதைகளை விளக்கும் பல ஓவியங் களிருந்ததாகப் பரிபாடல் கூறுகிறது. மண் சிற்பங்களை உருவாக்கும் பல கைவினைஞர்களுமிருந்தனர். அவர்கள் மண்ணீட்டாளர் என்றழைக்கப்பட்டனர். தங்க வேலை செய்பவர் 'பொற்கொல்லர்' என்றும் முத்து மாலைகளைக் கோர்ப்பவர் 'திருமணி குயிற்றுனர்' என்றும் அழைக்கப்பட்டனர். நெசவு வேலை செய்பவர் 'துன்னகாரர்' என்றும், தோல்வினை மக்கள் 'தோலின் துன்னர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

கொல்லுத் தொழில்

கொல்லர்கள் படை ஆயுதங்களான வேல், வாள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் பெரிதும் ஈடுபட்டனர்.[74] அவற்றைத் தயாரிப்பது அவர்களுடைய கடமையாயிருந்தது. கொல்லர்கள் உலையிற் பழுக்கக் காய்ச்சிய இரும்பைச் சுத்தியால் அடிக்கும் போது அதனின்றும் நெருப்புப் பொறி கிளம்பியது.[75] உலைகளிற் காற்றைச் செலுத்துங் கருவியான துருத்தியின் வாய்ப்பகுதி குருகு என்றழைக்கப்பட்டது.[76] எரியும் உலையில் கொல்லர்கள் அடிக்கடி நீரைத் தெளித்து அவற்றின் சூடு குறையாமலும் மிகாமலுமிருக்கச் செய்வர்.[77] பழுக்கக் காய்ச்சிய இருப்பைக் கொல்லர்கள் சுத்தியலால் அடிப்பது மணிகள் அசைவதால் எழும் ஒலியையொத்திருந்தது.[78] கொல்லர்கள் கிராமத்து

73. மணி. 18: 19, 107, 152 (அடிக்குறிப்புகளுடன்).
74. புறம். 96, 312, கலி. 17: 1–2.
75. நற். 13; அகம். 72.
76. நற். 125; அகம். 55.
77. நற். 133.
78. நற். 394.

மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஆக்கிக் கொடுத்தனர். அவர்கள் கொழு, அச்சு முதலியவற்றை வார்த்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் கொல்லர் பட்டறையிருந்தது. சில கிராமங்களுக்குப் பொதுவாகவும் கொல்லர் பட்டறையிருந்தது.[79] கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த கொல்லர்கள் மீனவர்களுக்குத் தேவையான வல்லயம் அல்லது எறியீட்டியைத் தயாரித்தனர். மீனவர்கள் கடலிலிருக்கும் சுறாக்களை எறியீட்டியாற் குத்திக் கொன்று பின் அவற்றைப் பிடிப்பர்.[80]

தோலாற் செய்யப்பட்ட துருத்தியின் ஒருமுனையில் கயிறு கட்டியிருக்கும். அதனை மரப்பலகையுடனிணைத்து அதைக் காலால் மேலும் கீழும் செலுத்திக் காற்றை உலையிற் செலுத்துவர்.[81] இவ்வாறு உலையிற் காற்றுச் செலுத்தப்படும் போது அதனின்றும் தீப்பொறிகள் ஒளியுமிழ் புழுக்கள் போன்று கிளம்பும்.[82] உலையினின்றும் எழும் ஒலி புலவர் பெருமூச்சுக்குப் பலமுறை இலக்கியங்களில் ஒப்புவமை கூறப்பட்டுள்ளது.[83] உலைகளில் காணப்படும் பெரிய பட்டைக்கல் உலைக்கல் என்றழைக்கப்பட்டது. பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பு அதில் வைக்கப்பட்டு வேண்டிய உருவம் வருமட்டும் அடிக்கப்பட்டது. இதனால் எழும் ஒலியால் அருகிலிருந்த மாடங்களினின்றும் புறாக்கள் பயந்து பறந்து செல்லும்.[84] கொல்லர்கள் பலவகை வடிவமுள்ள பொருட்களை வடிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.[85]

---

79. குறுந். *172.*
80. குறுந். *304.*
81. குறுந். *172.*
82. அகம். *202.*
83. அகம். *204*; சிலப். *4: 59.*
84. பெரும்பாண். *436–437.*
85. சிலப். *16: 105–106.*

தச்சுத் தொழில்

அக்காலத்திலிருந்த தச்சர்கள் போர் வீரர்களுக்கு வேண்டிய தேர்களைச் செய்து கொடுத்து அவர்களுக்குதவினர். அவர்களில் சிலர் இவ்வாறு தேர்களைச் செய்வதில் தேர்ச்சி பெற்று நாளொன்றுக்கு எட்டுத் தேர்களைச் செய்தனர். அதே சமயம் ஒரு தேரின் நுண்ணிய வேலைப்பாடமைந்த சக்கரத்தைச் செய்ய ஒரு மாதகாலம் கூட எடுத்துக்கொள்வர்.[86] இவ்வாறு அவர்கள் பெருமளவு தேவைப்பட்டவற்றை விரைவாகச் செய்யவும் நுண்ணிய வேலைப்பாடுள்ள பொருட்களைக் கவனமாகச் செய்யவும் திறமையுள்ளவராயிருந்தனர். கொல்லர்களைப் போன்றே தச்சர்களும் வேளாளருக்கு வேண்டிய பொருட்களான கலப்பைகள், வண்டிகளைச் செய்து கொடுத்தனர். தச்சர்கள் எக்காலத்திலும் வேலையில்லாமலிருந்ததில்லை என்பதையறிய மகிழ்ச்சியாயுள்ளது. ஔவையார் கூறுகிறார்: "தச்சுத் தொழிலையறிந்தானொருவன் கையிற் கோடாலி கொண்டு நாட்டில் நுழைந்தால் அவன் தனக்கு வேண்டிய உணவைப் பற்றிக் கவலையுறத் தேவையில்லை".[87]

தச்சுத் தொழிலாளர்கள் ஒருபோதும் சோம்பியிருந்ததில்லை. அவர்களுக்கு ஓய்வென்பதே கிடையாது. அரசனின் படைகள், உழவர்களுக்கு வேண்டிய பொருட்களைச் செய்து கொடுத்த பின் அவர்கள் பொம்மைகள், சிறுதேர், முதலிய குழந்தைகட்கு வேண்டிய விளையாட்டுப் பொருட்களைச் செய்தலில் ஈடுபட்டனர். உருக்கப்பட்ட சிவப்பு மெழுகு அரசனின் தேரின் பொருத்துகளிற் செலுத்தப்பட்டு அப்பகுதிகள் வழவழப்பினிருக்குமாறு செய்யப்பட்டன.[88] அவர்களிற் சிறந்தவர்கள் சிற்பங்கள் செய்தலில் ஈடுபட்டனர்.[89] திவாகரம் என்னும் நிகண்டு நூல்

86. புறம். 87.
87. புறம். 206.
88. சிறுபாண். 256–257.
89. நெடுநல். 76.

சிற்பங்கள் செய்யப் பயன்பட்ட பத்துப் பொருட்களைப் பற்றிக் கூறுகிறது. அவையாவன: கல், உலோகம், செயற்கைக் கல், மரம், களிமண், சுண்ணாம்பு, தந்தம், நிறம் கண்ட சர்க்கரை, மெழுகு முதலியன. தச்சர்கள் பலரும் மரங்களில் நுண்ணிய சிற்பங்கள் செய்வதில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

கை விளைஞர்

இரும்பு, தங்கம், மரம் முதலியவற்றைக் கொண்டு பொருட்களைச் செய்தவர் பொதுவாகக் 'கம்பியர்' என்றழைக்கப்பட்டனர். நெடுநல்வாடை, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அரண்மனை வாசல், படிகள் முதலியவற்றைச் செய்தவரின் திறமையைப் பற்றிக் கூறுகிறது.[90] இக்கைவினைஞர்கள் முத்தும், மணியும் தத்திப் பெய்த பொன் நகைகளைச் செய்தவில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.[91] அவர்கள் செப்புக் கலயங்களையும் வடித்தனர்.[92] ஆனால் பொன் நகைகளைச் செய்தவர்கள் மட்டுமே பொதுவாகக் கம்மியர் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் தேய்ந்த, உடைந்த நகைகளையும் செப்பம் செய்தனர்.[93] தங்க நகைகளை உரைத்துப் பார்க்கும் உரைகல்லையும் அவர்கள் எப்போதும் கைவசம் வைத்திருந்தனர்.[94] பொற்கொல்லர்கள் வெள்ளியாலான பொருட்களையும் செய்தனர்.[95]

அவர்கள் பெண்கள் இடுப்பில் அணியும் மேகலை என்னும் தங்க நகைகளையும் செய்தனர்.[96] அரம் என்னும் கருவியால் நகைகள் செப்பம் செய்யப்பட்டு நுண்ணிய பல வேலைப்

90. நெடுநல். 76–84.
91. நற். 94; கலி. 117.
92. நற். 153.
93. நற். 363; சிலப். 5: 106; 16: 105–106.
94. அகம். 178.
95. அகம். 317.
96. புறம். 353.

பாடுகளுடன் விளங்கின. அவர்கள் பொன்னை வெட்டிப் பல்வேறு வடிவங்களில் வார்த்தனர். அரம் என்னும் கருவி மூலம் அவற்றை ஒளிவீசச் செய்தனர். இதனால் அவற்றின் எடை குறைந்தது.[97] காவிரிப்பூம்பட்டினத்துப் பட்டினப் பாக்கத்தில் கம்மியர் தெரு இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.[98] வஞ்சியில் அவர்கள் தெரு இருந்ததாக மணிமேகலை கூறுகிறது.[99] பொற்கொல்லர்களின் கடைகள் தனிக் கொடிகளுடன் பகலிலும் ஒளியுமிழ் விளக்குகள் மூலம் இரவிலும் காட்சியளித்தன.

மட்பாண்டங்கள்

மட்பாண்டங்களைச் செய்தவர்கள் குயவர் என்றழைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான களிமண்ணும் சுழலும் சக்கரமும், பல வடிவங்கள், அளவுகள் பெற்ற மட்பாண்டங்களைத் தம் கைவண்ணத்தால் சுழலும் சக்கரத்தின் உதவியுடன் அவர்கள் செய்தனர்.[100] அவர்கள் இறந்தவர்களை வைத்துப் புதைக்கும் பெரிய முதுமக்கள் தாழியையும் செய்தனர். அவர்கள் செய்த மட்பாண்டங்களைச் சூளையில் வைத்துச் சுட்டனர். இச்சூளைகளினின்றும் மேகம் போலப் புகை எழுந்தது.[101]

சலவை

வண்ணார் என்றழைக்கப்பட்ட சலவைத் தொழிலாளர்கள் ஆறுகளின் கரைகளிலிருந்த வண்ணார்துறை என்னும் பகுதிகளில் பணிபுரிந்தனர். அவர்கள் சலவை செய்த துணிகளைக் கஞ்சியில் நனைத்துக் காய்ச்சி விறைப்புடன் கூடியவையாயிருக்கச் செய்தனர்.[102]

---

97. குறள். 888.
98. சிலப். 5: 44.
99. மணி. 28: 44.
100. புறம். 32.
101. புறம். 228, 256.
102. அகம். 387, நெடுநல். 134–135.

நெசவு

பண்டைத் தமிழர்களின் முக்கியத் தொழில்கள் வேளாண்மையும், துணி நெய்தலுமாகும். அவர்கள் நெய்த துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. எரோடோட்டசு (கி.மு. 2400) என்னும் வரலாற்றாசிரியர், இந்தியப் பருத்தித் துணிகளைப் பெரிதும் போற்றியுள்ளனர். "அது பருத்திப் பயிர்களிலிருந்து பெறப்பட்ட மெல்லிய மயிர் போன்றது. அது கம்பளியை விடச் சிறந்தது."[103]

நெசவுத் தொழில் செய்தவர், "காருகர்" என்று பண்டைய இலக்கியங்களில் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் தம் தொழிலை வீடுகளிற் செய்தனர். நாற்பது பெண்டிரின் தொழிலாயிருந்தது.[104] கைம்பெண்களுக்கு அதுவே வாழ்வளிக்கும் தொழிலாயிருந்தது.[105] இளங்கோவடிகள் மதுரையில் காருகர் தெரு இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். நெசவாளர்கள் பட்டு, பருத்தி, உரோமம் ஆகியவற்றாலான ஆடைகளை நெய்தனர்.[106] எலியின் மயிரினாலான ஆடை நெய்யப்பட்டது. இவ்வெலிகள் மலைகளிலிருந்தவை. அவை பூனையைவிடப் பெரிதாகவும் அவற்றின் உரோமம் செந்நிறமாயு மிருக்கும். சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் தமது உரையில் நாற்பத்தேழு வகைத் துணிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.[107] துணிகள் மிக நுண்ணிய வகையில் அவற்றின் இழை தெரியாதவாறு நெய்யப்பட்டிருந்தன. துணி மிக மென்மையாகவும், பாம்புச் சட்டையைப் போன்று மெல்லிய தாகவுமிருந்தது. அவற்றில் பூ வேலைகள் செய்யப்பட்டிருந்தன.[108]

---

103. செந்தமிழ் – தொகுதி 5, பக். 158.
104. புறம். 125, 326.
105. நற். 353.
106. சிலப். 5: 16–17 (அடியார்க்கு நல்லார் உரை).
107. சிலப். 14: 205–207.
108. பொருநர். 82–83; மணி. 28: 52–53; புறம். 383.

மூங்கிலின் உள்ளேயிருக்கும் சவ்வைப் போன்று மெல்லிய ஆடைகளிருந்தன.[109] பால் காய்ச்சும்போது எழும் வெண்மையான ஆவியைப் போன்ற மென்மையான ஆடைகளுமிருந்தன.[110] இவ்வாறு நெய்யப்பட்ட ஆடைகள் மலர்களைப் போல் அழகுறவும், புதியனவாகவுமிருந்தன.[111] கரையுடன் கூடிய புட்வைகளும், வேட்டிகளும் நெய்யப்பட்டன. இக்கரைகள் சிறு முடிச்சுகளுடனும் அவற்றிலிருந்து தொங்கும் நூல்களுடனுமிருந்தன.[112]

சங்கவேலை

சங்கு வேலை செய்தவர்கள் நெய்தல் நிலப்பகுதியில் வாழ்ந்தனர். சிலப்பதிகாரம், புகார் நகரின் பட்டினப்பாக்கத்தில் சங்கு வேலை செய்தவர்கள் வாழ்ந்த தெரு இருந்ததாகக் குறிப்பிடுகிறது.[113] மணிமேகலை, அவர்கள் காஞ்சியிலும், வாழ்ந்ததாகக் கூறுகிறது.[114] யாகம் புரிதல் முதலிய தமக்குரிய கடமைகளை நிறைவேற்றாத அந்தணர்கள் சிலர் இத்தொழிலில் ஈடுபட்டனர். அவர்கள் சிறந்த சங்குகளைப் பொறுக்கியெடுத்து அவற்றிலிருந்து கவர்ச்சி மிகுந்த வளையல்களை அறுத்தெடுத்தனர்.[115] அவற்றைப் பெண்கள் பெரிதும் விரும்பியணிந்தனர். பாண்டிய மன்னனின் அரசி வலம்புரிச் சங்கினாலான வளையல்களையணிந்ததாக நெடுநல்வாடை கூறுகிறது.[116] பார்ப்பனர் இவ்வளையல்களைச் செய்வதற்குரிய சங்குகளை மீனவர்களிடமும், சங்கு குளிப்பவர்களிடமும் இருந்து பெற்றனர்.

---

109. சிறுபாண். **236**; புறம். **383**.
110. பெரும்பாண். **46**.
111. புறம். **390: 13–18**.
112. பொருநர். **155**.
113. சிலப். **5: 47**.
114. மணி. **28: 45**.
115. அகம். **24, 118**; அகம். **6**.
116. நெடுநல். **142**.

மீன் பிடித்தல்

கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் மீன் பிடித்து விற்று வாழ்க்கை நடத்தினர். அவர்கள் நன்கு முறுக்கிய நூலினால் நெய்த வலைகளை இதற்குப் பயன்படுத்தினர். அவர்கள் மிகவும் கனமாயிருந்த இந்த வலைகளைப் படகுகளில் கொண்டு சென்றனர். மதம் பிடித்த யானையைப் பலரும் சேர்ந்து அடக்குவது போன்று இப்படகினைச் செலுத்தப் பலரும் உதவினர்.[117] அவர்தம் மனைவியர் இவ்வாறு பிடித்துவந்த மீன்களை விற்றனர். மீன்களும் காய வைக்கப்பட்டுப் பிறகு விற்கப்பட்டன.[118] அவர்களும் உப்பளங்களினின்றும் பெற்ற உப்பையும் விற்றனர். அவர்களுடைய இத்தொழில்களைப் பற்றிய குறிப்புகள் தமிழிலக்கியங்களில் ஏராளமாயுள்ளன.

சிறுதொழில்

அரசரின் அனுமதியுடன் தங்கக் காசுகளைச் சிலர் வார்த்தனர்.[119] புகாரின் மருவூர்ப்பாக்கத்தில் பல தொழில்களிலும் ஈடுபட்டவர்கள் வாழ்ந்தனர்.[120] சந்தனம், அகில், வண்ணப் பொடிகள், சுண்ணாம்பு, மலர்கள் ஆகியவற்றை விற்றவர்கள் அப்பகுதியில் வந்துகுவிந்தனர்.[121] மதுரைப் பேரூர், மன்னரும் விரும்பிய பல ஆடம்பரப் பொருள்களை விற்ற கடைகளைக் கொண்டிருந்தது.[122] அதைப் போலவே காஞ்சியிலும் பல கடைகளிருந்தன.[123] மதுரைக் காஞ்சி, மதுரை நகர வணிகர்கள் தம் கடைகளைச் சுற்றித் திருவிழாக் கோலம் போல மக்கள் கூட்டத்தை ஈர்த்தனர் என்று கூறுகிறது.[124]

117. நற். 74.
118. மதுரைக். 256–258; அகம். 60, 320.
119. நற். 274; ஐங்.316.
120. சிலப். 5: 24–34.
121. சிலப். 14: 13–23.
122. சிலப். 14: 163–179.
123. மணி. 28. 34–39.
124. மதுரைக். 518–522.

கடைகள் இரவில் மூடப்பட்டன. திருவிழாக் காலங்களில் இரவிலும் விழித்திருந்து வீதி வீதியாகச் சென்று கூவி விற்று வணிகஞ் செய்த சிலர் உறங்கச் சென்றனர். அப்பம், அடை முதலியவற்றை ஆக்கி விற்றவர்கள், தம் வணிகக் கூடத்திலேயே உறங்கி விழுந்தனர்.[125] பலர் வீதி வீதியாகச் சென்று கூவிப் பொருள்களை விற்றனர். வேறு சிலர் கடைகளை உடையவரா யிருந்தனர்.[126] பெரும்பாணாற்றுப்படை தெருக்கடைகளில் விற்கப்பட்ட இடியாப்பத்தின் மணத்தினையும் சுவையையும் புகழ்கிறது. தயிரை விற்றவர்கள் வீதி வீதியாகச் சென்றனர். அவர்கள் தம் பொருளுக்கு ஈடாக நெல்லைப் பெற்றனர். நெய்யை விற்றவர்கள் அதற்கு ஈடாகத் தங்கக் காசுகளைப் பெற்றனர். ஆனால் தங்கக் காசுகள் வேண்டாமென்றும் அதற்கு மாற்றாக எருமை, பசு அல்லது கன்றைப் பெண்கள் விரும்பி ஏற்றனர் என்றும் நூல்கள் கூறுகின்றன.[127] ஆட்டையும், மாட்டையும் மேய்த்தவர்கள் இடையர் எனப்பட்டனர். ஓர் இடையன் தன் மாட்டை நன்கு பேணியதைப் பற்றி நற்றிணை கூறுகிறது. அவனுடைய தோள்களினின்றும், அவனுடைய அன்றைய தேவைக்கான உணவுப் பொருள்கள் கயிற்றில் கட்டப்பட்டுத் தொங்கின. அவன் ஒரு பாயையும் நெருப்புக் குச்சிகளையும் சுமந்து சென்றான். அந்தப் பாயைக் கொண்டு அவன் தன்னை மழையில் நனையாமற் காத்துக்கொண்டான். அவன் தன்னுடன் கொண்டு சென்ற கம்பில் சாய்ந்துகொண்டு சீழ்க்கையொலி எழுப்பி மாடுகளை மேய்த்தான்.[128] அக்கம்பின் நுனி வளைந்து சற்றுக் கடினமானதாக இருந்தது. அதன் உதவியுடன் அவன் இலைகளை மரங்களினின்றும் பறித்தான்.[129]

---

125. மதுரைக். *621–627*.
126. மதுரைக். *405*; பதிற்று. *13: 23*.
129. பெரும்பாண். *160–165*.
130. நற். *142*.
131. நெடுநல். *3–4*.

இடையர்கள் மேய்ச்சல் நிலப்பகுதிகளில் வாழ்ந்தனர். அவர்கள் தம்மை முல்லை, மல்லிகை மலர்களாலான மாலைகளைச் சூடி அலங்கரித்துக் கொண்டனர் பெண்கள் கலங்களில், மல்லிகை, குருக்கத்தி முதலிய மலர்களைக் கொண்டுசென்று மாலைப் பொழுதில் மக்களிடம் விற்றனர்.[130] கலங்களில் குவிந்து கிடக்கும் மலர்களில் உள்ள தேனையுண்ண தேனீக்கள் மொய்த்தன.[131]

நாட்டுக் கட்டில்களில் கயிற்றைக் கட்டியவர்கள், 'தோலின் துன்னர்' எனப்பட்டனர். அவர்களும் இடம் விட்டு இடம் சென்றனர். கட்டில்களோடு கயிற்றைப் பிணைக்க அவர்கள் பெரிய ஊசியைப் பயன்படுத்தினர்.[132] புகாரிலும், காஞ்சியிலும் இம்மக்கள் வாழ்ந்த தெருக்களிருந்தன. கத்திகளையும், கத்திரிக் கோல்களையும் சாணை தீட்டுபவர்களும் தெரு விட்டுத் தெரு சென்று தம் தொழிலைப் புரிந்தனர். அவர்கள் 'காரோடர்' என்றழைக்கப்பட்டனர். அவர்கள் சாணை தீட்டும் கற்களைத் தாமே செய்தனர். அதை மெழுகால் மூடினர். அது உடையாததாயிருந்தது.[133]

பலர் கைவிசிறிகளைச் செய்து விற்றனர். அவர்கள் செய்த செந்நிற விசிறிகள் அரண்மனை வாழ்வோரால் பெரிதும் விரும்பப்பட்டது. குளிர்காலத்தில் உபயோகிக்கப்படாத அவை தூசு துப்பட்டை படியாமலிருக்க உறைகளால் மூடப்பட்டன.[134] சில விசிறிகள் வடநாட்டினரால் ஆக்கப்பட்டது.[135] சிறு பாய்களும் விற்கப்பட்டன. அவை உணவு உண்ணும்போது மக்களால் இருக்கைளாகப் பயன்படுத்தப்பட்டன. பனை

130. கலி. 117; சிலப். 5: 51.
131. நற். 97.
132. புறம். 32: 1-4.
133. அகம். 1.
134. நெடுநல். 57-58.
135. அகம். 340.

மரத்தின் தளிர் ஓலைகளினின்றும் அவை நெய்யப்பட்டன. இப்பாய்களில் ஓவியங்கள் வரையப்பட்டு அவை கவர்ச்சி மிகுந்தவையாகக் காட்சியளித்தனர்.[136]

இவ்வாறு சிறு தொழில்களில் ஈடுபட்ட பலரும் நகரங்களில் கூடி வாழ்ந்தனர். மதுரை நகரில் இவ்வாறு சிறு தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்தவர்கள் குடியிருந்த தெருக்களிருந்தன. அவையாவன: நவரத்னங்களை விற்றவர்கள், பொற்கொல்லர்கள், துணியை விற்றவர்கள், பலசரக்கு விற்றவர்கள் குடியிருந்த தெருக்களாகும். இவ்வாறு பல வணிகர்கள் வாழ்ந்த தெருக்கள் தனித்தனியாகவிருந்தன.[137] இத்தகு வணிகர்கள் வாழ்ந்த தெருக்கள் காஞ்சியிலுமிருந்தனவென்று மணிமேகலை கூறுகிறது.[138] அவர்களில் சிலர் தெருத் தெருவாகச் சென்று பொருள்களை விற்றனர். வேறுசிலர் சொந்தக் கடைகளுடனிருந்தனர். கடைகள், அவைகளில் விற்ற பொருள்களைக் குறிக்கத் தம் உச்சியில் வெவ்வேறு கொடிகளுடன் காட்சியளித்தன. இக்கொடிகளைக் கொண்டு ஆங்காங்கே விற்ற பொருள்கள் எவை என்பதை மக்களறிய முடிந்தது. இக்கடைகளனைத்தும் நாளங்காடிகளாக, பகற்பொழுதில் திறந்து வைக்கப்பட்டிருந்தன.[139] இரவில் வணிகம் செய்த கடைகள் அல்லங்காடிகள் என்றழைக்கப்பட்டன.[140] இரவு வேளைகளில் இக்கடைகளைப் பிரித்தறியும் பொருட்டுக் கொடிகளுக்குப் பதிலாக மிகுந்த ஒளியுமிழும் விளக்குகள் பயன்படுத்தப்பட்டன. கள்ளை விற்ற கடைகள், மற்றக் கடைகளினின்றும் தனியாக இருந்தன. அவை பலவும் சேர்ந்து ஒரேயிடத்திலிருந்தன. அவற்றில் கள்ளை விற்பது மட்டுமின்றி, அவற்றைத் தயாரிக்கும் தொழிலிலும் பலர் ஈடுபட்டிருந்தனர்.[141]

136. சிலப். 16: 35–37.
137. சிலப். 14: 180–211.
138. மணி. 28: 30–58.
139. சிலப். 5: 62–63.
140. சிலப். 6: 134–135.
141. பதிற்றுப். 75; பெரும்பாண். 340–345.

மூன்றாம் பகுதி

துறைமுகப்பட்டினங்கள்

முசிறி

சேரநாட்டுத் துறைமுகப்பட்டினங்களுள் முசிறி ஒன்றாகும். அது முசுறி என்றழைக்கப்பட்டது.[142] அது பழைமையான நகரங்களிலொன்றாகும். ஆதிகவி வால்மீகியால் அது குறிப்பிடப் பட்டுள்ளது. அவர் அதை முசிறியென்பதன் மருவிய பெயரான முரசிப்படித்தானம் என்று குறிப்பிட்டுள்ளார். அது பேரியாறு கடலிற் கலக்குமிடத்தினருகிலிருந்தது. மேலைக் கடற்கரையில் அது சுறுசுறுப்பான நகரமாக, தமிழகத்தை ஆப்பிரிக்கா, மேற்காசியா, ஐரோப்பிய நகரங்களுடன் வணிகத் தொடர்பு கொள்ள உதவுவதாயிருந்தது. இப்பகுதியில் முன்னரே குறிப்பிட்டப்படி தமிழர்களுக்கும் வேற்று நாட்டினருக்கும், மிளகு, தங்கம் ஆகிய பொருள்களால் வணிகத் தொடர்பேற்பட்டிருந்தது.[143]

தமிழ்க் கவிஞராகவும், வரலாற்றாசிரியராகவும் விளங்கிய பரணர் முசிறியின் பெருமையைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்.[144] பரதவர் என்னும் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மக்கள், இத்துறைமுகப்பட்டினத்திற்குத் தாம் கடலிற் பிடித்த பலவகைப்பட்ட மீன்களைக் கொணர்ந்து அவற்றை நெல் மூடைகளுக்கிடாக விற்றனர். இம்மக்கள் வாழ்ந்த குடிசைப் பகுதிகளைச் சுற்றிலும் இவ்வாறு அவர்கள் பெற்ற நெல் மூடைகள் படகுகளோடும் பரவிக்கிடந்தன. துறைமுகத்தில் புறப்படத் தயாராயிருந்த கப்பல்களில் நாட்டின் பல பகுதிகளிலும் கொணரப்பட்ட நெல் மூடைகள் ஏற்றப்படவிருந்தன. இவற்றைச் சுமந்து வந்தவர்களும் மற்ற தொழிலாளர்களும் எழுப்பிய ஒலி

---

142. புறம். *343: 10.*
143. அகம். *149.*
144. புறம். *343.*

விண்ணை எட்டியது. இத்துறைமுகங்களைக் காண வந்த மக்கள் அங்கே குவிக்கப்பட்டிருந்த பல்வேறு பொருள்களைக் கண்டு வியப்பெய்தினர். கப்பல்களில் நிறைத்துக் கொணரப்பட்ட தங்கம் மற்ற உலோகப் பொருள்கள் துறைமுகங்களில் கிடைத்த தமிழகத்தின் பல்வேறு விளை பொருள்களை வாங்கப் பயன்பட்டன. சேர மன்னன் செங்குட்டுவன் இவ்வாறு பொருட்களை வாங்குவதற்காகத் தங்கத்தைக் கொண்டு வந்த வணிகர்களை நன்கு கௌரவித்தான்".

இவ்வாறு முசிறிப் பேரூர் எல்லாக் காலத்திலும் சுறுசுறுப்பாக, ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கையால் பரபரப்புடன் காணப்பட்டது.

தொண்டி

சங்க காலத்து சேரர்களின் மற்றொரு சிறப்பான துறைமுகப் பட்டினம் தொண்டியாகும். அதனை வெளிநாட்டு வரலாற்றா சிரியர்களும், புவியியல் வல்லுநர்களும் திண்டி என்றழைத்தனர். இத்துறைமுகத்தின் வரலாறு அதன் பழம் பெருமையைப் பறைசாற்றுகிறது. சிறிது காலம் அது சேர மன்னர்களின் தலைநகராயிருந்தது.[145] கேரள நாட்டில் ஆலப்புழையினருகிலுள்ள தொண்டிப்பயில் என்னும் சிற்றூரே பண்டைய தொண்டி துறைமுகப் பட்டினமாயிருந்திருக்க வேண்டும்.[146] பெரிப்ளுசு ஆசிரியர் இத்துறைமுகத்தைப் பற்றித் தமது பயணக் குறிப்புகளில் எழுதியுள்ளார். "திண்டிஸ்" சேரோபோத்ரா (சேர) நாட்டிலுள்ளது. கடலினின்றும் காணும்போது அது சிறு நகரம் போல் காட்சியளிக்கிறது. அந்நாட்டிலுள்ள முசிறி, அரோபிய, கிரேக்க நாடுகளிலிருந்து பொருள்களை ஏற்றிவந்த பல கப்பல்கள் நிறைந்த துறைமுகத்தையுடையது. அது திண்டிசுனின்றும்

145. கலைக்களஞ்சியம், தொகுதி, 6.
146. கலைக்களஞ்சியம், தொகுதி, 6.

வேறுபட்டதாகவும், ஐந்நூறு கல் தொலைவில் உள்ளது. அது ஒரு ஆற்றின் கரையில், கடலிலிருந்து ஆற்றின் வழியே இருபது கல் தொலைவு சென்றபின் காணப்படுகிறது.[147] பெரிப்ளூசின் காலம் கி.பி.அறுபதாமாண்டாகும்.[148]

தொண்டி ஓர் அழகு நிறைந்த பட்டினமாகக் காட்சியளித்தது. அந்நகரைச் சுற்றிலும் தென்னந்தோப்புகளும், பசுமையான வயல்களும், மலைப்பகுதிகளும், கடற்றுறைமுன் பகுதியும், செந்நிற மலர்கள் நிறைந்த கழிமுகமுமிருந்தன. இவ்வாறு அது தமிழிலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட நான்கு நிலப்பகுதிகளில் மூன்றான குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டிருந்தது.[149] தொண்டி இயற்கை அன்னை கொலுவீற்றிருக்கும் பேரூராகப் பல மலர் வனங்களுடன், தண்ணிழல் தரும் பூங்காக்களுடனும் காட்சியளித்தது. கீழ்க்குறிப்பிட்டுள்ள ஐங்குறுநூற்றுப் பாடல் வரிகள் இதற்குச் சான்று பகரும்:

"தொண் டிதன் கமழ் புதுமலர்"[150]

"முண்டக நறுமலர் கமழும் தொண்டி"[151]

"கள் நாறுமே கானலாம் தொண்டி"[152]

இவ்வாறு அது பல புலவர்களாலும் பலவகைகளில் புகழப்பட்டுச சிறப்புடனிருந்தன. அதைப் பற்றி பத்து வேறு, வேறு புலவர்கள் இருப்பத்திரண்டு பாடல்களில் பலவேறு சந்தர்ப்பங்களில் புகழ்ந்துள்ளன. அவை கீழே தரப்பட்டுள்ளன:

147. பெரிப்ளூசு, பக். 40–47.
148. வையாபுரிப் பிள்ளை, இலக்கிய தீபம், ப. 164.
149. புறம். 17.
150. ஐங். 176.
151. மேலது.

எண்	புலவர்	நூல்	பாடல் எண்	மொத்த எண்ணிக்கை
1	அம்மூவனார்	ஐங்குறுநூறு	171-180	10
2	பெருங்குன்றூர்கிழார்	அகநானூறு	10	1
		பதிற்றுப்பத்து	88	
		நற்றிணை	195	2
3	பொய்கையார்	புறநானூறு	48	
		நற்றிணை	18	2
4	குறுங்கோழியூர்கிழார்	புறநானூறு	17	1
5	கண்ணகனார்	நற்றிணை	8	1
6	குன்றியனார்	குறுந்தொகை	238	1
7	காக்கைபாடினியார்	குறுந்தொகை	210	1
8	பரணர்	குறுந்தொகை	128	1
9	குடவாயில் கீரத்தனார்	அகநானூறு	60	1
10	நக்கீரர்	அகநானூறு	290	1
				22

மேற்கூறிய பாடல்களை ஊன்றி நோக்குமிடத்துத் தொண்டியைப் பற்றிக் கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளையறியலாம்.

1) தொண்டி சேர அரசு குடும்பத்தின் இளையான பொறையர்களோடு அடிக்கடி தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. சேர அரசர்களின் வேறு இரு பிரிவுகள் குடவர்களும், குட்டுவர்களுமாவர்.[152] பொறையர்கள் அரசு கட்டிலேறிய போதெல்லாம் தொண்டியையே தலைநகராகக் கொண்டிருந்தனர்.[153]

152. நற். 8; குறுந். 128; அகம். 290.
153. குறுந்தொகை தொண்டிப்பாட்டு உரை, ப. 416–417 ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

2) அது நெய்தல் மலர் வனங்கள் நிரம்பிய அழகிய கடற்கரையைக் கொண்டிருந்தது.[154]

3) அந்நகரில் வாழ்ந்த மக்கள் மன நிறைவுடன் காட்சியளித்தனர். அவர்கள் நெய்யிற் செய்த திண்பண்டங்களையும், பல்வேறு வகை மீன்களையும் பெரிதும் விரும்பியுண்டனர்.[155]

4) அந்நகர வீதிகள் நன்கமைக்கப்பட்டு, களிநடம் புரிந்த மக்கள் கூட்டத்துடன் காட்சியளித்தன. ஆகவே, இக்கடற்கரைப் பட்டினம் எக்காலத்தும் ஒலி மிகுந்ததாகவும் சுறுசுறுப்பாகவுமிருந்தது.[156]

5) தொண்டியைப் பற்றிய பல குறிப்புகள் இலக்கியங்களிற் காணப்படினும் இந்நகரத்தின் வணிக நடவடிக்கைகள் பற்றிய செய்தி எதுமில்லை. இது பல அறிஞர்களையும் குழப்பமடையச் செய்துள்ளது. எல்லாக் கடற்றுறைப் பட்டினங்களும் பரபரப்பு மிகுந்து காணப்படும் என்பது எல்லாரும் அறிந்த செய்தி என்பதனால் கவிஞர்கள் இதைப்பற்றிக் குறிப்பிடாமலிருந்திருக்கலாம். அதனால் அவர்கள் மற்ற நகரங்களிற் காணக் கூடாத, இந்நகரத்தின் சிறப்பியல்புகளை மட்டும் குறித்தாற் போதுமென்றெண்ணியிருக்கக்கூடும்.

மேலைக் கடற்கரையிலிருந்த சேரர் தொண்டியன்றிக் கீழைக் கடற்கரையில், பாண்டிய நாட்டிலுள்ள தொண்டியைப் பற்றியும் இலக்கியங்களிற் குறிப்புகள் காணப்படுகின்றன. அதுவும் கடற்கரையிலேயே அமைந்துள்ளது. இப்போது அது இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மற்றொரு கடற்கரைப் பட்டினமான தூத்துக்குடியுடன் இது படகுப் போக்குவரத்தால்

---

154. நற். *145*.
155. அகம். *60*; குறுந். *210*.
156. ஐங். *171*.

இணைக்கப்பட்டுள்ளது. இன்றைய, தமிழ்நாட்டிலுள்ள தொண்டி வாழ் மக்களின் முக்கியத் தொழில்கள் உப்பு ஆக்குவதும், மீன் பிடித்தலுமாகும். பிற்காலப் பாண்டிய மன்னர்கள், குறிப்பாக வரகுணன் ஆட்சி புரிந்தபோது, அது பெரிய நகரமாக விளங்கிற்று.[157]

இவையேயன்றிச் சோழ நாட்டிலும் ஒரு தொண்டி இருந்ததாக அறியப்படுகிறது. ஆனால் அது சோழ நாட்டில் எவ்விடத்திலிருந்தது என்பது அறியக்கூடவில்லை. சிலப்பதிகாரம் இந்நகரத்தின் சிறப்பைப் பற்றிக் கூறுகிறது.[158] பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, வீரச் செயல்கள் பல புரிந்து சோழ மன்னர்களால், இன்றைய இந்தோனேசியாவிலுள்ள சாவா அல்லது சுமத்திரா ஆகியவற்றின் அருகே புதியதாக அமைக்கப்பட்ட நகரமாயிருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால் இது ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை. இதற்கு மாறாக இவ்வாசிரியர், தமிழிலக்கியங்களை அழகுறப் பதிப்பித்த அறிஞர் உ.வே. சாமிநாத ஐயரின் 'சிலப்பதிகாரத்திற் குறிப்பிட்ட தொண்டி, பாண்டியருடைய நகரே' என்னும் கருத்துடன் உடன்படுகிறார். சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் காலத்தில் சோழப் பேரரசர்கள் கடல்பிறக்கோட்டி, தமிழகம் முழுவதையும் ஒரு குடையின் கீழிருத்தி ஆண்டு வந்ததால், பாண்டிய நாட்டிலிருந்த தொண்டியை, சோழர்களின் நகரமாகப் பல புலவர்களும் கூறியிருக்கலாம்.[158]

கொற்கை

கொற்கை மிகப் பழங்காலத்திலிருந்தே பாண்டியர்களின் கடற்கரைப் பட்டினமாக விளங்கியிருந்தது. அது பொருநையாறு கடலுடன் கலக்குமிடத்து இருந்தது. இன்றும்கூட அது ஒரு சிறு கிராமமாக அதே பெயருடன், பொருநையாறு கடலுடன்

157. வையாபுரிப்பிள்ளை, இலக்கிய தீபம், ப. 173.

158. மா.ரா. இளங்கோவன், தமிழகத்தின் துறைமுகங்கள், பக். 17–18.

கலக்குமிடத்திலிருந்து நான்குகல் தொலைவில் இருக்கிறது. தாலமியும், பெரிப்ளூசின் ஆசிரியரும் தம்முடைய பயணக் கட்டுரைகளில் இவ்வூரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இது அந்நகரின் பழமையையும் இன்றியமையாமையையும் காட்டுகிறது. பெரிசியா, கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாட்டு மக்கள் பாண்டிய அரசுடன் இத்துறைமுகம் மூலமாகவே வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். சில வெளிநாட்டரசர்கள், கி.மு.1400ல், பாண்டிய மன்னர்களை அவர்களது வணிகத் தொடர்பு காரணமாகப் பெருமைப்படுத்தி அவர்களைப் "பாண்டியோன்" என்று குறிப்பிட்டுக் கொண்டுள்ளனர்; அன்றியும் அவர்கள் நாட்டு நகரங்களுக்குப் பாண்டிய நாட்டு நகரங்களின் பெயர்களையும் சூட்டியுள்ளனர். கருங்கடலின் கரையில் உள்ள ஒரு நகருக்குக் 'கொல்கிஸ்' என்னும் பெயருள்ளது. இது கொற்கையின் மருவிய பெயராகும்.[159]

டாக்டர் கால்டுவெல் கொற்கையைப் பற்றிய அகழ் வாய்வுகளை நிகழ்த்தியுள்ளார். அவற்றின் முடிவாகக் கொற்கையில் பெருஞ்சங்குத் தொழிற்சாலையிருந்திருக்க வேண்டுமென்னும் முடிவுக்கு அவர் வந்துள்ளார். அவர் அகழ்வாய்வு செய்தபோது பல காசுகளும் தாழிகளும் கண்டெடுக்கப்பட்டன.[160] பெரிப்ளூசின் ஆசிரியர் பாண்டி நாட்டில் முத்தெடுத்தல், குற்றம் புரிந்ததற்காகத் தண்டிக்கப் பட்டவர்களாலேயே நடந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.[161] கொற்கை, இவ்வாறாகப் பண்டைக் காலந்தொட்டே தமிழகத்தின் வணிக வரலாற்றில் பெரியதொரு இடத்தைப் பெற்று விளங்கிற்று. சங்கத் தமிழ் நூல்கள் பலவற்றிலும் அதைப் பற்றியும் அதன் பல்வேறு சிறப்புக்கள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன.

159. மா.ரா. இளங்கோவன், தமிழகத்தின் துறைமுகங்கள், பக். 93–94.
160. மா.ரா. இளங்கோவன், தமிழகத்தின் துறைமுகங்கள், ப. 99
161. எரித்திரியன் கடலின் பெரிப்ளூஸ் ஆசிரியர் - ஸ்காப், பக். 40–47.

கணக்காயனார் என்னும் சங்ககாலப் புலவர் தமது பாடலில் அது இருந்த இடத்தைப் பற்றியும், அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.[162] அதன்படி இத்துறைமுகம் நீண்ட கடற்கரையைக் கொண்டிருந்தது. மிகவும் சீரிய முத்துக்கள் அங்கே எண்ணிறந்த அளவில் கிடைத்தன. வெங்கண்ணனார் என்னும் இன்னொரு புலவர், இத்துறைமுகம் முழுவதும் முத்துக்கள் இறைத்துக் கிடந்தனவென்றும் அதனால் புரவிகள் வேகமாகச் செல்ல முடியாமலிருந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார்.[163] இலக்கியங்களில் இந்நகரம் பற்றிக் காணப்படும் மற்றக் குறிப்புகளாவன: கொற்கைக் கடற்கரையில் சங்குகள் மிகுதியாகக் கிடைத்தன. மீனவர்கள் இச்சங்குகளின் உள்ளே நன்முத்துக்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தனர். கடலில் மூழ்குபவர்கள் ஆழக்கடலினுள் சென்று மிகச் சிறந்த வகைச் சங்குகளைக் கொணர்ந்தனர். இச் சங்குகள் பிறகு கொற்கை நகருக்குக் கொண்டுவரப்படும். அவற்றை வாங்கக் காத்திருந்தவர்கள் பெருமகிழ்ச்சியடைவர்.[164]

பண்டைக் காலத் துறைமுக நகரமான கொற்கை இன்று மிகச் சிறு கிராமமாகவுள்ளது. அங்கு ஒரு கற்சிலை பாதியளவு மணலிற் புதைந்து காணப்படுகிறது. அது சைனர்களின் தீர்த்தங்கரரொருவரின் திருவுருவமாகும். அதனைப் போன்ற இன்னொரு கற்சிலை அதனருகிலுள்ள தோட்டத்திற் காணப்படுகிறது. இது கொற்கையில் பல சமணத் துறவிகள் வாழ்ந்திருந்தனர் என்பதற்குச் சான்று பகர்கிறது.[165]

காவிரிப்பூம்பட்டினம்

தமிழ்ச் சொற்குறிப்பில் பட்டினம் என்பது கடற்கரை நகரத்தை அல்லது பெருநகரத்தைக் குறிக்கும். காவிரி என்னும் சொல் மேற்குத் தொடர்ச்சி மலையின் சைலா மலைப் பகுதியிலி

---

162. நற். 23.
163. அகம். 130.
164. அகம். 27, 296, 305.
165. மா.ரா.இளங்கோவன், தமிழகத்தின் துறைமுகங்கள், ப. 101.

ருந்து தோன்றும் காவிரியாற்றைக் குறிக்கும். இவ்வாறு காவிரிப் பூம்பட்டினம் என்பது காவிரியாறு வங்கக் கடலில் கலக்குமிடத்தருகே, கீழைக்கடற்கரையிற் சோழ நாட்டிலிருந்த பெருநகரம் என்பது பெறப்படும். காவிரிப்பூம்பட்டினம் புகார் என்றும், பூம்புகார் என்றுமழைக்கப்பட்டது. ஆறு கடலொடு கலக்குமிடத்தைத் தமிழிலக்கியங்கள் புகார் என்று குறிப்பிடுகின்றன. 'பூ' என்னும் அடைமொழி அழகிய என்னும் பொருளில் வந்துள்ளது. ஆகவே, பூம்புகார் என்பது அழகிய இடம் என்னும் பொருளுடையது. காவிரிப்பூம்பட்டினம் அல்லது பூம்புகார் கடந்த காலத்தில் அழகிய பெருநகரமாக விளங்கியது. காவிரி கடலொடு கலக்குமிடத்தில் இருந்த இந்நகரத்தைப் பற்றி மேலை நாட்டு அறிஞர்களான தாலமி, பெரிப்ளுசு ஆசிரியர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். தாலமி இதனை, 'கபேரிசு எம்போரியோன்' என்கிறார். தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பிய நூல்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இதைப்பற்றிப் பரக்கப் பேசுகின்றன. மணிமேகலையின் கூற்றுப்படி இந்நகரம் கடல் கோளால் அழிந்தது.[166] இந்நகரம் காகண்டி என்றும் அழைக்கப்பட்டது.[167] அந்நகரம் மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம், நாளங்காடி என்னும் மூன்று பெரும்பகுதிகளைக் கொண்டிருந்தது. மருவூர்ப்பாக்கம் நகரின் கடற்கரைப் பகுதியாகும். பட்டினப்பாக்கம் அகநகர் என்றழைக்கப்பட்ட உள்ளூர்ப் பகுதியாகும். நாளங்காடி இவ்விரண்டிற்குமிடைப்பட்ட பகுதி. இம்மூன்று பகுதிகளையும் பற்றிய சிறு குறிப்பு இந்நகரத்தின் வழித்தடம், கால்வாய் முதலிய அமைப்புகளைப் பற்றித் தெளிவாக விளக்கும்.

காவிரிப்பூம்பட்டினத்தின் மருவூர்ப்பாக்கம் என்னும் பகுதியில் உப்பரிகைகளுடன் கூடிய அரண்மனை போன்ற வீடுகள் பலவிருந்தன. அவற்றில் அழகுற அமைக்கப்பட்ட பலகணிகளுடன் கூடிய அறைகளிருந்தன. முக்கியமான

---

166. தி உறிண்டு, 7.10.1962.
167. மணி. சிறைச். 37–38.

இடங்களில் பொருள்களைப் பாதுகாக்கும் களஞ்சியங்களும், வணிக நிலையங்களுமிருந்தன. வெளிநாட்டினர் பலரும், குறிப்பாக யவனர்கள் இந்நகரில் தங்கள் குடியிருப்புகளை அமைத்திருந்தனர். வணிகப் பொருள்களை ஏற்றி வந்த படகுகளும் கப்பல்களும் இத்துறைமுகத்தை முற்றுகையிட்டன.[168] அன்றியும் சிறு வணிகர் பலரும் தம் கடைகளை, பெரிய அளவிலும், சிறிய அளவிலும் கடற்கரையில் அமைத்திருந்தனர். நகரின் இப்பகுதி எப்போதும் பரபரப்புடன் விளங்கியது.

பட்டினப்பாக்கம் என்னும் உள்ளூர்ப் பகுதி, அதன் செல்வச் செழிப்பிற்குப் பெயர் போனது. அரசனின் அரண்மனை இப்பகுதியிலேயே இருந்தது. அதில் நீண்டு அகன்ற பல வீதிகள் இருந்தன. அவற்றிலிருந்த பெரிய வீடுகளில் அரச குடும்பத்தினரும் பெரு வணிகர்களும் குடியிருந்தனர். இவற்றினிடையே பெரிய பெரிய மாளிகைகளும் அந்தணர் வீடுகளுமிருந்தன. அரண்மனையிலே நாட்டிலுள்ள நுண்ணிய வேலைப்பாடமைந்த அரிய பொருட்கள் பல அளவிறந்து கிடந்தன. அவை பல நாடுகளிலிருந்தும் பல காலங்களிலும் பெறப்பட்டவை. அரண்மனையில் அரசன் தனது அவையைக் கூட்டுமிடம் மிகப் பொலிவுடன் இருந்தது. அதில் அரசனும் அரசியல், விசேஷ காலங்களில் பார்வையாளர் முன் காட்சியளிப்பர். கவிஞர் பலரும் இங்கே வந்து அரசனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றுச் செல்வர்.

மருவூர்ப்பாக்கத்திற்கும், பட்டினப்பாக்கத்திற்குமிடையே நாளங்காடி என்னும் பகுதியிருந்தது. இப்பகுதி நீண்டு, நிழல் தரும் தருக்களுடன் விளங்கியது. அம்மரங்களினடியில் மக்கள் விரும்பும் நுகர்பொருட்கள் விற்கும் கடைகள் பல இருந்தன. இப்பகுதி எப்போதும் பரபரப்புடன் காணப்பட்டது. காவிரிப்பூம்பட்டினம் எந்நாட்டவரும் எம்மதத்தவரும் வந்து வாழும் ஒரு பெரு நகரமாயிருந்தது. பல மதங்களைச்

---

168. பட்டினப். 172–175.

சேர்ந்தவர்கள் ஒருசேர அங்கே வாழ்ந்தனர். ஒவ்வொரு மதத்தவரின் கோயில்களும் அங்கேயிருந்தன. பௌத்தர்கள், சமணர்கள், சைவர்கள், வைணவர்கள் மற்றும் இதரப் பிரிவினரும் சகிப்புத்தன்மையுடன் அங்கே கூடியிருந்தனர்.

பல நாடுகளிலும் புகழுடன் குறிப்பிடப்பட்ட இவ்வழகிய பெருநகரம் கடல் கோளால் அழிந்தது. சமீபத்தில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் இங்கே பெருமளவு அகழ்வாய்வு செய்யப்பட்டது. அதன் பயனாக இந்நகரைப் பற்றிய பல முக்கிய செய்திகள் கிடைத்தன.

"நீடவாசலிலிருந்து வாணகிரி வரையிலும் ஐந்து கல் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் பழைய பண்பாட்டின் கண்ணால் காணத்தக்க சான்றுகள், கிறித்து சகாப்தத்தின் ஆரம்ப காலத்திற்குரியவை நான்கு வெவ்வேறிடங்களில் கிடைத்துள்ளன. கருப்பு, சிகப்பு நிற மட்பாண்டங்கள், மணிமாலைகள் முதலியவையும் காணக்கிடக்கின்றன.[169] தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் இவ்விடத்தின் பழைமை, வளமை பற்றி எவ்வித ஐயமும் கொள்ளத் தேவையில்லை என்று கூறியுள்ளனர். அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டவையும், தமிழிலக்கியங்களில் வர்ணிக்கப்பட்டுள்ள ஒரு பெருநகரத்தைச் சேர்ந்தவையாயிருக்கலாம் என்று தோன்றுகிறது. இங்கு இடங்களின் பெயர்களான வாணகிரி, நீடவாசல், சயக்காடு (சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுவது), வெள்ளியன், இருப்பு, மணிகிராமம் முதலியவை மேற்கண்ட முடிவை உறுதிப்படுத்துவனவாயுள்ளன.[170]

பண்டைய துறைமுக நகரங்களைப் பற்றிய இச்செய்திகள் அவை எவ்வாறு பரபரப்புடன் விளங்கி வெளிநாடுகளுடன் தமிழகத்திற்கிருந்த வணிகத் தொடர்பிற்குச் சான்று பகர்கின்றன என்பதைப் புலப்படுத்துகின்றன.

---

169. தி உறிண்டு, *7.10.1962.*
170. தி உறிண்டு, *7.10.1962.*

7. போக்குவரவுச் சாதனங்கள்

பண்டைத் தமிழகத்தில் பல்வேறு போக்குவரவுச் சாதனங்கள் இருந்தன என்பதற்குரிய சான்றுகளும் தடயங்களும் மிகப் பலவாகும் என்பது அக்கால இலக்கியங்களினின்றும் தெரிய வருகிறது. இவ்வுண்மையை நோக்குங்கால் அன்றைய தமிழர் நாகரிகம் எத்துணைச் சீர்மை பெற்றிருந்தது என்பது புலப்படும். கடல் வழியாலும் தரை வழியாலும் பண்டங்களை ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் போக்குவரவுச் சாதனங்கள் மிகமிக இன்றியமையாதவை என்பதனைத் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். ஒரு சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றம் போக்குவரவுச் சாதனங்களையே பெரிதும் சார்ந்துள்ளது என்பதனையும் அவர்கள் நன்கு புரிந்து கொண்டிருந்தனர். மக்களின் தேவைகள் பெருகவே அவற்றை எல்லாம் உள்நாட்டிலோ, ஓரிடத்திலோ பெற்றுவிட முடியாது என்பதனையும் உணர்ந்தனர். ஆகவே அக்கால மக்கள் தங்கள் பண்டங்களையும் சரக்குகளையும் நினைத்த இடத்திற்குக் கொண்டு சென்று விற்கவும், தமக்கு வேண்டப்படும் பல்வேறு தேவைப் பொருள்களைப் பிற இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளவும் இப்போக்குவரவுச் சாதனங்கள் பெரிதும் பயன்பட்டன.

தமிழ் மக்கள் அக்காலத்தில் வேற்று நாடுகளுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். இயற்கைத் தடங்கல்களையும் இடையூறுகளையும் துணிவுடன் எதிர்த்து நின்று காடென்றும், கடலென்றும், மலை என்றும் பாராது தளராத முயற்சியுடன் அவர்கள் தங்கள் வாணிபச் செயல்களை மேற்கொண்டனர். இத்தகைய வெளிநாட்டுத் தொடர்பால் வணிகம் வளர்ந்ததுடன், பண்பாடு, அரசியல், சமுதாயம் இன்னபிற துறைகளும் நன்கு வளர்ந்து வளம் பெறுவனவாயின. இத்தகைய போக்குவரவுச் சாதனங்கள்

அம்மக்களிடையே ஒரு வகையான ஒருமைப்பாட்டையும், உறுதிப்பாட்டையும், அவர்கள் அனைவரும் ஒரு குடும்ப அமைப்பைச் சார்ந்தவர்கள் என்ற விரிந்த நோக்கத்தையும் வளர்க்க உதவின.

மனிதகுலம் ஒன்று; அதில் எவ்விதப் பேதமுமில்லை என்று நினைக்கும் விரிந்த உள்ளமும் பரிவும் கொண்டு வாழ்ந்தனர் பண்டைத் தமிழ்ச் சான்றோர். “யாதும் ஊரே; யாவரும் கேளிர்”[1] என்பது அவர்தம் கொள்கை. இத்தகைய பரந்த எண்ணமும் விரிந்த நோக்கமும் பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவியமைக்கு மிக முக்கிய காரணம் அவர்தம் வெளிநாட்டுத் தொடர்பும் பழக்கமும் ஆகும். இன்றைய சமுதாயத்தில் நாம் காணும் பல்வேறுவிதமான உயர்தரப் போக்குவரவுச் சாதனங்கள் அன்று இருந்திருக்க முடியாது என்பது உண்மை. ஆயினும் அக்காலக் கட்டத்தில் தமிழகத்தில் இருந்த போக்குவரவுச் சாதனங்கள் குறிப்பிடத்தக்க நிலையில் இருந்தன என்பது மறுக்க முடியாதவொன்றாகும்.

சாலைப் போக்குவரவு (Road Transport)

சாலைகள் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிப்பவையாகும். மனிதனுக்கு நரம்பும் நாடியும் எத்துணை இன்றியமையாதனவோ, அவ்வாறே ஒரு நாட்டிற்குச் சாலைகள். நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வரவும் வணிகத்தை வளர்க்கவும் பிறருடன் தொடர்பு கொள்ளவும் சாலைகள் இன்றியமையாதவை. நாட்டை ஆளும் அரசனின் கடமைகளுள் சாலைகள் அமைப்பது ஒரு தலையாய கடமையாகக் கருதப்பட்டது. தமிழகத்தின் வடக்கே திருவேங்கட மலைப் பகுதியில் பாறைகளுக்கிடையே பாதை ஒன்று ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது. சாலைகள் இக்காலத்தன போன்று

---

1. புறம். 192.

அமைக்கப்படாவிட்டாலும் போக்குவரவுக்கு ஏற்றாற்போல் அமைக்கப்பட்டன. பெருவழி, ஆறு, நெறி, தெரு, வீதி, அத்தம், மறுகு, கவலை போன்ற பலப்பலச் சொற்கள் சாலைகளைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டன என்பது இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

பெருவழி (அல்லது) நெடுஞ்சாலை

அக்காலத் தமிழகத்தில் பெரிய நகரங்களை இணைப்பதற்கு அமைக்கப்பட்ட சாலைகள் பெருவழி எனப்பட்டன. முடியுடை மூவேந்தர் தம் தலைநகரங்களையும் நாடுகளையும் இணைப்பதற்குப் பெருவழிகள் அமைந்திருந்தன. காடுகள் அடர்ந்த வேங்கடமலையின் ஊடே வடக்கே சென்றுவர ஒரு பெருவழி இருந்ததாக அறிய முடிகிறது. அத்தகைய பெருவழிகள் அல்லது நெடுஞ்சாலைகள் மலைகளை ஊடறுத்தும், காடுகளைக் கடந்தும், மணற்பரப்புமிக்க கடற்கரைகளைக் கழிந்தும் சென்றன. பெருஞ்செல்வர், அரசர்தம் படைவீரர், வழிப்போக்கர் முதலியோர் அத்தகைய பெருவழிகளைப் பயன்படுத்தினர்.

வணிகர் தம் சரக்குகளைச் சேய்மையில் உள்ள இடங்களுக்குக் கொண்டுசெல்ல காளைகளையும், குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் பயன்படுத்தினர். தம் வணிகப் பொருட்களை ஏற்றிச்செல்ல வண்டிகளையும் விலங்கினங்களையும் பயன்படுத்தினர். அவ்வணிகர் பெரும்பாலும் குழுக்களாகவே (வாணிகச் சாத்து) சென்று வந்தனர். பண்டங்களை ஏற்றிச்செல்லக் கழுதைகளைப் பயன்படுத்தியோர் "கழுதைச் சாத்து" எனப்பட்டனர். சாத்து என்பது கூட்டம் அல்லது குழு எனப் பொருள்படும். பத்துப் பாட்டுள் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படையில் வரும் ஒரு பகுதி பண்டை வணிகர் பற்றிய அரிய செய்திகளை வெளிப்படுத்தியுள்ளது.

"நீண்ட காதுகளை உடைய கழுதையின் மீது பெரிய மிளகு மூடைகள் ஏற்றப்படுகின்றன; பண்டங்களின் அழுத்தத்தால் அதன் முதுகில் கீறல்கள் விழுந்துள்ளன; நெடுந்தூரம் சுமந்து செல்லத்தக்க வலிமையுடையது அக்கழுதை; அதன் இருபுறமும் பலாப்பழத்தையொத்த பருமையும் கனமும் உடைய மிளகுப் பொதிகள் தொங்கவிடப்பட்டுள்ளன; பெருவழிகள் சந்திக்கும் இடங்களில் அமைந்துள்ள சுங்கச் சாவடிகளில் வணிகர்தம் பொருள்களுக்குரிய வரியை செலுத்துகின்றனர்; வணிகர்களைக் கொள்ளையரிடமிருந்து பாதுகாக்கவும் அவர்தம் சரக்குகள் சூறையாடப்படாமல் தடுக்கவும் வாள் வீரர் சிலர் அங்குக் காவல் புரிகின்றனர்".[2] மேலும், "பகற்பொழுதில் உமணர் என்றழைக்கப்படும் உப்பு வணிகர் தம் பண்டங்களை ஏற்றிச் செல்லும் பாரவண்டிகளின் பக்கமாக நடந்து செல்லுகின்றனர்; விலைமதிக்க முடியாத மலைபடு பொருள்களையும் கடல்படு பொருள்களையும் விற்று வணிகம் செய்யும் வணிகர் முருகவேளை ஒத்த வன்மையும் திடமும் உடையவர்கள்; அவர்கள் இடையில் வாளையும் கால்களில் மிதியடிகளையும் உடம்பில் சட்டைகளையும் அணிந்துகொண்டு வில்லும் அம்பும் கையில் ஏந்திச் செல்வர்".[2(அ)]

அக்கால வணிகர் சந்தனக் கட்டை, அகில், பவளம், முத்து, இரத்தினம் போன்ற உயர்ந்த மதிப்புமிக்க பொருள்களை விற்றுவந்தனர். அவர்கள் செல்லும் நெடுவழிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அக்கால அரசர்கள் செய்து கொடுத்தார்கள்.

முல்லைப்பாட்டில் சாலைகள் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. முல்லை நிலத்தில், செந்நிறக் காடுகளுக்கிடையே ஒரு நெடுவழி செல்கிறது. அதன் இருமருங்கிலும் காயா, கொன்றை, தோன்றி, கோடல் போன்ற மலர்களையுடைய

---

2. பெரும்பாண். 77–82.
2(அ). பெரும்பாண். 63–76.

செடிகளும், மரங்களும் அவ்வழியே அழகு செய்து நிற்கின்றன. அச்சாலை அதனால் காட்சிக்கு இனிமையாகத் தோற்றமளிக்கிறது.[3] அகநானூறும் இத்தகைய குறிப்புகளைக் கொண்டுள்ளது. முல்லை நிலத்தில் செல்லும் பெருவழி ஒன்று அரக்குப் போன்று செந்நிறத் தோற்றமளிக்கிறது. சில வேளைகளில் அது வறட்சியாகவும் வெப்பம் காலுவதாகவும் உள்ளது.[4]

கார் அல்லது மழைக் காலத்தில் முல்லைநிலப் பாதைகள் அல்லது வழிகள் முல்லைப் பூக்களின் நறுமணம் வீசி மக்களின் மனத்தில் மகிழ்ச்சியை விளைவிக்கிறது.

பூம்புகார், மாடமதுரை ஆகிய இருபெரும் நகரங்களையும் இணைக்கும் சாலை பற்றியும் சேரநாட்டிலிருந்து பாண்டிய நாட்டு வழியாகச் சோழ நாடு செல்லும் பெருவழி பற்றியும், இளங்கோவடிகள் தரும் குறிப்புகள் வியக்கத்தக்க வகையில் உள்ளன. பண்டைத் தமிழகத்தின் சாலை நிலை பற்றிச் சிலப்பதிகாரம் சித்திரித்துள்ளமை சிந்திக்கத்தகும்.

கோவலனும் கண்ணகியும் கடற்கரைப் பட்டினமாகிய பூம்புகாரை நீங்கி பாண்டியனின் வைகைக் கரையில் அமைந்துள்ள மதுரை மாநகரத்திற்கு நடந்துவரும் பெருவழியைச் சிலப்பதிகாரம் வருணித்துள்ளது. புகார் நகருக்கும் மதுரைக்கும் இடையே ஏறத்தாழ 300 மைல்கள் நீளமுள்ள பெருவழி அமைந்திருந்தது. அப்பெருவழி குறிஞ்சி முதலிய நானிலப் பகுதிகளின் ஊடே சென்றது. அவ்வழியின் மருங்கே அடர்ந்த காடுகள் இருந்தமையும் குறிக்கப்பட்டுள்ளது. சாலையின் இரு மருங்கிலும் மலர் மரங்கள் அழகு செய்தன. மரங்கள், பலா மரங்கள், எள்ளுச் செடிகள் முதலியவை அடர்ந்த சோலைகளின் வழியே அப்பாதை அமைந்திருந்தது. கோவலன், கண்ணகி,

---

3. முல்லைப். 92–97.
4. அகம். 14.

கவுந்தியடிகள் ஆகிய மூவரும் நாள் ஒன்றுக்குப் பத்து மைல்கள் வீதம் நடந்துள்ளனர். அவ்வழி நெடுகிலும் மலர்கள் மணம் வீசப் பல அழகிய இருப்பிடங்களையும் அந்தணர் சேரிகளையும் அம்மூவரும் கடந்து சென்றனர்.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தெற்குமுகமாக ஒரு நெடுவழி மதுரை நோக்கிச் செல்கிறது. அது திருச்சிராப்பள்ளிக்கு அருகில் (உறையூர்) உள்ள கொடும்பாளூர் வழியாகச் செல்கிறது. அங்குள்ள பெரியகுளத்திலிருந்து கரையோரமாகச் செல்லும் பெருவழி அங்கிருந்த மூன்று பிரிவுகளாக மதுரை நோக்கிச் செல்கிறது. மூன்றாகப் பிரிந்து செல்லும் அவ்வழி சிவபெருமானது திரிசூலம் போன்று இருந்தது என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். அங்கிருந்து வலப் பக்கமாகச் செல்லும் பிரிவுவழி பாண்டியனது வளமிக்க மலைப்பகுதியினூடு செல்கிறது. இடப்புறமாகச் செல்வது அழகர் சோலைப் பக்கம் செல்கிறது. நடுவே செல்லும் வழி சிற்றூர்கள் சிலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள காட்டுப் பகுதியில் செல்கிறது. அதனைக் கடந்தவுடன் அம்மூன்று வழிப்பிரிவுகளும் ஒன்றாக மீண்டும் சேர்ந்துவிடுகின்றன. இவ்வாறு இப்பெருவழி சிலப்பதிகாரத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.[4(அ)]

மேலும் மலைமறையோன் என்பவனது வடநாட்டுப் பயணம் ஒன்று சிலம்பில் இடம்பெற்றுள்ளது. அவன் சேரநாட்டு மாங்காடு என்னும் ஊரினின்று புறப்பட்டு நடந்தே சோழ நாட்டுத் திருவரங்கம் செல்கிறான். அங்கிருந்து புறப்பட்டு திருவேங்கடமாகிய திருப்பதிக்கு நடந்து செல்கிறான். அவனது பயணம் அதனுடன் நிற்கவில்லை; அது கங்கைக் கரை வரை நீள்கிறது. இக்காட்சி அக்காலத்திலேயே தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் இணைப்பாகப் பெருவழி இருந்தது என்பதனைப்

4(அ). சிலப். 11: 70–165.

புலப்படுத்தும். இங்குக் கூறப்பட்ட செய்திகளில் புனைவும், கற்பனையும் விரவியிருந்தாலும், இவற்றின் பின்புலமாக அக்கால மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று திரும்பத்தக்கப் பெருவழிகளும் சிறிய ஒற்றையடிப் பாதைகளும் இருந்தன என்பதை மறுக்க முடியாது.

புகழ்மிக்க சேரப் பேரரசன் செங்குட்டுவன் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் வழியாகத் தனது பெரும்படையை நடத்திச் சென்று நீலகிரியைக் கடந்து வடநாடு நோக்கிக் கங்கைக் கரையும் புறங்கண்டு இமயம் வரை சென்றான் என்பதையும் சிலப்பதிகாரம் விவரிக்கிறது. கண்ணகிக்குக் கோவில் கட்டுவான் வேண்டி அப்பெருமாட்டியின் படிமம் சமைப்பதற்கு ஏற்ற கல்லினை இமயத்தில் பெயர்த்தெடுத்து மீண்ட செய்தியும் சிலப்பதிகாரம் சுட்டுகிறது. ஒரு பெரும்படையை இத்துணைத் தொலைவு நடத்திச் சென்றான் என்றால், அக்காலத்தில் அப்பகுதியில் எத்தகைய பெருவழி அல்லது நெடுஞ்சாலை இருந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்து அறியலாம்.

அன்றியும் சோழப் பேரரசன் ஒருவனும் பாண்டியன் ஒருவனும் இமயம் வரை படை நடத்திச் சென்று எதிர்த்த பிறபுல மன்னரை வென்று இமயத்தில் தத்தம் இலச்சினையாகிய புலியையும் மீனையும் பொறித்தும் திரும்பினர் என்றும் அறிகிறோம்.[4(ஆ)] இந்நிகழ்ச்சிகள் எல்லாம் அன்றே எத்தகைய நெடுஞ்சாலைகள் இருந்திருக்கும் என்பதனைப் புலப்படுத்தும் இலக்கியச் சான்றுகளாகும்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஆற்றுப்படைப் பாடல்களாக வருவனவற்றில் அக்காலத்துப் புலவரும் கலைஞரும் வள்ளல்களை நாடிச் சென்ற நடைபாதைகளும் சாலைகளும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஓர் ஊரை விட்டு மற்றோர்

4(ஆ). சிலப். 17: 1-2.

ஊருக்குப் பாணரும் பொருநரும் புலவர் இருக்கை தேடிச் செல்லுங்கால் நானிலங்களையும் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அவர்கள் சென்ற வழித்தடங்கள் அவ்வந் நிலத்தின் பெயரால் வழங்கப்பட்டன என்பதும் அறிய முடிகிறது.

மணலும் மலைச் சார்ந்த பகுதியாகிய கடற்கரைப் பகுதியில் (நெய்தல்) அமைந்திருந்த வழிகள் சில நேரங்களில் கடல் அலைகளால் அரிக்கப்பட்டுச் சிதைந்து போதலும் உண்டு.[5] நலங்கிள்ளி என்ற சோழ மன்னன் ஒருவனது பெருமையைப் பாடுங்கால் அவன் அமைத்திருந்த வழிகளைப் பற்றியும் குறிப்பு வருகிறது. ஒரு பெரிய கப்பல் சரக்குகளை ஏற்றிக் கொண்டு கடலின் வழியாக வந்து துறைமுகம் சேர்கிறது. அக்கப்பலிலிருந்து இறக்கப்பட்ட சரக்குகள் உள்நாட்டு நகர்களுக்கு அகலமான பெருவழிகளில் அனுப்பப்பட்டிருக்கின்றன.

சிறிய சாலைகளும் நடைபாதைகளும் (Path Ways)

அடர்ந்த காடுகளுக்கிடையே செல்லும் நடைபாதைகள் எளிதில் கடக்கக் கூடியவனவாக இல்லை. இக்காலத்தில் பாறைகளையும் குன்றுகளையும் குடைந்து ஏற்படுத்தப்பட்ட பாதைகளும் சாலைகளும் உள்ளன. ஆனால் அக்காலத்தில் அவ்வாறில்லை. அடர்ந்த புதர்களும் முட்செடிகளும் இடைமிடைந்த பாதைகளே மலைப்பகுதிகளில் இருந்தன. மக்கள்-மெலிந்த பிரிவினர் அத்தகைய மலைப்பாங்கான பாதைகளில் மேலும் கீழும் ஏறியும் இறங்கியும் நடந்து செல்வது மிகவும் கடினமாகவே இருந்தது. எளிதில் அவர்கள் களைப்படையும் நிலை ஏற்படும். சில இடங்களில் மூங்கில் புதர்கள் பாதைகளைத் தடைப்படுத்துவதுமுண்டு. அத்தகைய பாதைகளில் நடந்து செல்வோர் வாளின் இரு முனைகளிலும் நடப்பது போன்ற அச்ச உணர்வினை அடைவாராயினர். அகநானூறு இத்தகைய

---

5. சிலப். கானல். பாடல். 34.

பாதைகளைப் பற்றி ஈரிடங்களில் குறிப்பிட்டுள்ளது.[6] பதிற்றுப் பத்து என்னும் தொகைப் பாடல் சில இடங்களில் அமைக்கும் பொருட்டு புதர்களையும் பாறைகளையும் அகற்றியமையைக் குறிப்பிட்டுள்ளது.[7]

"கல்லூர்பு இழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந்து ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் அருஞ்சுரம்..." (அகம். 65)

என்றும்,

"வாள் நடந்தன்ன வழக்கருங் கவலை
உள்ளுநர் உட்கும் கல்லடர்ச் சிறுநெறி" (அகம். 72)

என்றும் வரும் அகநானூற்று வரிகள் மனங்கொள்ளத்தக்கன.

பழந்தமிழர் தங்களின் தொழிலின் பொருட்டு இத்தகைய நாட்டுப் பாதைகளைக் கடந்து செல்வதில் எத்தகைய இடர்ப்பாடுகளையும் பொறுத்துக் கொண்டனர். அயல்நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள்வதில் அளவிறந்த ஆள்வினை உடையவர்களாயிருந்தனர் என்பது சங்க நூல்களில் பரவலாகக் குறிக்கப்படுகிறது.[8]

வீதிகள்

தமிழகத்துப் பேரூர்களிலும் நகரங்களிலும் அக்காலத்தில் தெருக்கள் அல்லது வீதிகள் அகலமானவையாகவும் சில இடங்களில் குறுகியனவாகவும் அமைந்திருந்தன. அவற்றின் இருமருங்கிலும் ஒழுங்காகக் கட்டப்பட்ட வீடுகள் அமைந்திருந்தன. ஓர் ஊரின் நடுவிடத்தே அகன்று செல்லும் வீதியானது 'தெரு'

6. அகம். 65, 72.
7. பதிற்றுப். 61.
8. அகம். 31; ஐங். 321.

என்றழைக்கப்பட்டது; குறுகிய வீதிகள் 'மறுகு' என்று அழைக்கப்பட்டது. இரண்டு முதலிய தெருக்கள் கூடுமிடங்களின் 'சந்தி' என்றும் ஒரு வீதியிலிருந்து பிரிந்து செல்லும் வழிகள் 'கவலை' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியில் சாலை பற்றிய வியத்தகு குறிப்புக் காணப்படுகிறது. ஒரு நீளமானதும் அகலமானதுமான ஒரு தெருவில் நடைபெறும் விழா நிகழ்ச்சிகள் அதில் வருணிக்கப்பட்டுள்ளன. மத்தளம் முழவு முதலியன அங்கு முழங்குகின்றன. சில வீதிகளில் தேர்கள் இடைவிடாது நகர்ந்து செல்கின்றன. அவ்வீதியெங்கும் மலர்கள் பரவப் பட்டுள்ளன. நெடுநல்வாடை,[9] மதுரைக்காஞ்சி,[10] மலைபடுகடாம்[11] ஆகியவை நீண்ட, அகன்ற தெருக்கள் நகரங்களினூடே அமைக்கப்பட்ட தன்மையைக் குறிப்பிடுகின்றன. அவை ஆறுகள் போல் காட்சியளித்தன. இருபுறமும் மாடமாளிகைகள் அமைந்த, அகன்று நீண்டு செல்லும் தெருக்கள் அகன்று ஓடும் ஆற்றின் கரைகளுக்கு ஒப்பிடப் பட்டுள்ளன. பலப்பல தேர்கள் ஒரே சமயத்தில் செல்லத்தக்க அளவிற்கு மிகவும் அகன்ற தெருக்கள் அமைந்திருந்தன என்பதும் சுட்டப்படுகிறது.[12] பெரும்பாணாற்றுப் படையுள் "நீர்ப்பெயர்த்து" என்ற பகுதி பரதவர் வாழும் குடியிருப்பு என்றும், மணற் பாங்கான சந்துகளும் வீதிகளும் பல்வேறு மாளிகைகளை இருபுறமும் கொண்டிலங்கின என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது வியப்பிற்குரியதாகும்.

சிறுபாணாற்றுப்படையுள் ஆமூரில் இருந்த தெருக்களின் நிலை குறிக்கப்பட்டுள்ளது. தெருக்களில் எழும் புழுதிப் படலம்

9. நெடுநல். 29–30.
10. மதுரைக். 327, 328; 564, 648.
11. மலைபடு. 481.
12. அகம். 16.

யானைகளின் மதநீரால் நனைந்து தணிக்கப்படுகிறது. இது கவிஞனின் கற்பனை எனினும் அக்காலத் தெருக்கள் யானைகள் சென்று திரும்பத்தக்கவாறு அகலமாகவும் மக்கள் நடமாட்டமும், வண்டி வாகனங்களின் செலவும் மிகுந்தமையைப் புலப்படுத்துகிறது எனக் கொள்வதில் தவறில்லை. சில பேரூர்களில் அமைந்திருந்த வீதிகள் குண்டும் குழியுமாகச் சிதைந்து காணப்பட்டன என்பதும், தேர்கள் பலகாலம் செலுத்தப் படுதலின் அவை அவ்வாறு ஆயின என்பதும் பெரும்பாணாற்றுப் படை,[13] அகநானூறு,[14] புறநானூறு[15] ஆகிய நூல்களில் குறிக்கப் பட்டுள்ளன. இவற்றிலிருந்து தெருக்கள் அகலமாகவும் போக்குவரவு மிகுதியாகவும் இருந்தமை புலப்படும். இக்காலத்திலும் பெருநகரங்களில்கூட இத்தகைய நிலை காணப்படும்போது அக்காலநிலை வியப்புக்குரியதன்று.

மேலும் பட்டினப்பாலை, பரதவர் குடியிருக்கும் தெருக்கள் மிகவும் அகன்று இருந்தன என்றும், அவை “வியன்தெரு” என்று குறிக்கப்படுகின்றன என்றும் கூறுகிறது. அத்தகைய அகன்ற தெருக்களில் நுண்மணல் பரப்பப்பட்டிருந்தன என்பதும், அக்காட்சி ஒளிகாலும் முழுநிலவு போன்று இருந்தது என்பதும் அறியப்படுகின்றன.[16]

பெரிய கடைவீதிகள் அல்லது அங்காடித் தெருக்கள் ஆவணம், நியமம் என்று அழைக்கப்பட்டன. ஆரவாரம் மிக்க மருங்கூர்ப்பட்டினம் என்ற நகரில் இருந்த கடைவீதிகளில் கூட்டம் எப்போதும் நிரம்பி வழிவதாகக் குறிக்கப்படுகிறது. கொள்வோரும் கொடுப்போரும் உண்டாக்கும் ஓசையும் ஒலியும் இடையறாது கேட்கப்பட்டன. மற்றொரு நகரில் உள்ள

13. பெரும்பாண். **323–329.**
14. அகம். **326.**
15. புறம். **15.**
16. பெரும்பாண். **324**; அகம். **227.**

தெருக்களில் விழா அயரும் மாந்தரும் மகளிரும் செய்யும் ஓசையும், யாழ், குழல், முரசு, முழவு முதலியன உண்டாக்கும் இன்னிசையும் கேட்ட வண்ணம் இருந்தது.[17]

கடைவீதிகளிலேயே சில விழா நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுவது அக்கால வழக்காக இருந்துள்ளது. சாயுங் காலத்தில் கடைத்தெருக்களில் இன்று பெருநகரங்களில் இருப்பது போன்று மக்கள் இயக்கம் பெருகி இருந்தது என்பதும், அங்கு அமைந்திருந்த பெருவசதிகள் "பீடிகைத் தெரு" என்று அழைக்கப்பட்டது என்பதும் இலக்கியங்களிலிருந்து தெரிகிறது.

சிலப்பதிகாரத்தில் பல்வேறு தெருக்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. நவதானியங்கள் விற்கும் தெருக்கள், கோவில் தெரு, இரதவீதி, முக்கிய கடைவீதி, சங்கு முதலியன விற்போர் தெரு முதலிய தெருக்களும், மாலை நேரக் கடைகள் (அந்திகாடித் தெரு) அமைந்த தெருவும் குறிக்கப்பட்டுள்ளன. பொருள் ஈட்டும் நோக்கத்துடன் மதுரை வந்த கோவலன் தான் வந்த காரியத்தையும் மறந்து மதுரையின் பல்வேறு தெருக்களின் செழிப்பையும் கோலத்தையும் கண்டு வியந்து நின்றான் என இளங்கோவடிகள் குறிப்பிடுவார். இவ்விவரங்கள் ஊர்காண் காதையில் விளக்கப்பட்டுள்ளன.[18] பண்டைத் தமிழகத்தில் இருந்த பெருநகரங்களுள் புகாரும் மதுரையுமே தொழிலுக்கும் வணிகத்திற்கும் பெயர் பெற்ற நகரங்களாக விளங்கியமை புலப்படும்.[19]

போக்குவரவுச் சாதனங்கள் (Means of Conveyance)

மக்கள் ஓரிடத்திலிருந்து வேறு இடங்களுக்கு ஏறிச் செல்ல, அக்காலத்தில் தேர், வண்டி, குதிரை, யானை முதலியவற்றைப் பெரிதும் பயன்படுத்தினார்கள். பண்டை மகளிர் தயிர், மீன், நெய், உப்பு, இறைச்சி முதலிய பொருட்களைச் சுமந்துகொண்டு

17. பட்டினப். 156–157.
18. சிலப். 14: 115–215.
19. பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி குறிப்புக்கள்.

தெருக்களில் விலை கூறி விற்றுத் திரிந்தமை பேசப்படுகிறது. செல்வர், வணிகர் முதலிய மேற்குடியாளர் பல்வேறு சாதனங்களையும் பயன்படுத்திக் கொண்டனர். வணிகப் பொருள்கள் வண்டிகளில் ஏற்றி அனுப்பப்பட்டன. தூரத்தில் உள்ள ஊர்களுக்கும் நகரங்களுக்கும் பொருள்களையும் பண்டங் களையும் கொண்டுசெல்ல தேர், வண்டி, விலங்குகள் முதலி யன பயன்படுத்தப்பட்டன. தொல்காப்பியத்தில் தலைவன் ஏறிச் சென்ற பல்வேறு வாகனங்கள் குறிக்கப்படுகின்றன.[20]

விலங்குகள்

பண்டங்களைச் சுமந்து செல்வதற்குப் பண்டைக் காலத்தில் குதிரைகள், எருதுகள், ஒட்டகங்கள் முதலிய விலங்கினங்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. இன்றும் வண்டிகள் ஏறிச் செல்ல முடியாத மலைப்பகுதிகளில் பல்வேறு விலங்குகள் வாகனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. மணற்பரப்பான பகுதிகளையும் வறுநிலப் பகுதிகளையும் கடந்து செல்வதற்கு ஒட்டகங்கள் பயன்படுகின்றன. சங்க காலத்தும் இதுபோன்ற நிலையே நிலவியது.

பண்டைத் தமிழர்கள் வெளிநாடுகளிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்து கொண்டனர். நெடுந்தொலைப் பயணத்திற்குக் குதிரைகளே ஏற்றவை. ஏனெனில் அவற்றின் குளம்புகள் அதற்கேற்ப அமைந்திருத்தலும் அளவிறந்த வலிமையுடைமையும் காரணங்களாகும். தேர்களை இழுத்துச் செல்லவும் குதிரைகளே பயன்படுத்தப்பட்டன. குதிரைகளுக்குப் 'புரவி', 'மா' என்ற பல பெயர்கள் வழங்கின. பெருவேகத்தில் ஓடும் குதிரைகளைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.[21] மனத்தின் வேகமும் காற்றின் வேகமும் பின்னிடும் அளவில் குதிரையின் வேகம் மிக்கிருந்தது என்று அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.[22]

---

20. தொல். பொருளியல், 17.
21. தொல். கற்பு. 53.
22. அகம். 384.

அக்காலத் தமிழர்கள் குதிரைச் சவ்வாரியில் சிறந்து விளங்கினர். குதிரைகளுக்குப் பல்வேறு அணிகலன்களை அணிந்து பேணி வந்தனர் என்பது அவர்தம் அளவறிந்த விருப்பத்தையும் அன்பையும் காட்டுகிறது. உரிய நேரத்தில் அவற்றின் பிடரி மயிரினைக் கத்தரித்து அழகுபடுத்துவர். சாட்டையும் கடிவாளமும் குதிரைகளுக்கு மாட்டியிருந்தனர். அளவுகடந்து வெறித்து ஓடும்போது அவற்றை அடக்க அவை பயன்பட்டன. மன்னரும் வேளிரும் குதிரைகளின் மீது பேரன்பு செலுத்தினர். அக்குதிரைகளுக்கு அவர்தம் பெயர்களையே சூட்டி மகிழ்ந்தனர். எடுத்துக்காட்டாகக் 'காரி' என்ற யானையின் பெயர் அதனையுடைய திருமுடிக்காரி என்ற மன்னன் பெயரால் அழைக்கப்படுவதாகும். அதுபோலவே ஓரி என்ற வேளிர் தலைவனது குதிரை 'ஓரி' எனப்பட்டது.

யானை அரசவையை அலங்கரித்தது; ஊர்வலங்களுக்குப் பயன்பட்டன. அது உயர்ந்த பட்டினால் அலங்கரிக்கப்பட்டது. அதன் தலை அணிகலனால் அழகு செய்யப்பட்டது. பொன்னணி அணிவிக்கப்பட்டது. கோவேறு கழுதைகளும் செல்வர் ஏறிச் செல்லவும் பண்டங்களைச் சுமந்து செல்லவும் பயன்பட்டன.

இந்திர விழாவில் கலந்துகொள்ள விரும்பிய கோவலன் கோவேறு கழுதையின் மேல் ஏறிச் சென்றதாக இளங்கோவடிகள் கூறுகிறார்.[23] அகநானூற்றிலும் நெய்தல் நிலத்தவர் இவ்விலங்கில் சென்றதாகக் குறிப்பு வருகிறது. இவை பலவிதமான அழகிய அணிகள் பூணப்பட்டுத் தேர்களை இழுத்துச் செல்லவும் பயன்பட்டன.[24] பாறைகள் நிறைந்த குறிஞ்சி நிலத்திலும் கடல் சார்ந்த நெய்தல் பகுதியிலும் உமணர் தமது சரக்கை ஏற்றிச் செல்வதற்கு இவ்விலங்கையே அமர்த்தினர் என்பதும் தெரியவருகிறது.[25]

23. சிலப். 5: 119.
24. அகம். 120, 350.
25. அகம். 207.

பெருஞ்சுமைகளை வண்டிகளில் ஏற்றி அவற்றில் காளைகளைப் பூட்டி ஓட்டிச் சென்றனர். களர் நிலமாயினும் பாறைகளாயினும் பாலைவனமாயினும் வண்டிகளை எளிதில் இழுத்துச் செல்லும் அளவுக்கு அக்காளைகள் வலிமையுடையனவாக விளங்கின. நெடுந்தூரம் பார வண்டிகளைக் கொண்டு சென்றாலும் அவை சிறிதும் களைப்படையாமல் மிகுந்த உரத்துடன் தொழில்பட்டன. அவை 'பகடு' என்று குறிக்கப் பட்டுள்ளன.[26] கரடு முரடானதும் மேடுபள்ளங்களை உடையதுமான கடுமையான வழிகளில் இளம் காளைகளும் (கன்றுகளும்) பார வண்டிகளை எளிதில் இழுத்துச் சென்றுள்ளன.[27] எனவே பழந்தமிழ்ப் புலவர்கள் வீர இளைஞனைக் குறிப்பிடும் போதெல்லாம் அவனது தோற்றப் பொலிவுக்கும் மனத்திட்பத்திற்கும் உடல் உரத்திற்கும் உவமையாகக் காளைகளை (ஏறுகள்) மேற்கோள் காட்டுவாராயினர்.[28] மணல் சார்ந்த பாலை நிழ வழிகளில் பாரம் சுமந்து செல்ல ஒட்டகங்களே ஏற்ற விலங்குகளாகக் கருதப்பட்டன. ஏனெனில் அவைதாம் ஒரு நாள் முழுதும் இரையும் தண்ணீரும் இன்றிக் களைப்படையாமல் பணிபுரிய முடியும். அகநானூற்றுப் பாடல் ஒன்றில்[29] ஒட்டகத்தின் வியத்தகு ஆற்றல் விவரிக்கப்பட்டுள்ளது அறிந்து மகிழத்தகும்.

தேர்கள் (Chariots)

ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குச் செல்வதற்குரிய போக்குவரவுச் சாதனங்களுள் தேர் அக்காலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தது. அது செல்வரும அரச மரபினரும் கவர்ந்து செல்லும் பெருமை மிகு சாதனமாகும் நல்ல மரங்களினால்

---

26. குறள். 624.
27. புறம். 90.
28. புறம். 102.
29. அகம். 245.

கைவினை மிக்க தச்சரால் அது செய்யப்பெற்றது. நெடுந தொலைவு பயணத்துக்கு ஏற்ப அது மிகுந்த வலிமையாக இருந்தது. அதிகமான் என்ற வீ ரன் தேரின் அச்சுப் போல் வலிமையுடையவனாவான் என்று புறப்பாடல் ஒன்று தெரிவிக்கிறது.[30] வலிமைக்கும் விரைவுக்கும் பெயர் பெற்றது தேரின் அச்சு. எனவே அது ஆட்சி புரிதலில் வலிமையும், செயல்படுவதில் விரைவும் உள்ள மன்னனுக்கு உவமையாயிற்று என்று அவ்வையார் பாடியுள்ளார்.

தேர்கள் அவற்றின் உரிமையாளரின் நிலைக்கும், செல்வ வளத்துக்கும் ஏற்ப அணி செய்யப்பெற்றன. பெருஞ்செல்வர் அல்லது வேளிர் பயன்படுத்திய தேர் "பொலந்தேர்" என்று புகழப்பெற்றது. அத்தேரில் தாமரை மலர் வடிவத்தில் கொடிஞ்சி என்ற கைப்பிடி பொருத்தப் பெற்றிருக்கும்.[31] அத்தேர் இழுக்கப்படும் போது அது ஏறிச் செல்வோருக்கு உறுதி தரும்படியான ஒரு தாங்கலாக இருந்தது.

தேர்ச்சக்கரங்கள் 'கால்கள்' அல்லது 'திகிரி' என்று அழைக்கப் பெற்றன. தேர்கள் பொதுவாக, திரைகளாலும் மலர் கொடி களாலும் அழகு படுத்தப்படும். காலினும் (காற்று) கடிது செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்கள் அக்காலத்தில் இருந்தன. இது 'பாண்டில்' என்றும் குறிக்கப்பெறும். 'வையம்' என்பது தேரைக் குறிக்கும் மற்றொரு பெயர். கூட்டு வண்டிக்கும் வையம் என்பது பெயராகும். இந்திர விழாவைக் கண்டுகளிக்கச் சென்ற மாதவி ஏறிச்சென்ற வாகனத்தை 'வையம்' என்றே இளங்கோவடிகள் குறிப்பிடுவார்.[32] குழந்தைகள் சிறுதேர் உருட்டி விளையாண்டனர். அவையும் வையம் என்றே குறிக்கப் பெற்றுள்ளன.[33]

---

30. புறம். 87.
31. புறம். 77, 368.
32. சிலப். கடலாடு. 120.
33. சிலப். கடலாடு. 52.

ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்றில் வரும் 'வையம்' என்பது வண்டி, தேர், கூடார வண்டி என்ற பொருளில் அமைந்துள்ளது.[34] இன்றளவும் நாட்டுப்புறங்களில் இம்மாட்டு வண்டிகள் உபயோகத்தில் உள்ளன. சில நேரங்களில் தேர் நான்கு குதிரைகள் பூட்டப்பட்டு இழுத்துச் செல்லப்படும். கோவேறு கழுதைகளும் இதற்குப் பயன்பட்டன.

அக்கால ஆடவரும் பெண்டிரும் பொதுவாக இத்தகைய வண்டிகளில் (தேர்) பயணம் செய்தனர் என்பது அறியப்படுகிறது. தலைவியின் உற்றாரால் வரவேற்கப்படாத ஒரு தலைவன் சிறைப்புறத்தை (மறைவில்) வந்து நின்று பாங்கன் உதவியால் தலைவியைத் தேரில் ஏற்றிக்கொண்டு மிக வேகமாகக் காடுகளையும் பாலையையும் கடந்து சென்றான் என்ற செய்தி ஐங்குறுநூற்றில் குறிக்கப்பட்டுள்ளது.[35]

குதிரைச் சவாரி கலையில் தேர்ச்சி பெற்ற ஒருவன் 'கொண்ட கோலன்'. அடக்கமுடியாத திமிர் பிடித்த குதிரைகளையும் நன்கு வசப்படுத்தும் கலையில் வல்லவன் அவன். அவன் 'வாசி வாரியன்' (வாசி-குதிரை) என்று அழைக்கப் பெற்றான். தேரை ஓட்டிச் செல்வோன் 'வலவன்' என்றும், 'பாகன்' என்றும் அழைக்கப்பட்டான். இச்செய்தி,

"குருஉமயிர்ப் புரவி கூராலின் பரிநிமிர்ந்து
காலெனக் கடுக்கும் கவின்பெரு தேரும்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின்
அடிபடு மண்டிலத்து ஆதி போகிய
கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்"[36]

என்ற மதுரைக்காஞ்சி அடிகளில் விவரிக்கப்பட்டுள்ளமை காண்க.

---

34. ஐங். *385*.
35. ஐங். *385*.
36. மதுரைக். *387–391*; நச்சினார்க்கினியர் உரை.

மாட்டு வண்டிகள்

தேர்கள் மக்கள் பயணம் செய்வதற்குப் பயன்பட்டன. ஆனால் வண்டிகள் பெரும்பாலும் பண்டங்களை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்பட்டன. எனவே மாட்டு வண்டிகள் உழவர்களுக்கும் வணிகர்களுக்கும் ஒருங்கே பயன்பட்டன. மாட்டு வண்டியைக் குறிப்பதற்குச் சகடு, சகடம், பாண்டில், வையம் முதலிய பல்வேறு குறியீடுகள் வழங்கிவந்தன என்று அறியும் போது, அதன் வடிவ அமைப்பு எவ்வெவ்வாறு வேறுபட்டிருந் திருக்கும் என்பதையும் ஊகித்தறியலாம். சிறிய மாட்டு வண்டிகள் 'குறுஞ்சகடுகள்' என்று அழைக்கப்பட்டன.

இக்காளைமாட்டு வண்டிகள் பெரும்பாலும் உப்பு வணிகர்தம் உப்பு மூடைகளைக் கொண்டுசெல்வதற்குப் பயன்பட்டன. அவ்வாறு போகும்போது உப்பு வண்டிகள் தனித்துப் போகாமல் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தே செல்வது வழக்கம். இச்செய்திப் புறப்பாடல் ஒன்றில் விளக்கப்பட்டுள்ளது.[37] உப்பு அல்லாத வேறு சரக்குகளும் இவ்வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுவது உண்டு. அவை பண்டச்சகடுகள் எனப்பட்டன.

பெரும் பாரங்களை ஏற்றினாலும் தாங்கிக்கொள்ளும் அளவுக்கு அவ்வண்டிகள் வன்மை வாய்ந்தவையாகும். அவ்வண்டிகளின் பல்வேறு உறுப்புகள் ஆரை, ஆரம், அச்சு, சக்கரம் என்று குறிக்கப்பட்டுள்ளன. அச்சு என்பது வண்டியின் இரு சக்கரங்களையும் இணைப்பதாகும். இது மிக்க வலிமை யுடையதாகும். எத்துணையளவு பழு ஏற்றினாலும் அது எளிதில் வளையவோ, உடையவோ செய்யாது; உறுதியாக இருக்கும். இரு சக்கரங்களும் இறுதியில் அச்சில் அச்சாணிகள் கோர்க்கப் பட்டிருக்கும். இவை கடையாணிகள் என்றும் பெயர் பெறும்.

---

37. புறம். 116.

அச்சாணி உருவத்தில் சிறியதாக இருப்பினும் வண்டியை இழுத்துச் செல்லப் பெரிதும் உதவுவதாகும். நீண்ட வழியில் வணிகர் பண்டங்களை ஏற்றிக்கொண்டு செல்ல நேரிட்டால் கூடுதலாக அச்சும் அச்சாணியும் அவ்வண்டிக்கடியில் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும். தேவைப்படின் உடனே பயன்படுத்திக் கொள்ளலாம். இது சேம அச்சு எனப்பட்டது.[38]

நெடுந்தூரம் வண்டிகள் செல்வது உமணர் பொருட்டேயாம். அவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். உமணச் சாத்து என்றும் அக்கூட்டம் வழங்கப்படும். கடற்கரையில் அமைந்திருந்த உப்பளங்களில் உப்பை அள்ளிச் சாக்குகளில் மூடைகளாகக் கட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு குடும்பத்துடன் ஊர்ஊராகச் சுற்றி விற்பனை செய்து அதனால் வரும் பொருள் கொண்டு வாழ்க்கை நடத்துவது உப்பு வணிகன் வழக்கம். ஒரு வகையில் இவர்கள் நாடோடி வணிகர் ஆவர் (Nomadic Merchants). குடியிருப்புக்களில் நிலையாகத் தங்கியிருந்து கொண்டு வணிகம் செய்யும் வழக்கம் அவர்கள்பால் இல்லை என்பது பெரும்பாணாற்றுப்படையுள் விளக்கப்பட்டுள்ளது.[39]

மாட்டு வண்டிகளில் மேற் கூரை வரகந்தாளினால் வேயப்பட்டிருக்கும். அது கருப்பு நிறமுடையது. ஓட்டுபவர் வண்டியில் பார்ச்சட்டத்தின் மேல் உட்கார்ந்து ஓட்டுவது வழக்கம். அவ்வாறு அவர்கள் பயணம் மேற்கொள்ளும்போது தம் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு செல்வர்; தோள் மேல் வைத்துச் சுமப்பார்கள்.

வண்டியின் நுகத்தடியில் இருபுறமும் இருக்கும் துளைகளில் கயிறுகள் கட்டப்பட்டு அவற்றை மாடுகளின் கழுத்தில் மாட்டி வண்டியை ஓட்டுவார்கள். பெண்களும் இத்தகைய வண்டிகளை ஓட்டிச் செல்வதுண்டு. அப்போது ஆண்கள் அவ்வண்டிகளின்

---

39. பெரும்பாண். 65–66.

இரு பக்கங்களிலும் பாதுகாப்பிற்காகச் செல்வார்கள். மாடுகள் கழற்றிக்கொண்டு ஓடிவிடாமலும் வண்டியில் பழுது ஏற்பட்டால் உடனே செப்பஞ் செய்யவும் ஆண்கள் உதவினர். ஒரு வண்டிக்கு ஒரு சோடி (இணை) மாடுகள் மட்டுமின்றி, வேறு சில மாடுகளையும் உடன்கொண்டு செல்வர். முதலில் வண்டியில் பூட்டிய மாடுகள் களைத்துப் போய் மேலும் வண்டியை இழுக்க முடியாது போனால், உடன் கொண்டுசென்ற மாடுகளைப் பூட்டிச் செல்வார்கள். வைக்கோல் முதலிய மாட்டுத் தீனிக்குரிய பொருள்களையும் உடன் கொண்டு செல்வர். உப்பு வியாபாரிகள் நெடுந்தொலை செல்ல நேரிட்டால் அவர்கள் இடைவழியில் சில இடங்களில் தங்கிச் செல்வது வழக்கம். அப்போது ஓய்வு எடுத்துக்கொள்வதுடன் உணவுக்கு வேண்டும் ஏற்பாடுகளையும் செய்துகொள்ள முடியும். அவர்கள் அவ்வாறு இடைவழியில் சமைப்பதற்குக் கல் அடுப்புகளைப் பயன்படுத்துவர்.[40]

காளைமாடுகள் மணிகள் கட்டப்பட்டுச் சிறப்பாக விளங்கும். உப்பு வணிகர் மிகுந்த முயற்சி உடையவர். பாறைகள் நிறைந்த வேங்கடம் போன்ற மலைப் பகுதிகளில் சிறிதும் அஞ்சாமலும், தளராமலும் முயற்சி மேற்கொண்டு பாடுபடுவராவர்.[41] வசதிப்பட்ட இடங்களில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டு மேலும் பயணம் தொடர்வர்.

வையை ஆற்றில் புது வெள்ளம் வரும்போது மைந்தரும் மகளிரும் நீர் விளையாடி மகிழ நினைத்து பல்வேறு வகையான வாகனங்களில் சென்றனர் என்ற குறிப்பு பரிபாடலில் வந்துள்ளது.[42] நீராடச் செல்வோர் பல்லக்கில் ஏறிச் செல்வதும் உண்டு. அதனை மக்கள் சிலர் தோளில் ஏற்றிச் சுமந்து செல்வர். மிக்க செல்வமுடையவரும் செல்வாக்குடையோருமே

40. அகம். 295.
41. அகம். 295.
42. பரி. 10.

அத்தகைய பல்லக்கில் செல்வது வழக்கம். செல்வர் வீட்டு மகளிர் தாம் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு வெளியே செல்லும் போது, திரையால் மூடப்பட்ட அழகான பல்லக்குகளில் ஏறி மகிழ்வுடன் சென்றனர்.

இடையூறுகளும் பாதுகாவலும்

ஒரு நாட்டின் வளம் அங்கு நடைபெறும் வணிகத்தைப் பொறுத்தே அமைவதாகும். முற்காலத் தமிழ் மன்னர் இவ்வுண்மையை நன்கு அறிந்திருந்தனர். அதனால் அவர்கள் சாலைப் போக்குவரத்தில் மிகையான கவனம் செலுத்துவராயினர். சாலைகளின் மூலம் பண்டங்களை வண்டிகளில் ஏற்றிச் செல்லும் வணிகர் கூட்டத்திற்குப் பாதுகாப்பு தருவான்வேண்டி சாலைகளில் முக்கியமான இடங்களில் வில், வேல் முதலிய ஆயுதந் தரித்த காவலர்களை நிறுத்துவாராயினர். வழிப்பறி செய்வோர், கொள்ளையடிப்போர் ஆகியோரின் பிடியில் அகப்படாமல் வணிகரை அக்காவலர்கள் விழிப்புடன் காத்து நின்றனர். பாலை வழிகளில் ஆள் நடமாட்டம் அதிகம் இன்மையால் ஆறலை கள்வர் பண்டங்களை விற்கச் செல்லும் வணிகர்களுக்கு அவ்வப்போது சொல்லொணாத் துன்பத்தையும் இடையூறுகளையும் செய்து வந்தனர். அக்கள்வர் வணிகரின் பொருள் முதலியவற்றைக் கொள்ளையடிப்பதுடன் நிற்காமல் அவர்களைச் சிறிதும் இரக்கமின்றி கொலை செய்து அவர்களின் உடல்களைப் புதைத்து விடுவதும் உண்டு. அத்தகைய கொடிய செயல்கள் பெரும்பாலும் காட்டுவழிகளில் நடைபெற்றன. எனவே வணிகர்கள் பொதுவாக அச்சசத்துடனேயே சென்றுவர நேர்ந்தது. அத்தகைய காடுகளின் வழியே மக்கள் ஆரவாரம் இருப்பதில்லை; அவை புறக்கணிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட இடங்களாகவே இருந்தன. மதுரைக்காஞ்சியிலும் பெரும் பாணாற்றுப் படையிலும் அரசர்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளைச்

செய்திருந்த விதம் வருணிக்கப்பட்டுள்ளது.[43] ஆயின் செங்கோல் அரசர் காலத்தில் யாரும் அத்தகைய கொடுமைகளுக்கு ஆளாவதில்லை. பெண்டிரும் அச்சமின்றிச் செல்லத்தக்கவாறு காவல் மிக்கிருந்தது. இவ்வுண்மை தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள்ளது.[44]

வணிகர் ஆறலைக் கள்வர் போன்ற சமூகக் கொடுமை யாளர்களுக்கு அஞ்சியதோடன்றி, காட்டு வழியில் ஆங்காங்கு திடீரெனப் பெருநெருப்புப் பற்றி எரிவதும் உண்டு. மூங்கில்கள் சில நேரம் காற்றால் மோதுண்டு தீப்பற்றிக் கொள்ளும்; அப்போது கொடிய சுழற்காற்று வீசுமானால் வழி முழுதும் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும் என்பது அகநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிக்கப்படுகிறது.[45] எதிர்பாராது அத்தகைய தீப்பிழம்பால் அகப்படும் பொதுமக்கள் பெரும் கூக்குரல் எழுப்பி அலக்கணுறுவர்.

சில வழிப்போக்கரும், வணிகரும் அத்தகைய கொடிய சாலைகளிலும் பாதைகளிலும் செல்லும்போது அவர்களே ஆயுதங்களைத் தாங்கிச் செல்வதும் உண்டு. அவ்வாறு செய்வது தற்காப்பிற்கு மட்டுமேயாம். அவர்களுக்கு ஓரளவு படைப் பயிற்சி போன்றதொரு ஆயுதப் பயிற்சியும் தரப்பட்டது. அவ்வணிகரது துணிவும் மனஎழுச்சியும் மிக்கிருந்தமையால் தம் தொழிலில் ஒருபோதும் தளர்ந்ததில்லை. அது பாராட்டுக்குரியது.

கடல்வழிச் செலவு (Navigation)

மனிதன் எப்போது அச்சம் தவிர்க்கக் கற்றுக் கொண்டானோ அப்போதுதான் நாகரிகம் என்பது

---

43. மதுரைக். 312; பெரும்பாண். 80–82.
44. தொல். அகத். 40.
45. அகம். 39.

தோன்றலாயிற்று என்பர். கற்கால மனிதர் கண்டவற்றிற் கெல்லாம் பயந்தான். இயற்கைக் கோளாறுகள் அவனுக்கு அச்சம் தந்தன. எனவே அவற்றையெல்லாம் தெய்வங்களாகக் கருதி வழிபாடு செய்ய முற்பட்டான். பின்னர் படிப்படியாக மாறுபட்ட அறிவு வளர்ந்து சிந்தனையும் புகுவது காணும் வேட்கையும் வளர்ந்தன. இயற்கையை மனிதன் தனது தேவைக்கு ஏற்பப் பணிகொள்ளத் தொடங்கினான். இவ்வாறு முதன் முதல் மனிதனுக்குக் கடல் ஓர் அச்சப் பொருளாகவே தோன்றிற்று. அதன் பரப்பு, ஆழம், நீர்ச்செறிவு முதலிய கூறுகள் அச்சவுணர்வினை விளைவித்தன. பின்னர் காலப்போக்கில் அக்கடல் மனிதனுக்குப் பல்வேறு நலங்களைத் தந்தன. கடல் கடந்து நாடுகளைக் கண்டுபிடித்தல், கடல்படு பொருள்களைப் பெற்று மகிழ்தல், இறுதியில் கடலையே தனது மனத்திட்பத்தால் வென்று பணிகொள்ளல் முதலிய செயல்கள் அதன் வழியே தோன்றின. பல்வேறு நாடுகள் தத்தம் வணிகத்தைப் பெருக்கவும் பொருள் ஈட்டவும் கடல் கடந்து தொலை நாடுகளுக்குச் செல்ல நேர்ந்தது. மற்ற நாடுகளைப் போன்றே பண்டைத் தமிழகம் கடல் வணிகத்தில் தலைசிறந்து விளங்கியது.

கடலைக் குறிப்பதற்குத் தமிழில் பல சொற்கள் வழக்குப் பெற்றன. புணரி, முந்நீர், பவ்வம், ஆழி போன்றவை அவற்றுட் சிலவாம். இக்குறியீடுகள் எல்லாம் பழந்தமிழர் கடலுடன் எத்தகைய நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பதனை உணர்த்துவனவாகும். இத்துறையில் தமிழர் பண்டை கிரேக்க நாட்டினரை ஒத்திருந்தனர் எனலாம். அறப்பழங்காலந் தொட்டு மலை, கடல், மண்படு பொருள்களையும் அவற்றின் வாயிலாகச் செய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட பண்டங்களையும் சரக்குகளையும் தூர நாடுகளான கிரீசு, உரோமாபுரி, எகிப்து, சுமேரியா, சாவா, சீனம், இலங்கை முதலிய நாடுகளுக்கு அனுப்பிப் பல வளங்களை நாட்டுக்கு

ஈட்டித் தந்தனர் பழந்தமிழ் வணிகர். அக்காலக் கட்டத்திலேயே தமிழகத்திலிருந்து, விலைமதிக்கவொண்ணாப் பொருள்களாகிய தந்தம், தேக்கு, சந்தனக் கட்டை, அகில் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது பெருமைக்குரியதாகும்.

பண்டைத் தமிழகம் மேற்கு ஆசிய நாடுகளுடன் வணிகத் தொடர்பும் பண்பாட்டுத் தொடர்பும் கொண்டிருந்தது போலக் கிழக்காசிய நாடுகளுடனும் தொடர்பு கொண்டிருந்தமை இலக்கியங்களால் அறிய முடிகிறது. தமிழகத்திற்கும் சாவகத்திற்கும் இடையே கடல் வணிகம் இருந்தமை மணிமேகலைக் காப்பியத்தால் புலப்படுகிறது. ஆபுத்திரன் என்பவன் வணிகர் சிலரால் கப்பல்களில் ஏற்றிச் சாகவத் தீவிற்குக் கொண்டு செல்லப்பட்டான் என்று அக்காப்பியம் கூறுகிறது. அவ்வாறு கப்பல் செல்லும் கடல்வழியில் திடுமெனப் புயல்காற்று உருவாயிற்று. உடனே கப்பலை மாலுமி மேலும் செலுத்தாமல் மணிபல்லவம் என்ற தீவில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைத்தான் என்றும் அறியப்படுகிறது. புயல் ஓய்ந்த பின்னர் கப்பல் மேலும் பயணத்தைத் தொடங்கியது.

கப்பல் வகைகள்

நீராவியால் இயக்கப்படும் எந்திரங்கள் கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்னரே பழந்தமிழர் நேர்த்தியான கப்பல்களைக் கட்டும் திறம் பெற்றிருந்தனர் என்பதனை அறிய வியப்பு ஏற்படுகிறது. திசை தெரியாத அகன்ற கடலில் இக்காலத்தவரைப் போன்று துல்லியமாக வழித்தடங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல் முடியாது என்பது உண்மை. ஆயினும், காற்றைப் போல வேகமாகச் செல்லும் விரைவுடைய கப்பல்களை ஓட்டும் தொழில் திறமை அவர்கள்பால் அமைந்திருந்தது என்பதில் ஐயமில்லை. கப்பல்கள் உயரமாகவும் நல்ல வலிமையாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

கட்டுமரங்களும், சிறிய ஓடங்களும், துடுப்புகளும் அக்கால மக்கள் கடலில் கலம் செலுத்தும் பயிற்சிச் சாதனங்களாக அமைந்தன. காற்றின் திசை நோக்கிக் கப்பல் விடும் கலையில் தேர்ந்திருந்னர். சிறிய ஓடங்களிலிருந்து பெரிய சரக்குக் கப்பல்கள் வரை கட்டும் கலை அக்காலத் தமிழர்க்குத் தெரிந்திருந்தமை புலப்படும். கட்டுமரம், தோணி, படகு, ஓடம், அம்பி, திமில், கப்பல், வங்கம் முதலிய சொற்கள் அக்காலத்தில் வழக்கில் இருந்தமை பழந்தமிழரின் பல்வேறுவிதமான கப்பல் வகைகளை விவரிப்பது காணலாம்.

ஆழ்கடலில் நெடுந்தொலைவு செல்லும் பெரிய கப்பல்கள் வங்கம், நாவாய், கப்பல் என்ற பெயர்களால் குறிக்கப்பட்டன. ஆறுகளையும் ஏரிகளையும் விளையாட்டாகக் கடந்து செல்லப் பயன்பட்டவை. அம்பி, ஓடம், தோணி, படகு என்று அழைக்கப்பட்டன. இவை பெரும்பாலும் துடுப்புகளால் இயக்கப்பட்டன.

மாலுமிகள், வணிகர், சரக்கு, பயணிகள் முதலிய பல்வேறு மக்களையும் பண்டங்களையும் ஏற்றிச் செல்லும் அளவிற்குக் கப்பல்கள் அகலமாகவும் பெரியனவாகவும் அமைக்கப்பட்டன. மிகப்பெரிய இத்தகு கப்பல் ஒன்று ஆழ்கடலில் செல்லும் காட்சி, பெயர்த்தெடுக்கப்பட்ட ஓர் உலகமே நீரில் மிதப்பதுபோல இருந்தது என்று ஒரு புலவர் வியந்து பாடியுள்ளார். சாதகமான பருவக்காற்று அடிக்கும் போதுதான் கப்பல்கள் நகர்த்தப்பட்டன. பிற காலங்களில் துறைமுகங்களில் பாதுகாப்பாக நங்கூரம் செய்யப்பட்டிருக்கும்.

"வளிவழக் கறுத்த வங்கம் போலக்
குருதியம் பெரும் புனல் கூர்ந்தனவே"[46]

என்ற புறநானூற்றடிகள் இதனை மெய்ப்பிக்கும்.

---

46. புறம். 368.

வலிமைமிக்குக் கட்டப்பட்ட ஓடம், உப்பு, நெல் போன்ற பல உணவுப் பொருள்களை ஏற்றியனுப்ப பயன்படுத்தப்பட்டது.[47] மீன்பிடிக்கப் பயன்படும் ஓடங்கள் நெய்தல் பரப்பில் உள்ள புன்னை மரங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்தன. சிதறுண்டு நீரில் செல்ல இயலாத கட்டுமரங்களும் ஓடங்களும் பயன்படாதவை என்று கருதி ஒதுக்கப்பட்டன. கப்பல் ஓட்டிகள் அல்லது மாலுமிகள் மீகாமர், பெருநீர் ஒச்சுநர் என்ற குறியீடுகளால் அழைக்கப்பட்டனர்.

கப்பல் பயணத்தில் பாதுகாப்பு

அக்கால அரசர் துறைமுகங்களில் ஏற்றுமதிக்காக வைக்கப்பட்டிருந்த விலைமதிக்க முடியாத பல்வேறு பொருள்களையும் பிற சரக்குகளையும் பாதுகாக்க வேண்டிப் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். தனிக்காவலர் குழுக்களை (Special Police Force) அங்கு அமர்த்தியிருந்தனர். அதனால் பொருள்கள் சூறையாடப்படாமலும் களவாடப்படாமலும் நன்கு பாதுகாக்கப்பட்டன.

காட்டு வழிகளில் வழிப்பறிக் கொள்ளையர் உலாவுவது போலக் கடல்வழிக் கப்பல்களையும் கொள்ளைக் கூட்டம் இடைமறித்துச் சரக்குகளைச் சூறையாடுவது வழக்கமாக இருந்தது. ஆகவே, வணிகர் பலரும் தம் கப்பல்களுடன் நன்கு பயிற்சி பெற்ற ஆயுதம் ஏந்திய காவலர்களையும் உடன் அழைத்துச் சென்றனர். தற்காப்புக் கருதியே அவர்கள் அவ்வாறு செய்தனர். அன்றியும் அங்கும் இங்கும் தனித்தனியே தோன்றிய சிறிய தீவுகளில் வசிப்போர் வணிகக் கப்பல்களைக் கொள்ளையிட்டே பிழைப்பு நடத்துவாராயினர். எனவே அக்கால அரசரும் இத்துறையில் வணிகர்களுக்குப் பாதுகாப்பு உதவிகளைப் புரிந்தனர். அத்தகைய பாதுகாப்புச் செய்த சேரமன்னருள்

47. பட்டினப். 28–30.

ஒருவன் அச்செயலாலேயே 'கடல் பிறக்கோட்டிய குட்டுவன்' என்று புகழப்பட்டான். அகப்பாடல்கள் பலவற்றுள் இம்மன்னனின் வீரச் செயல்களும் கடற் கொள்ளையரை அடக்கிய திறமும் புலவர்களால் பெருமையாகப் பாடப்பட்டுள்ளன. புறப்பாடல்கள் சிலவற்றிலும், குட்டுவ மன்னன் கொள்ளைக் கூட்டமாகிய குறும்பர் என்ற ஒரு பிரிவினரின் கொடுமைகளை அறவே ஒழித்த தன்மையைப் புலவர்கள் பாடுபொருளாகக் கொண்டனர்.[48] பிறநாட்டுக் கப்பல்களும் அவன் காலத்தில் கடலில் அச்சமின்றிச் செல்ல முடிந்தது. பதிற்றுப்பத்தும் அவனது வீரதீரச் செயல்களைப் பலவாறு புகழ்ந்துள்ளது.[49]

இரவில் திசைதவறிச் செல்லும் கப்பல்களை நெறிப்படுத்த தூரத்தில் உள்ள கடற்கரைகளில் கலங்கரை விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. அக்கலங்கரை விளக்குகளின் உச்சி வானளாவிய நிலையில் இருந்தது. எளிதில் அவ்வுச்சியை அடைய முடியாத நிலை. அது நன்கு வெள்ளையடிக்கப் பட்டிருந்தது. அவற்றின் உச்சியில் மரக்கட்டைகள் தீயிடப்பட்டு எரிந்து கொண்டிருக்கும். அதன் வெளிச்சத்தால் கடலில் தடுமாறும் கப்பல்கள் இரவு நேரத்தில் தடம் மாறாமல் செல்ல வசதி ஏற்பட்டது. பெரும்பாணாற்றுப்படையுள் இச்செய்தி இடம்பெற்றுள்ளது.[50] ஒரு மிகப்பெரிய மணல்மேட்டின் மீது கட்டப்பட்ட கலங்கரை விளக்கமும் அதன் மீது ஒளிபரப்பி எரிந்து கொண்டிருக்கும் தீப்பிழம்பும் அதன்மூலம் மீகாமன் ஒருவன் கப்பலைத் திசை மாறாமல் ஓட்டிச் செல்லும் திறமும் அகநானூற்றில் விளக்கப்பட்டுள்ளது.[51]

48. அகம். 127, 212, 347; புறம். 126.
49. பதிற்றுப். 46, 48.
50. பெரும்பாண். 346–351.
51. அகம். 255.

உதயசூரியன் போல ஒளிவிடும் கலங்கரை விளக்கத்தின் உதவியால் மீன்பிடிக்கும் பரதவர் தமது படகுகளைத் தவறாமல் கடலில் செலுத்தும் காட்சி ஒன்று நற்றிணையில் குறிக்கப் பட்டுள்ளது.[52] சிலப்பதிகாரத்திலும் இத்தகைய செய்தி இடம் பெற்றுள்ளது. யவனரும் கிரேக்கரும் இத்தகைய கலங்கரை விளக்கங்களை அமைத்திருந்தமை இலக்கியத்தால் அறியலாகும். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் ஒரு கலங்கரை விளக்கத்தைச் சுட்டியுள்ளார். பனைமரங்களைத் தூண்களாக அமைத்து அவற்றின் மேலே ஒரு கட்டடம் எழுப்பி அங்கு மண்ணாலாகிய அடுப்பினை உருவாக்கி அதில் சுவாலையுடன் கூடிய தீயினை எழுப்பியிருந்தனர் என்பதும் அறியப்படுகிறது. இவ்வாறாகக் கலங்கரை விளக்கங்கள் பற்றிய விரிவான - பரவலான குறிப்புகள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இதனால் அக்காலத்தில் கடற்பயணம் எத்துணை அளவு சிறந்திருந்தது என்பது புலனாகும்.

உள்நாட்டு நீர்வழிகள்

ஆறுகளும், கழிமுகத் துறைகளும் உள்நாட்டு நீர்ப்போக்குவரவுச் சாதனங்களாக அமைந்தன. அக்காலத்தில் ஆறுகளைக் கடந்து செல்வதற்குப் பாலங்கள் இல்லை. எனவே அக்காலத்தில் கங்கை, காவேரி, பெரியாறு, வைகை போன்ற ஆறுகளைக் கடந்துசெல்ல சிறுசிறு ஓடங்களும் படகுகளும் பயன்படுத்தப்பட்டன. கோவலன், கண்ணகி, கௌந்தியடிகள் ஆகிய மூவரும் காவிரி ஆற்றைப் படகுகளில் ஏறிக் கடந்து சென்றனர் என்பது சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. குதிரை, யானை, சிங்கம் முதலிய விலங்குகளைப் போன்ற வடிவத்தில் தோணிகள் கட்டப்பட்டிருந்தன. மேலேகண்ட மூவரும் ஒரு நாட்டுப் படகில் பயணம் செய்து சிறுதுறையை அடைந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. பெருந்துறையைக் கடக்க ஏனையோர் வெவ்வேறு வடிவில் அமைந்த தோணிகளில் ஏறிச் சென்றனர்.[53]

52. நற். 219.
53. சிலப். நாடு. 214-217.

ஆற்றின் இருகரைகளிலும் சிறியனவும் பெரியனவுமாகிய துறைகள் பல அமைந்திருந்தன. ஓடங்கள் கோடையில் நீர்ப்பசையே இல்லாதபோது ஆற்றின் கரையோரங்களில் வறிதே நிறுத்தப்பட்டிருந்தன.[54] சேரன் செங்குட்டுவனது பெரும்படையினர் கங்கையாற்றை மரத்தால் இயன்ற ஓடங்களில் கடந்து சென்றனர். நூற்றுவர் கண்ணர் என்போர் அச்சேரன் கங்கையைக் கடப்பதற்குத் தேவைப்பட்ட படகுகளைக் கொடுத்துதவினான் என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.[55] இன்றும் கங்கையையும் ஊப்ளியாற்றையும் கடப்பதற்கு இம்மரத்தாலான படகுகளையே உபயோகிக்கின்றனர். அன்று முனைகளிலும் வளைகுடாக்- களிலும் செழிப்பான துறைமுகங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆற்றோரங்களில் அமைந்துள்ள துறைகளுக்குக் கடற் கழிமுகத்தின் வழியாகப் பெரிய கப்பல்களும் நுழைய முடிந்தது. புறநானூறு இத்தகைய செய்திகளைப் பற்றிப் பரவலாகக் கூறுகிறது. உப்பு வணிகர் கழிமுகங்களைக் கடந்து நெல்லுக்குப் பண்டமாற்றாக உப்பினைக் கொடுத்து வந்தனர். கடலில் ஆறுகள் கலக்கும் இடங்களில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு வந்த கப்பல்கள் நிறுத்தப்பட்டிருந்தன. உள்நாட்டுப் பட்டணங்களுக்கும் பிற ஊர்களுக்கும் அப்பண்டங்களை அனுப்ப மரவோடங்கள் பயன்பட்டன. சோழப் பேரரசனாகிய நலங்கிள்ளியின் நாட்டில் ஓடும் ஆறுகளின் ஊடே சரக்குக் கப்பல்கள் சென்று வந்தன என்பதும் அறியப்படுகிறது. இவ்வாறு ஆற்று வழியாக வணிகம் செழிப்புடன் நடைபெற்றது.[56]

கப்பல் கட்டும் தொழில்

பண்டைத் தமிழர் கப்பல் கட்டுவதில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். காற்றிலும் வேகமாகச் செல்லத்தக்க முறையில் அரிய கப்பல்கள் கட்டப்பட்டன. தண்ணீரால் எளிதில் சிதைந்து

54. புறம். 261.
55. சிலப். கானல். 176-177.
56. புறம். 400.

போகாமலும் அதே சமயம் விரைவாகச் செல்லத்தக்கதுமான சீரிய மரங்களை இத்தொழிலுக்குப் பயன்படுத்தினர். கப்பலின் உச்சிப் பகுதி 'கூம்பு' என்று அழைக்கப்பட்டது. ஓரளவு கூரையோடு கூடிய கப்பல்கள் 'நீரணி மாடம்' எனப்பட்டது. பழுதடைந்த கப்பல்கள் செப்பம் செய்யப்பட்டன. அந்த அளவுக்குத் தொழில் நுட்பம் உடையவர் பழந்தமிழர். கப்பலின் பல்வேறு பகுதிகளையும் செய்யும் கலையில் அவர்கள் வல்லவர்களாக விளங்கினார்கள்.

இவ்வாறு பண்டைத் தமிழர் ஊக்கமும் ஆக்கமும் உடையவர்களாக முயற்சி குன்றாதவர்களாக இருந்தனர் என்பது மேலே கூறியவற்றால் தெளிவாகும். அன்றியும் அவர்கள் பயணத்தின்போது எத்துணை இடையூறுகள் ஏற்படினும் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது எழுச்சியுடன் தொழில்பட்டனர். எல்லாத் தமிழ் நூல்களும் பழந்தமிழரின் இத்தகு குணங்களையும் முயற்சிகளையும் பாராட்டியே செல்கின்றன. மேனாட்டவர்களுக்கு எவ்வகையிலும் தாழாமல் கடற்பயணத்திலும், வணிகத்திலும், உள்நாட்டு நீர்வழியிலும் கடலிலும் ஊக்கமிக்கவர்களாய் விளங்கினார்கள். பிற நாட்டினரைப் போலத் தமிழ் வணிகர் போட்டியும் பொறாமையுமின்றிச் செல்வம் ஈட்டுதலில் ஈடுபட்டிருந்தனர். பேராசையும் சிறிய சிந்தையும் அவர்கள்பால் அமையவில்லை.

பிற்காலத்தில் கடல்வழிச் சென்ற மேனாட்டவர் சிலர் நாடு பிடிப்பதிலும் பிறரை அடிமை கொள்வதிலும் ஈடுபட்டனர். ஆனால் தமிழ்ச் செல்வரும் வணிகரும் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்பது அறியத்தகும். பண்டைத் தமிழகம் உலகின் பல்வேறு நாடுகளுடன் தொடர்பு கொண்ட நாகரிகமாகவும் பண்பாகவும் நடந்து கொண்டது. இதனால் தமிழரிடையே பரந்த விரிந்த மனப்பான்மை வளர்வதாயிற்று. 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்று நினைந்து வாழ்ந்து சிறப்பாராயினர்.

8. எண்கள், எடைகள், அளவைகள், நாணயங்கள்

மனிதனின் சிந்தனை வளர்ச்சியாலும், நாகரிக முன்னேற்றத்தாலும் மனிதனுடைய தேவைகள் பெருகிக் கொண்டே போகின்றன. சில தேவைகள் அன்றாட வாழ்க்கைப் போக்கில் தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றன. உணவு, உடை, உறையுள் முதலிய அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த நிலையில் அளவைகளும் நாணயங்களும் இன்றியமையாச் சாதனங்களாகின்றன. சங்க இலக்கிய அடிப்படையில் இவை பற்றிய மதிப்பீடுகள் செய்யப்படும்போது பழந்தமிழரின் பொருளாதார நிலை நன்கு புலப்படும்.

அளவைகள்

வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் யாதேனும் ஒரு வகையில் அளவைகள் பங்குபெறுகின்றன. நிலங்கள் அளவை செய்யப்பட்டு எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன. கல்வி நிலையங்களில் மாணவர்களின் அறிவு நிலை அளவீடு செய்யப் படுகிறது. பழங்காலப் புலவர்கள் மக்களின் உள்ளங்களையும் அறிவென்னும் அளவுகோல் கொண்டு அளந்து கூறும் நுட்பமுடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். காலக் கடவுளும் (எமன்) மக்களின் வாழ்நாட்களை அளந்து வைத்துள்ளான் என்று கூறுவதும் உண்டு.

அன்றாட மனித வாழ்வில் உண்ணும் உணவினை நோக்குவோம். சுவையான உணவு சமைப்பதற்கு எவ்வெப் பொருள்கள் எந்த அளவில் சேர்க்கப்பட வேண்டும் என்று சமையல்காரன் உறுதி செய்து கொள்கிறான் அல்லவா? துணிக்கடைக்குச் சென்று துணி வாங்கினாலும் அளவை பயன்படுத்தப்படுகிறது. அத்துணியைத் தையல்காரனிடம்

கொடுத்துத் தைக்கும் போதும் உடல் அளவு எடுத்துக் கொள்ளப்படுகிறது. காதல் துறையிலும் அகப்பொருள் பாடும் புலவர்கள் அதன் அளவைப் பற்றிச் சிந்தித்துள்ளனர். இவ்வாறாக அளவை என்பது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பங்கு பெற்றுள்ளமை தெளிவாகும்.

தமிழில் வழங்கும் சில பழமொழிகளும் அளவையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. மனிதனின் உடல் அளவு வரையறை செய்யப்பட்டுள்ளது.

"*எண்சாண்* உடம்பிற்குச் சிரசே பிரதானம்"

"உடம்பு *ஒருபிடி* சாம்பலாவது திண்ணம்"

"உண்பது *நாழி* உடுப்பது நான்கு *முழம்*"

"ஆற்றிலே போட்டாலும் *அளந்து* போடு"

அளவையின் வகைகள்

அளவை பலவகைப்படும். எண் அளவு, எடை அளவு, திறன் அளவு முதலியன அளவையின்பாற்படும். இவையேயன்றி இக்கால அறிவியல் இன்னும் சில அளவைகளைக் குறிப்பிடுகிறது. காற்று, வெப்பம், மழை முதலியனவும் அளக்கப்படுகின்றன. நீர்ப்பொருளின் (liquid) திண்மை (density) முதலியனவும் அளவீடு செய்யப்படுகிறது. வெப்பம், ஒளி, ஒலி, மின்சாரம், காந்தம் இவை போன்றனவும் அளக்கப்படும் பொருள்களாகும். இவற்றை அளவீடு செய்வதற்கு ஏற்ற பலவகையான நுட்பக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை வெளிப்படை. பண்டைத் தமிழரும் அக்காலத்தில் சில அளவைகளைக் கண்டுவைத்தனர் என்பது இலக்கியங்களின் வாயிலாகத் தெரிகிறது.

எண்கள் (Numerals)

பழங்கால மனிதனின் மனவளர்ச்சியின் சிறப்பு பல்வேறு

பொருள்களின் எண்ணிக்கைளை அறிந்திருந்த தன்மையைப் பொறுத்ததாகும். எண்மானம் (numbering) என்பது கண்டு அறியப்பட்ட சூழ்நிலை பற்றித் தெரிந்துகொள்வது நன்று; இதனைப் பின்வருமாறு ஊகிக்கலாம். முதல் மனிதன் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை முதலில் பார்த்திருப்பான். அவை பெரியனவும் சிறியனவுமாக இருந்திருக்லாம்; அல்லது எல்லாம் ஒரே அளவினதாகவும் இருந்திருக்கக் கூடும். இவ்கைப் பொருளின் வேறுபாடு அவனது மனத்தில் தோன்றியிருக்கலாம். அப்போது அளவு, எண் முதலியன பற்றிய அறிவும் பெற்றிருப்பான். அவன் வைத்திருந்த கால்நடைகளை(cattle)ப் பாதுகாப்பதற்கு எண்ண வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கும். ஆகவே அவற்றை எண்ணத் தொடங்கினான். ஆடுகளையும் மாடுகளையும் எண்ணிப் பிரித்து ஒதுக்கும் நிலை ஏற்பட்டபோது கோடிடுவதும் எண்ணுவதும் நேர்ந்திருக்கும். இவ்வாறு எண்ணிக்கொண்டே போகும்போது அவனுக்கு எண்ணிக்கையின் அளவிறந்த தன்மை (limitlessness) புலப்பட்டிருக்கும். எனவே, துல்லியமாக எண்ணியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும். இந்தியாவில்தான் முதன்முதல் எண்மானம் தோன்றியது என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் வணிகம் பெருகிய காலக்கட்டத்தில் அரேபியா மூலமாக மேலை நாடுகளுக்கும் இந்த எண்ணிக்கை முறை பரவியிருக்கிறது. இன்று உலகெங்கும் பயன்படுத்தப்பட்டுவரும் எண்கள் (Numberals) இந்திய, அராபியக் கண்டுபிடிப்பேயாகும் என்பது அறிஞர் துணிபு.[1]

பத்துப் பத்தாக எண்ணும் முறை (Decimal systems) சில நாடுகளில் வழக்கில் உள்ளது. நாகரிகத்தின் வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க கட்டம். ஆனால் சில இனமக்கள் குழந்தைகளைப் போல மூன்றுக்குமேல் எண்ண முடியாமல் இருக்கிறார்கள். பழமையான நாடுகள் எல்லாவற்றிலும் வரலாற்றுக்கு முற்பட்ட

1. கலைக்களஞ்சியம், ப. 513.

காலந்தொடங்கி இத்தசம எண்ணிக்கை முறை பயின்று வந்துள்ளது. திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா மொழிகளிலும் பத்தினைப் பல மடங்கு பெருக்கிக் கூறும் முறை உள்ளது; அதன் ஒவ்வொரு கூற்றுக்கும் உரிய சொற்கள் வழங்கி வருகின்றன. தமிழ் மொழியில் அறுபது என்ற எண்ணைப் பத்து என்னும் வாய்ப்பாட்டில் 'அறுபது அல்லது ஆறுபத்து' என்று கூறும் மரபு உள்ளது. தமிழர் நாகரிகத்தையும் பண்பாட்டையும் எடுத்துக்காட்டும் பல தடயங்களில் இதுவும் ஒன்றாகும். பழங்கால மனிதன் எண்மானத்தைக் கற்றுக் கொள்ளத் தன் கைவிரல்களையே பயன்படுத்தியிருத்தல் வேண்டும். எனவே பத்து என்பது பெருக்கலின் ஒரு நிலையான அலகாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. சில கிராமங்களில் மக்கள் தம் பேச்சு வழக்கில் ஐந்து என்பதைக் குறிக்க 'ஒருகை' என்ற தொடரை இன்றும் பயன்படுத்துவதைக் காணலாம். 'ஒரு கை என்பது ஒரு கையில் உள்ள ஐந்து விரல்களைக் குறிப்பதாகும். 'கை' என்ற சொல் ககரமெய் கெட்டு 'ஐ' என்று ஒலித்து 'ஐந்து' என்ற பொருள் தந்தது என்று கூறலாம். ஐவகை, ஐம்பால், ஐந்திணை போன்ற வழக்காறுகள் கவனிக்கத்தக்கவை.

பண்டைத் தமிழர் பல்வேறு எண்களையும் (1, 2, 3 . . . .) குறிப்பதற்கு பல்வேறு எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

க,	உ,	ங,	ச,	ரு,	சா,	எ,	அ,	கூ,	ய,	ள	கறு
1,	2,	3,	4,	5,	6,	7,	8,	9,	10,	100,	100

போன்ற எழுத்துக் குறியீடுகள் வழங்கப்பட்டன. அரபு எண்கள் என்று கூறப்படும் 1, 2, 3. . . . போன்றவை உண்மையில் அரபு எண்கள் அல்ல. அராபியர் இவற்றைத் தம்மவை என்று கூறவில்லை. எனவே சில ஆராய்ச்சியாளர் இதன் தோற்றம் பற்றி ஒரு குழப்பத்தில் சிக்கியுள்ளனர். அவர்களுக்கு இந்திய எண்மானம் பற்றிய அறிவு மிகவும் குறைவு. அரபு அல்லது

இந்திய எண்கள் என்று கருதப்படும் இவை தமிழரின் படைப்பு என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.[2]

தமிழில் வாய்ப்பாடு அல்லது எண்சுவடி என்பதொன்று (Arithmetical Table) வழக்கில் உள்ளது. சிறுவர் சிறுமியர் ஆரம்ப வகுப்புகளில் இவ்வாய்ப்பாட்டினை மனனம் செய்து ஒப்பிப்பர். இது எண்மானத்தில் உள்ள பெரும்பாலான எண்களை விவரிக்கும் ஒரு அடிப்படைச் சுவடியாகும். இவை அனைத்தும் தமிழ் எழுத்து வடிவத்தில் அமைந்துள்ளன. (1 (க) 2 (உ) 3 (ங)) பண்டைத் தமிழர் ஒன்றுக்குக்கீழ்ப்பட்ட பின்னங் களையும் அறிந்திருந்தனர். ¼ என்பதனை 'வ' என்றும் ½ என்பதனை 'இ' என்றும் எழுதிக்காட்டினர். இத் தமிழ் வாய்ப்பாடு (எண்சுவடி) படிக்கும் பழக்கம் இப்போது நின்று விட்டது என்றே கூறலாம். இதிலிருந்து பழந்தமிழரின் கணிதம் பற்றிய சிந்தனை எத்துணை அளவு விரிந்திருந்தது என்பது புலப்படும்.

எண்ணுதல்

தமிழ் இலக்கியங்கள் தமிழர் பழங்காலத்திலேயே ஒன்று முதல் ஒரு கோடி வரை (1–1,00,00,000) எண்ணக் கற்றிருந்தனர் என்பதைப் புலப்படுத்துகின்றன. திருக்குறளில் பல்வேறு எண்கள் குறிக்கப்படுகின்றன. ஒன்பது என்னும் எண் மட்டில் திருக்குறளில் இடம் பெறவில்லை. 'ஒன்பான் சுவை' என்பது போன்ற தொடர் உரையாசிரியர்களால் ஆளப்பட்டுள்ளது. ஒன்று முதல் எட்டு, அதன் பின்னர் பத்து, நூறு, ஆயிரம், கோடி என்ற குறியீடுகள் திருவள்ளுவரால் ஆளப்பட்டுள்ளன.[3] இப்பெருமானார் பத்துக்கு மேற்பட்டவற்றைக் குறிக்குங்கால் 'கோடியுமல்ல பல'[4], 'எழுபது கோடியுறும்'[5] என்று

2. டாக்டர் மு. வரதராசன், மொழி வரலாறு, பக். 440–44.
3. குறள். 128, 392, 360, 501, 738, 381, 107, 9, 932, 259, 377, 817.
4. குறள். 337.
5. குறள். 639.

குறிப்பிட்டுச் சென்றுள்ளார். இவ்வாறாக எண்கள், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலிய பேரிலக்கியங்களில் ஆட்சி பெற்றுள்ளன. அன்றியும் கோடிக்கும் மேற்பட்ட எண்ணை அல்லது தொகையைக் குறிக்க, 'ஆம்பல்'[6], 'தாமரை'[7], 'வெள்ளம்'[8] போன்ற எண்ணுப்பெயர்கள் தமிழர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளமையை அறியும்போது வியப்பு ஏற்படுகிறது. காலப் போக்கில், 'தாமரை', 'வெள்ளம்' ஆகியவை 'குமுதம்', 'பத்மம்' என்று குறிக்கப்பெற்றன. இவ்வாறு சிந்திக்கும்போது பண்டைத் தமிழர் எண்கள் பற்றி எத்துணை ஆழ்ந்த அறிவுடையவர்களாக இருந்தனர் என்பதும், இதன் மூலம் வணிகச் செயல்கள் எவ்வளவு முன்னேறியிருந்தன என்பதும் புலப்படும்.

எடைகள் (Weights)

கிறித்துவுக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே பலவிதமான எடைகள் வழக்கில் இருந்துள்ளன. பண்டைக் காலத்தில் இந்தியாவிலும் எகிப்திலும் பல எடை போடும் சாதனங்கள் இருந்தன. அவை ஒரு தொங்கும் தராசுக் கோலில் பொருத்தப்பட்டிருந்தன. முற்கால இந்தியர்கள் உரோமானியத் தராசு போலக் கையில் கொண்டு செல்லும் தன்மையதான ஒரு சாதனத்தை எடை போடும் கருவியாகப் பயன்படுத்தினர்.[9]

தமிழகத்தில் சங்ககாலத்திலேயே தராசும் எடைகளும் இருந்தன என்பதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. பண்டைய வணிகர்களுக்கு இக்கருவிகள் பெரிதும் பயனுடையனவாக அமைந்தன. விலைமதிக்க முடியாத அரிய உலோகங்களாகிய தங்கம், வெள்ளி, இரத்தினம் போன்றவற்றைத் துல்லியமாக

---

6. அகம். 127.
7. முருகு. 164.
8. பதிற்றுப். 90.
9. கலைக்களஞ்சியம், ப. 491.

நிறுக்கும் படிக்கற்களும் இருந்துள்ளன. அவை 'களஞ்சு', 'மஞ்சாடி', 'குன்றி' முதலிய பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளன. எளிய உலோகங்களாகிய பித்தளை, செம்பு, வெண்கலம் முதலியனவும் நிறுவை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு நிறுத்தற்குப் பயன்பட்ட படிகளை (weights) 'பலம்', 'கஃசு' என்று அமைத்துள்ளனர். இரண்டு குன்றிகள் சேர்ந்தால் ஒரு மஞ்சாடியாகும்; இருபது மஞ்சாடிகள் சேர்ந்தது ஒரு களஞ்சு. இவ்வாறே 40 குன்றிகள் ஒரு களஞ்சு எனப்படும். எடைகளில் 'வராகன்' என்பதும் ஒரு வகை. 'ஒரு வராகன்' , 'ஒன்றேகால் வராகன்' என்றெல்லாம் கூறப்படுவதுண்டு.[10]

தராசில் ஒரு முக்கிய உறுப்பாக உள்ள துலாக்கோல் பழந்தமிழ் இலக்கியத்தில் நடுவுநிலை, நீதி, நேர்மையைக் குறிக்கும் சின்னமாகக் குறிக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவரும் துலாக் கோலைக் குறிப்பிட்டுள்ளார். சான்றோர் அல்லது நீதிபதிகள் துலாக்கோல் போல எப்பக்கமும் சாயாமல் நடுநிலையில் நின்று தீர்ப்பு வழங்க வேண்டும் என்பார் வள்ளுவர்.

> "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
> கோடாமை சான்றோர்க் கணி"[11]

என்பது நடுவுநிலைமை அதிகாரத்தில் வரும் குறட்பா. மாங்குடி மருதனார் என்ற புலவரும் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும்போது துலாக்கோல் போல் நடுநிலை பிறழாது செயல்படல் வேண்டும் என்றார். இங்கும் எடைக் கருவியாகிய துலாக்கோல் ஆட்சி பெற்றுள்ளமை காண்க.[12] தன்பால் வைக்கப்பட்ட பொருள்களின் எடையை உள்ளவாறே செம்மையாக நிறுத்துக் காட்டும் துலாப்

---

10. சதாசிவப் பண்டாரத்தார், புறநானூற்றுச் சொற்பொழிவுகள், பக். 134, 135.
11. குறள். 118; புறம். 6.
12. மதுரைக். 491, 492.

போல நன்னன் என்பவன் தன் சொல்லிலும் செயலிலும் நடுநிலை தவறாது விளங்கினான் என்று அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிக்கிறது.

> "............... .... ஞெமன்ன
> தெரிகோல் அன்ன செயிர்தீர் செம்மொழி
> .... நன்னன் நன்னாட்டு"[13]

என்பன அகநானூற்று அடிகள். இங்கு 'ஞெமன்கோல்' என்பது துலாக்கோலைக் குறிப்பதாகும். அன்றியும், பொற்கொல்லர் பொன்னை நிறுப்பதற்குப் பயன்படுத்திய தராசுத்தட்டு 'கன்னம்' எனப்பட்டது. இதனை,

> "பொன்செய் கன்னம் பொலிய வெள்ளி
> நுண்கோல் . . . ."[14]

என்னும் அகநானூற்று அடிகள் புலப்படுத்துவன காண்க. எனவே 'ஞெமன்', 'கன்னம்' போன்ற நிறுவைக்குரிய எடைக் கருவிகள் அக்காலத்தில் வழக்குப் பெற்றிருந்தமை தெள்ளிதின் விளங்கும் 'பலம்', 'கஃசு' என்ற சொற்கள் முறையே 'ஒரு பலம்', 'காற்பலம்' எனப் பொருள்படும். இவையும் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.[15] நூறு பலம் சேர்ந்து ஒரு துலாம் ஆகும்.

முகத்தலளவைகள்

நெல், அரிசி, உப்பு, நெய், பால், தயிர், மிளகு, கடுகு போன்ற பொருள்கள் அளந்து கொடுக்கப்பட்டன. இவற்றை அளந்து அல்லது முகந்து கொடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முகத்தலளவைகள் 'செவிடு', 'ஆழாக்கு', 'உழக்கு', 'உரி', 'குறுணி'

---

13. அகம். *349*.
14. அகம். *317*.
15. குறள். *1037*.

எனப் பெயர் பெற்றன. புறநானூற்றுப் பாடல் ஒன்றில் நெல் அளந்து கொடுத்ததற்குரிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது.[16] ஓர் இல்லத்தரசி (குடும்பத் தலைவி) கையில் குற்றப்பட்ட வெள்ளைச் சம்பா அரிசியை அளக்காமலே வாங்கினாள் என்ற செய்தியும் இலக்கியத்தில் குறிக்கப்படுகிறது. உலக்கையால் நெல் குற்றப்பட்டது நெல்லை அளக்கும் கருவி 'அம்பணம்' எனப்பட்டது. இது ஒரு முகத்தல் அளவையாகும். இதனை 'மரக்கால்' என்று இன்று குறிப்பிடுகின்றனர். நான்கு படிகள் (measures) கொண்டது ஒரு மரக்கால். இது மரத்தால் அல்லது மூங்கிலால் செய்யப்பட்டு அதன் வாய்ப்பகுதி சுற்றிலும் பித்தளைத் தகட்டினால் வளைக்கப்பட்டிருக்கும். தமிழ்நாட்டில் வட ஆர்க்காட்டுப் பகுதியில் வாழ்வோர் இன்றும் இதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.[17]

சங்கச் சான்றோராகிய கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேர மன்னனது வள்ளன்மையைப் பின்வருமாறு புகழ்கிறார்: "அம்மன்னன் தான் போரில் வென்று பெற்ற யானைகளைப் பரிசிலர்க்கு வழங்கியதோடன்றி, அம்பணத்தால் அளக்கத் தொலையாத அளவுக்கு வேண்டிய நெல்லையும் வாரி வழங்கினான். அம்பணத்தின் பித்தளைப் பூண் கட்டப்பட்ட வாய் மழுங்கும் அளவுக்கு வழங்கினான்' என்றும் கூறப்பட்டுள்ளது.[18]

அறுவடைக் காலங்களில் மகளிர் அடர்ந்துள்ள முற்றிய நெற்கதிர்களை அறுத்துப் பக்கத்தில் இருந்த களத்தில் குவித்து வைத்திருந்தனர். பின்னர் அவற்றை மாடுகளைப் பூட்டி மிதிக்கச் செய்து நெல்மணிகளைப் பிரித்தெடுத்தனர். இவ்வாறு எடுக்கப்பட்ட நெல்மணிகள் பொன்னிறக் குன்று தோன்றுவது

---

16. புறம். 399.
17. பதிற்றுப். ஔவை சு.துரைசாமி பிள்ளை உரை.
18. பதிற்றுப். 66: 4–9.

போன்று குவிக்கப்பட்டிருந்தன. பின்னர் நெற்குவியலுக்குள் அளவு கருவியாகிய அம்பணத்தைச் செறுகி முகந்து அளந்தனர். இச்செய்தியும் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.[19] புறநானூற்றில் 'நாழி' என்ற மற்றுமொரு முகத்தளவைக் கருவி குறிக்கப்பட்டுள்ளது.[20]

பழந்தமிழர் 'தூணி' என்ற பிரிதொரு வகை அளவுக் கருவியையும் பயன்படுத்தியுள்ளனர். இது நான்கு மரக்கால்கள் கொண்ட ஓர் அளவையாகும். மற்றொரு செய்தி: ஒரு நாள் தலைவன் ஒருவன் தன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்வதற்கு நினைக்கிறான். ஆனால் அந்நினைவு நீடிக்கவில்லை. தலைவியின் அன்பு அவனைத் தடுத்துவிடுகிறது. அப்போது அத்தலைவன் கூற்றாக வரும்,

> "விழுநீர் வியலகம் ***தூணி*** யாக
>
> எழுமாண் அளக்கும் விழுந்தி பெறினும்
>
> . . . .
>
> அமர்ந்து இனிது நோக்கமொடு செகுத்தினன்
>
> ஏனைய ஆகுக வாழிய பொருளே."[21]

என்னும் நற்றிணை அடிகளில் ***தூணி*** வருவது காண்க. இவ்வாறாக அக்காலத் தமிழகத்தில் மக்களிடையே பல்வேறு வகையான முகத்தலளவைக் கருவிகள் வழங்கின என்று அறியலாம். கீழ்வரும் அட்டவணை இதனைத் தெளிவுறுத்தும்:

5 செவிடுகள் – 1 ஆழாக்கு

2 ஆழாக்குகள் – 1 உலக்கு

---

19. பதிற்றுப். 71.
20. புறம். 189.
21. நற். 16.

2 உலக்குகள்	-	1 உரி
2 உரிகள்	-	1 நாழி
6 நாழிகள்	-	1 குறுணி[22]
15 குறுணிகள்	-	1 கலம்[23]

நீட்டல் அளவைகள்

பண்டைக் காலத்தில் நீள அகலங்களை அளப்பதற்குரிய நீட்டலளவைக் கருவிகளையும் தமிழர் அறிந்திருந்தனர் என்பது அக்கால இலக்கியங்களின் வாயிலாகத் தெரிகிறது. ஒருவரின் உயரத்தையும், வீடுகளும் அறைகளும் கட்டும்போது மனையின் நீளத்தையும் அகலத்தையும் வரையறை செய்வதற்கும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும் தூரத்தைக் காண்பதற்கும், உடுப்புகளுக்குத் துணிகளின் நீள அகலங்களை அளப்பதற்கும் உரிய அளவைகள் இருந்துள்ளன. அரசு வரி விதிப்பதற்காக நிலங்களை அளவீடு செய்வதற்குரிய சாதனம் இருந்தது. இதற்கெனத் தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் 'நாடு வகை செய்வோர்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் நிலவளவைக் கருவிகள் வைத்திருந்தனர். அவை காலந்தோறும் மாற்றம் அடைந்துள்ளன. நிலங்களை அளந்த பின்னர் அவற்றின் எல்லையைக் காட்டும் கற்களும் நடப்பட்டன. அக்காலத்தில் நிலங்கள் குழி, மா, வேலி முதலிய அளவில் அளக்கப்பட்டு வரையறை செய்யப்பெற்றன.[24] வரலாற்றுப் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் இதுபற்றிக் கூறியுள்ளவை மனங்கொள்ளத்தகும். "நிலங்கள் துல்லியமாக

22. South Indian Inscription, Vol. V. Nos.737, 749.
23. Epigraphica Indica, Vol. XXI, No.17, p.105.
24. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, ப.179, 180.

எந்த அளவுக்கு அளந்து வரையறை செய்யப்பெற்றன என்பது அறியக்கூடவில்லை. ஆனால் நிலங்கள் வேலிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்பது உறுதி. இது சோழ நாட்டிலும் பிற தென்பகுதிகளிலும் வழக்கில் இருந்தது".[25]

சிலப்பதிகாரத்தில் மாதவி நடனமாடிய அரங்கத்தின் அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. ஆடும் அரங்கின் நீள அகலம் துல்லியமாகத் தரப்படுகின்றன. இருபத்து நான்கு விரற்கடை உள்ள ஒரு கோல் தயாரிக்கப்பட்டது. அதனைக் கொண்டு அரங்கு அளக்கப்பெற்றுள்ளது.[26] அரங்கின்,

நீளம் - 8 கோல்கள்

அகலம் - 7 கோல்கள்

உயரம் - 1 கோல்கள்

இனி முழம் என்பது மற்றொரு நீட்டலளவை ஆகும். மணிமேகலைக் காப்பியம் இதனைக் குறிப்பிடுகின்றது. புத்த பீடிகையின் அளவுகள் அதில் தரப்பட்டுள்ளன:

"உரைபெறு *மும்முழம்* நிலமிசை ஓங்கி

திசைதொறும் ஓர்பால் *முழநீளம்* அகன்று'

என்பன மணிமேகலை அடிகள். புத்த பீடிகை நாற்புறமும் மூன்று முழம் (சுமார் 4½ அடி) உயரமும் ஒன்பது முழம் நீளமும் உடையதாயிருந்தது. இதுகாறும் கூறியவற்றால் அக்காலத்தில் 'சாண், முழம், கோல்' என்பன வழக்கில் இருந்தன என்பது பெறப்படும்.

---

25. The Cholas, p. 621.
26. சிலப். 3: 95–106.

தொல்காப்பியத்தில்

தொல்காப்பியம் மிகமிகத் தொன்மையான இலக்கண நூல் என்பது முன்னர் அறியப்பட்டது. அதன் காலம் ஏறத்தாழ கி.மு. மூன்றாம் நூற்றாண்டு. அந்நூலிலேயே தமிழர் வழங்கிய எடை முதலிய அளவைகளின் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன, என்றால், எத்துணை ஆயிரம்ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் இத்தகு கருவிகளைக் கையாண்டுள்ளனர் என்பது அறிய வாய்ப்பு மேலிடுகிறது. அதில் நால்வகை அளவைகளும் (எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்) குறிக்கப்பெற்றுள்ளன. தொகை மரபு நூற்பாக்களில் தொல்காப்பியர் முகத்தல், எடுத்தல், எண்ணல் ஆகியவற்றை சொற்புணர்ச்சியேசுங்கால் எடுத்தாண்டுள்ளார்.

> “அளவும் நிறையும் எண்ணும் சுட்டி
> உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்”[27]

என்பது தொல்காப்பியச் சூத்திரப்பகுதி. இதன் உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டாக, ‘உழக்கே ஆழாக்கு’ என்னும் தொடரைச் சுட்டியுள்ளமை அறியத்தகும். தமிழ்மொழியின் முதல் எழுத்துக் களைப் பற்றிப் பேசுங்கால் தொல்காப்பியர் முகத்தல், நிறுத்தல் முதலிய அளவைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

> “அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி
> உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே . . . .”[28]

என்பது அந்நூற்பாவாகும். இது தொடர்பாக சில எடுத்துக் காட்டுகள் தரப்பட்டுள்ளன. அவை, கலம், சாடி, துடை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு, சிரகம், தொடி, பலம் முதல

27. தொல். எழுத்து. 164.
28. தொல். எழுத்து. 170.

யனவாம். மேலும் புணர்ச்சி இலக்கணம் கூறும் தொல்காப்பியர், தூணி, பதக்கு, நாழி, உரி முதலியன பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.[29] இவை எல்லாம் முகத்தல் அளவையைக் குறிப்பனவாகும். இனிக் குற்றியலுகரம் பற்றிக் குறிப்பிடுங்கால், சில அளவைகளைக் காட்டுகிறார். இக்கூறியவற்றால் அறப்பழங்காலத் தமிழ் அளவைகள் தெளிவாவது கண்கூடு.

பண்டமாற்றும் நாணயங்களும்

நாணயங்கள் வழக்குப்பெறும் முன்னர் பண்டமாற்று முறையே நிலவி வந்தது என முன்பே கூறப்பட்டது. பல்வேறு எடுத்துக்காட்டுகள் இது தொடர்பாகத் தரப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பொருளைக் கொடுத்து மாற்றுப் பொருள் வாங்கப்பட்டு வந்தது. நாணயத்தின் இடத்தைப் பண்டங்களே பெற்றிருந்தன. தமிழ்நாட்டில் இப்பண்டமாற்று முறை ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதிக்குள்ளேயே நடைபெற்றது. எடுத்துக்காட்டாகக் குறிஞ்சிநில மக்கள் தொடக்கத்தில் தங்களுக்கு வேண்டிய பொருள்களை அந்நிலப்பகுதிக்குள்ளேயே பண்டமாற்று முறையில் பெற்றுக் கொண்டனர். குறிஞ்சி மக்கள் முல்லை நில மக்களிடம் இத்தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. பின்னர் ஒரு நிலத்தவர் மற்ற நிலத்தவருடன் பண்டங்களை மாற்றிக்கொள்ளும் நிலை வளர்ந்தது.[30]

பண்டைக் காலத்தில் பண்டமாற்று முறை நிலவி வந்த போதிலும் அதனால் சிலபல வசதிக் குறைவுகளும் தடங்கல்களும் ஏற்பட்டன. படிப்படியாக இப்பண்டமாற்று முறையின் குறைகள் வெளிப்படலாயின. முதலில் ஒருவர் தமக்கு வேண்டிய பொருளைப் பெற விரும்பினால் அப்பொருள் யாரிடத்தில், எந்த இடத்தில் கிடைக்கும் என்பதைக் கண்டறிய

29. தொல். எழுத்து. 240, 241.

30. Chakraborthy, Ancient Indian Numismatics, p.1

வேண்டியிருந்தது. அன்றியும், கொடுப்போரும் வாங்குவோரும் தத்தமக்குரிய பொருள்கள் இருவரிடமும் உளதா என்பதும் அறிய வேண்டியுள்ளது. அன்றியும் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்லும் வழிநடை இடையூறுகளும் தொலைதூரமும் எளிதில் பொருள்களை மாற்றிக் கொள்வதாக அமையவில்லை. இதுபோன்ற பல காரணங்களால் பண்டமாற்று முறை கைவிடப்பட வேண்டியதாயிற்று. எனவே இதற்கு மாறாகப் பொருள்களை விற்கவும் வாங்கவும் எளிய சாதனம் ஒன்றைத் தேடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்நிலை தோன்றவே நாணயங்கள் அச்சிடப்பட வேண்டிய இன்றியமையாமை உருவாயிற்று.

நாணயங்களின் சிறப்பு

மேனாட்டு அறிஞர் பலர் நாணயத்தின் வரலாறு பற்றி ஆராயத் தொடங்கினர். கால வெள்ளத்தில் அமிழ்ந்து கிடந்த பல அம்சங்களை நாணயம் வெளிக்கொணர்ந்தது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்க்கு இது ஒரு வாய்ப்பான செய்தியாகக் கிடைத்தது. மறைந்துபோன நாகரிகங்கள், அழிந்துபோன பேரரசுகள், வணிகம் முதலிய பொருளாதார நடவடிக்கைகள் முதலியன இன்று நமக்குக் கிடைத்துள்ள நாணயங்கள் மூலம் தெரிய வருகின்றன. பண்டைய மன்னர்களின் அணுகுமுறைகளும், அவர்கள் ஆண்ட ஆண்டுகளும் அவற்றின் மூலம் அறிய முடிகிறது. நாணயங்களின் தலைப் பகுதியைச் சிறிது ஆராய்வோமானால் அவர்கள் கொண்டிருந்த சமயக் கோட்பாடுகளும் அவர் தம் குணாதிசயங்களும் கூடத் தெளிவாகின்றன. அன்றியும் அக்காலத்தில் வழக்கில் இருந்த எழுத்துக்களின் வடிவங்களையும் அறிந்து கொள்ளலாம். அந்நாணயங்கள் எந்த நாட்டைச் சார்ந்தவை என்பதனை மவுனமாக விரித்துரைக்கும் காப்பியங்களாகவும் புராணங்களாகவும் மிளிர்கின்றன. எனவே அண்மைக் காலம் தொடங்கி அறிஞரும் ஆராய்ச்சியாளரும்

இத்துறையில் நுழைந்து உழைத்து "*நாணயவியல்*" என்றதொரு தனி அறிவியல் துறையையே வகுத்துவிட்டனர்.

நாணயங்களின் வரலாறு

உலகின் கிழக்கு நாடுகளிலும் மேற்கு நாடுகளிலும் நாணயத்தின் தோற்றம் ஏறத்தாழ கி.மு. 8 - ஆம் நூற்றாண்டு என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பின்னர் படிப்படியாக உலகெங்கும் இந்நாணய முறை பரவலாயிற்று என்று நாணயம் என்பது தோற்றம் எடுத்ததோ அன்றே மக்கள் அதனை விரும்பி ஏற்றுக்கொண்டனர் எனலாம். அன்று முதல் மனிதன் பழைய நாணயங்களையும் புதியனவற்றையும் சேமித்துவைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனானான்.[31] செலாவணியிலிருந்து முற்றிலும் நீங்கிய பண்டைய நாணயங்களைப் பொதுவாக அக்கால மக்கள் பூமிக்கடியில் புதைத்து வைக்கலாயினர். ஏனெனில் அவை மேலும் செலாவணி ஆவதற்கு வழி இல்லை என்பதை உணர்ந்தனர். பழைய நாணயங்கள் பலவும் அத்தகைய வடிவையும் அமைப்பையும் பெறுவதற்குப் பலப்பல ஆண்டுகள் பிடித்திருக்கும். வரலாற்றுக்கு முற்பட்ட காலக்கட்டத்தில் மக்கள் பண்டங்களை அல்லது பொருள்களை நாணயத்திற்குப் பதிலாக வழங்கி வந்தனர் என்பதை அறிஞர் ***பால் ஐன்சிகு*** என்பவர் எடுத்துக்காட்டியுள்ளார்.[32] காலம் செல்லச் செல்ல படிப்படியாக உலோகங்கள் பண்டமாற்றின் இடத்தை ஆட்கொண்டன. வெள்ளி, இரும்பு முதலிய பிற உலோகங்களைவிடத் தங்கமும் செம்பும் காலத்தால் முற்பட்ட கண்டுபிடிப்புகளாகும். இந்தியா, மத்தியதரைக் கடற்பகுதி, மத்திய ஆசியா, எகிப்து முதலிய நாடுகளில் தங்கமும் செம்பும் கி.மு. 1000க்கும் முன்னர் வழக்கில் வந்துவிட்டன. முதலில் தங்கமும் வெள்ளியும் ஒரே அளவிலும் சீராகவும்

31. கலைக்களஞ்சியம், பக். 387–403.
32. Paul Einzig, Primitive Money, p.8.

அமையாமையால் நம்பிக்கைக்குரிய நாணயங்களாக ஏற்றுக் கொள்வதில் மக்களிடையே தயக்கம் ஏற்பட்டது. வணிகர்கள் அந்நாணயங்களில் தத்தம் முத்திரைகளைப் பதித்து ஒழுங்கு படுத்தியபின் குழப்பம் சிறிது சிறிதாகக் குறையலாயிற்று. காலப்போக்கில் இந்த இடர்ப்பாடுகளைக் களைவான்வேண்டி நாணயங்களை உருவாக்கும் துறையில் அரசுகள் நுழைந்தன அரசினர் நாணயங்களை வட்ட வடிவில் வெட்டி அரசரின் தலையை அவற்றிற் பொறித்தனர். அதன் பின்னர் அவை மக்களிடையே செல்வாக்குப் பெற்று அன்றாட வாழ்வில் பயன் படுத்தப்படலாயின. இவ்வாறு அரசினால் தயாரிக்கப்பட்டவையே காசு அல்லது நாணயம் என ஒப்புக்கொள்ளப்பட்டன.[33]

கி.மு. 680-ல் இந்திய வணிகர் ஒருவர் நாணயங்களை அடித்து ஒரு சீராக அமைத்துத் தமது முத்திரையையும் அவற்றில் பொறித்து வெளியிட்டார். இவ்வாறு செய்தமைக்குரிய காரணம் அந்நாணயங்கள் மீண்டும் நிறுக்கப்படும் பொழுது எடை குறையாமல் இருப்பதற்கேயாம். மேலை நாடுகளில் முதன்முதல் இந்த நாணயங்களே வழக்குப் பெறலாயின. பின்னர் கிரேக்க நாட்டில் வாழும் அதினயமக்கள் அதினா என்ற தெய்வத்தின் வடிவம் நாணயத்தின் ஒரு புறத்திலும் மற்றொரு புறத்தில் ஆந்தையும் தெய்வத்தின் ஆசனமும் பொறிக்கப்பட்டன. இந்த வகை நாணயங்கள் நெடுங்காலம் வரை செலாவணியில் நீடித்தது. ஆனால் மாவீரன் அலெக்சாந்தர் என்ற பெருமன்னன் தான் முதன் முதல் நாணயத்தில் தனது தலையைப் பதிவித்தான் என்று கூறப்படுகிறது.[34] நாணயம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் எங்கும் ஆட்சி பெறவில்லை. மாறாகப் பொன், காசு என்ற சொற்கள் வழங்கியமை புலனாகிறது. இவையே அக்காலத்துத் தமிழகத்தின் நாணயங்களாக இருந்திருக்கலாம்.

---

33. எஸ். வேலாயுதம், பணவியலும் பாங்கியலும், பக். 10–23.
34. கலைக்களஞ்சியம், ப. 390.

பொன்

பூமிக்கடியில் வெட்டி எடுக்கப்படும் உலோகங்களுள் தங்கம் மிகவும் மதிப்பு மிக்கது என்பது வெள்ளிடை மலையாகும். நிலமகள் மக்களுக்குத் தரும் கொடைகளுள் யாவராலும், குறிப்பாகப் பெண்கள் அனைவராலும் விரும்பப்படுவது பொன் அல்லது தங்கம் ஆகும். தமிழில், 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்ற பழமொழி பொன்னின் மேன்மையை நன்கு எடுத்துக்காட்டுவதாகும். வளம் கொழிக்கும் காவிரி ஆறு ***பொன்னி*** (பொற்றுகள்களைக் கொணர்வது) என்றே பெயர் பெற்றிருப்பது அறிந்து மகிழத்தகும். இந்த அழகிய ஆற்றின் மருங்கில்தான் கோலார் தங்க வயல்கள் அமைந்துள்ளன என்பதும் நினைக்கத்தகும். சோழ நாட்டில் 'பொன் விளைந்த களத்தூர்' என்ற ஓர் ஊர் இப்பெயர் பெற்றிருப்பதும் அக்காலத்தில் பொன்னின் பெருமையை மக்கள் உணர்ந்திருந்தமையைச் சுட்டிக்காட்டுவதாகும். புகழ்மிக்க புகழேந்திப் புலவர்தம் ஊரும் இதுவேயாம். பண்டைத் தமிழ்ப் புலவர் பலரும் பொதுவாகப் பெண்களைப் பாடுங்கால் 'பொற்றொடி மாதர்' என்றே புகழ்ந்துள்ளனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலன் கூற்றில் அமைத்துக் கண்ணகியை, 'மாசறு பொன்னே' என்று பாராட்டுவதும் காண்க.[35]

பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் அணிகலன்கள் செய்வதற்கும் தங்க நாணயங்களைப் பயன்படுத்தினர். சிலம்பு, தொடி முதலிய பெண்களின் அணிகலன்கள் பொன்னினால் செய்யப்பட்டன. தங்கக் கட்டிகள் வெப்பத்தில் வைக்கப்பட்டும் உருக்கப்பட்டும் நாணயங்களாகவும் ஆபரணங்களாகவும் ஆக்கப்பட்டன. திருவள்ளுவர் இவ்வாறு தங்கம் தீயில் இடப்பட்டும் உருக்கப்பட்டும் பலமுறை மாற்றம் செய்யப்பட்டாலும் அதன் நிறமும் ஒளியும் மேலும் பன்மடங்கு செம்மையுறும் எனக் கூறியுள்ளார்.

---

35. சிலப். 2: 73.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"[36]

என்பது குறட்பா. பொன்னினை உருக்குவதால் அதன் தூய்மை மேலும் பளிச்சிடும் என்பதும் தமிழர் அறிந்த உண்மை. தங்கம் முதலியவற்றை வைத்து அணி முதலியன செய்யும் தொழிலாளர் 'பொற்கொல்லர்' ' எனப்படுதலும் காண்க. அவர்கள் வசித்த தெருவெல்லாம் பொன் கொழிக்கும் வீதிகளாக விளங்கின என்று புலவர்கள் பாடுகின்றார்கள். பொன்னின் தரத்தை அல்லது மாற்றை அறிவதற்குப் பொன் வணிகர் ஓர் உரைகல் வைத்திருப்பர். அதில் உறசிப் பார்த்துப் பொன்னின் தன்மையைத் துணித்துவிடுவர். இவ்வழக்கம் பழங்காலத் தமிழர் அறிந்த ஒன்றேயாம். இவ்வாறு பொன்னின் மாற்றுக் கண்டுபிடிப்போர் 'பொன் வண்ணக்கர்' என்று அழைக்கப்பெற்றனர். வண்ணக்கர் என்ற சொல் பரிசோதிப்பவர் அல்லது ஆய்வு செய்பவர் என்ற பொருள் தருவதாகும். மதுரைக்காஞ்சியில், தங்க நகை செய்வோரையும் அவற்றைப் பரிசோதிப்போரையும் பற்றிய குறிப்புகள் வருகின்றன. பொன்னைப் பரிசோதிப்போர், 'பொன் உரைகாண்மார்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் பொன்னின் தரத்தை அறுதியிட்டுக் கூறுவோராவர்.[37]

காசுகள்

சங்க இலக்கியங்களில் காசுகள் எனக் குறிக்கப்பெறுபவை தங்கத்தினால் ஆனவையாகும். பழந்தமிழகத்தில் இக்காசுகளே நாணயங்களாகக் கொள்ளப்பட்டன எனத் தெரிகிறது. காப்பியாற்றுக் காப்பியனார் என்பவர் ஒரு சங்கப் புலவர். இவர் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்ற சேர மன்னன் ஒருவனிடம் நாற்பது இலக்கம் (40,00,000) பொற்காசுகளையும்

---

36. குறள். 267.
37. மதுரைக். 512, 513.

அவனது நிலத்தில் ஒரு பகுதியையும் பரிசிலாகப் பெற்றமை குறிக்கப்பட்டுள்ளது.[38] ஔவையார், இரவலர் கைகள் நிறைந்து ஒழுகும் வண்ணம் பொற்பூக்களையும் பொற் காசுகளையும் பரிசாகப் பெற்றமையைப் பாராட்டியுள்ளார்.

"ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து"[39]

என்னும் புறநானூற்றடிகள் நோக்கத்தக்கன. நெட்டிமையார் என்ற பெண்பாற்புலவர் ஒருவர், பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னனைப் புகழுமுகத்தான், அவன் கூத்தர் முதலினோர்க்குப் ***பொன்னை*** வரையாது வழங்கினான் எனப் பாடியுள்ளார்.

"செந்நீர்ப் ***பசும்பொன்*** வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்"[40]

என்பன அவர் பாடியன. இதுகாறும் கூறிய பல எடுத்துக் காட்டுகளால் பொன் என்பது பொற்காசுகளைக் குறித்து வழங்கியது என்பது விளங்கும். பொன், காசு என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.

இந்தத் தங்கக் காசுகள் வட்ட வடிவமானவை. இவை. 'பாண்டில் காசு' என்றும் குறிக்கப்பெற்றன.[41] சில காசுகள் வேப்பம் பழம் போன்று உருண்டையாகவும் இருந்தன.[42] பவளக்கொடியால் செய்யப்பெற்ற கூடைகளில் அல்லது

38. பதிற்றுப். 4ஆம் பத்துப் பதிகம்.
39. புறம். 367.
40. புறம். 9.
41. ஐங். 310.
42. குறுந். 67, 274; நற். 274.

பாத்திரங்களில் இக்காசுகள் சேமித்து வைக்கப்படுவதும் உண்டு.[43] செல்வர் இவற்றைப் பேழைகளில் வைத்துப் பாதுகாத்து வந்தனர்.[44] இப்பொற்காசுகளை மாலை போற் கோவை செய்து செல்வ மகளிர் தம் இடைகளில் மேகலை ஆபரணமாகவும் அணிந்து கொண்டனர்.

"ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த
பொலஞ்செய் பல்கா சணிந்த அல்குல்
ஈகைக் கண்ணி இலங்கத் தைஇ" [45]

எனவரும் புறநானூற்றுப் பாடல் அடிகள் கவனத்தில் கொள்ளத் தக்கவையாம்.

பண்டைக் காலத் தமிழகத்தில் 'காசு' எத்துணை அளவு எடை இருந்தது என்பது பற்றிய குறிப்பு யாதும் கிடைத்திலது. ஆயின் பிற்காலப் பாண்டியர் காலத்தில் இக்காசு என்ற நாணயத்தின் எடை எவ்வளவு என்பதற்கான ஆதாரம் உள்ளது. ஒரு காசு என்பது ஒரு 'களஞ்சு' எடையுள்ளது.[46] ஒரு களஞ்சு என்பது 50 நெல்மணிகள் அளவினதாம். நூறு குன்றிமணிகளின் எடை நூற்று எழுபத்தைந்து நெல்மணிகளின் எடைக்குச் சமம்.

அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்

இன்றைய தஞ்சை மாவட்டத்தில் உள்ள காவிரிப் பூம்பட்டினத்தைச் (சோழர் தலைநகர்) சென்னையில் அமைந்துள்ள இந்தியத் தொல்பொருள் ஆய்வு நிறுவனத்தின் தென்மண்டல ஆய்வாளர்கள் அகழ்வாராய்வு செய்தனர். அப்போது,

---

43. அகம். 25.
44. குறுந். 233.
45. நற். 66; புறம். 353.
46. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, பக். 183–184.

கிறித்துவின் காலத்திய சில பண்பாட்டுத் தடயங்கள் அங்கு அகப்பட்டன. அவற்றுள் கடற்கரைப் பகுதியில் கிடைத்த சில சதுர வடிவமான செப்புக் காசுகள் மிகவும் முக்கியமானவை. தனது வாலினை நிமிர்த்தியவாறு தோன்றும் புலியின் உருவம் ஒரு பக்கத்திலும், யானையின் உருவம் மறுபக்கத்திலும் பொறிக்கப்பட்ட மூன்று செப்புக் காசுகள் கிடைக்கப்பெற்றன. மேனாட்டு வெள்ளையர் சிலர் குடியிருந்தமையால் 'வெள்ளையன் இருப்பு' எனப் பெயர் பெற்ற ஒரு குடியிருப்பின் பக்கம் செம்பினால் செய்யப்பெற்ற உரோமானியக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. பூம்புகார் என்ற காவிரிப் பூம்பட்டினத்தில் அக்காலத்தில் அயல்நாட்டினராகிய யவனரும் உரோமானியரும் வணிகத்தின் பொருட்டு வந்து தங்கியிருந்தனர் என்று பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றனர்.[47] இச்சான்றுகளால் அக்காலத் தமிழ் மக்கள் சதுரமான செப்பு நாணயங்களையும் பயன்படுத்தினர் என்பது தெளிவாகும்.

பிற சான்றுகள்

பண்டைக் காலத்துப் பாண்டிய மன்னர்களின் காசுகள் அல்லது நாணயங்கள் (Coins) சதுர வடிவமாக அமைக்கப் பெற்று அவற்றின் ஒரு பக்கத்தில் யானையின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது என்று அறிஞர் சி.ஜே. பிரவுன் என்பார் கூறுகிறார்.[48] கல்வெட்டுப் பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் மேலே கூறப்பட்ட கூற்றின் உண்மையை ஏற்க இசையாமல் ஐயப்பாடு கொள்கிறார்.[49] ஆனால் இப்போது செய்யப்பட்ட அகழ் வாராய்ச்சியின் விளைவாக, பிரவுன் கூறியது ஓரளவு உண்மை என்றே படுகிறது. எனினும், அக்காசுகள் சதுர வடிவின என்பது இன்னும் தெளிவாக்கப்பெறவில்லை என்றே

47. The Hindu, dt. 7.10.1962 (Sunday Issue).
48. The Coins of India, p. 62.
49. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, ப. 182.

கூறலாம். இன்று பாண்டியரின் சில காசுகள் கிடைத்துள்ளன. அவை சதுர வடிவமும் யானையின் உருவமும் கொண்டனவாகத் தோன்றுகின்றன. இவை பாண்டியரின் பழைய துறைமுக நகரமாகிய கொற்கைக்குப் பக்கத்தில் கிடைத்துள்ளன. அவை செப்புக் காசுகளே. ஆராய்ச்சி அறிஞர் சிலர் இக்காசுகள் கி.பி. 300 அளவில் வெளியிடப் பெற்றவையாயிருக்கலாம் எனத் துணிகின்றனர். கிடைத்த அக்காசுகளும் ஓரளவு சிதைந்தே காணப்படுகின்றன. ஆனால் யானையின் உருவம் தெளிவாகத் தெரிகிறது; அன்றியும் மூன்று பக்கங்களையுடைய சூலாயுதம் போன்ற கருவியும் காணப்படுகிறது என்பர். அவற்றின் மறுபுறம் சில கிறல் கோடுகள் தோன்றுகின்றன. அவை ஒருகால் மீனின் சிதைந்த உருவமாக இருக்கலாமோ என ஐயப்படுகின்றனர்.[50] இதுகாறும் கூறியவற்றால் பண்டைக்கால நாணயங்கள் (சோழர், பாண்டியர்) சதுர வடிவமாக இருந்தன வென்றும், அவற்றில் யானை, புலி, மீன் ஆகியவை பொறிக்கப் பெற்றன என்றும் ஒருவாறு அறியலாம்.

உரோமானிய நாணயங்கள்

பண்டைத் தமிழ் வணிகரோடு உரோமானிய வணிகர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர் என்பது முன்பு கூறப்பட்டது. மதுரையில் வைகைக் கரையிலும் பிற பகுதிகளிலும் அகழ்வாராய்வு செய்தபோது பெருமளவில் உரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.[51] இதிலிருந்து தமிழ் வணிகரும் தங்கள் நாட்டு நாணயங்களைப் பயன்படுத்தியிருத்தல்

50. Mayilai Seeni Venkatasamy, New light on a Pandya King of the Sangam Age, pp. 7–10.

51. டாக்டர் மா. இராசமாணிக்கனார், தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 30.

வேண்டும் என்பது புலப்படும். கி.பி. முதல் நூற்றாண்டு வரை வட இந்தியாவில் அரசு முத்திரையுடன் கூடிய நாணயங்கள் வழக்கில் இருந்தன என அறிகிறோம். தென்னிந்தியாவில் அதற்குப் பின்னர் ஒரு நூற்றாண்டு கழித்து அத்தகு நாணயங்கள் வழங்கியிருத்தல் வேண்டும். பாண்டிய நாணயங்களும் பிற சின்னங்களுடன் அரசு முத்திரையும் பெற்றிருந்தன. போடிநாயக்கனூர் (மதுரை மாவட்டம்) பகுதியில் கி.பி. 1138-இல் பாண்டியர் நாணயங்கள் கிடைத்தன.[52] முடிவாகக் கூறுமிடத்து தங்கம் என்னும் உலோகம் கிடைத்த பின்னரும் நிலையான அரசுகள் அமைந்த பின்னருமே இத்தகைய நாணயங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இதிலிருந்து பழந்தமிழர் எத்துணை நாகரிக முதிர்ச்சி அடைந்திருந்தனர் என்பதும் புலப்படும். இதுகாறும் நடைபெற்ற ஆராய்ச்சியின் பயனாக மேற்கூறிய அளவில்தான் நாணயங்கள் வழங்கின என அறியமுடிகிறது. இனி வருங்காலத்தில் இத்துறையில் மேலும் அரிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படின் மேலும் அரிய செய்திகள் வெளிவரலாம். இத்துறை மேலும் வளர வேண்டிய ஒன்றாகும்.

---

52. கலைக்களஞ்சியம், பக். 393–394.

பயன்பட்ட தமிழ் நூல்கள்

மூலங்கள்

1. தொல்காப்பியம்
2. திருக்குறள்
3. எட்டுத் தொகை
4. இரட்டைக் காப்பியங்கள்

சார்பு நூல்கள்

5. தமிழ் உள்ளம், சுப்பிரமணிய பிள்ளை, கோ. (1952)
6. கால ஆராய்ச்சி, டாக்டர் இராசமாணிக்கனார், மா. (1957)
7. தமிழர் வாணிகம், கோவிந்தன், கே. (1953)
8. பாண்டியர் வரலாறு, சதாசிவப் பண்டாரத்தார், டி.வி. (1956)
9. சங்ககாலத் தமிழ் மக்கள், வெள்ளைவாரணன், க. (1950)
10. தமிழ் காட்டும் உலகு, டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார், அ. (1957)
11. தமிழக ஆட்சி, டாக்டர் இராசமாணிக்கனார், மா.
12. பணவியலும் பாங்கியலும், வேலாயுதம், எஸ். (1962)

மலர்கள் - பருவ இதழ்கள்

13. செந்தமிழ், மதுரைத் தமிழ்ச் சங்கம்
14. அரிஜன்
15. கலைக்களஞ்சியம்
16. மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் (1956)
17. கரந்தை வெள்ளி விழா மலர்
18. மணிமலர்
19. தமிழ்ப் பொழில்
20. தென்னிந்தியக் கல்வெட்டுகள்

ஆங்கில நூல்கள்

1. A Critical Study of Gandhian Economic Thought, Dr. Shiva Nand Jha (1961)

2. History of Economic Thought, Srivastava, S.K.(196

3. Comparative Economic System, Dr. Ralph H. Blodgett (1

4. Socialism Versus Capitalism, Pigou, A.C. (1949)

5. Gandhian Thought, Kriplani, J.B. (1961)

6. The Development of Economic Doctrine, Alexander Gray (1948)

7. Economic Ideas of Tiruvalluvar, Dr. Natarajan, B. (196

8. Public Finance and Our Poverty, Dr. Kumarappa, J.C. (194

9. Economic Life in the Vijayanagar Empire, Dr. Mahalinga T.V. (1951)

10. Studies in Manimekalai, Balusamy, N. (1965)

11. The Kural or the Maximis of Tiruvalluvar, Aiyar, V.V.S. (19

12. Trusteeship, Gandhi, M.K. (1960)

13. My Socialism, Gandhi, M.K. (1959)

14. Modern Economic Theory, Dr. Dewett, K.K. (1961)

15. Public Finance, Hugh Dalton (1954)

16. Primitive Money, Paul Einzig, (1949)

17. The coins of India, Brown, C.J. (1922)

18. Ancient Indian Numismatics, Chakraborthy, S.K. (1931)

19. Dravidian Coins, Rengachariar, T.M. & Desikachariar, T (1925)

20. Indian Coins, Rapson, E.J. (1898)

21. The Economic of Indian Agriculture, Dr.Narayanasamy Naidu, B.V. & Narasimban, P.S. (195